

# தெற்கு வாசல் மோகினி

விக்கிரமன்

# தெற்குவாசல் மோகினி

கலைமாமணி **விக்கிரமன்**

# பதிப்புரை

**வீ**ரமும், காதலும், வளமையான வாழ்வும் இணைந்த கம்பீரமான சோழ சாம்ராஜ்யத்தைப் பின்னணியாகக் கொண்டு பலரும் வரலாற்றுப் புதினங்களை எழுதியுள்ளனர். மூத்த எழுத்தாளர் **விக்கிரமன்** அவர்களின் தூரிகைத் தூவல் பல அற்புதமான சோழ வரலாற்றுப் புதினங்களைத் தனித்தன்மையுடன் வார்த்திருக்கிறது என்றால் அது மிகையன்று.

சோழ சாம்ராஜ்யத்தின் இறுதி காலகட்டத்தை முன்னிருத்தும் இப்புதினம் தமிழ் வாசகரிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

சம்பவங்களை வர்ணிக்கும் கம்பீரமான நடையில் நம்மைக் கதை நடக்கும் காலகட்டத்துக்கே அழைத்துச் சென்றுவிடுகிறார் விக்கிரமன் அவர்கள். கதையை வாசித்து முடித்தவுடன்தான் உணர்கிறோம் நாம் வாசிக்கும் காலகட்டம் வேறு என்பதை.

'வரலாற்றுப் புதின பேரரசு' விக்கிரமன் அவர்களின் இந்த **'தெற்குவாசல் மோகினி'**யை வெளியிடுவதில் 'ஆலயா' அகமகிழ்ச்சி அடைகிறது.

அன்புடன்

**எஸ். ராஜேஸ்வரி**

# பெண்ணின் பெருமை

உலக வரலாற்றிலே, நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டுத் தியாகம் புரிந்த பல மங்கையர் திலகங்கள் இன்றும் உயர்வாகப் பேசப்படுகிறார்கள்.

ஜான்சி ராணியும், கேப்டன் லட்சுமியும், வீரமங்கை வேலு நாச்சியாரும், ராணி சென்னம்மாவும் அந்நிய ஏகாதிபத்யத்தை எதிர்த்து வரலாற்றில் அழியா இடம் பெற்றிருக்கிறார்கள்.

நான் எழுதும் வரலாற்றுப் புதினங்களில் பெண்குலத்திற்குப் பெரும் பங்கை அளித்திருக்கிறேன்.

சோழர்-சேரர்-பாண்டியர்-நாயக்கர்-பல்லவர்கள், எந்தக் காலத்து வரலாறாயிருந்தாலும் நான் ஒரு பெண் பாத்திரத்தைப் படைத்து நாட்டு விடுதலைக்கு மிக உயரிய பங்கை அவர்கள் நிறைவேற்றியிருப்பதாகப் புனைந்து எழுதத் தவறமாட்டேன்.

அதனால்தானோ என்னவோ, "விக்கிரமன் வரலாற்றுப் புதினங்களில் பெண்கள் பங்கு" என்ற தலைப்பின் கீழ் ஆராய்ச்சி செய்து காரைக்குடியைச் சேர்ந்த திருமதி கண்ணாத்தாள் எம்.ஏ. முனைவர் பட்டம் பெற்றுப் பலராலும் புகழப்பட்டுள்ளார்கள்.

**'தெற்கு வாசல் மோகினி'** - புதினக் கதை நடந்த காலம், சோழர்ப் பேரரசுக்கு மிகுந்த சோதனையான காலம். பாண்டியர்களின் கருணையில் வாழவேண்டிய சூழ்நிலை. உடனிருந்தே சதி செய்பவர்களும், காட்டிக் கொடுப்பவர்களுமாக கதையில் பல மாந்தர்களுடன், உண்மைத் தொண்டர்களும், ஊழியர்களுமிருந்தார்கள். இந்தப் புதினத்தின் கதைத் தலைவி, குஞ்சரி சோழ நாட்டைக் காப்பாற்ற அரும்பாடுபட்ட நிகழ்ச்சிகளை நான் எழுதும்போது எனக்குப் பல இடங்களில் சிலிர்ப்பே ஏற்பட்டது.

வருங்காலத்திற்கு நல்ல வழிகாட்டக் கூடிய தாய்க்குலம் பெருமையைப் பல புதினங்களில் எழுதும் எண்ணத்தை எனக்கு இறைவனும், தமிழ்ப் பெருமக்களும் அளித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்கு வாசலில் என்றுமே அழியாமலிருக்கும் இறைவனுக்கு என்றுமே பணி செய்ய உறுதி பூண்ட குஞ்சரியை மக்கள் மறக்க மாட்டார்கள் - என் கற்பனையென்றாலும் ஏன் நடந்திருக்கக் கூடாது.

இந்த வரலாற்றுப் புதினத்தை வெளியிட்ட **'ஆயா'** பதிப்பகத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைமாமணி விக்கிரமன்**

# தெற்குவாசல் மோகினி

## 1

திருவேரகத்து முருகன் திருக்கோயிலின் மணி ஓசை 'ஓம் ஓம்' என்று ஒலித்துக்கொண்டிருந்தது.

யாம் செய்த தவத்தால் புலர்ந்த பொழுதைக் கட்டியங்கூறி வரவேற்பது போல் நாதஸ்வர இசை காற்றிலே மிதந்து தவழ்ந்து கொண்டிருந்தது.

தை மாதத்தின் வைகறை வேளை. இருள் பிரிந்தும் பிரியாத நிலை. கீழ்வானத்து வெண்மை, கறுநீலம் இவற்றைப் பிளந்து செம்பொற் கோடுகள் எழுந்து கொண்டிருந்தன.

நிலமெனும் நல்லாளுக்குப் போர்த்தப்பட்ட போர்வை போன்ற பனிப்படலம் மெல்ல விலகிக்கொண்டிருந்தது.

காவிரி நதியில் அந்தக் குளிர் வேளையிலும் அமிழ்ந்து நீராடிக் கொண்டிருந்தனர்.

சோமசர்மர் உதடுகள் மெல்ல முருகபிரானின் ஆறெழுத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன. 'நா இயல் மருங்கின் நவிலும்...' தனக்கு மட்டும் கேட்கும்படியாக அவர் முருகன்புகழ் பாடிக் கொண்டிருந்தார். அவரது கரங்கள் தலைமேற் குவித்து நின்றன. முருகனது எழிலுருவை மனத்திலே நினைத்துக்கொண்டு, அவர் வேறொரு பிரார்த்தனையையும் அப்போது சொல்லிக்கொண்டார்:

''ஏரகத்து உறையும் எம்பெருமானே! இளம் வயதினளென்றாலும் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் கடமை உணர்ச்சியையும் அவள் எடுத்துக்கொண்ட காரியத்தையும் வேலாயுதத் துணையோடு நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடு.''

எந்தவிதக் கவலையும் இல்லாத அவருக்கு இப்போது புதுக் கவலை ஒன்று ஏற்பட்டுவிட்டது. இந்த நேரத்தில் அவர் வீட்டில் அவள் காத்திருப்பாள். நீராடிப் புத்தாடை அணிந்து அப்போது பறித்த புதுமலர் போல் வாயிற்திண்ணையிலமர்ந்திருப்பாள். அவளுடைய விழிகள் அவரது வருகையை எதிர்பார்த்திருக்கும். சிவபுராணத்தையும் முருகன் பெருமையையும் பற்றிய சாத்திரப் புராணங்களை அவரிடம் கேட்டறிய அவள் வந்திருப்பாள்.

சோம சர்மா, பழங்குடி பிறந்தவர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழிலை நாள்தோறும் தவறாமல் புரிபவர். நாற்பத்து எட்டுப் பிராயங் கடந்தவர் என்று அவரைப் பார்த்தால் கூறமுடியாது. தளதளவென்று பழுத்த பழம் போன்ற மேனியும் ஒன்பது இழையைக் கொண்ட மூன்று புரிகள் அடங்கிய பூணூலை அணிந்து, பளிச்சென்று திருநீறு உடலெங்கும் துலங்கத் திண்ணையில் அமர்ந்து கற்க - கேட்க வருபவர்க்குப் பாடம் சொல்லிகொடுத்தவாறு காலத்தை ஓட்டிவரும் அவருக்கு அந்தப் பகுதியில் நல்ல மதிப்பு. சாத்திர, புராண, ஆகம, சந்தேகங்கள் எதுவாயினும் அவரிடம் கேட்கத் தொலைதூரத்திலிருந்தும் அனைவரும் வருவர்.

ஒருநாள் இதே போல் வைகறைவேளையில் அவள் வந்து நின்றாள். முருகன் திருக்கரத்து வேலினைப் போன்ற விழி. ராமபிரானது கைவில் போன்று வளைந்த புருவம். தளிர்மேனி, பேசும் போது மெல்லச் சிரித்து வெண்அரும்புப் பற்களைத் தெரிவிக்கும் அதரங்கள், வெண்மஞ்சள் பட்டாடை, அதற்கு இயைந்த கடல் நீலவண்ணக் கச்சு, காதில் அசையும் குண்டலங்கள், நீராடி உலராத கூந்தல் தோள்களில் புரள, இளம் மூங்கில் போன்ற தோள்களை வளைத்து, கரங்களை மார்பெதிரே குவித்துக் கூப்பி வணங்கி நின்ற அவளைப் பார்த்தவுடனேயே திரிபதங்க நிலையில் கருவறையில் நிற்கும் அம்பிகையின் வடிவமே சோமசர்மருக்குத் தோன்றியது.

''யாரம்மா நீ?...'' என்று மெல்லக் கேட்டார்.

''நான்... நான்... தேவகுஞ்சரி... என்னைத் தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், சோழநாட்டில் அறியாதவர்கள் வெகு சிலரே... சுவாமி... மன்னிக்க வேண்டும். தாங்கள் ஈர ஆடையுடன் நிற்கிறீர்கள்... சற்று விவரமாக நான் பேச வேண்டும். சற்று எனக்காகச் சிறிது அவகாசத்தை ஒதுக்கி அளிக்க வேண்டும்''

என்று அவள் மருட்சியும் மரியாதையும் இனிமையும் இரக்கமும் கலந்த குரலில் பேசிய போது சோமசர்மா, மீண்டும் ஒருமுறை அவளை ஏறிட்டு நோக்கினார்.

''தேவகுஞ்சரி...'' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தன.

அவள் கைகூப்பித் தலைகுனிந்து வணங்கி, ''ஆம். சுவாமி... தேவகுஞ்சரி. குஞ்சரி என்றழைப்பர் என்னை சுவாமி... தெரு வாசலிலேயே நின்று பேசுகிறேன். தாங்கள் உள்ளே சென்று ஈர ஆடை களைந்து வேறு ஆடை உடுத்தி, தங்கள் நியம நிஷ்டைகளை முடித்து வரும் வரையில் இங்கே காத்திருக்கிறேன். ஈர ஆடையுடன் நடுங்கும் குளிரில் வெளிவாயிலில் பனியில் தங்களை நிற்க வைத்துப் பேசுவது மகாபாவம். தங்கள் கல்விப் பிரகாசத்தை உணர்ந்து தங்களிடம் கேட்டுணர வந்திருக்கிறேன்'' என்று மறு படியும் வீணையின் நரம்பினைச் சுண்டிவிட்டது போல் பேசினாள்.

சோமசர்மா மெல்ல நகைத்து, ''பெண்ணே! நீராடிவிட்டு, நீராடும் போது இருந்த ஆடையைக் களையாமல் அந்த ஆடை உடம்பில் உடுத்தினபடியே உலர வேண்டும். இந்தக் குளிர் எல்லாம் ஒன்றும் செய்யாது. முத்தீயை கொண்டுள்ள எனக்குக் குளிர் என்ன செய்யும்? உள்ளே சென்று முருகனுக்கு மலர் அணிவித்து வருகிறேன்'' என்று கூறி உள்ளே நுழைய முயன்றவர், மீண்டும் திரும்பி, ''நீயும் பூசை இடத்துக்கு வரலாம்'' என்று அழைத்தார்.

பெறுவதற்கு அரிய பெரும் பேறு பெற்றுவிட்டவள் போல் குஞ்சரி அவரைத் தொடர்ந்தாள். சிறு வீடு. நடை, தாழ்வாரம், சிறுகூடம், கூடத்தருகே சமையல் இடம். அதற்கு மறைப்பாக ஓலையால் வேயப்பட்ட தடுப்பு.

''மாணிக்கவாசகா!'' என்று சோமசர்மா அழைத்தவாறு நுழைந்தார்.

இளம் முருகனைப் போன்ற தோற்றமுடைய இருபது வயதே கொண்ட இளங்காளை கையில் பூக்குடலையுடன் குறிப்பறிந்து தந்தை எதிரே வந்து நின்றான்.

சோமசர்மா இருகரங்களிலும் மணம் மிகுந்த நறுமலர் எடுத்து முருகன் திருமேனி மீது இட்டு, வணங்கி தூபம் தீபம் காட்டி, ஆவி பறக்கக் கொண்டுவைக்கப்பட்ட சிறு பானையிலுள்ள அமுதை இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டுத் திரும்பினார்.

குஞ்சரி விழியை மூடி மெய்ம்மறந்து நின்றுகொண்டிருந்தாள். மாணிக்கவாசகனும், சோமசர்மாவும் வைத்த விழி வாங்காது அவளைப் பார்த்துப் பிறகு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் பார்வையிலேயே பலபொருள்கள் தெரிந்தன. 'மெய்மறந்த நிலையில் இறைவனை வழிபடுகிறாள். கொள்ளை அழகு... எதற்காக இங்கு வந்திருக்கிறாள்? சாத்திரம், புராணம் இவளைப் போன்ற அழகிய பெண் எதற்காக அறிய வருகிறாள்?' என்றெல்லாம் கேட்பது போலிருந்தன.

சோமசர்மா, புறக்கடைப்பக்கம் கிணற்றடிக்குச் சென்றார். அவருக்கு வேறு உடைகளை எடுத்துக்கொண்டு பின் சென்ற மாணிக்கவாசகன், தொண்டையை மெதுவாகக் கனைத்தான். தந்தை திரும்பிப் பார்த்தார்.

'இவளை எதற்காக வரச் சொன்னீர்கள்?' என்று அவன் கேட்க நினைப்பதை உணர்ந்தவர் போல், ''உனக்குத் தெரியுமா இவளை?...'' என்று கேட்டார்.

தெரியும் என்பது போல் அவன் தலையை அசைத்தான். அவளுடைய பெயரைச் சொன்னான். கங்கைகொண்ட சோழபுரத்து பெருவுடையார்க் கோயிலில் சந்தியாகால நிர்த்யம் செய்பவள் என்று கூறினான்.

சோமசர்மா மெல்ல நகைத்துக்கொண்டார். இளம் வயதினர் இந்தச் செய்திகளை அறிந்திருப்பது நியாயமே என்று எண்ணியவாறு உள்ளே நுழைந்தார்.

தேவகுஞ்சரி தூணருகே சிற்பம் போல் நின்ற நிலையிலிருந்தாள். அவள் விழிகள் பனித்திருந்தன. அதரங்கள் ஏதோ முணு முணுப்பது போல் உணர்ச்சியுடன் துடித்தவாறிருந்தன. உணர்ச்சிக் கொந்தளிப்பால் அவளது உடல் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது. ஏதோ சொல்ல நினைப்பதை, வெளிப்படுத்த நினைப்பதை, அவர் அறிந்தார்.

''தேவகுஞ்சரி, முருகனை வணங்கம்மா...'' என்று கூறி, மலரொன்றை எடுத்து அவளிடம் நீட்டினார்.

தேவகுஞ்சரியின் நின்ற நிலை சற்று மாறியது. அவள் கரங்கள், பாதங்கள் மெல்ல அசைந்தன.

''குன்றம் எறிந்தாய், குரை கடலிற் சூர்தடிந்தாய்...'' என்று கணீரென்று அவள் பாடினாள்.

அதற்கேற்ப அவள் அபிநயித்தாள். அவள் விழிகள் சுழன்றன. கரங்கள் சுழன்றன. இடையும், பாதங்களும் அசைந்தன.

'குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர் தடிந்தாய்
புன் தலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையா யழகியா யேறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத் துறை.'

என்று அவள் கணீரென்று பாடியவாறு, பாடலின் பொருளுக் கேற்ப அபிநயித்தாள். ஒரு சமயம் அவள் முருகப்பிரானானாள். கிரவுஞ்சகிரியைப் பிளக்கும் மாபெரும் சக்திபடைத்தாள். ஒலி செய்யும் கடலானாள். கடலில் ஒளிந்துகொண்ட சூரபதுமன் ஆனாள். அச்சூரபதுமனைக் கொன்ற முருகனானாள். போர்க்களத்தில் முருகனுக்குதவும் பூதப்படைகள் ஆனாள். இடபவாகனத்தில் ஏறி அமரும் சிவபெருமானுடைய மகன் என்று கூறும்போது சிவபெரு மானானாள். என்றும் அழிவில்லாதவன் ஆனாள். உள்ளத்தே என்றும் உறைகிறவன் என்று கூறும் போதுதான் தன்னை, உணர்ந்தாள் குஞ்சரி.

''தேவகுஞ்சரி...'' என்று சோமசர்மா அழைத்த போது தன்னிலை அறிந்து, அவரது தாளில் வீழ்ந்து வணங்கினாள்.

''தேவகுஞ்சரி... முருகபிரான் அருள் உனக்குப் பரிபூரணமாக உண்டு. உனக்கு என்ன வேண்டும்? என்னைத் தேடி எதற்கு வந்தாய்? என்னிடமிருந்து நீ என்ன அறிந்துகொள்ள விரும்புகிறாய்?'' என்று சோமசர்மா கேட்டார்.

அவள் தொடர்வதற்கு முன்பாக, ''கங்கைகொண்டசோழபுரம் உனக்குச் சொந்த ஊர் என்று கேள்விப்பட்டேன். சாயங்கால நிருத்திய கைங்கர்யம் செய்யும் நீ, அதைவிட்டு இங்கே வந்தது எதற்கு?'' என்று கேட்டார்.

தேவகுஞ்சரியின் வழிகளில் வியப்பு கணநேரம் கலந்து நின்றது. அதை மென்னகை மறைத்தது. நாணம் அதற்குக் கேடயமாக விளங்கியது.

''சுவாமி... நான் கங்கைகொண்டசோழபுரத்தினள்தான். ஆனால், அதுவே எங்கள் சொந்த ஊரன்று. என் தாய் திரு ஆரூரைச் சேர்ந்தவள். பரவைநங்கை என்று பெயர். வீதிவிடங்கப் பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து வந்தவள். குலோத்துங்கச் சோழ மகாராஜாவின் கட்டளையின்படி கங்கைகொண்டசோழபுரம் வந்து சேர்ந்தாள். ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் பசுக்களும் மனமுவந்து மாமன்னர் எங்கள் வாழ்க்கைக்காக அளித்தார்...'' என்று சொல்லி வரும் போது விழிகளைச் சற்று மூடியிருந்தார் சோமசர்மா.

''ஆரூர் வீதிவிடங்கப்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். முன்பிறவிப் பயன்தான் அது. வீதிவிடங்கரைத் தரிசித்துப் பல நாட்களாகிவிட்டன'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார். தொடர்ந்து, ''உன் தாயின் பெயர் என்னவென்று கூறினாய்? அணுக்கியர் ஒருத்தி சக்ரவர்த்தி இராஜேந்திரசோழர் காலத்தில் வீதிவிடங்கப்பெருமானுடைய கர்ப்பக்கிரகத்து ஸ்ரீ விமானத்திற்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றாள்...'' என்று கூறவும் தேவகுஞ்சரி பரபரப்புடன் ''சுவாமி, அமர புகழ் பெற்ற இராஜேந்திர சோழரின் அபிமான மங்கை பரவை நங்கையின் அழியாப் பெயர் கொண்டவள்தான் என் தாயும். தெய்வ அருளும் ராஜபக்தியும் மிக்க பரம்பரையில் வந்த அடியேனுடைய விட்ட குறை தொட்ட குறையாக கலை ஞானத்துடன் தெய்வ பக்தியும் நாட்டுப்பற்றும் எவ்வளவு இருக்கிறது. அதை வளர்த்து கொள்ளவே தங்களிடம் வந்தேன். எனக்குச் சிவபெருமான் திருவிளையாடலையும் கந்தனின் புகழையும் எடுத்துச் சொல்லிச் சிற்றறிவை மேலும் விளங்கச் செய்யுங்கள்'' என்றாள்.

தேவகுஞ்சரியிடம் இயற்கையிலேயே நிறைந்த தெய்வ பக்தியையும் சத்திய பூர்வமாக அவள் சாத்திரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விழைவதையும் சோமசர்மா நொடியில் புரிந்து கொண்டார். இறைவனின் சிருஷ்டியில் இயற்கையாக தேவ குஞ்சரி யிடம் அமைந்திருந்த ரூபலாவண்யத்துடன் தெய்வீக ஒளியும் சேரவே, சோமசர்மா சிவபுராணம் கற்பிக்க ஒப்புக் கொண்டார்.

மெய்கண்டதேவர் இயற்றி அருளிய சிவஞானபோதம் எனும் தமிழ் நூலை அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு கற்றறிந்திருந்தார். அதைப் பிறருக்குக் கற்பிப்பது மூலம் அந்த நூலில் தமக்குள்ள அறிவை மேலும் வளர்த்துக்கொள்ள விரும்பினார். ஆனால், இளம்

பெண்ணுக்குத் தொடர்ந்து புராண இதிகாசங்களை எடுத்துச் சொல்லுவதிலுள்ள இடையூறுகளையும் உணர்ந்தார். மகன் மாணிக்கவாசகனின் பார்வை பல நூறு தடவை தேவகுஞ்சரியிடம் வீழ்ந்ததையும் அவர் அறியாமலில்லை.

''தேவகுஞ்சரி, உனது ஆர்வமும் தெய்வபக்தியும் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. புராண இதிகாசங்களை அவ்வளவு எளிதில் கற்றுத்தேர்ந்துவிட முடியாது...'' என்று அவர் கூறும்போது, குஞ்சரி குறுக்கிட்டு, ''சுவாமி, கற்றுத் தேர்ந்துவிட முடியாதென் பதையும் அறிவேன். கேட்டாவது அறியவே நான் வந்துள்ளேன்'' என்றாள்.

சோமசர்மா சற்று மௌனமானார். பிறகு, ''வேதமார்க்கத்தில் புராண இதிகாசங்கள் என்பது பெருங்கடல். கடலின் எல்லையைக் கண்டறிந்தவர் யார்? ஒரு நிபந்தனை. காலையிலும் மாலையிலும் இரண்டரை நாழிகை நேரம் எனக்குத் தெரிந்த வரையில் உனக்குக் கூறுவேன். போதும் என்று நான் கூறியதும் நீ என்னிடம் விடை பெற்றுச் சென்று விட வேண்டும். கங்கைகொண்டசோழபுரம் சென்று உன் குலக் கைங்கர்யத்தைச் செய்துவர வேண்டும்'' என்றார். குரலில் சற்றுக் கடுமையும் கலந்திருந்தது.

தேவகுஞ்சரியின் விழிகளில் நீர் தளும்பியது. நெஞ்சு தழதழக்க, ''சுவாமி, தங்களைச் சந்தித்துப் பேசுவதற்கே முன்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். தங்கள் கல்வியறிவைச் சோழ நாடு முழுமையும் பரவலாக அறியும். சிறிது காலமாகவே எனக்கு எதிலும் நாட்டம் செல்லவில்லை. நாயன்மார்கள் சரிதத்தை அறியத் துடிக்கிறது மனம். தேவாரத் திருவாசத்தைப் பாடிக்கொண்டே இருக்கத் துடிக்கிறது உள்ளம். தெய்வ சந்நிதானத்தில் நடனமாடி இறைத் தத்துவத்தோடு ஒன்றிவிடுவதில் மிகுந்த ஈடுபாடு ஏற்படுகிறது. ஆனால், வயதுக்கு மீறிய வார்த்தைகளை நான் பேசுவதாக எண்ணக் கூடாது. இறைவன் ஒருவனுக்கே சொந்தமான அற்புத நாட்டியக் கலையைக் கொஞ்சங்கொஞ்சமாக மானிடர்கள் வேறு விதமாக நோக்குகிறார்கள். கோயில் அதிகாரிகளும் முன்போல் தமது கடமையைச் செய்யவில்லை. சிவசொத்து, தங்கள் சொத்து என்று எண்ணுகிறார்கள். என் தாயின் வற்புறுத்தலும் வேறுவிதமாக இருக்கிறது. அவற்றில் ஈடுபட மனம் மறுக்கிறது. தாங்கள் இடும் எந்த நிபந்தனையையும் நான் ஏற்கிறேன். ஆனால், மீண்டும்,

பெருவுடையார்சந்நிதியில் தொடர்ந்து எங்கள் குலக் கைங்கர்யத்தைச் செய்வேனா என்பது சந்தேகமே. என்னால் எந்த வித இடையூறும் தங்களுக்கு நேரிடாது.." என்று கூறி, சோம சர்மாவின் பாதங்களில் வணங்கிச் சற்று நேரம் கண்களை மூடி இருந்து எழுந்து நின்றாள். அங்கே சோமசர்மா இல்லை. மாணிக்கவாசகன் நின்று கொண்டிருந்தான்.

''தந்தை திண்ணையில் பாடம் சொல்லிக்கொடுக்கப் போய் விட்டார். நாளைக்கு நீ வரலாம். இப்படியே புறக்கடை வழியே சென்றால் சுவாமிமலைக் கோயிலுக்குச் செல்லக் குறுக்குவழி'' என்றான்.

வெளித்திண்ணையில் வேதகோஷம் கேட்டது. ஏழெட்டுப் பேர் சேர்ந்து சொல்வது ஒலித்தது.

விழிநீரை மெல்லப் புடைவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு குஞ்சரி பின்புறம் நோக்கிச் சென்றாள். மாணிக்கவாசகனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

''நீ வருவாய் என்று எனக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே தெரியும்'' என்றான் அவளைப் பின்தொடர்ந்தவாறு. தாளம் தவறாது அவள் நடைபோட்டுச் செல்வதும் பின் முதுகும் அது உடுக்கை போல் சிறுத்துப் பெருத்து இருக்கும் அழகும் பெண்யானை ஒன்று நடந்து செல்வது போல் அவள் பின்னிடை அசையும் நேர்த்தியும். கூந்தல் இடமும் வலமுமாக அசைவதும் மார்பின் பாரம் தாங்காமல் அவள் சற்று முன் சாய்ந்து நடப்பதால் வளைந்த கழுத்தும் அவனைத் தடுமாறச் செய்தன.

குஞ்சரியின் செவிகளில் அறைகுறையாகவே வீழ்ந்திருக்க வேண்டும். மாணிக்கவாசகன் தொடர்ந்தான்: ''நேற்று பழையாறை மாளிகையினின்று ராஜசேவகர்கள் இருவர் வந்து தேடினர்...'' என்று அவன் கூறியபோது தேவகுஞ்சரி சற்றுத் திரும்பிப் பார்த்தாள். சற்று நின்றாள்.

வீட்டுவாசலிலிருந்து, ''மாணிக்கம், மாணிக்கம்!'' என்று தந்தை கூப்பிடும் குரல் கேட்டது. அவளை விட்டுச் செல்ல மனமில்லாமல், ''போய்க்கொண்டே இரு. இதோ வந்துவிடுகிறேன். உன்னுடன் பேசுவது என் தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவர் மட்டும் நாள்

தோறும் காலையிலும் மாலையிலும் பேசிக்கொண்டேயிருக்கப் போகிறார்..." என்று கூறி ஒரே எட்டில் வீட்டிற்குள் ஓடினான்.

குஞ்சரி வேகமாக நடந்தாள். 'பழையாறையிலிருந்து, ராஜ சேவகர்கள் வந்தார்களா? நான் இங்கே வந்திருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?' என்ற சிந்தனை அவள் நடையைச் சற்றுத் தளரச் செய்தது.

கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து தாயிடம் சொல்லிக் கொள்ளாமலேயே அவள் சில நாட்களுக்கு முன் புறப்பட்டுவிட்டாள். ஆனால், தெற்குக்கோட்டைக் காவல் தலைவருக்குத் தெரியும் அவள் புறப்படப் போவது, வேளக்காரப்படையைச் சேர்ந்த திருவரங்கத் தேவருக்கும் தெரியும்.

தெற்குக்கோட்டைவாசல் தலைவர் நம்பி காளியாரின் பாடி வீட்டிற்குத்தான் குஞ்சரி நாள் தவறாமல் செல்லுவாள். அறுபது பிராயத்திற்கு மேற்பட்ட நம்பி காளியார் வாழ்க்கையே பெரும் சரித்திரம். அவரது பாட்டனார், முதற்குலோத்துங்கச்சோழச் சக்ரவர்த்தி காலத்தில் பெரும் புலவர். புலவர் பரம்பரையில் வந்த நம்பி, நாடுகாக்கும் முக்கியப் பதவியை வகித்து வந்தார்.

குஞ்சரிக்குக் காளியாரிடம் மரியாதை கலந்த பற்றுதல். முதன் முறை குஞ்சரியின் இல்லத்திற்கு வந்திருந்தார். மாலை நிருத்தியத்தை முடித்துவிட்டு, பெருவுடையார்க்கோயிலிலிருந்து வீடு திரும்பிய போது அவர் பரவை நங்கையைப் பார்த்து, "பரவை, உன் மகள் நெற்றியில் திருநீற்றுடன் நடந்து வரும்போது எனக்கு, அவள் குல வழக்கத்தில் ஈடுபட்ட நடனமாதைப் போலவே தோன்றவில்லை. நாவுக்கரசப்பெருமானின் தமக்கையார் திலகவதியார் போலவும் மங்கையர்க்கரசியைப் போலவும் காணப்படுகிறாள்" என்றார்.

அன்றிலிருந்து நம்பி காளியாரிடம் அவளுக்குத் தனி மரியாதை ஏற்பட்டது. சந்தியா நிருத்யம் முடிந்தவுடன் பிரசாதத்திற்காகக் காத்திராமல், தெற்குக்கோட்டைவாசலை நோக்கிச் சென்று விடுவாள். நம்பி காளியார் உண்ணும் கேழ்வரகுக்கூழைச் சாப்பிடுவாள். நாழிகைக்கு நாழிகை மதில் காவலர்கள் எழுப்பும் ஒலியை அவள் பெரிதும் ரசிப்பாள்.

மதிலின் மேல் உலாவுவது அவளுக்குப் பிடித்த செயலாயிற்று. மதிலின் உச்சிக்குச் சென்று நான்கு திசையும் நோக்குவாள்.

கொள்ளிடக்கரையும் நெடுந்தொலைவில் திருவங்கர் ஆலயமும் தெரியும். சோழகங்கப்பேரேரி அலைகடல் போல் கண்ணுக் கெட்டிய தொலைவுவரை பரந்து காணப்படும்.

ராஜபாட்டையில் செல்லும் வண்டிகள், ரதங்கள், குதிரைகள் யாவற்றையும் பொழுதுபோவது தெரியாமல் பார்த்துக்கொண்டே யிருப்பாள். நேரமாகி நடுநிசி நெருங்கிவிடும். காளியார் அவளைத் தேடி வந்துவிடுவார்.

''குழந்தை, வீட்டிற்குப் போகவில்லையா? அம்மா கவலை யுடன் காத்திருப்பாளே...'' என்று கூறும்போதுதான் நேரம் மிகுந்தது என்பதை உணர்வாள்.

''பாட்டா, தங்களுக்குத் தெரியாதா? எங்கள் வாழ்க்கை என்ன வாழ்க்கை! பொழுது சாய்ந்து இரவு ஏன் வருகிறது என்ற கவலை இப்போதெல்லாம் தோன்றத் தொடங்கிவிட்டது. 'இந்த வடிவழகை ஏன் அளித்தாய் இறைவா?' என்று நொந்துகொள்ளத் தோன்றுகிறது. பாட்டா! என் மீது கோபங்கொள்ளாதீர்கள். அரச குடும்பத்துப் போகப் பொருளாக நாங்கள் கருதப்படுகிறோம். நாட்டைக் காப்பதிலும், விரிவுபடுத்துவதிலும் செம்மைப்படுத்துவதிலும் பொன்னான நேரத்தைப் போக்க வேண்டியவர்கள் பூவையரை நாடி வருகிறார்கள். மலர்மஞ்சத்தைப் போர்க்களம் என்று எண்ணி வருகிறார்கள். வாளெடுத்துச் சுழற்ற வேண்டியவர்கள் மங்கையரை எடுத்துத் தூக்கிச் சுழற்றுகிறார்கள். எங்கள் அடுத்த வீட்டிலிருக்கும் அன்னக் கிளியின் இல்லத்தில் இரவு பகலாகிறது. தேவனுக்கு அடிமை செய்து வாழ, 'பதியிலாதார்' என்று ராஜராஜ சோழச் சக்ரவர்த்தியாரால் அழைத்து வரப்பட்ட பெண்கள் குலம் ஆடவரின் போகப்பொருளாக மாறிவிட்டது....'' என்று கூறி நிறுத்தினாள்.

காளியார் தலைகுனிந்து நின்றிருந்தார். அவருக்குப் பதியிலா தார் வீடுகளுக்குச் செல்லும் பழக்கம் உண்டு, அரச குடும்பத்தவர்கள் சர்வசாதாரணமாக அவ்வீடுகளில் நுழைந்து நேரம், காலம் இல்லாமல் மோகத்திலும் போகத்திலும் ஆழ்ந்திருப்பதையும் அவர் அறிவார்.

''பாட்டா, என்ன மௌனமாகிவிட்டீர்கள்? இப்படி நடப்பது எங்கள் குலத்தில் சகஜந்தான் என்று சொல்கிறீர்களா? பாட்டா, எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. நாட்டில் ஒழுக்கம் குன்றி வருகிறது. பாண்டிய நாட்டினரிடம் நாம் அடிமைப்பட்டு அவர்கள்

பிடியினின்று விடுபட எவ்வளவு சிரமப்பட்டோம் என்பதை ஆள்பவர்கள் மறந்துவிட்டார்கள். அரச குடும்பத்து இளைஞர்கள் தான்தோன்றித்தனமாக நடக்கிறார்கள். கல்வியிலும் போர்ப் பயிற்சியிலும் ஈடுபடாமல் அழகிய பெண்களுடன் காலங்கழிக் கிறார்கள். இளையமணவாளப்பெருமாள் என்ற ஓர் இளவரசர்...'' என்று கூறி நிறுத்தினாள் குஞ்சரி.

காளியார் திடுக்கிட்டார். இளையமணவாளனா? சொல்லு. சொல்லு! மணவாளப்பெருமாளே அயோக்கியன். அவனுடைய மகன் என்ன செய்தான்?...'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''பாட்டா, இளையமணவாளன் என்ற பெயருக்கு ஏற்ப அவனும் மிக அழகாக இருக்கிறான். கவலை அறியாத பருவம். இரவு கதவைத் தட்டினான்...''

''நம் வீட்டிலா...?''

''ஆம் பாட்டா! பணிப்பெண் கதவைத் திறந்தாள். கள் நெடி. மயக்க நிலை. இளவரசன் என்று மரியாதை கொடுத்து வரவேற்றாள். மஞ்சத்தில் அமரச் சொன்னாள். விளக்கை ஏற்று! என்று அதிகாரத்துடன் கூறினான். வழக்கமில்லை என்று பணிவுடன் கூறினாள். குஞ்சரி என்று குழைந்தான். 'உறங்கிவிட்டாள்' என்றால், 'எழுப்பு' என்று அதிகாரமாகக் கூறினான். 'ஆடவரை அணுக மாட்டாள், என்ற பணிவுடன் கூறினாள். 'அணுக்கியர் என்ற பெயர் எதற்கு?' என்று கர்ஜித்தான். என் தாய் எழுந்துவிட்டாள். நான் பயத்தால் நடுநடுங்கிச் சுருண்டுப் படுத்திருந்தேன். 'குஞ்சரிக்கு உடல்நிலை சரியில்லை' என்று சமாதானப்படுத்தினாள். 'ராஜ வைத்தியரை அழைத்து வருகிறேன்' என்று கூறிச்சென்றான். சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்து, 'நாளை வருவேன், குஞ்சரியை எனக்காகக் காத்திருக்கச் சொல்' என்று கூறிவிட்டுச் சென்றான். மற்றவர் பயப்படவில்லை. ஆனால் நான் பயந்தேன். இது என்ன வாழ்க்கை, பாட்டா?'' என்றாள்.

குஞ்சரியின் மனப்போக்கு ஒருவருக்கும் பிடிபடவில்லை. இளையமணவாளன் சோழநாட்டில் பெரும் புள்ளி. அவனுடைய தந்தை, குலோத்துங்கச் சோழ சக்ரவர்த்திகளுக்கு மிக வேண்டி யவராக இருந்தார். அவர் பெரும் வீரர். அவர் வீரத்தைப் பாராட்டித் தன் மகளையே மணம் செய்து கொடுத்திருந்தார். கோப்பெருஞ்

சிங்கன் என்ற புகழ்ப்பெயருடன் குறுநில மன்னராகவே அவர் திகழ்ந்தார். திருமுனைப்பாடி நாட்டின் காவல்பொறுப்பு முழுமையும் அவரிடம் இருந்தது. அவரது மகன் இளைய கோப்பெருஞ்சிங்கன் - இளைய மணவாளன். தனது பொழுதையெல்லாம் கங்கை கொண்ட சோழபுரத்திலேயே கழித்து வந்தான்.

ஒற்றர்கள், அவனது நடவடிக்கையைக் குறித்து சக்ரவர்த்தியிடம் இரகசியமாகப் புகார் கூறியிருக்கிறார்கள். எந்த அரசு அதிகாரிக்கும் இளையமணவாளனை அணுக அச்சமாயிருந்தது.

தேவகுஞ்சரி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். பழையாறைக்குச் சென்று அரசி புவனமுழுதுடையாள்ளைச் சந்தித்து இளைய மணவாளனைக் குறித்து, தானறிந்த செய்தியைத் தெரிவித்து வர விரும்பினாள். அத்துடன் அவள் கண்ட கனவு ஒன்றைப் பற்றியும் குடந்தை சோதிடரிடம் தெரிவித்துப் பலன் கேட்டு வரவும் விரும்பினாள்.

தன் தாயிடம் குடந்தை செல்வதாகத் தெரிவிக்கவில்லை. காளியாரிடம் தன் திட்டத்தைக் கூறினாள்.

''குழந்தாய், நீ திருக்குடந்தை சென்று வரும்வரையில் நான் கோட்டைக்காவல் பொறுப்பில் இருப்பேனோ என்ற சந்தேக மிருக்கிறது. இரண்டு நாட்களாக பாண்டியநாட்டு ஒற்றர்கள் மாறு வேடத்தில் கோட்டைக்குள் நுழைந்திருக்கிறார்கள். நான் வேளக்காரப்படைத் தலைவரிடம் எச்சரித்தேன். நமது சக்ரவர்த்தி இராசராசசோழதேவர் அதைப் பற்றி இலட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. கோட்டை மதில்களின் பல இடங்கள் சேதமுற்று இருக்கின்றன. சென்ற முறைப் படையெடுப்பின் போது பாண்டியர்கள் அகழியைப் பல இடங்களில் தூர்த்துவிட்டனர். அவையும் செப்பனிடப்படவில்லை. ஆக காளியார் காலத்தில் கோட்டை வீழ்ந்தது என்று அவப்பெயர் வரக்கூடாது இல்லையா? பதவி துறக்கத் தீர்மானித்துவிட்டேன்'' என்று கூறினார். கவலை, பொறுப்புணர்ச்சி, சலிப்பு எல்லாம் கலந்திருந்தன.

குஞ்சரி திடுக்கிட்டாள். என்றாலும், பாட்டனாரை உற்சாகப் படுத்த வேண்டி, ''நமது சக்ரவர்த்தியைப் பற்றி குறைகூற விரும்பவில்லை. ஆனால் மாபெரும் இராஜராஜரின் பெயரைக் கொண்டிருக்கும் இவரது பலமற்ற நிலையை நினைத்தால்

வருத்தமாக இருக்கிறது. பாண்டியர்களை அடக்கி ஆண்டு, சேரர்களின் கப்பற்படையை அழித்து உலகத்திலேயே புலிக்கொடியின் பெருமையை நிலைநாட்டிய அந்த ராஜராஜரின் பெயரைக் கொண்ட நமது மாமன்னர், சுந்தர பாண்டியரிடம் தோற்றுத் தலைகுனிந்தாரே அதை நினைக்கும் போது எனக்கு வேதனையாக இருக்கிறது. மந்திரி மண்டலத்தாரும் ராஜதந்திரமற்று இருக்கிறார்கள். இவற்றைக் கடந்த சில நாட்களாகக் கோயிலில் மக்கள் பேசிக்கொள்வதிலிருந்து கேட்டறிந்தேன். இந்தச் சமயத்தில் நாம் அரசருக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். அவரை விட்டு விட்டுப் போய்விடக் கூடாது. பழையாறையில் அரசியாரிடம் தாங்கள் கூறியவற்றையும் தெரிவிக்கிறேன்.... நான் திரும்பிவரும் வரையில் அவசர முடிவு ஏதும் எடுத்துவிடாதீர்கள்'' என்று கூறினாள்.

தேவகுஞ்சரி, பழையாறை வந்து அரசியாரைச் சந்திக்கவில்லை. நேரே சோதிடர் வீட்டிற்குச் சென்றாள். அங்கே அவள் சோதிடம் கேட்கும் எண்ணம் கொண்டாளில்லை. தன்னுடன் கொண்டு வந்திருந்த ஓலைச் சுருள் ஒன்றை, சோதிடர் வீட்டிலிருந்த அவரது சீடரொருவரிடம் கொடுத்து நெல்லூரிலிருந்து தெலுங்க சோட அரசருடைய ஒற்றர் வருவார். அவரிடம் கொடுத்துவிடுங்கள்'' என்று கூறினாள்.

பிறகுதான் சோமசர்மா வீட்டிற்கு வந்தாள். அவரைச் சந்தித்துத் திரும்பிய போதுதான் தன்னைத் தேடி அங்கு ராஜசேவகர்கள் வந்ததை அறிந்தாள்.

அவள் அங்கு வரப்போவது ஒருவருக்கும் தெரியாது. பிறகு எப்படி அறிந்தனர்? யார் அவர்கள்?

தேவகுஞ்சரி கங்கைகொண்டசோழபுரத்தினின்று புறப்பட்டுச் சென்ற மறுநாள் இளையமணவாளன், அவர்கள் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினான். பரவைநங்கை திடுக்கிட்டாள். கையைப் பிசைந்தாள். தேவகுஞ்சரி இருக்கிறாள் என்று சொல்வதா, இல்லை என்று சொல்வதா என்று திகைத்தாள்.

இளையமணவாளன் 'ஓ ஓ' என்று நகைத்தான். ''பரவை கவலைப்படாதே. என்ன சொல்வதென்று திகைக்காதே. நான் சொல்கிறேன். உன் மகள் திருக்குடந்தைக்குச் சென்றிருக்கிறாள், அரசியல் சூழ்ச்சிகளில் தலையிடுகிறாள். அவள் வேலை நாட்டிய

மாடுவது. அரசகுடும்பத்தவர்களுக்கு ஆசைநாயகியாயிருப்பது. அரசியலில் தலையிடுவது அன்று. இதோ இப்போதே ஆட்களை அனுப்புகிறேன். தேவகுஞ்சரி கொண்டுவரப்படுவாள்... இங்கே உன் வீட்டிற்கு அன்று. எனது மாளிகைக்கு!''

அவனது சிரிப்பொலியும் பேச்சின் கடுமையும் அந்த இருளில் பயங்கரமாக எதிரொலித்தன!

## 2

கங்கைகொண்டசோழபுரத்தில் பெருங்கோயிலின் அருகே இருந்த ஆடவல்லான் வீதியின் குறுக்கே சென்ற சந்து ஒன்றில் அமைந்திருந்தது பரவைநங்கையின் வீடு. பொழுதுசாய்ந்து வீதி விளக்குகளை ஏற்றுபவர், ஒவ்வொன்றாக எண்ணெய்யிட்டு ஏற்றி வந்துகொண்டிருந்தார். ஒரு கையிலே ஏணியும் மறுகரத்திலே எண்ணெய்த் தூக்கும் திரியுமாக அந்த முதியபிராயத்தவர் ஒவ்வொரு நாள் இரவு வருமுன்னர் வீதிக்கு ஒளி கொடுக்கும் தொண்டைச் செய்துகொண்டிருந்தார். அவரைப் போன்று அந்த நகரத்தில் ஏழெட்டுப் பேர் அந்தப் பணியைச் செய்வதற்கு இருந்தாலும் 'கடம்பராயர்' என்ற பெயர் கொண்டிருந்த அவர், தமது பணியை ஒரு தொண்டாகவே செய்துகொண்டிருந்தார். அரசமாளிகை, கோயில் இவற்றைச் சுற்றியுள்ள வீதிவிளக்குகள் அவரது வரவை எதிர்நோக்கும். கடம்பராயர் கரம்பட்டு நாம் ஒளிவிடப் போகிறோம் என்று விளக்குகள் மகிழ்வடைந்திருக்கும்.

ஆடவல்லான் வீதியின் முனையில் அவர் வந்துகொண்டிருந்த போது தெற்குக்கோட்டைவாசல் தலைவர் நம்பி காளியாரைச் சந்தித்தார். காளியாரும் கடம்பராயரும் இளவயது முதலே நெருங்கிய நண்பர்கள். இருவரும் போர்க்களங்களில் பங்குகொண்டு தங்கள் அதிவீர பராக்கிரமத்தைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். நம்பி காளியார் மட்டும் மிக முக்கிய பொறுப்பு ஏற்றுத் தெற்குக்கோட்டைவாசல் தலைவரானார். வாரத்தில் எப்போதாவது ஒரு தடவைதான் சந்தித்துக் கொள்வார்கள். காளியார் ஆடவல்லான் வீதிக்கு வருவது வழக்கத்துக்கு விரோதமாக இருந்ததால் வியப்புடன் கடம்பராயர்

அவரை நோக்கினர்ர். அடர்ந்த மீசைக்கிடையே அவர் பொருள் புதைந்த புன்னகையை வீசுவதைக் காளியார் தெரிந்து புரிந்து கொண்டார்.

"நீ நினைப்பது போலில்லை கடம்பா - இந்த வயதில் எனக்கு அப்படியெல்லாம் எண்ணமே ஏற்படுவதில்லை. உனக்கு மட்டும் அந்த எண்ணம் மாறவில்லை என்று தெரிகிறது" என்று சிரிக்காமல் கூறினார் நம்பி.

"ஹூம்..." என்று பெருமூச்சு விட்ட கடம்பராயர், இதற் கெல்லாம் வயது ஒரு வேலியா?" என்று கூறி அங்கிருந்து நகர ஆரம்பித்த அவரைச் சற்று நிறுத்தி, "நங்கைபரவை சொல்லி யனுப்பினாள். இளையமணவாளன் பயமுறுத்திவிட்டுச் சென்றிருக் கிறானாம். நேற்றிலிருந்து அன்ன ஆகாரமில்லாமல் வேதனைப் படுகிறாளாம். கேட்டு வரப் போகிறேன்" என்றார் நம்பி.

தலையை மட்டும் அசைத்த கடம்பர், "இளையமணவாளன் மட்டுமா தலைவிரித்து ஆடுவான்? இன்னும் போகப் போகப் பார். நாம் யார் யாரை இந்தச் சோழநாட்டிற்கு வேண்டியவர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தோமோ, அவர்கள் அனைவரும் நாட்டையே காட்டிக் கொடுக்கத் திட்டமிடுவது தெரியவரும்" என்று கூறிக்கொண்டே தனது வேலைக்கு இடையூறாக நின்று பேச விரும்பாமல் நகர்ந்தார். போகும் போதே, "நாளைக்குப் பௌர்ணமி தானே? விளக்கு ஏற்றும் வேலை இல்லை. ஆண்டவன் உலகுக்கே விளக்கை ஏற்றுகிறான். உன்னை வந்து பார்க்கிறேன். நிறையப் பேச வேண்டியிருக்கிறது" என்றார்.

அவர் தோளை இருகரங்களாலும் பிடித்து, "நாளை வரை பொறுக்க முடியாது. இன்றே வந்துவிடு. நடுநிசியானாலும் சரி - இந்த நாட்டு நடப்பைப் பற்றி பேச வேண்டும். அதுவரையில் தாங்காது" என்றார் நம்பி. தலையை அசைத்தவாறு சென்றார் கடம்பர்.

காளியார் பரவைநங்கையின் வீட்டையடையும் போது இருள் கப்பிக்கொண்டுவிட்டது. வாயிற்கதவு உள்ளே தாழிடப்பட்டிருந்தது.

அவரருகே இளைஞன் ஒருவன் நெருங்கினான். "பாட்டா, இந்த நேரத்தில் இங்கே என்ன இப்படி?" என்று கேட்டதும் காளி திரும்பிப் பார்த்து, "யாரடா அவன், என்னைக் குசலம் விசாரிப்பது?" என்று உறுமினார். அவரது உடல்வலிமைக்கு நிகராகக் குரல் விளங்கும்.

அவன் சிரித்தான். இருளில் காவி ஏறிய வரிசையற்ற பற்கள் தெரியவில்லை. ''நீங்கள் இந்த வீட்டிற்குள் நுழைய முடியாது.''

காளியார் சற்று நிதானித்தார். ''உனக்கு இது யார் வீடென்று தெரியுமா?''

''இதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. எங்கள் தலைவர் உத்தரவு. இந்த வீட்டிற்குள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் யாரையும் செல்லவிடாதே என்று. நான் கண்காணிக்கிறேன்'' என்றான் இளைஞன். குரலில் சற்றுக் கர்வமும் அதிகாரமும் இருந்தன.

காளியார் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''அது யாரடா உனது தலைவர்? இந்த நாட்டிற்கே ஒரு தலைவர்தான் உண்டு...''

இளைஞனும் தொண்டையைக் கனைத்துக்கொண்டான். சற்றே மூச்சை இழுத்துக் கொண்டான். ''பாட்டனாருக்கு வயது காரணமாக மறதி ஏற்பட்டு விட்டது போலிருக்கிறது! எங்கள் தலைவர் யாரென்று சொல்லட்டுமா? பல்லவக் குலத்தோன்றல், வீரசேகரக்காடவ ராயருடைய திருமகனார், கூடல் ஏழிசைமோகன், மணவாளப் பெருமாள், வாள்நிலைகண்ட பெருமாளாகிய இராசராசக் காடவராயர், குலோத்துங்க சக்ரவர்த்தியின் மாப்பிள்ளை, அழகிய சீலன், அவனியாளப்பிறந்தார். காடவர்க்கோன், கோப்பெருஞ் சிங்கன், அழகியமணவாளப்பெருமாள் திருமகனார், இளைய அழகிய பெருமாள்'' என்று கூறி முடித்தபோது மூச்சுவாங்கியது.

காளியார் மறுபேச்சு பேசவில்லை. ''கோடாரிக்கொம்'' என்று பல்லைக் கடித்தவாறு கூறிவிட்டு, உள்ளே நுழைய முற்பட்டவரின் தோளை இளைஞன் கரம் அழுத்தித் தடுத்தது. மறுகணம் மின்னல் வேகத்தில் என்ன நடந்தது என்று தெரியாது. கீழே சுருண்டு விழுந்த அந்த இளைஞன் மண்ணைத் தட்டிக்கொண்டு, மீசை மண்ணையும் துடைத்துக்கொள்ளும் போது கையிலே வழிந்த இரத்தத்துளிகள் மூக்கிலிருந்து வந்தனவா, வாயிலிருந்து வந்தனவா என்று புரியாததால் நடுங்கிப் போன அவனுடைய தலைப்பாகையை எடுத்து அவன் முகத்தின் மீது வீசி, ''உம், துடைத்துக்கொள். உள்ளே யிருந்தும் எதிர் அண்டை வீடுகளிலிருந்தும் பெண்கள் எட்டிப் பார்ப்பதற்கு முன்பு ஓடிவிடு. இல்லாவிடில் உன் தலைவருக்கு

அவமானம் குலோத்துங்கச் சோழச் சக்ரவர்த்திகள் தெரியாத் தனமாகத் தமது மகளை ஏழிசைமோகனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார். சக்ரவர்த்திகள் அவனது வீரத்தில் மயங்கினார். தோற்றத்தில் மயங்கினார். அவனது வாள் சுழற்றும் திறமையில் மயங்கினார். பல போர்க்களங்களில் அவனது சுழலும் வாள் எதிரிகளின் தலைகளை வெட்டிச் சாய்த்தது. அதனால் வாள்நிலை கண்ட பெருமாள் என்ற பட்டத்தையும் கொடுத்தார். முனைப்பாடி நாட்டு நாடு காவல் அதிகாரியாயிருந்தவனுக்கு நாட்டின் சிற்றரசுரிமையை அளித்தார். தன் மகளையும் மணம் செய்து கொடுத்தார். அப்போது குலோத்துங்க சக்ரவர்த்திகளுக்கு இப்படியே காலம் செல்லாது என்பது தெரியாது. அவர் காலத்திற்குப் பிறகு, இப்போது நம் எல்லோருக்கும் தலைவர் ராஜராஜசோழ சக்ரவர்த்தி யிடமிருந்து சோழநாட்டை அபகரிக்க அந்தப் பெரிய மனிதன் மணவாளன் என்ன செய்தான் தெரியுமா? அதைச் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. அதோ போகிறாரே விளக்கேற்றுபவர் அவரைப் போய் மீதியைக் கேள்'' என்று கூறிவிட்டுத் திரும்பினார்.

சந்தடி கேட்டு நங்கைபரவை வீட்டுக் கதவு திறந்தது. காளியார் உள்ளே சென்றார். பரவைநங்கையின் 'ஓ' என்று அலறும் அழுகை குரல் கேட்டது.

வாயில் வடிந்த இரத்தத்தைத் துடைத்துக்கொண்ட அந்த இளைஞன், ஏணியும் தூக்குச்சட்டியுமாக சென்று கொண்டிருந்த கடம்பராயரிடம் சென்று தன் ஆத்திரத்தை அவரிடம் புலப்படுத்த விரும்பி, ''என்னய்யா விளக்கொளி வீரரே, உமக்குத் தெரியுமா எங்கள் தலைவரைப் பற்றி? அப்படி என்ன ஐயா அவரிடம் குறை கண்டுவிட்டீர்கள்?'' என்று இன்னும் கசியும் இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே கேட்டான்.

கடம்பர் கொஞ்சம் எண்ணெய்யை எடுத்து அவனது மூக்கில் தடவி, ''பாவம், காளியார் கைங்கரியமோ? அவரது முஷ்டி பலமான தாயிற்றே! சில்மூக்கு உடைந்ததோ, பல் சுழன்றதோ! ஒத்தடம் கொடுத்துக்கொள். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் உங்கள் தலைவர் என்றாயே அவருக்கும் அவர் அப்பனுக்கும் இது போலவே நேரும். ஏன் தம்பி, நீ சேந்தமங்கலம்தானே? உன் ஊரைவிட்டு இங்கு என்ன வேலை? உங்கள் தலைவரின் தந்தை இந்த சோழநாட்டைப்

பாண்டியருக்குக் காட்டிக்கொடுத்தார். தலைகுனியா சோழநாட்டைத் தலைகுனிய வைத்தார். அவரது திமிர் அடங்கியிருக்கிறது என்று நினைத்தோம். ஆனால், அவரது மகன் அப்பனையும் மிஞ்சி விடுவான் போலிருக்கிறதே..'' என்றார். அந்த இளைஞன் இளைய மணவாளனின் கையாள். காடவர்க்கோனின் ஒற்றன். அவனுக்குத் தெரியாததா இவர்கள் இருவரையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்? யார் யார் ராஜராஜசக்ரவர்த்தியை ஆதரிக்கிறார்கள் என்பதை கண்டறிவதே அவனது வேலை. தன் மூக்கில் வீழ்ந்த குத்து, சோழ சக்கரவர்த்தியின் மூக்கிலும் விழ அதிக நாளில்லை என்று நினைத்துக்கொண்டு இருளில் மறைந்தான்.

பரவைநங்கை காளியாரிடம் பிலாக்கணம் பாடிப் பிரலாபித்துக் கொண்டிருந்தாள் ''ஊர் உலகம் போல என் மகள் இருக்கக்கூடாதா? குலத்துக்கே விரோதமாகப் பிறந்ததே'' என்று சொல்லியழுதாள்.

''குலவிரோதம் என்கிறாயே. நங்கை, எது குலவிரோதம்? அவளுக்கு இயற்கையிலேயே பகுத்தறியும் உணர்வு இருக்கிறது. யார் செய்த புண்ணியமோ, எந்தப் பேரறிஞரின் இரத்தமோ அவள் உடலில் உண்மை தேசபக்தியாக ஓடுகிறது. உனக்குத் தெரியாதா. சோழநாட்டிற்குச் சென்ற பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட தொல்லை? நங்கை, சோழநாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் உப்புப் போட்டுச் சோறு தின்பவனாயிருந்தால் இத்தனை ஆண்டுகளாயில்லாத அவமானத்திற்குக் கொதித்தெழுந்திருப்பான். உனக்குத் தெரியாதா நடந்தவை எல்லாம்?'' என்று காளியார் குறுக்கிட்டுப் பேச -

''தெரியாமல் என்ன சுவாமி! பாண்டிய அரசர் பெரும் படைகளுடன் வந்ததும் நாடு நகரங்களை அழித்ததும் கடைசியாக பொன்னமராவதியில் நமது சக்கரவர்த்திகளைக் கூப்பிட்டனுப்பியதும் மறந்து விடுவோமா?'' என்று தழுதழுத்த குரலில் கூறியதும் ''பாண்டிய மன்னனுக்கு அவ்வளவு துணிவு எப்படி' வந்தது? பராந்தகச் சோழரும் இராஜராஜசோழரும் மதுரையிலேயே சென்று மகுடாபிஷேகம் செய்துகொண்டது போக நம் நாட்டில் நம் பழையாறையில் பாண்டியன் முடிசூட்டிக் கொண்டான். அதைவிட அவமானம் புலிக்கொடி தாங்கிய, இந்திரனுக்கே சென்று உதவிய முசுகுந்த சோழச் சக்ரவர்த்தி ஸ்தாபித்த சோழநாட்டிற்கு வேறு

வேண்டுமா? இதற்கெல்லாம் காரணம் நாட்டுத்துரோகிகள். தேசப் பற்றற்ற நச்சுப்பாம்புகள். மண்ணாசை பிடித்த சிற்றரசர்கள் ஒரு விதத்தில் காரணமாக இருக்கட்டும். குலம், குலம் என்று பெருமை யுடன் கூறிக்கொள்கிறாயே, உனது குலத்தைச் சேர்ந்த சிலரது சதி நடவடிக்கைகளும் காரணம்...'' என்று கூறும் போது நங்கை அலறி, ''சுவாமி, யார் அந்தத் துரோகி?'' என்று கூவினாள் விம்மலிடையே.

அவளை மெல்லத் தேற்றி, தன் ஆவேசக்குரலை அடக்கி, ''சமயம் வரும் போது சொல்கிறேன். துரோகிகள் இருந்தாலும் உன் மகளைப் போன்ற நாட்டுப்பற்றுடையவர்களும் இருக்கிறார்கள்'' என்றார்.

''அதனால் தான் வந்தது தீங்கு! ஒரு தடவை ராஜராஜ சக்ரவர்த்திகள் வந்திருந்தார்'' என்றாள் நங்கை.

''ஆமாம். தேவகுஞ்சரியைக் காணவா? உன்னைக் காணவா?'' சற்று நாணத்துடன் நங்கை, ''அதைப் பற்றி அப்புறம் சொல்கிறேன். எந்தவித வரம்பும் மீறப்படவில்லை. அவர் வந்ததிலிருந்து குஞ்சரிக்குச் சக்ரவர்த்திகளிடம் ஓர் மோகம்.''

''மோகமா?''

''மோகமோ, ஆசையோ, பக்தியோ, பரிவோ, பாசமோ! எப்போதும் அவரைப் பற்றியே பேச்சு. இந்நாட்டைப் பற்றிய பேச்சு.''

''என்னிடம் சொல்லவில்லையே...?''

''என்னிடமும் பிறகுதான் சொன்னாள். அரண்மனைக்குச் சென்று அரசரைச் சந்தித்திருக்கிறாள். பொன்னேரிக்கரை மாளிகைக்குச் சென்றிருக்கிறாள். அதனால் வந்த வினைதான். சுவாமி, இளையமணவாளன் வந்து சூளுரைத்துச் சென்றிருக்கிறான். தேவகுஞ்சரியைக் கவர்ந்து வந்து தன் மாளிகையில் வைத்துக் கொள்ளப் போகிறானாம். சுவாமி, அவன் மாளிகை எங்கேயிருக்கிறது சுவாமி? என் பெண் பாழ்பட்டு விடுவாளா? ஒரு மகள் எனத் திருமகள் போல் வளர்த்தேனே...'' என்று விம்மினாள்.

நங்கைக்கு வயதாகிவிட்டது என்று ஒருவரும் கூறமாட்டார்கள். விம்மும் போதும் பெருமூச்சு விடும் போதும் நகைக்கும் போதும் அவளுடலில் ஏற்பட்ட மாறுதல்கள் காளியாரையே மயங்க வைத்தன

ஒரு கணம். என்றாலும் உடனே உடலைச் சிலிர்த்துக்கொண்டு மிகவும் நம்பிக்கையும் ஆதரவும் அன்பும் இதமும் நிறைந்த குரலில்- "நங்கை கவலைப்படாதே. இளையமணவாளர்களைப் போல் பலர் புறப்பட்டிருக்கிறார்கள். என் உள்ளத்தே ஏதோ ஒருவித அச்சம் தோன்றுகிறது. இந்த நாட்டிற்கு மீண்டும் ஆபத்து வரப்போகிறது என்று என் உள்மனம் கூறுகிறது. அதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. தெற்குகோட்டை வழியே புதியமுகங்கள் நகருக்குள் நுழைகின்றன. . மகதநாட்டுவாணகோவரையர், மலையமான்நாட்டு சேதிராயர், சம்புவராயர் இந்த நகரத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் நமது சக்ரவர்த்திகளைச் சந்திக்கவில்லை. இந்த நிலையில் உன் மகள் எடுத்திருக்கும் முயற்சி மகத்தானது. அதற்காகப் பெருமைப்படு நங்கை பெருமைப்படு. என்னிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றாள். பழையாறைக்குச் சென்று ராஜமாதா புவனமுழுதுடையாளைச் சந்தித்து வருவதாகக் கூறியிருக்கிறாள். சுகமே திரும்பிவந்து விடுவாள். கவலைப்பட வேண்டாம். அதைச் சொல்லத்தான் வந்தேன். நீ ஒன்று கூறினாயே, அதை மற்றொரு தடவைக் கூறு. உனது இனிய குரலில் பாடிக் கேட்டு நாளாகிறது. தேவாரப்பண் களைத்தான் கங்கைகொண்டசோழபுரத்தில் கேட்க முடிகிறது. திவ்யப் பிரபந்தங்களைக் கேட்கத் திருவரங்கம் செல்ல வேண்டும்" என்றார்.

அந்தப் பொழுதில் மனப்பளுவை நீக்க வாய்விட்டுக் கூவவேண்டும் போலிருந்தது. நங்கைப்பரவை யாழைக் கொண்டு வருமாறு தோழியைப் பணித்தாள். யாழ் வந்தது. அது ஒலித்தது. அதற்கு இழைந்து நங்கையின் குரல் எழுந்தது.

*"ஒரு மகள் தன்னை உடையேன்*
*உலகம் நிறைந்த புகழால்*
*திருமகள் போல வளர்த்தேன்*
*செங்கண்மால் தான் கொண்டு போனான்...."*

என்று பாடும் போது நங்கையின் குரல் தழுதழுத்தது. கண்களில் நீர், தீபச்சுடரில் சிப்பி ஈன்ற முத்தைப் போல் துளிர்த்தது.

"செங்கண்மால்தான் கொண்டு போனான்" என்று கூறும்போது அவள் உள்ளங் கரைந்து விட்டாள். அதனால் பண் மாறியது.

காளியார் தவறிய பண்ணை மெல்லிய குரலில் எடுத்துக் கொடுத்தார்.

''கண்ணீர் விடவேண்டிய சமயமும் நிகழ்ச்சியும் இது இல்லை நங்கை. மறுபடியும் பாடு. திருவரங்கனை நினைத்துக்கொள். எல்லாம் நல்லதே முடியும். நமக்கு இருக்கும் துயரத்தைவிட இந்த நாட்டுக்கு இருக்கும் துயரம் மகத்தானது என்பதை நினைத்துக் கொள்...'' என்று கூறவும், நங்கை பாடினாள் :

*''ஒரு மகள் தன்னை உடையேன்*
*உலகம் நிறைந்த புகழால்*
*திருமகள் போல் வளர்த்தேன்*
*செங்கண்மால் தான் கொண்டு போனான்*
*பெருமகளாய்க் குடி வாழ்ந்து*
*பெரும் பிள்ளை பெற்ற அசோதை*
*மருமகளைக் கண்டு உகந்து*
*மணாட்டுப் புறம் செய்யுங்கொலோ?''*

யாழ் நின்றது. இசை நின்றது.

''செங்கண்மால் இன்னும் கொண்டு போகவில்லையே? நங்கை அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். விஷ்ணுசித்தர் போல் உன் மகளைத் தியாகம் செய்யப் பக்குவப்படுத்திக் கொள்'' என்றார் காளியார்.

''சுவாமி, இந்தப் பாவியின் வயிற்றிலுதித்த பெண் நாட்டிற்குச் சிறு உதவியாவது செய்தாள் என்றால் பெருமையடைவேன்'' என்று அவள் கூறி முடிக்கும் போது கதவைப் பலமாகத் தட்டும் ஓசை கேட்டது. ஒருவர் அல்லர்; பலர் சேர்ந்து தட்டுவது போல் தோன்றியது.

வெளியே சிறு கூட்டமே நின்றுகொண்டிருந்தது. அவர்கள் கரங்களில் வேல் இருந்தது. உருவிய வாள் இருந்தது. ஆனால், வெளிச்சந்தர தீவர்த்தி இல்லை.

''கதவைத் திற! அந்தக் கிழவனை வெளியே அனுப்பு'' என்ற கூக்குரல் அந்த வீதியையே நடுநடுங்க வைத்தது!

# 3

தேவகுஞ்சரிக்கு அடுத்து என்ன செய்வது என்றே ஒரு கணம் தோன்றவில்லை. அன்று மாலையே சோமசர்மா அவளை அழைத்தார். ''குஞ்சரி, வயதில் நீ சிறியவள். ஆயினும் என்னை மன்னித்துவிடு. சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்க எனக்கு வசதியில்லை. நீ ஊர் போய்ச் சேர்ந்து கங்கைகொண்ட சோழீசருக்குத் தொண்டு செய்து கொண்டிரு'' என்று கூறிவிட்டார்.

அவளுக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை. உண்மையிலேயே சாத்திரங் கற்க வரவில்லை. சில நாட்கள் சுவாமிமலையில் தங்கி, சர்மாவிடம் பாடங் கேட்பது போல் நடித்து அங்கிருந்து சில செய்திகளைச் சேகரிக்க விரும்பினாள். பழையாறை மாளிகையில் இராசராசனது சிறியதாய், ராஜமாதா புவனமுழுதுடையாளைச் சந்தித்து விட்டாள். சந்தித்த பிறகுதான் ஏன் சந்தித்தோம் என்று தோன்றிவிட்டது. நாட்டில் ஏற்பட்ட நலிவும் பாண்டியரிடம் அடிமைப்பட்டதையும் பழையாறையில் ராஜமாதா தங்கியிருக்கும் அரண்மனையிலேயே சுந்தரபாண்டியன் மகுடாபிஷேகம் செய்து கொண்டதையும் ஓர் அவமானமாக ராஜமாதா கருதவில்லை. அவளிடம் இளையமணவாளனைப் பற்றி எந்தவிதப் புகார் கூறி என்ன பலன்?

சோமசர்மா மறுத்துவிட்டதன் காரணம் அவளுக்குத் தெரியும். அவள் அங்கு வந்த சில நாழிகையிலேயே பாடங் கேட்க வந்த மாணவர்கள் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டுவிட்டது என்பதை அவள் உணர்ந்தாள். சர்மாவின் மகன் மாணிக்கத்தின் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லை.

எங்கு செல்வது, எங்கு தங்குவது என்ற குறிக்கோள் இல்லாமல் தஞ்சை மாநகரை நோக்கி நடக்கலானாள். குறுக்குப்பாதை ஒன்று இருப்பதையும் காவிரியின் ஐந்து கிளை நதிகளையும் கடக்க வேண்டும் என்பதையும் அறிந்துகொண்டாள்.

கையில் கொண்டு வந்திருந்த சோற்றுமூட்டையை அருகே யிருந்த மண்டபத்தில் அமர்ந்து உண்டு சற்று இளைப்பாறி விட்டுத் தொடர்ந்து பயணப் படலாம் என்று எண்ணினாள்.

அந்த மண்டபம் கவனிப்பாரற்றிருந்தது. அந்த வழியை அதிகம் பேர் பயன்படுத்தவில்லை என்பது அங்கு மக்கள் நடமாட்டம் இல்லாதிருப்பதினின்று தெரிந்தது.

அருகேயிருந்த நீரோடையில் முகம் கழுவித் திரும்பி வரும்போது மண்டபத்தினுள் கலகலவென்று பேச்சுக்குரல் கேட்டது. மூட்டைமுடிச்சுகள் மண்டபத்தின் வெளியே வைக்கப் பட்டிருந்தன. குதிரைகள் மரத்தில் கட்டப்பட்டிருந்தன.

வேளக்காரப்படையைச் சேர்ந்தவர்கள் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு நாகப்பட்டினம் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் கங்கைகொண்டசோழபுரத்தினின்று புறப்பட்டவர்கள். ராஜராஜ சோழ தேவரது வேளக்காரப்படையைச் சேர்ந்தவர்கள். வேளக்காரப் படையினர் அரச விசுவாசமிக்கவர்கள். அரசரைப் பாதுகாப்பது ஒன்றே அவர்களது முதல் கடமை.

"வெற்றிவேல்! வீரவேல்!" என்று முழங்கிக் கொண்டிருந்த அவர்களது விழிகள் கோவைக்கனி போல் சிவந்திருந்தன. ஒருவரோ டொருவர் ஏதோ விவாதம் செய்துகொண்டே புறப்பட்டிருக் கின்றனரென்பது அவர்களது கடினமான உரையாடலிலிருந்து தெரிய வந்தது.

தேவகுஞ்சரி மண்டப மறைவினின்று அவர்கள் பேச்சையும் விவாதத்தையும் கேட்டுக்கொண்டிருந்த போது அவளுக்குப் பல உண்மைகள் புலனாயின. ஒருவரையொருவர் குற்றச்சாட்டுகள் அரசருக்கு அவர்கள் ஆற்றும் பணியில் ஏற்படும் குறைவு பற்றிய தாகவே இருந்தது. அந்தக் குற்றச்சாட்டுகள் பயங்கர உண்மைகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. அவை தேவ குஞ்சரியின் உடலில் ஓர் நடுக்கத்தை ஏற்படுத்தியது. உடல் வியர்த்து விட்டது. கண் மூடித்திறக்கும் நேரத்தில் அங்கே நடந்த சம்பவம் அவள் குருதியை உறையச் செய்துவிட்டது.

தேவகுஞ்சரிக்கு அந்த நடுக்கம் தீர வெகு நேரம் பிடித்தது. அந்த இடத்திலிருந்தால் இதயமே நின்றுவிடுமோ என்ற பயம் ஏற்பட்டதால் அவள் வேகமாக நடக்கத் தொடங்கினாள். அதை நடை என்று கூற முடியாது. மருட்சி நிறைந்த மான் துள்ளி ஓடுவதற்கு ஒப்பிடலாமா?

கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து அவள் தன்னந்தனியாய்க் கிளம்பினாள். ஓர் இலட்சியத்தை இதயத்தில் கொண்டு புறப்பட்டாள். வீடு, கோயில், கோட்டைவாசல் என்று மட்டும் இருந்த அந்தப் பூங்கொடி, குடந்தை மாநகருக்கு வந்தாள் என்றால், எத்தகைய அவசரமும் அவசியமும் அவள் உள்ளத்தில் ததும்பி நின்றிருக்கும் என்று எடுத்துச் சொல்ல முடியாது. அதைத் தாங்கும் உறுதிப்பாடு கடினமான பாறையையும் பிளக்கமுடியாத பெரும் இரும்புக் கட்டியையும் விட அதிகமானது என்று சொல்லலாம். அவள் சோழ நாட்டைப்பற்றிச் சிறிது காலமாக என்ன அச்சம் கொண்டிருந்தாளோ, அதைப்பற்றித்தான் வேளக்காரப்படையினர் அந்த மண்டபத்தில் விவாதித்தனர். அந்த விவாதம் புதிதாக அப்போது ஏற்பட்டதன்று. வழி நெடுகப் பேசிக்கொண்டு வந்ததாகவும் தோன்றவில்லை.

அவர்களுக்குள் இளைஞனாயிருந்தவன்தான் சீற்றத்துடன் பேசினான். மதுரையினின்று சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து வந்தபோது வேளக்காரப்படையினர் நடந்து கொண்ட விதத்தைப் பற்றிய சூடான விவாதம் நடைபெற்றது.

''மாளிகைக்குள் நுழைந்த பாண்டிய வீரர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களது தலையைப் பந்தாடியிராவிடில் நமது அரசரைச் சிறைப்பிடித்திருப்பார்கள்'' என்று பிராயத்தில் முதிர்ந்த வேளக்காரர் ஒருவர் கூறினார்.

கேலிச்சிரிப்பு மற்றொருவரிடமிருந்து எழுந்தது. ''பாண்டிய வீரர்களின் தலையைக் கொய்தது சாதாரண எந்த வீரனும் செய்யக்கூடிய செயல்தான். ஆனால், மாளிகையின் மேல்மாடத்து நிலாமுற்றத்து மேற்குமாட அறையில் அரசர் இருக்கிறார் என்பது பாண்டிய வீரர்களுக்கு எப்படித் தெரிந்தது? நகரத்தில் அவர்கள் சூறையாடினர். வீடுகளைக் கொளுத்தினர். நமது சோற்றுப் படைகளால் பெண்டுபிள்ளைகளின் உயிரை, உடைமைகளைக் காக்க முடியவில்லை. அரசரின் உயிரைக்கூடக் காக்க முடியாமல் போய்விடுமோ என்ற நிலையில், யாரோ நம்மிடையே ஒரு துரோகி உளவு சொல்லிவிட்டான். உயிரைக் கொடுத்து மன்னரைக் காக்க வேண்டிய வேளக்காரர்கள், துரோகிகளாக மாறிவிட்டார்கள் என்றால் நம் அனைவருக்குமே வெட்கம்தான்...'' என்று அந்த இளைஞன் சீறினான்.

'ஹா ஹா' காரமும் 'ஹஉங்' காரமும் அங்கே எழுந்தன. இரத்தத் தணல் போன்ற விழிகள் மேலும் சிவந்தன. இயற்கையிலேயே துடிப்புடன்கூடிய ஒவ்வோர் அவயவமும் பூமி அதிர்ச்சி கண்டது போல் ஆடிற்று.

''என்ன சொன்னாய் தம்பி, ஏது சொன்னாய்? நம்மிடையே துரோகியா? சோழநாடு அந்த அளவுக்குச் சிறுமைப்பட்டுவிட்டதா? நாட்டின் உப்பைத் தின்ற குறுநில மன்னர்கள்தாம் பாண்டியனின் எச்சில் இலையை ருசி பார்த்துச் சதித்திட்டத்தில் ஈடுபட்டார்கள் என்றால் பயிரைக் காக்க வந்த வேலியுமா அப்படி? திருமாலைத் தாங்கும் கருடன் துரோகியாகலாமா? பாற்கடல் நஞ்சாகலாமா? மயிலும் சேவலும் மீண்டும் அரக்கராகிவிடலாமா? யார் அந்தத் துரோகி...?'' என்று சீறினார் முதிய வேளக்காரர் ஒருவர்.

''தம்பி, நாம் பழிக்கு அப்பாற்பட்டவர்கள். சதிக்கு அப்பாற் பட்டவர்கள். துரோகம் என்பதன் நிறம் என்ன என்பது நமது பரம் பரைக்கே தெரியாது. சுந்தரசோழர் காலத்திலிருந்தே பரம்பரையாக 'ராஜபக்தி' எனும் இரத்தம் நமது உடலில் ஓடி வருகிறது... நமது சக்கரவர்த்திகள் ராஜராஜரது அன்பான குணத்தைத் தவறாகப் பயன்படுத்திய தூர்த்தன் யார்? குழந்தைமனம் படைத்த சோழர்க்குலக் கொழுந்துக்கு விரோதம் நினைத்தவன் யார்?''

''குலோத்துங்கச் சோழரின் அபிமான பிள்ளைக்கு விரோதிகள் வெளியிடத்தில் இல்லை. உள்நாட்டிலேயே என்றுதான் பரவலாகப் பேசிக்கொள்ளுவார்கள். அதை நான் நம்பவில்லை. இப்போது புரிந்து விட்டது. மாளிகையில் அரசர் இருப்பிடத்தைப் பாண்டிய வீரர்கள் அடைந்திராவிடில் சக்ரவர்த்திகள் சரணாகதிக்குச் சொல்லியனுப்பி யிருக்கமாட்டார்கள். கோட்டைவாசல் புலிக் கொடியை இறக்கி வெள்ளைக்கொடியைப் பறக்கவிட்டிருக்க மாட்டார்கள். 'அதோ அங்கே மன்னர் ஒளிந்துகொண்டிருக்கிறார்' என்று சொன்னவன் யார் தெரியுமா...?'' என்று மற்றொருவன் துள்ளினான்.

அண்டசராசரம் அதிரும்படி ஒரு வேளக்காரப்படை வீரர் நகைத்தார். ஆவேசம் வந்தவர் போல் எழுந்தார்.

''வெற்றிவேல்! வீரவேல்! தாரைவேல்! விண்ணோர் சிறை மீட்ட தீரவேல்! செவ்வேள் திருக்கை வேல்! வாரி குளித்த வேல்! கொற்ற வேல்! சூர் மார்பும் குன்றும் துளைத்த வேல்...'' என்று கூவினார்.

''ஏ, பொடிப்பயலே! என்ன சொன்னாய்? எனது அரசரைச் சரணாகதி செய்ய ஓர் வேளக்காரன் காட்டிக்கொடுத்தானா? எடு தம்பி, அந்தச் சூலாயுதத்தை... அவன் மார்பிலே அதைப் பாய்ச்சு வேன். குடலைக் கிழிப்பேன். இரணியன் குடலை மாலையாகப் போட்ட நரசிங்கனாவேன். அந்தத் துரோகியை அடையாளங் காட்டு'' என்று கூவினான். ஆவேசம் வந்த நிலையில் ஆடினான்.

அங்கே ஒரு கணம் அமைதி நிலவியது.

''தங்கள் இன்னுயிர் ஈந்து ராஜனையும் ராஜ்யத்தையும் காப்பாற்றச் சபதம் பூண்ட வேளக்காரர் மீது இப்படி ஓர் அபாண்ட மிருந்தால் அதைத் துடைக்க செங்குருதி பாயவேண்டும். முருகன் கை வேல் இங்கு வர வேண்டும். அந்தத் துரோகியை யார் என்று கூறு. இந்த வேலாயுதத்திற்கு விருந்திடுவேன். சொல்லாமல் மழுப்பினாயானால் உன் உடலை ஆயிரம் கழுகுகளுக்கு விருந் திடுவேன்'' என்று கர்ஜிக்கவும், உடல் சிலிர்த்தெழுந்த இளைஞன் பிடரி சிலிர்த்த அரிமாவானான்.

அவன் நெற்றியில் பளிச்சென்று திருநீறு துலங்கியது. நடுவே வட்ட வடிவமாக சந்தனமும் குங்குமப்பொட்டும் திகழ்ந்தன. கடகமும் காப்பும் மார்பிலே வைரக் கண்டிகையும் திகழ்ந்தன. கடம்ப மாலை இதயத்துடிப்புக்கு ஏற்ப துள்ளியசைந்தது.

*''உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்*
*பின்னை ஒருவரை யான் பின் செல்கேன் பன்னிருகை*
*கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும்*
*வேலப்பா செந்தில் வாழ்வே...''*

என்று விழிகளை மூடிக்கொண்டு, அந்த இளைஞன் துதித்து விட்டு ஆவேசம் வந்த குரலில், ''அந்தத் துரோகியின் மார்பைக் கிரௌஞ்சகிரியைப் போல் பிளக்கும் பெரும் புண்ணியத்தை மற்றொருவரிடமா விடுவேன்? ஏ, சூரபதுமா, சோழநாட்டுத் துரோகியே, ஒழிந்து போ'' என்று கர்ஜித்து, கண் இமைக்கும் நேரத்தில் தன் வேலை எடுத்துப் பாய்ந்தான்.

சற்றுமுன், 'துரோகியை அடையாளம் காட்டு'' என்று ஆவேசமாகக் கூறிய வேளக்காரரின் மார்பில் வேல் பாய்ந்து முதுகு வழியே வெளியே வந்தது.

''வேல், வேல், வெற்றிவேல்!'' என்ற கோஷம் அங்கே எழுந்தது.

அவர்தான் துரோகி என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. வியப்பால் அங்கே அமைதி நிலவியது.

ஒருவேளை அந்த இளைஞனே தன் துரோகச் சிந்தனையை மறைப்பதற்காக அப்படி அந்த முதிய வேளக்காரர்படை வீரரைக் கொன்றிருப்பானோ என்று அனைவரும் ஐயம் கொள்ளுமுன், ''என் மதிப்புக்குரிய கடமை வீரர்களே... இதோ அவன் மடியிலுள்ள ஓலையை நீங்களே எடுத்துப்பாருங்கள்'' என்றான். அவன் முகத்தி லிருந்து வியர்வைத் துளிகள் கீழே கிடந்த சடலத்தினின்று பாய்ந்துகொண்டிருந்த செந்நீரில் கலந்தன.

இடுப்பிலுள்ள அரைக்கச்சில் அந்த லிகிதம் மறைத்து வைக்கப் பட்டிருந்தது. ரிஷப முத்திரையிடப்பட்டிருந்தது. மணவாளனின் கையொப்பமிருந்தது.

அதை எடுத்துப் படித்தவர், தனது இடது காலால் கீழே கிடந்த உடலை உதைத்தார். அவர் வாய் முணுமுணுத்தது.

''வேளக்காரப்படையினருக்கே அவமானம். மணவாளன் மீண்டும் சுந்தரபாண்டியனை சோழநாட்டிற்கு வரவேற்கிறான். 'அதற்கான தருணம் இதுதான்' என்று எழுதியிருக்கிறான். அந்த அழைப்பு ஓலை இந்தப் பாவியிடம் எப்படி வந்தது?'' என்று கேட்கும் போது அவர் குரல் தழுதழுத்தது

''எப்படி வந்ததா? அப்படிக் கேளுங்கள். வேளக்காரனான நான் வேவுக்காரனானேன். இவனது நடவடிக்கையைத் தொடர்ந்து கவனித்தேன். முன் படையெடுப்பில் நமது சக்கரவர்த்தி, சுந்தர பாண்டியனிடம் சரணாகதியடைந்து கரி, பரி இழந்து, அந்தப்புரப் பெண்டிரை அந்த மீன்கொடியோன் சிறைப்பிடித்துச் சென்றதைத் தடுக்க முடியாமல் கையாலாகாத கோழையாய் திருவஹீந்திபுரம் ஓடிச்சென்ற போது இந்தத் துரோகி, மணவாளனிடம் பேசியதைக் கண்டது முதல் சந்தேகம் கொண்டேன்.

''என்னைவிட வயதில் முதிர்ந்தவர்களே! நீங்கள் சோழ நாட்டை ஆண்ட பல மன்னர்களின் மெய்காக்கும் கடமையில் ஈடுபட்டிருந் திருப்பீர்கள். அவர்கள் ஒருவராவது பாண்டியரிடம் தோற்றுப்போகும் துர்ப்பாக்கியம் செய்தவர்களில்லை. நமது சக்கரவர்த்தி ராஜராஜ சோழர், 'வீர மாமன்னர் அருண்மொழிவர்மர்' என்ற ராஜராஜசோழர் எனும் மகத்தான பெயருக்கே இழுக்கு ஏற்படும் வண்ணம் தோல்வி

கண்டவர். பாவம், அவர் என்ன செய்வார்? அவர் நம்பிய காடவர் கோனும் மலையமானும் சமயத்தில் காலை வாரிவிட்டனர். அவர்களுக்கு அவ்வப்போது நமது சக்கரவர்த்திகளின் நடவடிக்கை. ஆலோசனைகள் தெரிந்துகொண்டு இருந்தன. யாரைச் சந்தேகப் படுவது? நான் மிகக் கவனமாக இவரைச் சந்தேகித்தேன். தடயம் கிடைத்தது. நாம் எல்லோரும் ஒன்றுசேரும் அரிய வாய்ப்பு இன்று நேர்ந்தது. தைப்பூச நன்னாளின் சூரசம்ஹாரம் நடந்தது!'' என்று கூறும் போது இளையவனின் உடல் ஆவேசம் கொண்டது போல் நடுங்கிக்கொண்டிருந்தது.

''தம்பீ, நன்று செய்தாய். இந்தத் துரோகியை இப்படியே விட்டிருந்தால் சுந்தரபாண்டியனை இவனே போய் அழைத்து வந்திருப்பான். ஒழிந்தான் கோடரிக்காம்பு! உடலை எடுத்துக் காவிரி வெள்ளத்தில் போடு...'' என்றார் முதியவர்.

''இவன் போய் அழைத்து வராவிட்டால் சுந்தர பாண்டியன் வராமலிருக்கப் போகிறானா, பாட்டா? சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுக்கப் பெரும் படை திரட்டுகிறான்'' என்றான் இளைஞன்.

''ஆகா...'' என்று அனைவரும் கூவினர்.

'ஆகா' என்று அவர்கள் கூறிய அதே வேளையில், தேவகுஞ்சரி 'ஆ' என்று திடுக்கிட்டு அலறினாள். தன் கரத்தை அழுத்திப் பற்றியவனைக் கண்டு.

பாழ்மண்டபத்தில் நடந்த கோரச்சம்பவத்தைக் கண்டு நடுநடுங்கி, அங்கே காது கொடுத்துக் கேட்டவற்றைக் கண்டு உளங்குமுறி, அங்கே மேலும் நிற்கப் பிடிக்காமல் விரைந்தோடி வந்த குஞ்சரிக்குத் தான் எந்தத் திசையில் போகிறோமென்று தெரிய வில்லை.

புதர்களைத் தாண்டினாள். காலில் சிக்கிய கொடிகளை உதறினாள். தடுக்கும் பாறைகளைத் தாண்டினாள். வனப்பகுதியைக் கடந்து சாலைக்கு வந்த பிறகுதான் சற்று நின்றாள்.

அவள் வருகைக்காகக் காத்து நின்றவன் போல் அந்த ஒற்றைக் கரத்தான் அவளது கரத்தை அழுத்தமாகப் பிடித்தான்.

—இதயமே நெஞ்சுக்குழிக்கு வந்துவிட்ட உணர்ச்சியடைந்த குஞ்சரி அவனிடமிருந்து விடுபடக் கையை உதறினாள்.

''உன்னைத்தான் எதிர்பார்த்தோம். இங்கே இல்லை. ஆனால், இரண்டு தினங்கள் கழித்துத் தஞ்சையில், அதற்குள் தேடிய பறவையே கூண்டுக்குள் வந்து விழும் என்று எதிர்பார்க்கவில்லை..'' என்று கூறிச் சிரித்த ஒற்றைக்கரத்தான், மெல்லியவளின் பூங்கரத்தை மெல்ல விடுவித்தான்.

''எதிர்பார்த்தோம்'' என்று கூறுகிறானே, 'இவனைத் தவிர மற்றும் சிலர் இருக்கிறார்களோ?' என்று திட்டுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்த குஞ்சரி, அவனைத் தவிர அங்கே ஒரு சிவிகையும் சுமப்பவர்களும் குதிரையும் மரநிழலில் களைப்பாறிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அவர்களை அழைக்க ஒற்றைக்கரத்தான் கையாண்ட முறை விசித்திரமாயிருந்தது. தனது தொடையைத் தட்டினான். இருகரமும் கொட்டுவது போல் ஓசை எழுந்தது.

''சோற்றுப்பிண்டங்களா! வாங்கோ, வாங்கோ... உங்கள் காட்டில் மழை பெய்துவிட்டது. இந்த ரதியைக் கண்டுபிடிக்க அலைந்துத் திரிய வேண்டாம். தேடிப்போன மூலிகை காலில் சுற்றிக்கொண்டது'' என்று உற்சாகத்துடன் கூவினான்.

குஞ்சரி மிக அலட்சியமாக அவர்களை நோக்கி மெல்ல நகர முற்பட்டாள். மிக அநாகரிகமாக அவளது சேலைத்தலைப்பை ஒரு கரத்தால் இழுத்த ஒற்றைக்கரத்தான், ''மட அன்னமே! மெல்ல மெல்ல எங்கே நடை பயிலுகிறாய்? உனக்காக எங்கள் தலைவர் காத்திருக்கும் போது அவ்வளவு எளிதில் உன்னை நடந்துபோக விட்டுவிட முடியுமா? சிவிகை இருக்கிறது. சேந்தமங்கலத்து இளவரசிகளுக்கே உரியது இது. உனக்காக அனுப்பியிருக்கிறார் என் தலைவர்...'' என்று விகாரமாக நகைக்கவும் குஞ்சரி சீறி, ''சீ சேலையை விடு. ஒரு பெண்ணிடம் நடந்துகொள்ளும் முறையா இது? சிவிகை கொண்டுவந்திருக்கிறேன் என்கிறாய். அதில் ஏற்றிச் சுமந்து செல்லத்தக்கவளை நீ தாதி போல் நடத்துகிறாயே. நீயே இப்படியென்றால் உன் தலைவர் எப்படியோ? யார் உன் தலைவர்? இலங்கைக்கரசரோ?'' என்று வெகுண்டு பேசினாள்.

மீண்டும் நகைத்த அவன், ''தேவீ, கோபிக்கலாமா? உன் கரத்தைத் தொட கங்கைகொண்டசோழபுரத்தில் எவ்வளவு காலம் தவித்துப் பெருமூச்சு விட்டிருப்பேன்! கோயில் திருவிழாவின் போது நீ நாட்டிய மாடும் போது என் உள்ளத்தை அல்லவா ஆட வைப்பாய்? அப்போது நான் நினைப்பேன் - 'பாழும் கடவுள் எனக்கு இரண்டு

கரங்களையும் கொடுத்திருந்தால் அப்படியே வாரி உன்னை அணைத்திருப்பேன்' என்று. என்னைப் போன்ற சாதாரண மானவனுக்கு எட்டாக்கனியான காரிகை நீ, என் தலைவர் கண்ணில் பட்டுவிட்டாய். இனி உன்னை நான் தொட முடியுமா? அதனால் உன் கரத்தைத் தொட்டுப்பார்க்க ஆசை கொண்டேன். உனது சிற்பம் போன்ற முகவாயைப் பிடித்துக் கொஞ்ச ஆசை கொண்டேன். உன் பூ உடலைத் தழுவி நிற்கும் சேலையையாவது ஸ்பரிசிக்க ஆசை கொண்டேன். என் தலைவரது மாளிகைக்குப் போய்ச் சேர்ந்து விட்டால் நான் உன்னை நெருங்கவே முடியாது'' என்று பிதற்றவும், குஞ்சரி அச்சமும் ஆத்திரமும் கலந்த குரலில், ''சீ, பதரே! யார் உன் தலைவர்? எங்கே இருக்கிறது அவரது மாளிகை? அங்கே வருவதற்காகவா நான் காடும் கல்லும் தாண்டி வந்தேன்? உனது இழிவான பேச்சை சோழசக்கரவர்த்திகளிடம் சொன்னால் உன்னையும் உன் தலைவரையும் கண்டதுண்டமாக்கிக் கழுகுக்கு வீசி விடுவார். இன்னும் சற்று உரத்த குரலில் கூவினால், அங்கே மண்டபத்திலிருக்கும் வேளக்காரப்படையினர் ஓடோடி வந்து இந்தப் பரியையும் சிவிகையையும் உங்களையும் துவம்சப்படுத்தி விடுவார்கள்... போ, ஓடிப்போய் விடு...'' என்று கூவினாள்.

'வேளக்காரப்படை' என்ற சொல் கேட்டவுடன், ஒற்றைக் கரத்தான் ஒரே நொடியில் குஞ்சரியின் இடையைச் சுற்றி ஒரே கரத்தால் தூக்கி சிவிகையில் போட்டு அவள் நாசியருகே தன் மேல் வஸ்திரத்தின் நுனியில் முடிச்சுப் போட்டிருந்த மூலிகையைப் பதிய வைத்தான். குஞ்சரி மயங்கினாள். சிவிகை புறப்பட்டது. குதிரையின் மீது ஒற்றைக்கரத்தோன் மிக லாகவமாகத் தாவி அமர்ந்தான்.

இளையமணவாளனின் தனி மாளிகையை அடைந்தனர் அவர்கள். அப்போது சூரியன் மலைவாயில் வீழ்ந்தான்.

## 4

வெளியே குழுமியிருந்த கட்டுப்பாடற்ற கூட்டத்தின் கூக்குரல் அதிகமாகிக்கொண்டே வந்தது.

நங்கை யாழை மீட்டுவதை நிறுத்தினாள். ஒளி குன்றிய தீபச் சுடரைத் தூண்டி விட்டாள் மற்றொருத்தி.

காளியார் சாய்ந்திருந்த திண்டிலிருந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டார். அருகேயிருந்த மயில்தோகை விசிறியை எடுத்து மெல்ல விசிறிக்கொண்டார்.

''கதவைத் திற! அந்தக் கிழவனை வெளியே அனுப்பு!'' என்று பலர் சேர்ந்து கூவும் கடுங்குரல் செவிப்பறையைக் கிழித்தது.

காளியார் வலதுகரத்தால் மீசையை மெல்ல ஒதுக்கிக் கொண்டார். மெல்ல முறுவல் பூக்கும் அடையாளம் உதடுகளில் நெளிந்தது.

நங்கை நடுக்கமுடன் இருகரங்களையும் இணைத்துச் சேர்த்துச் ''சுவாமி'' என்றாள். ''உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது. புறக்கடை வழியாகப் போய் விடுகிறீர்களா?'' என்று கூறும் போது அவள் குரல் நடுங்கியது.

வாய்விட்டுச் சிரித்தார் காளியார். ''என்னைக் கோழை என்று நினைத்துவிட்டாயா?'' என்றார். மெல்ல வாயைப் பொத்திக் கொண்ட நங்கை, ''அபசாரம், அபசாரம். அப்படி நினைப்பேனா? என் பொருட்டுத் தங்களுக்குத் தொல்லை, ஏற்படலாமா? தெற்குக் கோட்டை வாசலின் முக்கியப் பதவி வகிக்கும் தங்களுக்கு நங்கை வீட்டில் வந்தபோது துன்பம் நேர்ந்தது என்ற அவப்பெயர் ஏற்படலாமா?''

''என்னை யாரும் புரிந்துகொள்ளவில்லை. என் அடக்கத்தைப் பார்த்து என் ஆற்றலைக் குறைவாக மதிப்பிடுபவரும் உண்டு. என்னைச் சரியாகப் புரிந்துகொண்டவர் ராஜராஜசோழ மன்னர் தான். இளம் வயதிலேயே அவருக்குக் குதிரை ஏற்றம் கற்றுக் கொடுத்த காலத்திலும் சரி, வேலைக் குறிபார்த்து எறியக் கற்றுக் கொடுத்த போதும் சரி, என் திறமையை உள்ளபடி அறிந்து கொண்டவர் அவர் ஒருவர்தான். பாண்டியர்கள் கோட்டை வாயிலைத் தாக்கும் போது நான் மட்டும் காவல் பொறுப்பிலிருந்திருந்தால் அவர்கள் எளிதில் கோட்டை வாயிலைப் பிளக்க விட்டிருக்க மாட்டேன்... பிறகுதான் மன்னர் அறிந்தார். என்னிடம் முக்கியமான கோட்டைவாசல் பொறுப்பை ஒப்படைத்தார்...'' - மிகவும் மெதுவாக காளியார் நடந்த கால நிகழ்ச்சிகளைச் சொல்லி வரும்போது நங்கை பரபரப் படைந்தாள். 'வெளியே உள்ள ஆபத்தைப் புரிந்து கொள்ளாமல் இவரென்ன இப்படி மெத்தனமாக இருக்கிறாரே' என்று கலங்கினாள்.

வெளியே கதவைப் பிளந்துவிடும்படியான ஓசை, கூச்சல், எக்காளம், கேலிப்பேச்சு, ஆக்ரோஷம் எல்லாம் கலந்திருந்தன.

நங்கை பரபரப்புடன் எழுந்தாள். ''சுவாமி, சுவாமி! பின்புறக் கதவு வழியே போய்விடுங்கள்... எழுந்திருங்கள், எழுந்திருங்கள்'' என்று கையைப் பிடித்து எழுப்ப மாட்டாத குறையாகக் கெஞ்சினாள்.

காளி மெல்ல அவளை நோக்கினார். ''நங்கை, என் உயிர் மட்டும் தான் முக்கியமா? பின்பக்கமாக நான் போய் விடுகிறேன் என்று வைத்துக்கொள் அந்த மூர்க்கர்கள் கதவைப் பிளந்து உள்ளே வர மாட்டார்களா!''

''இல்லை. நானே திறந்து விடுவேன். நீங்கள் இங்கு இல்லை என்று சத்தியம் செய்வேன்.''

''சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்களா அவர்கள்? நீ சொல்வதை நம்பிவிடுவார்களா? குஞ்சரி கிடைக்காத ஏமாற்றம், என்னைப் பழி வாங்க முடியாமல் போய்விட்டதே என்ற ஆத்திரம் எல்லாம் ஒன்று சேர அதை உன்மேல் காட்டுவ்வார்கள். உன்னை அலங்கோலப் படுத்துவார்கள். வேண்டாம் நங்கை. வேண்டாம். ராஜராஜன் ஆட்சியிலே கோயிலுக்குத் திருத்தொண்டு செய்யும் நங்கை அவமானப்படுத்தப்பட்டாள் என்ற அவப்பெயர் வேண்டவே வேண்டாம்.''

கதவு உடையுமளவு தட்டப்பட்டுக்கொண்டேயிருந்தது. நங்கையின் பரபரப்பும் காளியாரின் அமைதியும் பணிப் பெண் களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் விசித்து அழத் தொடங்கினார்கள்,

காளியார் சிரித்தார். ''நங்கை, இந்த நாட்டிற்கு எப்பேர்ப்பட்ட அவமானம் நேரவிருக்கிறது பார்த்தாயா? பெண்கள் மட்டுமே சுதந்திரமாக வசிக்கும் இந்த வீதியில் ஆடவர் கூட்டம் இரவு வேளையில் கலகம் செய்கிறது. சோழநாட்டின் தலைநகருக்கே இந்தக் கதி. கேட்பாரில்லாமல் போய்விட்டதே! பாண்டியரிடம் கப்பம் செலுத்தும் அளவுக்குத் தாழ்ந்துபோன சோழ மன்னர், தனது குடிமக்களின் மானத்தைக்கூடவா அடகுவைத்து விட்டார்? தங்கள் காதலியின் கோபத்தை மாற்ற 'செம் பொற்கபாடம் திறமினோ' என்று கதவைப் பணிவுடன் தட்டும் இளைஞர்கள் இருந்ததாக நூறு

ஆண்டுகளுக்கு முன்பு ஜெயங்கொண்டார் தமது பரணியில் கூறினார். கயவர்கள் நடமாடத் தொடங்கி விட்டார்களே நங்கை. நீ அஞ்சாதே. ஒரு கோல் கொடுக்கிறாயா?'' என்று கேட்டார்.

''கோலா, தலைக்கோல் தவிர வேறு மூங்கில் கோல் இங்கு இல்லையே...'' என்றாள் நங்கை.

சுற்றும்முற்றும் பார்த்த காளியார், முற்றத்தின் அருகே வந்தார். நிலவொளியில் மல்லிகைப்பந்தலில் மல்லிகைப் பூக்கள் வானத்து நட்சத்திரத்துக்குப் போட்டியாகக் கண்சிமிட்டி மணம் வீசி நின்றன. கொழு கொம்பாக, மல்லிகை படர்ந்திருந்த பலமான மூங்கிலைப் பற்றி இழுத்தார் காளியார். அவர் கரத்தில் அந்த முதிர்ந்த மூங்கில், வேல் தாங்கிய கோலாக விளங்கியது!

மறுகணம் பதுங்கி நின்ற வேங்கை பாய்வது போல் வாயிற் கதவருகே சென்றார். தடாரென்று கதவைத் திறந்தார். கதவின் மீது சாய்ந்துகொண்டு கதவைக் காலாலும் கரங்களாலும் தட்டிக் கொண்டிருந்தவர்கள் தட தடவென்று கீழே வீழ்ந்தார்கள். அவர்கள் முதுகிலும் முகத்திலும் தலையிலும் கையிலும் காலிலுமாக காளியின் கைத்தடி பதம் பார்த்தது.

''ஏய்... இதோ. நீங்கள் அழைத்த கிழவன் வந்துவிட்டேன். என்ன வேண்டும் உங்களுக்கு? இரவுவேளையில் ஓர் அபலைப் பெண்ணின் வீட்டெதிரே நின்று கூப்பாடு போடுவது ஆண்மைக்கு அழகா? போய் விடுங்கள் இங்கிருந்து. யாராவது ஒரு மீசை முளைத்த ஆண்பிள்ளை மட்டும் எதிரே நின்று நான் கொடுக்கும் பிரசாதத்தை வாங்கிக்கொண்டு துரோகி மணவாளனுக்குச் சென்று கொடுங்கள்'' என்று கர்ஜித்தவாறு தன் கைத்தடியை இடமும் வலமுமாகச் சுழற்றினார்.

முதிர்ந்த மூங்கில், எலும்பின் மீது பட்டு 'பட் பட்' என்று ஒலி எழுப்பியது. சிலருடைய சதையைப் பிய்த்தது. சிலருடைய எலும்பை முறித்தது. மூக்கிலிருந்து வழியும் இரத்தத்தைத் துடைத்துக்கொள்ள முயன்ற சிலரது மண்டையில் 'ணங்' என்று அடி விழுந்தது. கீழே விழுந்தவர் எழுந்து திரும்பிப் பாராமல் ஓடினர். எழுந்திருக்க முடியாதவர்கள் மீது காளியின் பாதசேவை கிடைத்தது.

ஓடிக்கொண்டிருந்தவர்கள், ''கிழவனா, கிழவன் வேடம் பூண்ட குமரனா?'' என்று ஓலமிட்டு ஓடினார்கள். தீவர்த்தியைக் கீழே

போட்டுவிட்டு ஓடியதால், மண்ணிலே கருகிய தீவர்த்தியினின்று தீய்ந்த மணம் எழுந்தது. ஒரு விதப் புகை எங்கும் சூழத் தொடங்கியது.

வியூகத்திடையே சிக்கி வீர அபிமன்யுவாக ஒரு சமயம் சுழன்று சுழன்றுத் தாக்கினார் காளி. கண்ணன் கை சக்கரம் போல் ஒரு சமயம் காளியின் கைக்கோல் சுழன்றது.

தெருமுனை வரையில் காளியார் கயவர்களை ஓட ஓடத் துரத்தினார். ஆனால், முதுமையை விடக் கொஞ்ச நேரத்தில் பலரைத் தாக்குவதாலும் ஏற்பட்ட களைப்பால் சற்று இளைத்த கணத்தில், பின்புறமிருந்து ஒருவன் இரும்புத்தடியால் தாக்கியதால் காளியார் நினைவிழந்து கீழே விழுந்தார்.

தெருவிளக்குகள் அணைக்கப்பட்டிருந்தாலும் வானத்து மதியவனின் ஒளியை ஒருவராலும் நிறுத்த முடியவில்லை. சந்தடி யற்றுப் போன அந்தக் குறுகிய வீதியின் முனையில் குதிரை ஒன்று வரும் ஓசை கேட்டது. காளியாரை மீண்டும் தாக்க நினைத்தவர், அரவம் கேட்டு விழுந்தடித்துகொண்டு ஓடினர்.

குதிரை மீதிருந்தவர் கீழிறங்கி, காளியாரை மெல்லத் தூக்கி, குதிரை மீது சாய்த்துக்கொண்டு விரைந்தார். அந்த வீதி சந்தடியற்று, ஏதும் நடவாததைப் போல் அமைதியுடனிருந்தது.

நங்கை யாழ் மீது சாய்ந்து கண்ணீர் விட்டவாறு உறங்கி விட்டாள்.

காளியார் காலையில் விழித்தபோதுதான் மாளிகையில் மஞ்சத்தில் பஞ்சணையில் படுத்திருப்பதை அறிந்தார். பலகணியின் வழியே காலைக் கதிரொளி பாய்ந்து வந்து அந்த அறையில் புத்தொளியை எழுப்பியது. முதல் நாள் நடந்த நிகழ்ச்சித் தொடர்பு களை மெல்ல நினைவுப்படுத்திக்கொண்ட காளியார், எதிரே அமர்ந்திருந்தவர்களை ஒரு முறை நோக்கினார்.

பல்லவர்குலத் தலைவர் சம்புவரையர் ஓர் மஞ்சத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். திருக்கோவலூர் மலையமான் அறையின் குறுக்கும் நெடுக்குமாக கம்பீர நடை போட்டுக்கொண்டிருந்தார்.

சிற்றரசர்களுக்கெதிரே தான் படுத்திருப்பது மரியாதையாகாது என்று எழ முற்பட்ட காளியரால் முடியவில்லை. உடலெல்லாம் ரண வலி. நா வறண்டிருந்தது. கடுஞ் சுரம் அடிப்பது போன்ற உணர்ச்சி.

# 5

தேவகுஞ்சரி கண்விழித்த போது எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. எங்கே இருக்கிறோம் என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த இருண்ட அறையின் சாரளம் மிக உயரத்திலிருந்தது. சாரளம் என்று கூறக்கூடாது. காற்று வருவதற்கான ஒரு வழி. காலதர் என்று கூறலாம். கோடைக் காலத்து இரவானதால், பகல் வெயில் மெல்ல மெல்ல இறங்கியதால் அறையில் வெப்பம் நிறைந்திருந்தது. தரையில் கருங்கல் போட்டிருந்ததால் உட்காருவது கூட மிகச் சிரமமாக இருந்தது.

வண்டுகளும் பூச்சிகளும் பறந்து அவளைச் சுற்றிவந்தன. நிரந்தரவாசமாக இருந்த அவற்றிற்குப் போட்டியாக அங்கே மற்றொரு ஜீவன் வந்துவிட்ட கோபமாக இருக்கலாம் அவற்றிற்கு. வியர்வையும் பூச்சியின் தொல்லையும் களைப்பும் வாய்விட்டழலாம் போல் தோன்றியது.

தனது வீட்டை விட்டு வெளியே சென்றவளல்லள். பஞ்சணையின்றிப் படுத்துறங்கியறியாதவள். எதற்காக இப்படி அலைய வேண்டும்? ஏன் இப்படிக் கொடியவர்களிடம் சிக்க வேண்டும்? சோழநாட்டிற்காகப் பாடுபடத் தன்னை நியமித்தது யார்?

அவளுக்கு அந்தத் துயரநிலையிலும் சிரிப்பு வந்தது. மண்ணைவிட மங்கை உடலின் மீது மோகங்கொண்டவர்களிடம் சிக்கி விட்டோமே என்றுகூட எண்ணினாள். மண்ணைக் காப்பாற்ற இந்தப் பொய்யுடலைத் தியாகம் செய்வதானால் அவள் அதற்குத் தயார்தான். ஆனால், நாட்டு விரோதிகளிடமா தன்மானம் இழப்பது! நாட்டைக் காக்கக்கூடியவர்களுக்குக் காணிக்கையாக உடல் பொருள் ஆவியைத் தரலாம் என்று எண்ணும்போது மீண்டும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. வயதுக்கு மீறிய அறிவு தனக்கு ஏற்பட்டு விட்டதோ - தாய் அடிக்கடி கூறுவது சரியாகத்தான் போய்விட்டது - வயதுக்கு மீறிய காரியத்தில் இறங்கி விட்டோமோ!

ஆனால் காளியார் சொல்லியிருப்பது நினைவுக்கு வந்தது. "குஞ்சரி, இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் இப்போது இந்த நாட்டைப் பற்றி நினைக்காமல் சொந்தக் கவலையிலீடுபட்டு விட்டனர். பொன்னியின் அரவணைப்பில் புகழ் பூத்த இந்த மண்,

பாண்டியர்களின் வசம் சிக்கிய போது சோழநாட்டுக் குடிமகனுக்கு மான உணர்ச்சி எள்ளளவாவது இருந்தால் சும்மாயிருந்திருப்பானா? சுந்தர பாண்டியன் காஞ்சிபுரம் வரையில் போய்விட்டானே! தில்லைச் சிற்றம்பலத்தில் மகுடாபிஷேகம் செய்துகொண்டானே! அதைத் தடுக்க ஒருவராவது முன்வந்தார்களா? குஞ்சரி, இனி நாம் எந்தச் சிற்றரசரை நம்பியும் பயனில்லை. நாமே விழித்து எழ வேண்டும். நம்மால் இயன்றதை நமது மாமன்னர் ராஜராஜருக்குச் செய்ய வேண்டும்!'' எவ்வளவு சத்தியமான வாக்கு? மன்னவன் மகுடம் நிலைத்தால்தானே நாமும் சுகமாக வாழ முடியும்?

அதற்குப் பிறகுதான் குஞ்சரிக்கு நாட்டு நடப்பின் மீது நாட்டம் ஏற்பட்டது. மாளிகையைச் சேர்ந்தவர்கள், வாரியத் தலைவர்கள், படைகளைச் சேர்ந்தவர்கள், குறுநிலமன்னர்களோடு தொடர்பு கொண்டவர்கள் என்று பலருடன் பழகும் போதெல்லாம் சோழ நாட்டிற்குக் கொஞ்சம் கொஞ்சமாய் ஏற்பட்டு வந்த நலிவு புரியத் தொடங்கியது. காளியாருடன் தெற்குக்காவல்கூடத்தில் பேசிக் கொண்டிருந்த போதுதான், பாண்டியர்களுடைய படையெடுப் பினால் நாட்டுக்கு ஏற்பட்ட நலிவு தெரிந்தது.

குஞ்சரி பூத்துக் குலுங்கும் பருவமடைந்தவுடன், மன்னரது மாளிகைக்குச் சென்று வரும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டவுடன் சோழ சக்கரவர்த்திகளுக்கு ஏற்பட்டிருந்த தீராத வேதனை அவளுக்குப் புரியத் தொடங்கியது.

ராஜராஜரைத் தோல்வியுற்று பாண்டியர்களிடம் அடிமைப்பட்ட அரசர் என்று ஏளனம் பேசுபவர்கள் சொல்லும் குறைகள் அவரிட மில்லை. தோள்வலிமையிலும் வாள்வீசுவதிலும் அவர் எந்த மல்லருக்கும் சளைத்தவரல்லர். தேர்ந்த அறிவிலும் வருமுன் திட்டமிடுவதிலும் ஞானக்குறைவு ஏதும் அவருக்கு ஏற்படவில்லை. குஞ்சரி கண்டறிந்தது, அவளது இன்னும் முதிரா இளம் உள்ளம் புரிந்து கொண்டது, 'சக்கரவர்த்திக்கு இன்னும் நண்பர் யார், விரோதி யார் என்று தெரியவில்லை' என்பதே.

அவள் மெல்ல நகைத்துக்கொண்டாள். அவரது குழந்தை மனத்தை அறிந்த அந்த ஒரு நாளை நினைத்தால் அவளுக்குச் சிரிப்பு வராமல் என்ன செய்யும்? சக்கரவர்த்தியை அணுகிப் பேசமுடியுமா என்று ஒவ்வொருவரும் ஏங்கியிருக்க, தனக்கு மிக எளிதில் பல

நாழிகை நேரம் உடனிருந்து பேசும் வாய்ப்புக் கிடைத்ததை இப்போது நினைக்கும் போது - அவரது கேள்விகள் சிலவற்றை எண்ணிப்பார்க்கும் போது அவளுக்குச் சிரிக்கக்கூடத் தோன்ற வில்லை. சக்கரவர்த்திகள் பேசினார்... விஜயாலய சோழர் விதை விதைத்து வளர்ந்த சோழப் பெருநாட்டு மாமன்னரா பேசினார்?

அவர் பேசியதை மட்டும் இப்போது நினைத்துக்கொண்டால் போதும், பேச்சோடு அவரது குழந்தைத்தனமான விளையாட்டுக் களை நினைத்துக்கொண்டால் பட்டத்து அரசியார் தன்னைத் தவறாக எண்ணிக்கொள்ளப் போகிறாரே என்று பயத்துடன் மஞ்சத்தின் ஓரத்தில், மயிலூர்தி மீது முருகபிரான் வீற்றிருப்பது போல அமர்ந்து, மெல்ல அவரை நிமிர்ந்து பார்த்தது நினைவுக்கு வருகிறது.

'சாதாரணமாகத்தான் நாம் பார்த்தோம். கடைவிழியின் சுழற்சியால் அவருக்கு ஏற்பட்ட சிலிர்ப்புக்கு நாமா பொறுப்பு? ஏதோ கேட்டிருக்கிறார். விரிக்கக்கூடாதென்றிருந்த செவ்விதழ்களை மெல்லப் பிரித்து முல்லை அரும்புப் பற்களைத் தெரியச் செய்தது அவருக்குப் போதையை ஊட்டிடக் கூடும் என்பது எனக்கு எப்படித் தெரியும்?'

''குஞ்சரி, சோழீசர் கோயில் மேல்மாடத்திற்குச் சென்றிருக் கிறாயா?'' என்று அவர் கேட்கிறார்.

நான் உண்டு, இல்லையென்று அல்லவா மறுமொழி கூறியிருக்க வேண்டும்.

''நீங்கள் போயிருக்கிறீர்களா?''

''இல்லை...''

''கோயிலுக்காவது...''

''சோழீசரை நான் வணங்காத நாளே கிடையாது. அர்த்தஜாம பூசையின் போது ஓதுவாரின் பண்ணிசை கேட்டு, நிருத்தியம் கண்ட பிறகே மாளிகைக்குச் செல்வதை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தேன்.''

''நடனத்தின் மீது பிரியம் உண்டோ?''

''எல்லோருடைய நடனங்களின் மீதும் இல்லை. உன்னுடைய முறை நாளன்று நான் தவறாமல் வருவேன்.''

''அப்படியா...?''

''என்ன அப்படியா? என்னைப் பார்த்ததே இல்லையா? ஓர் அரசர் வந்திருக்கிறார் என்று உனக்குத் தெரியாதா?''

''நான் இறைவன் எதிரே ஆடும்போது அவர் மட்டும்தான் தெரிவார். காற்றாகி நின்ற கயிலைமலையான்தான் தெரிவார். ஒரு சமயம் இமயப்பனிமலையில், ஏமவதியுடன் வீற்றிருப்பதைக் காண்பேன். மற்றொரு முறை விடையேறும் பார்வதி பங்கனைக் காண்பேன்.''

''ஓ, அதனால்தான் என்னைப் பார்த்து ஒரு நாளேனும் புன்முறுவலாவது பூத்ததில்லை...''

''மன்னிக்க வேண்டும். நீங்கள் வந்த உணர்வே எனக்கு இருந்திருக்காது. ஒரே ஒரு நாள் நான் தங்களைப் பார்த்தேன். அன்று பிசகுபிசகாக ஆடினேன். தாளம் தவறியது, முத்திரைகள் பிறழ்ந்தன...''

''ஏன் அப்படி?''

''நீங்கள் என் இதயத்தில் நிறைந்துவிட்டீர்கள்!''

இதைச் சொன்ன பிறகுதான் எவ்வளவு தவறான வார்த்தையைச் சந்தர்ப்பம் தெரியாமல் கூறிவிட்டோம் என்பதை உணர்ந்தேன். என் எதிரே அரசியார் நின்றார். எனது மேனி சிலிர்த்தது. நான் எழுந்து நின்று கொண்டேன். என் பாதம் பூமியில் பாவாமலிருப்பது போல் தோன்றியது. மெல்லிய பூங்காற்றுக்கு ஆயிரமாயிரம் கரங்கள் இருந்தால் அவை என் பாதாதிகேசம் தழுவிவிடுவது போன்ற உணர்ச்சி எழுந்தது. நான் சொல்ல வந்தது அதுவன்று என்று கூறப் பிரயத்தனம் செய்து பார்த்தேன். முடியவில்லை. சொல்லி யிருந்திருக்கலாம்.

''உன் உடலில் ஏன் இப்படியொரு நடுக்கம்?'' என்று மன்னர் கேட்பது என் செவியில் வீழ்கிறது. இப்படியொரு வாய்ப்பு மற்ற பெண்களுக்கு ஏற்படுமா என்று கேட்டு நான் பெருமையடைய வில்லை. இப்படித் தவறாகப் பேசிவிட்டோமே என்று குலுங்கி குலுங்கி அழவேண்டும் போலிருந்தது.

என் விழிகள் பொல்லாதவை என்று கூறுபவர்களும் இருக்கின்றனர். மாறன் கை வில் அவை என்று கவிதை மொழியில் வர்ணிப்பவர்களும் உள்ளனர். ''உன் விழிகளில் சோழகங்கம் ஏரியைப் போல் நீரைத் தேக்கி வைக்க முடியுமா'' என்று அவர்

கேட்பது மட்டுமே என் செவிகளில் வீழ்ந்தது. வாளையும் வேலையும் பிடித்து முரட்டுத்தனமான கைவிரல்கள் விழிகளை ஸ்பரிசிப்பதை நான் உணர்ந்தேன்.

நல்லவேளையோ என்னவோ, திடீரென்று மன்னர் அந்த இடத்தை விட்டு அகன்று தனி மஞ்சத்தில் அமர்ந்தார். அரசி புவன முழுதுடையாள் சேடியர் புடைசூழ முன் அறிவிப்பு இன்றி வந்து கொண்டிருந்தார். நான் அங்கு இருப்பதையறிந்துதான் வந்து விட்டார்களோ? எப்படியோ, நான் அந்த இன்ப நரகத்தினின்று தற்காலிகமாக விடுதலையடைந்தேன். அரசர் அப்படி நடுங்கியிருக்க வேண்டாம். அந்தப் பலமற்ற தன்மைதான் அவரைப் பலவிதத் தோல்விக்குள்ளாக்கியிருக்க வேண்டும்.

தேவகுஞ்சரி சுவரில் சாய்ந்துகொண்டு நடந்த காலச் சம்பவங் களை மனக்கண் முன் கொண்டுவந்து தனக்குத்தானே பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் அங்கு நிலவிய புழுக்கத்தையும் பூச்சிகளின் ரீங்காரத்தையும் மறக்க முயன்று கொண்டிருந்தாள்.

அவள் உடல் திடீரெனச் சிலிர்த்தது. சக்ரவர்த்திகளிடம் அவள் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததால் அவரது உருவத்தை ஒருமுறை நினைத்துக் கொண்டாள்.

காளியார் கதை கதையாக நடந்த செய்திகளைக் கூறுவார். சுந்தர பாண்டியன் திடீரெனப் படைகளுடன் வந்து சோழநாட்டில் புகுந்து வெறியாட்டம் ஆடிய சம்பவத்தைக் கூறுவார். கங்கைகொண்டசோழ புர மாளிகையை பாண்டியப்படை வீரர்கள் சூழ்ந்துகொண்டதை நேரே நடப்பது போல் வர்ணிப்பார். தேவகுஞ்சரிக்கு மிக பயமாக இருக்கும். இரு கைகளை மார்புடன் சேர்த்து இறுகக் கட்டிக் கொண்டு, ''பாட்டா, அப்படியா நடந்தது! அந்தப்புரத்திற்குள்ளேயேவா பாண்டிய வீரர்கள் நுழைந்துவிட்டனர்?'' என்று திகிலுடன் கேட்பாள்.

''தேவகுஞ்சரி, நல்லவேளை. நீ சின்னஞ் சிறியவள். கொலை பாதக வீரர்கள் பெண்டிர் என்றும் முதியவர் என்றும் பார்க்கவில்லை. அந்தப்புர மாதர்கள் பலரைச் சிறையிட்டு மதுரைக்குக் கொண்டு சென்று விட்டனர். இந்தச் சம்பவம் சக்ரவர்த்தியை மனம் நெகிழச் செய்திருக்க வேண்டும். அதனால் தோல்வியை ஒப்புக்கொண்டார். சோழமாதர் தம் கற்பினைப் பாதுகாக்க அவர் தோல்வியை ஒப்புக் கொண்டு சரணடைந்தார்'' என்று கூறவும், தேவகுஞ்சரி விம்மி அழுதேவிட்டாள்.

''பாட்டா, சோழர்கள் பாண்டியர்களிடம் சரணடைந்தார்களா? புலி மீனுக்குப் பணிந்ததா? வீரபாண்டியன் தலையைப் பந்தாடிய ஆதித்த கரிகாலர் பரம்பரையில் வந்த சோழமன்னர் பாண்டியரிடம் சரணாகதியடைந்தாரா? கேட்க நெஞ்சு பொறுக்கவில்லை பாட்டா. நமது வீரர்கள் என்ன ஆனார்கள்? அவர்களது உடலில் வீரரத்தம் ஓடவில்லையா? வாட்களும் வேல்களும் மழுங்கிவிட்டனவா? நமது யானைப்படை என்னவாயிற்று?'' என்று விம்மியவாறு கேட்ட தேவகுஞ்சரியை ஆசுவாசப்படுத்தி, ''குழந்தாய், ராஜராஜரைக் கோழையென்றோ, பயந்து பணிந்துவிட்டாரென்றோ சொல்லக் கூடாது. அந்த நிலையில் யாராயிருந்தாலும் அப்படிதான் செய்திருப்பார்கள். மாதர் தம் கற்பினைக் காக்க வேண்டியது மன்னர் தம் கடமையல்லவா? ராஜராஜர் பணிவது போல் பாசாங்கு செய்தார். திறை கொடுப்பதாகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறை வேற்றவில்லை'' என்று கூறி நிறுத்தினார்.

தேவகுஞ்சரி சின்னக் குழந்தையைப் போல் இருகைகளும் கொட்டி ஆர்ப்பரித்தாள். ''சோழநாட்டினின்று ஒரு சல்லிக் காசுகூட மதுரைப் பொக்கிஷத்திற்குப் போகவில்லையல்லவா?'' என்று கேட்டுத் திருப்தியடைந்தாள்.

''திறை செலுத்தாத கோபம் பத்தாண்டுகளாகக் குமுறி கொண்டிருக்கிறது. எந்தச் சமயத்திலும் வெடித்துவிடலாம். பாண்டிய நாட்டில் படை திரட்டுகிறார்களாம்'' என்றார் காளியார்.

தேவகுஞ்சரியின் பயம் சிறிது சிறிதாகக் குறைவது போலத் தோன்றியது.

''மறுபடியும் போர் ஒன்று வரப்போகிறது என்று சொல்லுங்கள்'' என்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டாள்.

''ஆமாம். நிச்சயம் வரும். வராவிட்டால் நமது சோழநாட்டுச் சிற்றரசர்கள் வரவேற்பர். அவர்களுக்கு நாட்டாசை பிடித்துவிட்டது'' என்றார் காளியார்.

''ஏன் பாட்டா, நாமும் படை திரட்டினால் என்ன?'' என்று கேட்டாள் குஞ்சரி.

காளியார் 'ஹோ ஹோ' என்று பயங்கரமாகச் சிரித்தார். ''பெண்ணே, நாம் அந்த நிலையிலில்லை. யுத்தம் என்று பேசினால்

சோழமக்கள் ஓடி ஒளிந்துவிடுவார்கள். சம்புவரயனும் மலையமானும் வாணகோவரையனும் ஒரு சிறு வேல்கம்பினைக் கூட உதவியாகக் கொடுக்கமாட்டார்கள்.''

''ஏன்...?''

''நமது அரசரின் ராஜதந்திரம் சிறிது காலமாக மழுங்கிவிட்டது. அந்தப்புரத்தை விட்டு வெளியே வருவதில்லை. சிற்றரசர்களைச் சந்தித்துப் பேசுவதில்லை. அவர்களது ரகசியக் கூட்டங்களை நமது ஒற்றர்படையினர் கண்டு அறிந்து தக்க சமயத்தில் தெரிவிப்ப தில்லை. அவர்கள் அனைவரும் நமது அரசருக்கு விரோதிகளாக மாறிவிட்டனர்.''

''ஏன், ராஜதந்திரம் குறைந்துவிட்டது...?''

''குறையாமல் என்ன செய்யும்? கோப்பெருஞ்சிங்கனுடன் நமது சக்ரவர்த்தியார் இன்னும் கொஞ்சம் சிநேகபாவத்துடன் நடந்திருக்கலாம்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''கோப்பெருஞ்சிங்கனுக்குத் தன் மகளை நமது சக்ரவர்த்திக்கு மணம் புரிவிக்க ஆசை. மணவினைத் தொடர்பால் சோழநாட்டில் பெரும் ஆதிக்கம் செலுத்தலாம் என்ற எண்ணம்.''

''கோப்பெருஞ்சிங்கர் - தன் மகளை - நமது சக்ரவர்த்திகளுக்கா? பட்டத்தரசியார் புவனமுழுதுடையாளின் தனித்தன்மை குறைந்து விடாதா?''

''மன்னர் ஒப்புக்கொள்ளாததால் கோப்பெருஞ்சிங்கன் தன் மகளை மலையமானுக்கு மணம் புரிவித்துவிட்டான். தனது கோஷ்டியில் மலையமானையும் சேர்த்துக்கொண்டான்.

தேவகுஞ்சரி ராஜாங்கச் செய்தி கேட்டுப் பெருமூச்சுவிட்டாள். ''இதென்ன பாட்டா நியாயம்? கொள்வினை கொடுப்பினைக்காக யுத்தமா? நன்றாக இல்லையே!'' என்றாள்.

''உனக்குப் பிடிக்கவில்லை குழந்தாய். மண்ணும் பெண்ணும் தான் போருக்கு அடிப்படை என்பதை உனக்குத் தெரியாது. ராஜதந்திரம் ராஜதந்திரம் என்று சொல்கிறார்களே. அதை நமது மாமன்னர் கற்றுக்கொள்ள வேண்டும். அவரைச் சுற்றியிருப் பவர்களும் அதில் தேற வேண்டும்'' என்றார்.

என்ன நினைத்தாளோ, என்னவோ, தேவகுஞ்சரி அன்று ஒரு முடிவுசெய்து கொண்டாள். சோழநாட்டின் மீது அந்நியர் படையெடுப்பைத் தடுக்கவும் மன்னரது கரங்களைப் பலப்படுத்தவும் தன்னாலியன்றதைச் செய்யமுடிவு செய்தாள்.

சில முக்கியமான காரியங்களை ஏற்று கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து திருக்குடந்தை நகருக்குப் பயணமானாள். சுவாமிமலையில் கல்வி கற்க வந்ததை போல் பாவனை செய்தாள். அங்கும் எதிர்பார்த்ததற்கு மாறாக மகனின் மனவிகாரத்தை உணர்ந்து புறப்பட்டவளுக்குச் சோழநாட்டில் நடைபெறும் பல பயங்கர இரகசியங்கள் தெரிய வந்தன.

தேவகுஞ்சரிக்கு இவை புது அனுபவங்கள். பட்டுப்பூச்சியைப் போல் பறந்து துள்ளித் திரிந்து வாழ்க்கை அனுபவங்களில் சிறக்க வேண்டியவள். ராஜீய விவகாரங்களில் இறங்கியது வயதுக்கு மீறிய செயல்தான் என்றாலும் அவளுள்ளத்தே எழுந்த நாட்டுப்பற்று எந்தவித இடரையும் ஏற்கத் தயாராக இருந்தது. ஆனால், எல்லாச் செயல்களுக்கும் முற்றுப்புள்ளி ஏற்படுவது போல் இப்படி எங்கோ ஓர் இருட்டறையில் சிக்கித் தொல்லைப் படக்கூடும் என்பதை நினைக்கவேயில்லை.

அவளால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து நின்றாள். அந்த அறையில் நடந்தாள். சுற்றிச் சுற்றி வந்தாள். ஊழிக்கூத்து ஆடவேண்டும் போல் தோன்றியது. கால்கள் தள்ளாடின. பசியும், சோர்வும் கீழே 'விழு விழு' என்று வற்புறுத்தின. தேவகுஞ்சரி தரையில் சாய்ந்தாள். அகில் மணங்கமழ, அன்றலர்ந்த மலர்களின் மணம் சூழ்ந்திருக்க இலவம் பஞ்சு மெத்தையில் தலையணைகளின் சுகத்தில் இன்பத் துயில் புரியும் பூங்கொடி, துவண்டு கற்றரையில் கிடந்தது. யாழ்நரம்புகளின் மெல்லிய நாதத்தைப் பணிப்பெண்கள் மீட்ட அந்த நாத சுகானுபவத்தில் மெல்லக் கண் வளரும் அல்லிக்கொடி வண்டுகளின் சப்தத்தில் கண்ணயர முயன்றாள்.

இரவு மெல்ல மெல்ல ஊர்ந்தது. கிருஷ்ணபட்சத்து சந்திரனின் அரை முகம் சாளரத்தின் வழியே குஞ்சரியைப் பார்க்க முயன்றது. தென்றலான் தன் மென்கரங்களை அந்தச் சிறு காலதர் வழியே நீட்டி அவள் உடலை வருட முயன்றான். எல்லோரையும் வென்றவன் கதிரவன்தான்.

சூரியனின் சுடுகதிர்கள் அவள் முகத்தில் தாக்கி அவள் களைப்பைப் போக்கியிருக்க வேண்டும். பொழுது விடிந்தது. அதிக நேரமாகிவிட்டது போல் தோன்றியது. பசி அவளைப் படுத்திருக்க விடவில்லை. முதல் நாள் இரவு அவளைக் கவனிக்க எவரும் வரவில்லை. அந்த இடத்தருகே மக்கள் நடமாட்டமிருக்கிறதா என்று கூடத் தெரியவில்லை. அந்த அறைக்குப் பெரிய கதவு இருந்தது. அந்த அறையிலிருந்து துளிகூட சப்தம் வெளியே கேட்கா வண்ணம் அது தடுத்தது. குஞ்சரி கதவருகே சென்று தன் சக்தியெல்லாம் பயன்படுத்திக் கூவினாள். கதவைப் படபடவென்று தட்டினாள்.

''இறைவா, இப்படியொரு சோதனை... என்னைக் காரிருள் அறையில் தள்ளி வாழ்நாளையே போக்கடிக்கப் போகிறாயா? நான் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக உள்ளனவே! பாண்டியர்கள் சூழ்ச்சியை முறியடிக்க ஒரு யாத்திரையையே மேற்கொள்ளப் போகிறேனே! என்னை இங்கேயே தடுத்து நிறுத்திக் கயவர்கள் கரங்களில் சிக்கச் செய்து விடப் போகிறாயா?''

நடு உள்ளில் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். தன் தாயை நினைத்துக்கொண்டாள். தான் நாள்தோறும் வணங்கும் சோழீசரை நினைத்துக்கொண்டாள். கங்காபுரியில் நான்கு திக்கிலும் உள்ள தெய்வங்களை நினைத்துக்கொண்டாள். கோட்டை வாசல் விநாயகரை நினைத்துக்கொண்டாள். திருவேரகத்து முருகப்பிரானை நினைத்துக்கொண்டாள்.

'தெற்குவாசல் காளியாரே, உங்களுடைய உற்சாகமூட்டும் பேச்சால் நான் கிளர்ந்தெழுந்து இந்த முயற்சியில் இறங்கினேன். அந்தப் பணி பாதியிலேயே நின்றுவிடக்கூடாது. மானசீகமாக வந்தெனக்கு உதவுங்கள்.'

தேவகுஞ்சரியின் செவியில் 'தடதட' வென்ற ஓசை விழுந்தது. கூர்ந்து கவனித்தாள். அந்த அறையின் கதவுதான் தட்டப்பட்டது.

கதவை எதற்காகத் தட்டுகிறார்கள்? கதவை அவர்களல்லவா தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள்? உட்புறம் தாழ்ப்பாள் இருக்கிறதா? இல்லையே...

கதவு திறந்தது. நான்கு பேர் உள்ளே மளமளவென்று வந்தனர்.

''நீ உறங்கிக்கொண்டிருப்பாய். உன்னை எழுப்புவதற்காகக் கதவைத் தடதடவென்று தட்டினோம்... பயந்துவிட்டாயா?'' என்று அதே ஒற்றைக்கரத்தான் கோபச் சிரிப்புடன் கூறினான்.

''இரண்டு கைகளாலுமா தட்டினாய்?'' என்று கேட்கத் தோன்றியது. அவளுக்கு அவன் முகத்தையே பார்க்கப் பிடிக்க வில்லை.

''நன்றாகத் தூங்கினாயா? தூங்குவதற்கு ஒரு மூலிகை கொடுத்தேன். 'கும்பகர்ணக் கொடி' என்று பெயர். அறுபது நாழிகை உறங்கலாம். அதுதான் சரியாக இப்போது வந்தேன். இதோ பழம் பால், பருப்புச்சாதம். மீன் பிடிக்குமா? கொண்டுவந்திருக்கிறேன். டேய், யாரங்கே? உணவுத்தட்டுக்களைக் கொண்டு வை'' என்றான் ஒற்றைக்கரத்தோன்.

பணியாட்கள் கல்யாணப் பரிசம் போல் உணவுத் தட்டங்களைக் கொண்டு எதிரே வைத்தனர்.

அந்த அறையில் நூறு நூறு பூச்சிகள் மடிந்து கிடந்தன. ஒட்டடை தொங்கியது. உடலிலே படிந்திருந்த அழுக்கும் வியர்வை நாற்றமும் எதிரேயிருந்த கொடூர முகமுடையவர்கள் தோற்றமும் அவளுக்கு வயிற்றில் ஒரு சுழற்சியை ஏற்படுத்தின.

அவர்களை எதிர்ப்பதா? எதிரேயுள்ள ஆகாரத்தட்டுக்களை வீசி எறிவதா? அல்லது மிகவும் குழைந்து பேசி அவர்களிடமிருந்து தப்பிச்செல்ல வழிதேடுவதா என்று ஒரு கணம் சிந்தித்தாள்.

அவளது மௌனமும், அவள் தன் விழி கொண்டு சுற்றிச் சுற்றி அனைவரையும் பார்ப்பதும் ஒற்றைக்கையனுக்குக் புதுத் தெம்பை அளித்தன.

''என்ன பார்க்கிறாய்? இந்த உணவு வகை போதாதென்றா? இது சும்மா காலை ஆகாரம். மதிய உணவு மிகவும் ருசியாக இருக்கும்'' என்று கண்ணைச் சிமிட்டினான்.

குஞ்சரிக்குச் சிரிப்பு வந்தது. எதிரேயிருந்த காய்ந்த மீனின் நாற்றம், உடல் வியர்வை நாற்றத்தையும் வென்றது.

அவள் மீனை நோக்குகிறாள் என்பதைக் கண்டவுடன் அவன் உற்சாகத்துடன், ''புதிய மீன்தான். இரவு விருந்தில் காட்டில் வேட்டை யாடிய மான், முயல் எல்லாம் உண்டு... எல்லாம் உன் சம்மதத்தைப் பொறுத்து இருக்கிறது'' என்று கண்சிமிட்டினான்.

''நாறுகிறது'' என்றாள் குஞ்சரி மூக்கைச் சிணுக்கிக்கொண்டு.

''மீனா?'' என்று பரபரப்புடன் கேட்டான் ஒற்றைக்கையோன். அருகிலிருந்த மீசைக்காரன், அவளுடைய முகத்தின் கோணலை ரசித்தான்.

''மீனில்லை. இந்த உடல்'' என்றாள் குஞ்சரி.

ஒற்றைக்கரத்தோன் அசட்டுச்சிரிப்புடன்; ''உடல் நாற்றமா... உன்னுடலா?'' என்று வினவி, ''வாசனைத் தைலங்கள், பன்னீர் எல்லாம் இருக்கிறது...'' என்றான்.

''இல்லை. முதலில் குளிக்க வேண்டும். பிறகுதான் எல்லாம்...'' என்றாள் குஞ்சரி.

''எல்லாமா?'' என்று பற்கள் தெரிய நகைத்த ஒற்றைக்கரத்தான், ''உம்... குளிப்பதற்குத் தலைவரின் உத்தரவைக் கேட்கவில்லையே! உனக்குக் காலைப் பலகாரத்தைக் கொடுத்து அவரது இரகசிய அறைக்கு அழைத்து வரச் சொன்னார்... குளிப்பதைப் பற்றிச் சொல்லவில்லை...'' என்றான் முகத்தில் அசடுவழிய.

''நீங்கள் குளிப்பதானால் தலைவரைத்தான் கேட்பீர்களோ?'' குஞ்சரி சீறினாள்.

''இல்லை... இல்லை. நாங்கள் கேட்பதில்லை. குளிப்பதே யில்லை...'' என்று சொன்னவுடன் அனைவரும் சிரித்துவிட்டார்கள். அந்த நிலையிலும் குஞ்சரிக்குச் சிரிக்கத் தோன்றியது.

''உன் தலைவர் யாரப்பா, அவ்வளவு பெரிய மகாமேதை? இந்த நாட்டில் ஒரே தலைவர்தான் உண்டு. அவர்தான் சோழச் சக்கர வர்த்திகள் ராஜராஜசோழதேவர். ஒரு பெண்ணைத் திருட்டுத் தனமாகக் கவர்ந்துவந்து, இருட்டறையில் ஈ, எறும்பு, கொசுவுக்குத் துணையாக அடைத்து, உச்சிவேளையில் காலை உணவு படைக்கும் அந்த மகத்தான தலைவர் யார்?''

குஞ்சரியின் சீற்றத்தைக் கவனிக்காத மீசைக்காரன். ''எங்கள் தலைவரை உங்களுக்குத் தெரியாதது அதிசயமோ?'' என்றான்.

''வெளியே நடமாடுபவர் தானே? வீரர் தானே? கத்தி எடுத்துச் சுழற்றுபவர் தானே? சகோதரிகளை உடையவர் தானே? தாயின் வயிற்றில் பிறந்தவர்தானே?... அப்படிப்பட்டவராயிருந்திருந்தால் எனக்கும் தெரிந்திருக்கும்... யார் உங்கள் தலைவர்?'' என்று அதட்டினாள் குஞ்சரி. அந்தத் தைரியம் எப்படி வந்ததோ தெரியவில்லை.

''பெண்ணே! என்ன இப்படிப் பேசிவிட்டாய்? என் தலைவர் தான் இப்போது சோழநாட்டுக்குத் தலைவர். நீ சொல்லும் ராஜராஜர் எல்லாம் என் தலைவர் இட்ட பிச்சை. 'பிழைத்துப் போ' என்று கங்காபுரியில் அரியணையில் அமரச் செய்திருக்கிறார். அதுவும் கொஞ்ச நாட்கள்தாம். எங்கள் தலைவருக்குச் சகோதரிகள் உண்டு. தாயின் வயிற்றில் பிறந்தவர்தான். இன்னும் கல்யாணமாகவில்லை. தகுந்த பெண்ணைத் தேடிக்கொண்டிருக்கிறார். மணவாளப் பெருமானைத் தெரியாதவருண்டா? அவரது திருக்குமாரர்தான் எங்கள் தலைவர். உன்னைப் பிடித்திருந்தால் உன்னையே மணந்து கொண்டு விடுவார். பிறகு நீதான் திருமுனைப்பாடி நாட்டு இளவரசி. பிறகு சோழநாட்டு இளவரசி! அப்போது நீ இட்ட பணியை நாங்கள் தலையாலேயே செய்வோம்...'' என்றான் மீசைக்காரன்.

''இளவரசியான பிறகுதான் செய்வீர்களோ?'' என்று ஒற்றைக் கையனை நெருங்கி அவனது தோளில் தனது கையை வைத்துக் கேட்டாள்.

அவ்வளவுதான்! அவனுக்கு ஈரேழுலகமும் காலடியில் வந்து வீழ்ந்தது போன்ற பிரமை.

''இல்லை இல்லை... இப்போதே செய்வோம். கட்டளை யிடுங்கள்...'' என்று குழைந்தான். அவளுடைய கரத்தைப் பிடிக்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால், பாழும் தெய்வம் அந்தக் கரத்தைப் பறித்துக்கொண்டதே என்ற வருத்தத்துடன், ''என்ன வேண்டும் தேவி?'' என்றான்.

அவன் குரலில் ஏற்பட்ட மாறுதலைக் கண்ட குஞ்சரி ''நான் இப்போதைக்கு நீராட வேண்டும். மறைவான இடம்வேண்டும்'' என்றாள்.

''இதோ, என் தலைவரிடம் கேட்டு ஏற்பாடு செய்கிறேன்'' என்று விரையத் தொடங்கியவனைத் தடுத்து, ''இதற்குக்கூடவா தலை வரைக் கேட்க வேண்டும்? உன்னைப் பற்றித் தலைவர் என்ன நினைப்பார்? சிறு விஷயங்களுக்குக் கூட முடிவெடுக்கத் தெரியா தவன் என்று நினைத்து விடமாட்டாரா? அருகிலுள்ள கிணற்றி லிருந்து நாலு பானைத் தண்ணீர் எடுத்துக்கொடு. அல்லது ஒரு கயிறும் செம்புமாவது கொடு. அது போதும்'' என்றாள்.

அவள் சொன்னதும் மிகவும் சரியெனப்பட்டது. உடனே ஓடிப் போய்க் கயிறும் பானையும் கொண்டுவந்தான். கிணற்றங்கரைக்கு அழைத்துச் சென்றான். தன் விழிகளால் ஒரு முறை அவனை ஒரு வெட்டு வெட்டி, "நன்றி" என்றாள்.

அவன் அப்போதும் அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

"நீ போகலாம். பெண்கள் குளிக்குமிடத்தில் இருப்பது தகாது" என்றாள்.

அரைமனத்துடன் அவன் சென்றுவிட்டான். குளிக்கத் தொடங்கும் போது அடர்ந்த தாடிமீசையுடன் வேலைக்காரன் ஒருவன் வந்தான்.

"அவனுக்குச் சொன்ன பதில்தான் உனக்கும். உம். போய்விடு.. அப்புறம் வா" என்று சீறினாள்.

"நான் போய் வருவதற்காக வரவில்லை" என்றான் அவன்.

குஞ்சரி திடுக்கிட்டாள். "நீ போகாவிடில் நான் சத்தம் போட்டு ஒற்றைக்கையனைக் கூப்பிடுவேன்" என்று அதட்டினாள்.

"உனக்குத்தான் நஷ்டம். உனக்கு உதவுவதற்காக வந்திருக்கும் என்னைக் காட்டிக்கொடுத்தால் உனக்குத்தான் நஷ்டம்" என்றான் மீசை தாடியுடையவன். குரல் எங்கோ கேட்டது போலிருந்தது!

"எனக்கு உதவுவதற்கா?"

"ஆமாம்...! என்னைத் தெரியவில்லையா?" என்று தனது பொய் மீசையையும் தாடியையும் களைந்த அவனைப் பார்த்து, 'ஆ' என்று வியப்பால் கூவிவிட்டாள்.

'இவன் எனக்கு உதவுவானா? அல்லது மேலும் சிக்கலை வரவழைப்பானா? இங்கு எப்படி வந்தான்?' என்று ஆலோசனை யிலிறங்கிய அவளை நோக்கி, "உம். உம்... அப்புறம் குளிக்கலாம். இந்த உடையை உடுத்திக்கொள். மதிற்சுவருக்கு வெளியே குதிரையொன்று இருக்கிறது. குதிரை மீது ஒருவனிருப்பான். அவன் உன்னை ஏற்றிக்கொண்டு சென்றுவிடுவான்" என்றான்.

குஞ்சரி திகைத்தாள். "நீ மளமளவென்று உன் ஆடையை அவிழ்த்துக் கிணற்றங்கரை மீது வைத்துவிட்டு இந்த ஆடையை உடுத்திக்கொண்டு ஓடி விடு" என்றான் அவன்.

# 6

தேவகுஞ்சரி தன்னுடைய ஆடையைக் களைந்து கிணற்றங் கரையின் மீது வைத்துவிட்டு, மாற்றுடையை அணிந்துகொண்டாள். தலைக்குத்தலைப்பாகை நீண்ட அங்கி இடையில் புடைவை போல் கச்சம் வைத்து ஒரு துகில். இடுப்பில் குஞ்சலம் வைத்த கச்சை. அவளுடைய பெண்மை ஒரு கணத்தில் மறைக்கப்பட்டது. இது என்ன? ஓ, உறைவாள் - இடைவாள்!

இப்போது அவள் சோழநாட்டு வீரன்! ஆம் - அவள் சோழ நாட்டுப்படையில் சேராத வீரன்தான்! நாட்டை உட்பகை, வெளிப் பகையினரிடமிருந்து மீட்கவே காளியாக மாறிவிட்டவள். அவள் உள்ளத்தினுள்ளே ஏதோ ஒன்று சொல்கிறது; 'சோழநாட்டிற்கு ஆபத்து வந்துகொண்டேயிருக்கிறது.' கருமேகம் மேற்கே திரண்டு பெருமழையை வரவேற்குமுன் ஒரு புழுக்கமும் பிறகு சுழன்று சுழன்று காற்றும் வீசுமே அது போன்ற நிலை.

'பட்டப்பகலில் ஒரு பெண்ணைத் தூக்கிவந்து பாழ் சிறையி லிடும் அளவுக்குச் சோழநாட்டில் கேட்பாரற்றுப் போய்விட்ட தென்றால், பெரும் யுத்தம் வரப்போகிறதென்பதற்கு மறைமுகச் சூழ்நிலைதானே இது?' இவ்வாறு எண்ணிக்கொண்டு வேகமாக நடக்கலானாள். திரும்பிப் பாராமல் நடக்கலானாள். தன்னை இப்படியொரு ஆபத்திலிருந்து காப்பாற்ற அந்த ஆத்மாவுக்கு என்ன அக்கறை? உருவ அடையாளத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அடர்ந்த தாடி, மீசை, சடை போடப்பட்ட முடி. குரல் மட்டும் இளமையாகத்தான் இருக்கிறது. வேண்டுமென்றே குரலை மாற்றிக் கொண்டு பேசுவது போலும் தோன்றியது. யாராயிருந்தாலென்ன, கடவுள் காப்பாற்றிவிட்டார்.

குஞ்சரி எங்கே செல்கிறோமென்ற குறிக்கோளில்லாமல் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். செல்லும் போதே சற்று நினைத்துப் பார்த்தாள். தான் குளித்துக்கொண்டிருப்பதாக அந்தப் பாதகர்கள், மணவாளன் ஆட்கள் எண்ணுவார்கள். சிறிது நேரம் பொறுத்துப்பார்ப்பார்கள். கிணற்றங்கரையின் மீதுள்ள ஆடையைப் பார்த்து அமைதியிழந்துத் தவிப்பார்கள்.

குஞ்சரிக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது - அவர்களை ஏமாற்றிவிட்டோம் என்பதற்காக அன்று. ஆண் இனம் எல்லாமே பெண் என்றால் இப்படிச் சுயபுத்தியை இழந்துவிடுகிறதே என்று நினைக்கும் போது துயரங்கலந்த சிரிப்பு வந்தது.

'சோழநாட்டையே கபளீகரம் செய்துகொள்ள வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இளைய மணவாளன், ஒரு பெண்ணிடம் மனத்தை ஏன் பறி கொடுக்கிறான்? அதுவே அவனது அழிவுக்கு விதைக்கப்பட்ட விதையோ?' - சிந்தனை ஓட்டத்திற்கு இணையாக அவள் நடந்தாள்.

அதோ, யாரோ வருகிறார்களே! குஞ்சரியின் இதயம் சட்டென்று நின்றுவிடும் போலிருந்தது. படைவீரன் ஒருவன் விரைந்து வந்து கொண்டிருந்தான். இப்படியே திரும்பி ஓடிவிடலாமா என்று குஞ்சரி எண்ணினாள். அப்படி ஓடுவது சந்தேகத்திற்கு இடமளிக்கும். ஒரெட்டில் தாவிப் பிடித்து விடுவான். தான் சிக்கிக்கொள்வது இருக்கட்டும்... தனக்கு மாற்று உடை அளித்த மகானுபாவர் அகப்பட்டுக்கொண்டால்?

வந்தது வரட்டும் என்று அவள் முன்னேறினாள்! அவளருகே நெருங்கும் போது அந்த வீரன் நின்றான். சற்று வழிவிட்டு நின்றான். அவன் தலை வணங்கிற்று.

''சாலை ஓரத்தில் வண்டி நிற்கிறது. காளைகளுக்கு இப்போது தான் வைக்கோல் போட்டிருக்கிறோம். நீங்கள் இளவரசர் மாளிகைக்குத்தானே செல்கிறீர்கள்?'' என்று கேட்டுச் சற்று நிறுத்தினான் அந்த வீரன். மணவாளனது வீரன் போலிருக்கிறது. அவன் தனக்கு வணக்கம் தெரிவிக்கக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும்!

''நேற்றுப் பிடித்த கிளி இன்றும் கூண்டில் இருக்கிறது. அதற்குள் துடிக்கிறார் இளவரசர். 'அழைத்து வா உடனே' என்று கட்டளை. ஊர் உலகத்திலே ஒரு பெண்ணைக்கூட விடமாட்டாரே பாவி! நமக்கென்ன? கங்காபுரி நடனப்பெண்ணாம் அது. அழகு என்றால் கொள்ளை அழகாம். வெறும் ஆசைநாயகியாக வைத்துக் கொள்ளாமல் அந்தக் கிளிக்குஞ்சை இளவரசியாகவே ஆக்கிவிடப் போகிறாராம்... உம்... நமக்கெதற்கு வம்பு? நீங்கள் போய் வண்டியின் அருகே இருங்கள். நான் அந்தச் சொர்ணக்கிளியை அழைத்து வருகிறேன்.'' அவன் சற்று நிறுத்தினான். மூச்சு வாங்கியது.

தேவகுஞ்சரி அங்கே மேலும் தாமதப்படுத்த விரும்பவில்லை. தலையை அசைத்துவிட்டுப் புறப்பட்டாள்.

''ஒற்றைக்கையன் புதிது புதிதாகப் பெண்களைக் கொண்டு வருகிறான். உடனே படைத்தலைவர் அந்தஸ்து! மீசைகூடச் சரியாக முளைக்காதவனுக்குப் படைத்தலைவர் பதவி! பதவிதான் பெரிசு கடைசியில் ஒரு பெண்ணை அபகரிக்கும் ராவணன் பதவி தான்!'' என்று சொல்லிக்கொண்டே அந்தப் படைவீரன் சென்றான்.

அவன் சொல்லியது போது சாலையின் மரநிழலில் இரட்டைக் காளை வண்டியொன்று நின்றுகொண்டிருந்தது. காளைகள் கம்பீரமாக அசைப்போட்டுக்கொண்டிருந்தன. வண்டி பட்டுத் திரைச் சீலையால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கருடக்கொடி வண்டியில் பறந்தது.

சொர்ணக்கிளியை இளைய மணவாளனிடம் சேர்ப்பிக்க நிற்கும் வண்டி அது.

'இங்கேயே நாம் நின்றுகொண்டிருந்தால்...?

'இன்னும் சிறிது நேரத்தில் அல்லோலகல்லோலப்படப் போகிறது. என்னைக் காணாமல் அவர்கள் இடிந்து போய்விடப் போகிறார்கள். நான்கு திசைகளிலும் ஆட்கள் விரையப் போகிறார்கள். என்னைப் பிடிக்காமல் விடமாட்டர்ர்கள். என்னைப் பிடிப்பது அப்படி யொன்றும் அவர்களுக்குக் கஷ்டமாயிருக்காது. நான் இந்த வண்டிக் கருகே நின்றுகொண்டிருந்தால் மட்டும் கண்டு பிடிக்காமலிருந்து விடுவார்களா? ஐயோ, இதென்ன கஷ்டம்! பாம்பின் வாயிலிருந்து பருந்தின் வாயில் விழுந்தது போலாகி விட்டேனே...'

குஞ்சரி பரபரப்படைந்தாள். சாலையின் இரு பக்கமும் பார்த்தாள். ஏதோ ஒரு திசையை நோக்கி ஓட முயன்றாள்.

யாரோ சிரிக்கும் ஓசை கேட்டது. மரத்தின் மறைவிலிருந்து, ஓர் உருவம் வெளிப்பட்டது. தனக்கு மாற்றுடை கொடுத்த அவரே தான்!

''உம். இவ்வளவு நேரமா... கிணற்றடியிலிருந்து வர? வண்டி யிலேறி உட்கார்ந்து கொள். ஏன் என்று கேட்காதே!'' என்றார்.

அவர் நுகத்தடியருகே வந்து காளைகளைப் பிடித்துக் கொண்டார். குஞ்சரி ஒரு தடவை அந்த உருவத்தை உற்றுப் பார்த்தாள். அவளால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

''இந்த வண்டி...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

''பேச நேரமில்லை. ஏறி உட்கார்ந்துகொள்'' என்ற குரலில் கட்டளையுமிருந்தது.

குஞ்சரி வண்டியில் அரைமனத்துடன் ஏறி உட்கார்ந்தாள்.

'ஜல்ஜல்' என்ற ஓசையுடன் வண்டி புறப்பட்டது. குஞ்சரி படைத்தளபதியின் உடையிலிருந்தாலும் அவள் உள்ளத்தில் பெண்மை குடியிருந்ததால், அச்சம் நிறைந்திருந்தது.

'இது என்ன மாயமந்திரஜாலம் போல் சம்பவங்கள் நடக்கின்றனவே! எந்த வேளையில் கங்கைகொண்டசோழபுரத்தை விட்டுப் புறப்பட்டோமோ?' என்று நினைக்கும் போது அவள் விழிகளில் நீர் தளும்பியது.

''ஏன் கண்கலங்குகிறது குஞ்சரி?'' என்று வண்டியை ஓட்டியவாறு கேட்டார் அந்தப் புதியவர். அவர் படைவீரரா? அல்லது ஏதாவது மடத்தைச் சேர்ந்தவரா? அவரது உடையும் தோற்றமும், ஒன்றும் புரியவில்லையே என்று வேதனைப்பட்டாலும் குஞ்சரிக்கு அந்தக் குரல் எங்கோ கேட்டது போலவே தோன்றியது.

குஞ்சரி ஏதும் பேசவில்லை. வண்டி மேடும் பள்ளமும் நிறைந்த சாலையில் ஆடியும் அசைந்தும் சென்றது. சோழநாட்டுப் பாட்டைகள், பயணத்துக்குச் சௌகரியமானவை என்ற பெயர் ஒரு காலத்தில் இருந்தது. இப்போது கவனிப்பதற்கு ஆளில்லை. சாலையின் இருபுறமும் உள்ள மரக்கிளைகளை வெட்டிச் சொந்த உபயோகத்துக்கு எடுத்துச் சென்றிருந்ததால் கதிரவனின் கடும் தாக்குதல் பூரணமாக இருந்தது.

''நான் கேட்டது உங்கள் காதில் விழவில்லையா?'' என்றார் வண்டியை ஓட்டிச் சென்ற அந்தப் புதியவர்.

(புதியவர் என்ற பெயரிட்டு நாம் அழைப்பதற்குக் காரணமே பல புதுப்பெயர்களை அறிமுகப்படுத்தி வாசகர்களது நினை வாற்றலைச் சோதனை செய்ய வேண்டாம் என்ற எண்ணத்தில் தான். இன்னும் சில நாட்களில் அந்தப் புதியவர் பழையவராய் விடுவார்!)

குஞ்சரி புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

''ஏதோ நினைத்துக் கொண்டேன், கண் கலங்கிவிட்டது.''

''ஏதோ என்றால் குறிப்பாக ஏதுமில்லையா? வீட்டை - அன்னையை?''

''நான் புறப்பட்ட வேளையை நினைத்துக்கொண்டேன். எனது அருமைச் சோழ வளநாட்டிற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற ஆவேசத்துடன் புறப்பட்டேன்.''

''உன்னைப் பார்த்தால் முகத்தில் ஆவேசம் தெரியவில்லையே! அழகுதானே தெரிகிறது?''

குஞ்சரி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். 'என் அழகை ரசிப்பவர் வரிசையில் சேர்ந்துவிட்டாரோ இவரும்? உதவுகிறேன் என்று உடலின் மீது சொந்தம் கொண்டாடப் போகிறாரோ! ஆண்டவனே! ஒரு பெண் தனியாகச் செல்லவே முடியாதா?'

குஞ்சரி சற்றுத் திடப்படுத்திக் கொண்டாள் இதயத்தை.

''ஐயா, தாங்கள் யார் என்று இப்போதாவது சொல்லலாமா?''

''அந்தத் தருணம் வந்தவுடன் நான் சொல்லாமலே நீயே தெரிந்துகொள்வாய்!''

''என்னைக் காப்பாற்றுமாறு உங்களுக்குத் தோன்றக் காரணம்?''

''தோன்றக் காரணமா, தூண்டக் காரணமா என்று கேள்! உன்னைப் பார்த்த எவரும் உன் மீது இரக்கம் கொள்ளாது இருக்க மாட்டார்கள்...''

''தெரியும் ஐயா! அந்த இரக்கம் என் அழகைப் பார்த்து. அழகை அணிந்திருக்கும் உடலைப் பார்த்து. தங்களுக்கும் அப்படித் தானே?...'' இப்படிக் கேட்டவுடன் அந்தப் புதியவர் திடுக்கிட்டுத் தடுமாறுவார் என்று எண்ணினாள். ஆனால் அவர் மிக அமைதியாக,

''பெண்ணே! இந்தக் கேள்விக்கு உடனே என்னால் மறுமொழி கூற முடியாது. உன்னை ஓர் ஆபத்தான சந்தர்ப்பத்தில் பார்த்தேன். அந்த இடத்திலிருந்து உன்னைத் தப்பிப் போகச் செய்திருக்காவிடில் நீ பலியாகியிருப்பாய்'' என்றார்.

''பலியா நான் உயிரைவிட எந்த நொடியும் ஆயத்தமா யிருக்கிறேன்.''

''உயிர் பலியைச் சொல்லவில்லை. உடல் பலியை. உன்னை மணவாளன் இன்றே ருசி பார்த்திருப்பான். நிரந்தரமாக ருசி பார்க்கத் தன் மாளிகைக்குக் கொண்டுசென்றிருப்பான். நீ உயிரை இழப்பாயே

தவிர, உடலை இழக்கமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் நீ உடலைச் சோழமன்னருக்கு அர்ப்பணித்திருக்கிறாய்...'' - இப்படி அவர் சொல்லும் போது குஞ்சரி குறுக்கிட்டு. ''சோழமன்னருக்கு இல்லை ஐயா. சோழநாட்டிற்கு என்று சொல்லுங்கள்!'' என்றாள்.

''அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்! சோழநாட்டிற்காகப் பாதுகாத்து வைத்திருக்கும் உன் அழகிய உடலை அந்தச் சிறு நரி சின்னாபின்னப் படுத்துவதா! நான் சகிக்கமாட்டேன். அதனால் தான்! ''

''ஐயா, தங்களுக்கும் சோழநாட்டின் மீது உயிரா?''

''ஏன் உனக்குச் சந்தேகம்? பொன்னி வளநாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்று இல்லாமல் போகுமா? பரம்பரை பரம்பரையாக ஊறி வரும் இரத்தமல்லவா?''

''இருக்கலாம். ஆனால் இப்போது நாட்டுப்பற்று அடியோடு இழந்தவர்களைப் பார்க்கிறேன்.''

''அப்படிச் சொல்லக்கூடாது....''

''பிறகு இந்த நாட்டைப் பாண்டியர்களிடம் ஒப்படைக்கச் சதி செய்வார்களா?''

''உனக்கு எப்படித் தெரியும்? பாண்டியர்களிடம் காட்டிக் கொடுத்து பாண்டியர்களுக்கு அடிமையாக்க ஒருவரும் விரும்ப மாட்டார்கள். சுந்தர பாண்டியனே விரும்பமாட்டார்.''

''அப்படியானால், சம்புவரையரும் மலையமானும் கோப் பெருஞ்சிங்கனும் சோழச்சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்கிறார்களே...?''

''சதி என்று அதை எப்படி எடுத்துக்கொள்ளலாம்? ராஜராஜர் சோழ அரியணையில் அமர்வதற்குத் தகுதியற்றவர் என்று அவர்கள் கருதினார்கள். விஜயாலயரும் பராந்தகரும் குலோத்துங்கரும் அமர்ந்து ஆட்சி புரிந்த இத்திருநாட்டை, தகுதியற்ற ராஜராஜன் ஆளுவதை அவர்கள் விரும்பவில்லை. சோழநாட்டுப் பண்டைய பெருமையை மீண்டும் அடைந்து கம்பீரமாக நிற்கவே விரும்பினார்கள். இது சதியா? நாட்டுப்பற்று இல்லாமையா?''

வண்டி 'ஜல்ஜல்' என்ற ஓசையுடன் சென்றுகொண்டிருந்தது. குஞ்சரி மௌனமாயிருந்தாள்.

''பெண்ணே, ஏன் மௌனமாகிவிட்டாய்? அரசியல் என்பது பெரும் சமுத்திரம் இல்லையா?'' என்று கேட்டார் அவர்.

''சமுத்திரமாயிருக்கலாம். ஆனால், என்னை நீங்கள் குழப்ப முடியாது. நீங்களே சொல்வது போல் ராஜராஜரும் குலோத்துங்க சக்ரவர்த்தியின் பரம்பரையில் வந்தவர்தாமே? ராஜரத்தம் அவர் உடலில் ஓடுகிறதல்லவா? அவர் தகுதியற்றவர் என்று எப்படிக் கூற முடியும்?''

''நன்றாய்க் கேட்டாய்! அவருக்கு ராஜதந்திரம் போதாது. சிற்றரசர்களை அரவணைத்துக்கொண்டு போகத் தெரியவில்லை.''

''எதைக் கொண்டு அப்படிச் சொல்கிறீர்கள்? சிற்றரசர்களுக்கு நாட்டாசை பிறந்துவிட்டது.''

''அப்படிச் சொல்லாதே பெண்ணே! சோழநாட்டுச் சிற்றரசர்கள் நாட்டாசை கொண்டு சோழநாட்டையே கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள் என்பதை நீ எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''இல்லை. இப்போது கேள்விப்படுகிறேன். கோப்பெருஞ் சிங்கன் சோழநாட்டை அடையும் எண்ணத்தில் முன்பே ஒரு தடவை கலகம் செய்யவில்லையா?''

குஞ்சரி இவ்வாறு கேட்டவுடன், புதியவர் வண்டியை நிறுத்தினார். திரையை விலக்கிக் குஞ்சரி வெளியே எட்டிப்பார்த்தாள்.

''நாம் இப்போது எங்கே வந்திருக்கிறோம்?'' என்று கேட்டாள் குஞ்சரி. அவளுக்குத் தாகத்தால் நா வறண்டிருந்தது. பசி காதையடைத்தது. புதியவருடன் விவாதம் செய்ததால் சோர்வு ஏற்பட்டது.

''நாம் எங்கே இருக்கிறோமென்றே உனக்குத் தெரியவில்லை - அப்படித்தானே? அதோ பார்...!'' என்று அவர் சுட்டிக்காட்டிய இடத்தில், அகலமான மணல்வெளி தெரிந்தது.

''அது என்ன காவிரியா?'' என்று வியப்புடன் கேட்டாள் குஞ்சரி.

''இல்லை, இல்லை. கொள்ளிடம். நாம் இங்கேயே இந்த வண்டியைவிட்டு விடுகிறோம். எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் நம்மைத் தேடிப் புறப்பட்டவர்கள் இங்கு வந்து விடுவார்கள். நான்

செய்வதை, ஆட்சேபிக்காமல் நீ இருந்தால் அது ஒன்றே போதும்...'' என்று கூறி வண்டியிலிருந்து இறங்கினார்.

''நான் வாயைப் பொத்திக்கொண்டு இருக்க வேண்டிய வேளை வந்துவிட்டது. நா வறண்டுவிட்டது. ஒரு வாய் தண்ணீர் கிடைக்க வழி செய்யுங்கள். நீங்கள் கூறுவதை அப்படியே கேட்டு வருகிறேன். நீங்கள் சொல்வதை ஏனென்று கேட்காமல் இருக்கிறேன்'' என்று கூறி வண்டியினின்று இறங்கினாள். தலைப்பாகை கீழே விழுந்தது. கூந்தல் சரிந்து தோளில் தவழ்ந்தது. துவளும் இடையில் அந்தப் போர் வீரர் உடை நிலைத்து நிற்கவில்லை. அவிழ்ந்த ஆடையை ஒரு கையால் பிடித்துக்கொண்டாள். நாண உணர்ச்சி முகத்தில் மேலோங்கியது.

''பெண்ணே, அப்படி மரத்தின் மறைவிற்குச் சென்று உடைகளைச் சரிசெய்து கொள். இனி இந்தப் போர்வீரர் வேடம் வேண்டாம். மரத்தருகே நான் வரமாட்டேன். யாரும் வரமாட்டார்கள். பயமின்றி, அவசரமின்றி ஆசுவாசப்படுத்திக்கொள்'' என்றார்.

குஞ்சரி அவரைச் சற்று உற்று நோக்கினாள். குரலில் வித்தியாசமிருந்தது. போலிக் குரலைச் சற்று மாற்றிக்கொண்டிருக்கிறார் என்பது தெரிந்தது.

''பெண்ணே என்று என்னை அழைக்க வேண்டாம். குஞ்சரி என்று பெயர் சொல்லியழைக்கலாம்'' என்று மெல்ல நகைத்து மரங்களின் மறைவிற்குச் சென்றாள்.

தடாரென்று ஓர் ஓசை - ஏதோ உருள்வது போன்ற சப்தம். ஓடிவந்து பார்க்க அவளுக்கு ஆவல்தான். ஆனால், மரத்தடியில் சாய்ந்தவளுக்கு எழுந்திருக்கும் உணர்ச்சியே ஏற்படவில்லை.

சிறிது நேரம் கழித்து, அருகே ஒரு குரல் கேட்டது :

''வரலாமா?'' என்ற புதியவர் குரல். பாதி இமையை மெல்லத் திறந்து, ''ஓ, தாராளமாக'' என்றாள்.

அவள் படுத்திருந்த கோலம் களைப்பால் அவள் சாய்ந்திருப்பது போல் தோன்றவில்லை. ஒயிலாக மரத்தின் வேரில் தலையைச் சாய்த்துக்கொண்டு சுகசயனம் புரிபவள் போல் இருந்தாள்.

கூந்தல் விரிந்து தரையில் பாவாடை விரிந்தது போல் காட்சியளித்தது. போர்வீரனின் உடையின் இறுக்கத்தைத் தளர்த்தியிருந்தாள். குளிக்குமிடத்திலேயே மார்புக்கச்சு, சேலை, மேல்துணி

அனைத்தையும் விட்டு வந்திருந்தாள். கட்டுக்கடங்கியிருந்த அவளுடைய எழில் மிகுந்த தோள்களும் தோள்களின் துணையாக வனப்பு மிகுந்த பகுதிகளும் குளிர்ந்த காற்றைத் தங்கு தடையின்றி அனுபவித்துக்கொண்டிருந்தன.

'வேயுறு தோளி பங்கன்' என்று சம்பந்தப்பெருமான் பாடி யுள்ளார். அது முற்றிலும் உண்மை. இளம் மூங்கிலை இவளைப் போன்ற அழகு நங்கையரின் தோள்களுக்கு ஒப்பிட்டது சரியே - என்று அந்தப் புதியவர் இலக்கிய ரசனையில் சில நொடிகள் ஈடுபட்டிருந்தார்.

வெயிலின் கடுமையாலும் களைப்பாலும் அழகிய வதனம் வாடியிருந்தாலும் நாணத்தின் சோபை வாடிய முகத்திற்கு எழிலூட்டிக் கொண்டிருந்தது. ஒரு கரத்தைத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டிருந்தாள். சற்றே நிமிர்ந்த புஜங்களின் மீது இன்னும் பார்வையைச் செலுத்துவதால்; தன் இதயத் தடாகம் மேலும் கலங்கிவிடும் என்பதை உறுதியாக உணர்ந்த அந்தப் புதியவர், "வரலாமா?" என்று குரல் கொடுத்தார்.

அவரது கரத்தில் மண்கலயம் இருந்தது. அதில் குளிர்ந்த நீர் இருந்தது. மெல்ல நெருங்கி அவளருகே சென்றார்.

"இதோ, குளிர்ந்த நீர். தாகத்தைத் தீர்த்துக்கொள். நாம் இங்கேயே ஒரு நாழிகை நேரத்திற்குமேல் இருக்க வேண்டும். அதற்குள் நான் அருகேயுள்ள மாமரத்திலிருந்து கனிகளைப் பறித்து வருகிறேன். எனக்கும் பசிதான்" என்றார்.

குஞ்சரி அரைப் பார்வையுடன், "உம்..." என்று கூறினாளே தவிர, அவளால் எழுந்திருக்க முடியவில்லை.

அவர் அவளை நெருங்கினார். களைப்பால் சோர்ந்திருக்கிறாள் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது.

அவளருகே சென்று மெல்ல அமர்ந்தார். கலயத்திலிருந்து தண்ணீர் எடுத்து அவள் முகத்தில் தெளித்தார்.

அந்தத் தண்ணென்ற உணர்ச்சி குஞ்சரியை இந்தப் பூலோகத்திற்குக் கொண்டுவந்தது. ஏழ்கடலையும் தாண்டி அவள் எங்கோ, எங்கோ சென்று கொண்டிருந்தாள். பூங்குயில் கூவும் மாஞ்சோலைக்குச் சென்றாள். முல்லை, மல்லிகை, செண்பக மலர்கள் பூத்துக் குலுங்கும் மலர்க்காட்டிற்குச் சென்றாள்.

சந்தனக்குழம்பு தேங்கி நிற்கும் தடாகத்திற்குச் சென்றாள்.

மின்னல் கீற்றால் வேயப்பட்ட குடிசைக்குள் சென்றாள். இடியோசையின் பின்னணியில் நடமிடும் நாட்டிய அரங்கிற்குச் சென்றாள்.

அரம்பையரும் ஊர்வசியும் மேனகையும் நடமிடும் இந்திரன் சபைக்குச் சென்றாள். இந்திராணியுடன் இனிதே வீற்றிருந்தான் இந்திரன்.

''குஞ்சரிப் பெண்ணே, நீ பூ உலகுவிட்டு என் சபையில் நடனமிட வந்தாயா?'' என்று கேட்கிறான்.

''தங்களிடம் ஓர் உதவி பெற வந்தேன்'' என்கிறாள் குஞ்சரி.

''சோழநாட்டில் நீ நாட்டியக்கலையில் மிகச் சிறந்தவளாம். நாள்தோறும் கங்காபுரி சோழீசர் ஆலயத்தில் நர்த்தனமிடுவாயாம். உனது அற்புத நடனத்தை நான் காணவேண்டாமா? இங்கே ஆடினால், நீ விரும்புவதை நிறைவேற்றுகிறேன்'' என்கிறான் இந்திரன்.

''முப்பத்து முக்கோடித் தேவர்களின் அரசே! சூரனை வென்றதற்காக தேவகுஞ்சரியை முருகப்பிரானுக்களித்த தேவ தேவே! ஒரு சமயம் எங்கள் சோழகுலத்து முசுகுந்த சக்கரவர்த்தி உமது ஆபத்துக் காலத்தில் உமக்கு உதவியது நினைவிருக்கிறதா? முசுகுந்த சக்ரவர்த்தி அப்போது தங்களைக் காப்பாற்றியிராவிட்டால் உங்கள் பதவியையே இழந்திருப்பீர்கள். முசுகுந்த சக்ரவர்த்தியின் பரம்பரையில் வந்த எங்கள் சக்ரவர்த்தி ராஜராஜருக்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. பாண்டிய மன்னன் படையெடுப்பதாக பயமுறுத்துகிறான். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் சிற்றரசர்கள் சதிசெய்கிறார்கள். தாங்கள் வஜ்ராயுதத்தை எடுத்துக் கொண்டு வந்து எங்கள் அரசரைக் காப்பாற்ற வேண்டும்...'' குஞ்சரி தேவேந்திரன் எதிரே இருகை கூப்பி வணங்குகிறாள்.

''குஞ்சரி, என் மகளின் பெயரைக் கொண்டிருக்கிறாய். சோழ நாட்டைக் காக்க நான் வருகிறேன். ஆனால் அதற்கு முன்பாக நீ இங்கே, இந்தச் சபையில் ஆட வேண்டும்'' என்கிறான் தேவேந்திரன்.

''கரும்புத் தின்னக் கூலி கொடுக்க வேண்டுமா? என் தாய் நாட்டைக் காக்க இந்தச் சபையில் நான் இப்போது என்ன, எப்போதுமே ஆடிக்கொண்டிருக்கிறேன். இப்போதே, இதோ, ஆடத் தொடங்கி

விட்டேன். பாண்டரங்கம் ஆடட்டுமா? நீங்கள் இப்போதே சோழநாடு செல்லுங்கள். வஜ்ராயுதத்தால் எதிரிகளை அழியுங்கள்...'' - குஞ்சரி கூறுகிறாள்.

''குஞ்சரி... பெண்ணே...'' என்று புதியவர் அவள் முகத்தில் தண்ணீரைத் தெளிக்கிறார்.

அவளைத் தொட்டுத் தன் மீது சாய்த்துக்கொண்டு, ஒரு ஒரு மிடறாக நீரைக் குடிக்கக் கொடுக்க ஆசைதான். மிக அருகில் நெருங்கிப் பார்த்தவாறிருப்பதால் அவளுடைய இதய உணர்ச்சிக்கு ஏற்ப விம்மித் தணியும் மார்பகமும் இந்திரனிடம் வேண்டிக் கொள்வதால் அதற்கேற்ப அசையும் உதடுகளும் மாறும் முக பாவமும் அவருக்குத் தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தன.

அவர் கை நடுங்கியது. அவள் இதயத்தின் அருகே சென்று விட்ட தன் கரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''குஞ்சரி, எழுந்திரு, எழுந்திரு...'' என்று அவள் தோள்களைப் பிடித்து உலுக்கினார்.

முகத்தில் தெளிக்கப்பட்ட நீர் அவளது களைப்பைப் போக்கியது. முகத்திலிருந்து, உடலெங்கும் வழிந்த நீரின் தண்ணென்ற உணர்ச்சி அவளைத் திடுக்கிட்டு எழச் செய்தது.

தானிருப்பது இந்திரலோகமில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

''குஞ்சரி, அருகே செயற்கை ஊற்று இருக்கிறது. தேவைப் பட்டால் அதில் அமிழ்ந்து குளி. வேண்டிய மட்டும் தண்ணீரைப் பருகு. மாங்கனிகளை இப்போதைக்குத் தருகிறேன். புசி, பிறகு மாலை வெயில் மறைந்தவுடன் கொள்ளிடக்கரையைத் தாண்டிக் குறுக்கு வழியாகக் கங்கைகொண்டசோழபுரம் அடைந்து விடுவோம்....'' என்றார் புதியவர்.

''கங்கைகொண்டசோழபுரமா!... இன்றே போய்விடலாமா?'' என்று துள்ளி எழுந்த குஞ்சரி, ''நாம் வந்த வண்டியைச் சாலையிலேயே நிறுத்தி வந்திருக்கிறீர்களே, மணவாளர் ஆட்கள் பார்த்துவிட்டு, நம்மைத் தேடி வந்துவிடமாட்டார்களா?'' என்று அச்சத்துடன் குஞ்சரி கேட்டாள்.

''அவர்கள் நம்மைத் தேடிவந்தார்கள். அதற்கு முன்பே வண்டியைக் குடைசாய்த்து விட்டேன். அங்கே நம்மைத் தேடினார்கள். வண்டி கவிழ்ந்துவிட்டதால், நாம் வண்டியினின்று

வீழ்ந்து படுகாயப்பட்டிருப்போம், யாராவது வழிப்போக்கர்கள் நம்மைக் காப்பாற்றி அழைத்துச் சென்றிருப்பார்கள் என்று எண்ணி வந்த வழியே திரும்பிவிட்டார்கள். இனி நம்மைத் தேடமாட்டார்கள்'' என்றார்.

குஞ்சரி அவரைச் சிறிது நேரம் வைத்த விழி வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தாள். அந்த விழிகளை எங்கோ சந்தித்த நினைவு அவளுக்கு.

''ஐயன்மீர், மீண்டும் கேட்கிறேன். எனக்கு இவ்வளவு உதவி செய்கிறீர்களே, என்ன காரணம்? நானோ சோழமன்னருக்கு உதவ விரும்புபவள். தங்களுக்கு என்னால் என்ன ஆதாயம்?'' என்று கேட்டாள்.

தன் மேல் வஸ்திரத்தால் மூடிக்கொண்டு மெல்லச் சிரித்த அவர், ''எனக்கே தெரியவில்லை. ஒருவேளை இன்று மாலைக்குள் தெரிந்து விடலாம்'' என்றார்.

குஞ்சரிக்குப் புரியவில்லை. என்றாலும் நடப்பது நடக்கட்டும் என்று கொள்ளிட நதியோரமாக மாந்தோப்பில் தோண்டப்பட்ட செயற்கை ஊற்றில் அமிழ்ந்து குளிக்கச் சென்றாள்.

## 7

அந்த மணற்பரப்பிலே மெல்ல மெல்லத் தோண்டத் தோண்ட நீர் எங்கிருந்தோ சுரந்தது. பூமித்தாய் அமுதமெனத் தண்ணீரைத் தன்னுள் மறைத்து அடக்கிவைத்திருக்கும் நேர்த்தியைக் குஞ்சரி எண்ணி எண்ணி வியந்தாள். நன்றாக அமிழ்ந்து குளிக்கும் அளவுக்கு அந்தச் சுனையில் நீர் நிறைந்து விட்டது. தனிமை, நிழல், வெயில் தெரியாக் குளுமை அனைத்தும் சேர்ந்து குஞ்சரியைப் பயமின்றி நீராடத் தூண்டின. உடலில் பட்ட நீரின் ஸ்பரிசம் அவளுடைய சோர்வைப் போக்கியது. அச்சமும் அதிகாரமும் மட்டும் நிறைந்திருந்தன.

தன்னைக் காப்பாற்றிய அவர் யாராயிருக்கலாம் என்று யோசிக்கலானாள். தெரிந்தவர் போலவும் தோன்றுகிறது; ஆனால், அந்த முகத்தை நினைவுப்படுத்திக் கொண்டால் முகத்தோற்றத்திற்கு ஒத்து

வரவில்லை. 'சோழநாட்டின் மீது உண்மையிலேயே இவருக்கு ஆசையா அல்லது என்னை அடைய வேண்டும், என் உடலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற தீயஎண்ணத்தில் நாட்டுப்பற்று மிக்கவராகயும் என் மீது இரக்கங்கொண்டவராகவும் நடிக்கிறாரா?

எங்கோ ஒரு குயில் மெல்லக் கூவியது. அணில் ஒன்று மாமரக் கிளைகளில் மிக வேகமாக ஏறி, குயில் குரலுக்கு இணையாக 'கீச் கீச்' சென்று கத்தியது. அந்த ஊற்றிலேயே அமிழ்ந்து கால காலமெல்லாம் இருந்துவிடலாம் போல் அவளுக்குத் தோன்றியது. 'இப்படியே இருந்துவிட்டால் நாம் எடுத்த பணி என்ன... நாட்டைச் சதிகாரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டிய கடமை என்னவாவது?'

குஞ்சரி மெல்லச் சிரித்துக்கொண்டாள். 'சோழ சாம்ராஜ்யத்தை நாமா காப்பாற்றப் போகிறோம்? அதென்ன நமக்குள் அப்படியொரு அசைக்க முடியா நம்பிக்கை? கங்கைகொண்டசோழீசருக்குப் பரம்பரையாகச் செய்து வரும் தொண்டைச் செய்து வராமல், ராஜரீகக் காரியங்களில் தலையிடுவது சரியா? ஒரு பெண் இளமையும் அழகும் நிறைந்த வயதினள் தன்னந்தனியளாய் நாம் என்ன செய்து விட முடியப் போகிறது? நம்மைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோமா? நாட்டைக் காப்பாற்றப் போகிறோமா?'

ஒரு முறை அமிழ்ந்துவிட்டு மேலே தலைநிமிர்ந்த போது ஊற்றின் மிக அருகே குரல் கேட்டது.

''குஞ்சரி, குஞ்சரி! சீக்கிரம் குளித்துவிட்டு உடையணிந்து வா...'' என்ற குரல், புதியவர் குரல்தான். 'ஆம். ஆம். கேட்டிருக்கும் குரல்தான். கேட்டு விடுவோம் அவரையே இன்னார்தானே இப்படி மாறுவேடத்தில் இருக்கிறீர்கள் என்று!'

அரையிலும் ஒரு சிறு ஆடைகூட இல்லாமல் ஊற்றில் இறங்கியிருப்பவள் இப்போது வெளியே வந்துதானே ஆடை அணிய வேண்டும்? 'ஐயோ, என்ன காரியம் செய்தோம்! கரையருகே ஆடையைக் கொண்டுவைத்தோமில்லையா! அவரை எப்படிக் கேட்பது?'

''என்ன, நான் சொன்னது காதில் விழவில்லையா? ஒரு முக்கியமான காரியம். சீக்கிரம் வா'' என்று புதியவர் குரல் கொடுத்தார்.

மௌனத்தைத் தவிர வேறு என்ன சாதிப்பது? அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. அந்தப் புதியவர் எதிரே ஆடையின்றி ஒரு கண நேரமாவது இருக்க வேண்டி நேரிடுகிறதே! ஐயோ, கடவுளே! அம்மா... எப்படியெல்லாம் என்னை மானத்துடன் இதுவரை காப்பாற்றி விட்டாய்! இந்தத் தனிமை நிறைந்த தோப்பில் இப்போது மானமிழக்க வேண்டுமா?

வானம் சட்டென்று இருண்டு விடக்கூடாதா அல்லது திரௌபதிக்கு வஸ்திரம் அளித்தது போல் கண்ணபிரான் தோன்றக் கூடாதா?

தொப்பென்று ஏதோ வந்து அவள் முகத்தின் மீது வீழ்ந்தது. ஆகா! அவனது மேலாடை. பிழைத்தோம்... பிழைத்தோம். புதியவர் புனிதமானவர். அவர் குணம் வாழ்க!

தேவகுஞ்சரி மளமளவென்று உடையணிந்து புதியவர் முன் நின்றாள்.

''அவசரக்காலம் என்றாலும் அமைதியான காலம் என்றாலும் பெண்களுக்கு ஒரே நிலைதானா?'' என்று கடிந்துகொண்டார் புதியவர். ''மன்னித்து விடுங்கள்'' என்று கேட்பது போல் முகத்தில் உணர்ச்சிகளை வரவழைத்துக் கொண்டாள்.

அவருக்குச் சிரிப்பு வந்தது - அவளது முகத்தைப் பார்த்தவுடன்.

''குஞ்சரி, இந்தத் தோப்பில் சில கூண்டுவண்டிகள் வந்துள்ளன. வண்டிகளினின்று இறங்குபவர்களைப் பார்த்தால் அவர்கள் நாடகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். நீ போய்ப் பார்த்து விசாரித்து வா'' என்றார்.

''நாடகக் கோஷ்டியா? நான் அங்கே சென்றால் என்னை அடையாளம் கண்டுகொண்டு விடுவார்கள். இந்த நேரத்தில் நான் இங்கே ஏன் வந்தேன், எப்படி வந்தேன் என்று கேட்பார்கள். என்னையும் 'அவர்களுடன் வரச்சொல்லுவார்கள்...'' என்று தலையைக் குனிந்துகொண்டு கூறிய குஞ்சரி கீழ்க்கண்ணால் தாடி, மீசை, தலைப்பாகை இவற்றிற்குப் பின்னால் இருக்கும் உருவத்தைக் காண முனைந்தாள்.

''அவர்கள் உன்னை அழைக்க வேண்டும் என்பதற்காகத்தானே அங்கே போகச் சொல்கிறேன்!'' என்றார் புதியவர்.

''என்ன, நான் அவர்களுடன் போகவேண்டுமா? கங்கை கொண்டசோழபுரம் போகப் போவதில்லையா?''

''இல்லை...''

''ஏன்?...''

''அங்கு போவதால் ஒருவிதப் பயனும் இல்லை.''

''ஏன் இல்லை? சக்ரவர்த்திகளிடம் சென்று நடந்தவற்றைச் சொல்ல வேண்டும். காளியாரைப் பார்க்க வேண்டும்.''

''நான் சொல்லிக் கொள்கிறேன்.''

''நாடகம், நாட்டியமாடுவதையெல்லாம் மூட்டைக்கட்டி வைத்துவிட்டேன். நாட்டுத்தொண்டே இப்போது முதன்மையானது!''

''மூட்டையைக் கொஞ்சம் அவிழ்த்து தத்ததிமி தத்திமி என்று ஆடு... நாட்டுத்தொண்டு அதிலே இருப்பதைக் காணலாம்...''

குஞ்சரி அவரையே பார்த்துக்கொண்டு நின்றாள். அந்தக் கண்களிலே தெரிந்த ஒளி அவளை மறுமொழி பேச விடவில்லை.

''போ குஞ்சரி. நான் சொல்வது போல் செய்...'' என்று சற்றுக் கண்டிப்பான குரலில் கூறினார்.

''சுவாமி, தங்களை இளைஞர் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் தெரிகிறது போலும் தோன்றுகிறது. தாங்கள் யார் என்று அறியலாமா?'' – குஞ்சரி கெஞ்சும் குரலில் கேட்டாள்.

''யார் என்று என்னை அறிந்தா என்னுடன் வண்டியில் வந்தாய்? யார் என்று தெரிந்தா இதுவரை நான் சொன்னபடி செய்தாய்?... இப்போது தெரிய வேண்டாம்'' என்று அவர் கூறிய போது, பளீரென்று ஒரு மின்னல்கீற்றுப் போல் அடையாளந்தெரிந்தது. மறுகணம் அதுவும் தவறு என்று தெரிந்துவிட்டது.

குஞ்சரி ஆடவர்களுடன் பழகியிருக்கிறாளே தவிர, ஒருவரிடமும் தன்னை இழந்ததில்லை. குலவழக்கத்துக்கு அவள் ஒரு போதும் உடன்பட்டதில்லை. மாற்றார் தீண்டாத திருமேனி என்று பெருமைப்படக்கூடிய அளவுக்கு அவள் இதுவரை வாழ்ந்து விட்டாள். ஆனால், சோழ சக்ரவர்த்திகளிடம் மட்டும் ஒரே ஒரு நாள் தன் வசம் இழந்துவிட்டாள். வரம்புமீறவில்லை என்றாலும் அவரது ஸ்பரிசம் அவளுடலில் என்றும் மறக்காத உணர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

ஒரு சமயம் மாளிகைக்கு வந்திருந்த போசளநாட்டு வேந்தர் வல்லாளதேவ மகாராஜாவின் எதிரே நடனமாடியிருக்கிறாள். அவர் அவளது நடனத்திறமையைப் பாராட்டி அவளுக்கு முத்துமாலை ஒன்றைப் பரிசளித்திருக்கிறார். அப்போது தன் விரல்களால் அவர் அவளது முதுகை அன்புடன் வருடியிருக்கிறார்.

ராஜராஜசோழ சக்ரவர்த்திகளுக்கு இளம் பிராயத்திலேயே பிறந்துவிட்ட ராஜேந்திரனுக்கும் வயது அதிகமில்லையென்றாலும் திடகாத்திரனாக விளங்கினான். தந்தையை விட உயரம். தந்தை - மகன் என்று கூறாமல் அண்ணன் - தம்பி என்று கூறுமளவுக்கு வளர்ந்திருந்தான்.

ஒருமுறை அவன், அவளை இழுத்து அணைத்துத் தன் அதரங்களைப் பதிக்கவும் முற்பட்டிருக்கிறான். ஆனால், அதற்குள் அவன் தாய் வரும் ஓசை கேட்கவே விலகிக்கொண்டு விட்டான். மற்றும் மாளிகை அதிகாரிகள் சிலரின் பலவந்தமான அணைப்புக்கு அவள் ஓரிரு முறை ஆளாக நேர்ந்திருக்கிறது.

இந்தச் சம்பவங்களை அவள் மறக்கவே இல்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவள் உணர்ந்திருந்தாள். ஒவ்வொரு நிகழ்ச்சி யிலும் அவளுக்கு வித்தியாசம் தெரிந்திருந்தது.

அப்படி அவளுடன் பழகிய ஐந்தாறு பேர்களுள் ஒருவராகத்தான் புதியவர் இருக்க வேண்டும்.

''குஞ்சரி, என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய்? உன் இலட்சியத்திற்கு மாறுதலாக ஏதும் நடக்காது குஞ்சரி. உன்னுடைய இதயத்திலுள்ள பரபரப்பு எனக்குப் புரிகிறது. இந்த நாட்டில் சூழ்ச்சிக்காரர்களின் சதி அதிகமாகிக்கொண்டிருப்பதை சோழ சக்ரவர்த்திகளிடம் தெரிவிக்க விரும்புகிறாய். அவ்வளவுதானே?...'' என்று புதியவர் கேட்டார்.

''இல்லை. சக்ரவர்த்திகளுக்கு நாட்டில் நடமாடும் சதிகாரர் களைப் பற்றித் தெரியாதா? அவருடைய ஒற்றர்படை வீரர்கள் எப்போதோ உணர்த்தியிருப்பார்கள்.''

''இல்லை. நீ நினைப்பது தவறு. ஒற்றர்படை சரிவர இயங்கவில்லை!''

''உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்போதாவது சொல்லுங்கள், தாங்கள் யார்? மிகவும் ஜாக்கிரதையாக, திறமையாக மாறுவேடம்

அணிந்திருக்கும் தாங்கள் யார் என்று பிறர் அறியாவண்ணம் நடந்து கொண்டாலும், தங்கள் பேச்சு காட்டிக்கொடுத்துவிடுகிறதே! ஒற்றர் படை சரிவர இயங்க வில்லை என்பது தங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான் ஒற்றருக்கு ஒற்றன்!'' என்று அவர் கூறவும் குஞ்சரி நகைத்தாள்.

''நடனகோஷ்டி விஷயத்திலும் எனக்குச் சந்தேகம் தான். அதனால்தான் உன்னை அனுப்புகிறேன்...'' என்று கூறவும், குஞ்சரி திடுக்கிட்டு, ''ஐயோ, ஆபத்தில் மீண்டும் சிக்கவேண்டுமா?'' என்று பயத்தால் சிணுங்கினாள்.

''கவலைப்படாதே, கடைசிக்கட்டத்தில் நான் எப்படியும் காப்பாற்றிவிடுவேன். வரவிருக்கும் ஆபத்தினின்று நீ நாட்டை முதலிலேயே காப்பாற்றிவிடு'' என்றார்.

# 8

தேவகுஞ்சரி, கூண்டுவண்டிகள் நிற்கும் பக்கமாகச் சென்றாள். அரைமனத்துடன்தான் சென்றாள். அவள் ஆடை புழுதியால் அழுக்கேறியிருந்தது. காலையில் ஒன்று, மாலையில் ஒன்று, இரவில் ஒன்று - எனப் புதுப் புது ஆடைகள் அணியும் குஞ்சரி ஒரே ஆடையைத் தோய்த்து உடுத்தி வருவது அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அவள் எதிர்பார்க்கவில்லை - இப்படி நாளொரு இடம் பொழுதொரு இடமாகப் பயணம் ஏற்படும் என்று.

நாடகக்குழுவினர் இருக்குமிடத்திற்குப் புழுதி படிந்த ஆடை யுடன் செல்வதை அவள் விரும்பவில்லை என்றாலும் மாயப் புது மனிதரின் கட்டளையிலிருந்த மந்திரசக்தியோ என்னவோ அவளை இயங்க வைத்தது.

'ராஜராஜ விஜயம்' எனும் நாட்டிய நாடகத்தைச் சோழநாட்டில் பட்டிதொட்டி தோறும் நடத்தி வரும் நாட்டியக்குழுவினர் அவர்கள். சோழசாம்ராஜ்யத்திற்குப் பெருமைத் தேடித் தந்த ராஜராஜசோழரின் பிறப்பு, அவர் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வந்தது, தஞ்சையில் பெரிய கோயில் கட்டியது, எல்லாம் உயர் தரமாக மிகப் பிரமாண்டமாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் பெரிய விமானம் அமைத்தது, பெரிய லிங்கம், பெரிய நந்தி, மிகப்பெரிய

நடராஜர் என்று தன் உயர்ந்த உள்ளத்தைப் புலப்படுத்தியது, கடற் கொள்ளையரை அடக்கியது, மூவர் தேவாரத்தைத் தேடியளித்தது போன்ற நிகழ்ச்சிகளைப் பாட்டு, அபிநயம், கூத்து இவற்றின் மூலம் அவர்கள் நடித்துக் காட்டுவர். அந்த நாடகத்தில் ராஜராஜரின் காதலியாக நாட்டிய நங்கை ஒருத்தியின் பாத்திரம் வரும். அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் நடிகை அன்று வரவில்லை. நாட்டியக் குழுவினர் செய்வதறியாது கவலையுடன் அந்தத் தோப்பில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் இளைப்பாறியவாறு கவலையுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, தேவகுஞ்சரி மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தாள்.

"ஏ, சயகேசி, அதோ பார் யார் வருகிறார்கள்..." என்று செங்கழனி வியப்புடன் கூவினான்.

சயகேசி அந்தக் குழுவின் தலைவன். செங்கழனி அந்தக் குழுவில் பிரபலமானவன். ராஜராஜன் வேடம் புனைபவன் அவனே. நல்ல உயரம், கூர்மையான கண்கள். ஆனால், வாழ்க்கையில் நன்னெறி கடைப்பிடிக்காததால் கன்னம் ஒட்டிவிட்டது. முதுகு சற்றுக் கூன்விழுந்துவிட்டது. கணீரென்ற குரலில் பாடக் கூடியவன். சிரித்தால் அதில் தனிக்கவர்ச்சியிருக்கும். மந்தகாசமான சிரிப்பு, பேச்சு இவற்றால் அனைவரையும் மயக்கி விடுவதால் அவனைச் சுற்றி நடிகர் நடிகைகள் கூட்டம் இருந்து கொண்டு இருக்கும்.

ராஜராஜன் வேடம் புனைவதற்காகவே தான் பிறந்துள்ளதாக அவன் எண்ணினான். அந்த நாடகத்தில் வானவன்மாதேவி, லோக மாதேவி பாத்திரங்களை ஏற்று நடிக்கும் பெண்கள் பல காலமாக நடித்து வருகிறார்கள். அவர்களுக்கு வயது ஏறி வந்தது. அபிமானவல்லி பாத்திரம் ஏற்றவள் இளம் வயதினள்.

நாடகத்தில் வருவது போன்றே சயகேசி நிஜவாழ்க்கையிலும் அவளைக் காதலிக்கத் தொடங்கினான். இருவருக்கும் வயது வித்தியாசம் அதிகமாக இருந்தது. காதல் என்பதைவிடக் காமம் என்று கூறுவது தகும். காமம் கண்ணை மறைத்தது. அபிமான வல்லிக்கு நாடகத்தில் நடனமாடும் வேலைதான் அதிகம்.

மக்கள் அவளுடைய நடனம் காணவே கூட்டம் கூட்டமாக வருவார்கள். சுற்றுப்புறத்தில் பல காத தொலைவிலிருந்தும் வருவார்கள். கையில் சோற்றுமூட்டையுடன் வருவார்கள். குழந்தை

குட்டிகளுடன் வருவார்கள். பம்பரம் போல் அவள் சுழன்றுச் சுழன்று ஆடும் போது காண்போர் மெய்மறப்பார். பிரகதீசர் ஆலயத்துச் சித்திரம் போலவே அவள் ஆடுகிறாள் என்று பேசிக்கொள்வார்கள்.

அவளுக்கு மக்கள் ஆதரவு அதிகமாவது கண்டு வானவன் மாதேவி, லோகமாதேவி வேடம் பூண்டவர்களுக்குப் பொறாமை ஏற்பட்டது. மேலும் சயகேசி அவள் பின்னாலேயே சுற்றுவது, சலுகைகள் அளிப்பது போன்றவை அவர்களுக்கு எரிச்சலை ஊட்டின.

சிறு சிறு பூசல் வந்தது. மேலும் அவளுக்குச் சயகேசியை கண்டால் பிடிக்கவில்லை. தனக்கு அவன் மீது பிரியம் ஏற்படாமல் இருக்கும் போது மற்றவர்கள் கற்பனையும் கதையும் கலந்து முடிச்சுப் போட்டுப் போய் வதந்தியைப் பரப்பி வருகிறார்களே; அவர் எழுமாறு பேசுகிறார்களே என்ற வேதனை அதிகமாகிறது. அதனால் அவள் தக்க தருணம் பார்த்திருந்தாள் - நாடகக்குழுவைவிட்டுப் பிரிந்து விட - பிரிந்துவிட. என்பதைவிட ஓடிவிட என்பதே சரி!

அவள் மீது, இளையமணவாளப்பெருமாளுக்கு ஒரு கண் வீழ்ந்தது. அதற்கு அவளுடைய இளமை மட்டும் ஒரு காரணமன்று. ராஜராஜவிஜயம் நாடகத்தைக் கண்டாலே மணவாளனுக்கு ஓர் வெறுப்பு. அந்த நாடகத்தில், பல சிற்றரசர்களை அடிமைப்படுத்தும் செய்தி வருகிறது. குறிப்பாக கோப்பெருஞ்சிங்கனுடைய மூதாதையர்கள் குறைகூறப்படுகிறார்கள். சோழப் பேரரசு உயர்த்திப் பேசப் படுகிறது. மணவாளனுக்கு அது பிடிக்கவில்லை. சோழ மன்னர்கள் மீது அவனுக்குத் தனிப்பட்ட வெறுப்பு வளர்ந்தது. அந்த வெறுப்பு நாடகத்தின் மீதும் வீழ்ந்தது. நாடகத்தை நிறுத்தவும் முடியாது. ஆனால், நாடகக்குழுவிற்குத் தொல்லை கொடுக்கலாம் அல்லவா? அந்த முறையில் நாடகக்குழுவில் முக்கியமானவர்களைப் பிரித்துவிட எண்ணினான். அபிமானவல்லி வேடம் பூண்டவள் அவன் கண்களில் பட்டாள். அவளை எப்படியாவது பிரித்துவிட வேண்டுமென்பது அவன் உள் எண்ணம். அதனுடன் மற்றுமொரு எண்ணமும். இளையமணவாளனுக்கு அது கைவந்த கலை. எழில் பூத்த இனிய மங்கையர்கள் கிடைத்து விட்டால் அவன் தனக்கு விருந்தாக்கிக் கொள்ளாது விடுவானா?

அதனால் அவளை எப்படியோ நாடகக்குழுவினின்று பிரித்தான். அவள் காணாமல் போனது பிறகே குழுவினருக்குத் தெரிய வந்தது. பெரும் அதிர்ச்சிதான். அதைவிடப் பெரும் அதிர்ச்சி - கொள்ளிடக் கரை மாளிகையில் நாட்டிய நாடகம் நடத்துமாறு அவர்களுக்கு அழைப்பு வந்ததுதான்.

சம்புவரையரின் மாளிகை அது. அவர் பெரும் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். விருந்தினருக்கு நடித்துக்காட்ட நாடகக் குழுவை வரவழைத்தார்.

விருந்து முடிந்து பௌர்ணமி நிலவிய இரவில் விருந்தினரை மகிழ்விக்க நாட்டியத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். நாட்டியக் குழுவினருக்கு ஏராளமான பொன்னும் பொருளும் கிடைக்கும்.

நாடகக்குழுத் தலைவன் கவலையுடன் சம்புவரையர் மாளிகையை நோக்கிப் பயணம் செய்தபோது, சற்று இளைப்பாறுவதற்கு அந்தத் தோப்பில் தங்கினான். தேவகுஞ்சரி அவனுக்கு உதவுவதற்கு வருவதுபோலவே வந்தாள்.

''ஆ, தேவகுஞ்சரி!'' என்று கூவினான் சயகேசி.

தேவகுஞ்சரி திரும்பிப் பார்த்தாள். அவன் எழுந்து ஓடிவந்தான்.

''ஆ, தேவகுஞ்சரி, கடவுளே அனுப்பி வைத்திருக்கிறார் உன்னை!'' என்று பல்லிளித்தான்.

தேவகுஞ்சரி ஒயிலாக நடந்தாள். தன் ஆடையைப் பற்றியும் தன் நிலையைப் பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது. தைரியமடைந்தாள். அவள் நடந்தாள்.

''குஞ்சரி, குஞ்சரி! நான் கூறுவது உனது காதில் விழ வில்லையா? கோயில் பெண் நீ என்பது தெரியும். இப்போது எனக்காக அனுப்பப்பட்டவள் போல் வந்திருக்கிறாய்...''

குஞ்சரி மெல்லத் திரும்பினாள். ''உனக்காகவா? நான் குறுக்கு வழியாக கங்கைகொண்டசோழபுரம் போகிறேன். வேறு வேலை இருக்கிறது.''

''குஞ்சரி, குஞ்சரி! ஒரு முக்கியமான விஷயம்'' என்று சயகேசி கெஞ்சுவது போல் அவள் அருகே சென்றான்.

''என்ன முக்கியமான விஷயம்? சீக்கிரம் சொல்லுங்கள். பொழுதுசாய்வதற்குள் ஊர் போய்ச் சேர வேண்டும்...'' என்று குஞ்சரி சிணுங்கினாள்.

''குறுக்குவழி உனக்குத் தெரியுமா? பொழுதுசாய்வதற்குள் போய் சேர முடியாது தெரியுமா?'' சயகேசி பயமுறுத்துவது போல் சொன்னான்.

குஞ்சரி திடுக்கிட்டாள். மெல்ல உதட்டைக் கடித்துக் கொண்டாள். ''எனக்கு வழி தெரியும்...?'' என்று சொன்னவளை சயகேசி குறுக்கிட்டு, ''குஞ்சரி, ஊருக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்? எங்களுக்கு ஓர் உதவி செய்தால் நாங்களும் பிழைப்போம். நீயும் பிழைக்கலாம்'' என்றான்.

''இன்னும் மூன்று தலைமுறைக்கு ஆஸ்தி இருக்கிறது. நாங்கள் பிழைத்துக் கொள்வோம்.''

''அது தெரியும் குஞ்சரி. நாங்கள் பிழைப்பதற்கு உதவக் கூடாதா?''

''என்ன செய்ய வேண்டும்! சீக்கிரம் சொல்லுங்கள்!...''

''இன்று ஆற்றங்கரை மாளிகையில் நாடகம் இருக்கிறது...''

''இருக்கட்டும்...''

''முக்கியப் பங்கு வகிப்பவள் வரவில்லை. அவள் இல்லா விட்டால் நாடகத்தை நடத்த முடியாது. நீ அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்க வேண்டும்.''

''எனக்கு நடிக்கத் தெரியாதே!....''

''எங்களுக்கு மட்டும் தெரியுமா? உனக்கு நடனமாடவாவது தெரியும். எங்களுக்கு அதுகூடத் தெரியாது. அதனால் சுலபமாக நீ நடித்துவிடலாம்....''

குஞ்சரி மறுமொழி கூறவில்லை. ''குஞ்சரி, அந்த மாளிகை யாருடையது தெரியுமா?''

''யாருடையதாயிருந்தால் என்ன? வேலைக்குக் கூலி தரப் போகிறார்கள்...''

''அப்படிச் சொல்லாதே குஞ்சரி. சோழநாட்டுச் சிற்றரசர்கள் எல்லோரும் கூடப் போகிறார்கள். அவர்கள் எதிரே நடித்தால் பொன்னும் பொருளும் தருவார்கள்...''

''பொன்னும் பொருளும் எனக்கு வேண்டாம். உங்கள் அபிமானம் எனக்குப் போதும்...''

அப்படிக் குஞ்சரி கூறியவுடன் சயகேசி அயர்ந்துவிட்டான். செங்கழனியைக் கூவி அழைத்தான்.

''செங்கி, குஞ்சரி தங்கமான பொண்ணு. என்ன சொல்லி விட்டாள் பார்த்தாயா? நமது அன்பு போதுமாம்...'' என்றவுடன் செங்கழனி கண்சிமிட்டி, ''நமது அன்பா, உனது அன்பா... எதைச் சொன்னாள்?'' என்று கூறி அவன் காதருகில் சென்று ''சயகேசி, இவளையும் உன் வலையில் சிக்க வைத்துவிடாதே'' என்றான்.

அவன் குறும்புச் சிரிப்புடன், ''குஞ்சரி மூலிகை இந்த உரலுக்கு மசியாது தெரியுமா?'' என்று கூறி குஞ்சரி அருகே சென்று ''குஞ்சரி, வா வா... மற்ற நடிக நடிகைகளிடம் அழைத்துச் செல்கிறேன்'' என்றான்.

''இதோ, பாருங்கள்... என் போக்குப்படி விட்டுவிடுங்கள். ஆடை ஆபரணங்கள் அணிவது, வேடம் பூணுவது எதுவும் என் இஷ்டப்படித்தான். நான் தங்கும் இடத்திற்கு ஒருவரும் வரக்கூடாது. முன் அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது. இவற்றை மீறினால், அந்தக் கணமே நான் ஊருக்குப் போய் விடுவேன். சம்மதமா!'' என்றாள்.

செங்கழனியும் சயகேசியும் ஒரே குரலில் ''சரி, சரி'' என்றார்கள்.

மாலைக் கதிரவன், திருமால் கரத்துத் திகிரி போல் வேகமாக சுழன்று மேற்குத்திசையில் இறங்கிக்கொண்டிருந்தான். மேல் வானத்து மேகக் கூட்டங்கள் சூரியனின் குருதி போன்ற வர்ண ஜாலங்களில் காட்சி அளித்தன. விரைவில் சோழநாட்டை நோக்கிவரும் போரை அது சுட்டிக்காட்டுகின்றனவோ -

கொள்ளிடக் கடற்கரை மாளிகை கலகலப்புடன் காணப்பட்டது. மாளிகையின் வெளியே உள்ள இடத்தில் கரியும் பரியும் தேரும் பல்லக்குமாக நின்றிருந்தன.

ரிஷபக்கொடியும் கருடக்கொடியும் பனைமரக்கொடியும் சிங்கக்கொடிய்யுமாக தத்தம் கொடிகளுடன் குறுநில மன்னர்கள் வந்து குழுமியிருந்தனர்.

மாளிகையின் மேல்மாடத்தில் இருந்த விசாலமான கூடத்தில் மகதநாட்டு வாணகோவரையர், மலையமான், சேதிராயர் போன்ற சிற்றரசர்கள் குழுமினர்.

சம்புவரையன் அவர்களுக்குப் பெரும் விருந்தளிக்க ஏற்பாடு செய்திருந்தான். அதற்கு முன் சோழசக்கரவர்த்தி ராஜராஜனை வீழ்த்துவதற்கான திட்டங்களை அவர்கள் பேசத் தொடங்கினர்.

குஞ்சரி, படிக்கட்டுகளில் ஏறி மண்டபத்தின் ஓர் மூலையில் திரைச்சீலை மறைவில் நின்றுகொண்டாள். திடீரென அங்கே பரபரப்பு ஏற்பட்டது. சிற்றரசர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.

கட்டியங்கூறுபவன் உரத்தகுரலில் வரவேற்புக் கூறினான்.

மன்னர்களுக்கு உரித்தான 'ராஜாதி ராஜ'' முதலான விருதுப் பெயர்களைக் கூறி ''அழகிய சீலன், அவனியாளப் பிறந்தான், காடவர்க்கோன் கோப்பெருஞ் சிங்க சக்ரவர்த்தி அழகிய மணவாளப் பெருமான் வருகிறார், வருகிறார்!''

குஞ்சரி திடுக்கிட்டாள். வயது முதிர்ந்த அழகியமணவாளப் பெருமாளுடன் அவரது புதல்வன் இளையமணவாளன் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான்.

''அவனது பிடியிலிருந்து இன்றுதானே நாம் தப்பினோம். அவன் எதிரே இன்று இரவு நாடகமாடப் போகிறோமா?'' என்று நினைக்கும் போது அவள் உண்மையில் நடுங்கினாள்.

# 9

'தம் தம்' என்று முரசு முழங்கியது. விட்டுவிட்டு முரசடிப்பவர் ஒலி எழுப்ப எழுப்ப, கோட்டைவாயிலை நோக்கி விரைந்து வந்த மக்களும் வண்டி வாகனங்களும் ஏதோ வழக்கத்துக்கு விரோதமான சம்பவம் நிகழப்போகிறதென்று முடிவுசெய்தனர்.

மேற்குத்திசையில் இறங்கும் கதிரவன்கூடத் தனது செம்பொற் கதிர்களை விரைவாகக் கோட்டைக்குள் அனுப்பிவிட்டு மறைவது போல் விரைந்தான்.

கூட்டங்கூட்டமாகப் பறவைகள் உயர்ந்த மதிலையும் தாண்டி கூட்டையடைய வருபவைகூட அன்று விரைந்து வருவது போல் பறந்து வந்தன.

மதிலின் மீது வீரர்கள் இங்குமங்கும் செல்வதுகூட வழக்கத் துக்கு விரோதமாக ஏதோ முக்கியப்பணியை விரைவாகச் செய்வது

போல் தோன்றியது. கோட்டைவாயில் முகப்பின் மீது அசைந்து அசைந்து பறக்கும் புலிக்கொடிகூட, 'கோட்டைக்கு வெளியே உள்ள வர்கள் விரைந்துவாருங்கள்' என்றழைப்பது போல் தோன்றியது.

''யுத்தம் வரப் போகிறதா?'' என்று சந்தித்த ஒருவர்க்கொருவர் கேட்டுக்கொண்டனர். கோட்டைவாயிலைத் தாண்டுபவர்கள் எதிர்ப்பட்ட வீரர்களிடம், ''என்ன... போர் நிகழப்போகிறதா?'' என்று கேட்டுக்கொண்டனர்.

''போர் வந்தால்தான் கோட்டைக்கதவைச் சாத்த வேண்டுமா?'' என்று ஓர் இளம் பிள்ளை வாடிக்கையாகக் கேட்டான்.

''இல்லை, இல்லை. போர் வரும்போது திறந்தும் போர் வராத போது அடைத்து மூடியும் செய்வார்கள்'' என்று மறுமொழியாகக் கேலி பேசினார் ஒருவர்.

உண்மை சமாசாரம் என்ன என்று அறிய ஒவ்வொருவருக்கும் ஆவல் எழுந்தது.

''கோட்டைக்கதவை அடைத்துவிட்டார்களாமே'' என்று ஒருவர் இருவருக்குக் கூற, இருவர் மூவருக்குக் கூற, நால்வர் நாற்பது பேருக்குக் கூற நகரமெங்கும் நொடியில் செய்தி பரவியது.

''கிழக்குக்கோட்டைவாயிலைத் தவிர மற்ற வாயிற்கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன'' என்றார் விவரம் அறிந்தவர்.

''கிழக்குகோட்டை வாயிலை மட்டும் ஏன் அடைக்கவில்லை?'' என்று கவலையோடு கேட்டார் ஒருவர்.

''கிழக்குக்கோட்டைவாயில் வழியாக வருபவர்களைக் கடும் சோதனையிட்டே உள்ளே நுழைய விடுகிறார்கள்'' என்றார் வேகமாக வந்தவரொருவர்.

''ஏன், அப்படி? சோதனையில் என்ன தெரிந்துவிடும்?'' என்று ஆவலுடன் கேட்டார் ஒருவர்.

''துரோகிகளின் அடையாளம் தெரியும்'' என்று கர்ஜனைக் குரல் கேட்டது. கூட்டமாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினர்.

குதிரை மீது காளியார் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவர் கையிலே வேல் இருந்தது! இடையிலே வாள் இருந்தது.

காளியாரைக் குற்றுயிரும் குலையுயிருமாய் அடித்துப் போட்டார்களன்றோ?

அவரைக் காப்பாற்றியவர் ராசராசசோழச் சக்கரவர்த்தியார்தாம். அவரது உடலில் ஏற்பட்டிருந்த காயங்களுக்கு மருந்திடச் செய்து மாளிகையிலேயே வைத்து நோய் தெளிவித்தவுடனே காளியார் பேசிய முதல் பேச்சு : ''சக்ரவர்த்திகளே. நகரத்தில் துரோகிகள் ஊடுருவியிருக்கிறார்கள். உடனே கோட்டைக் கதவைச் சாத்துங்கள். நகரைச் சோதனையிட்டு பகைநாட்டு ஒற்றர்களை, துரோகிகளை, கோழைகளை அடையாளம் கண்டு சிறைப்பிடித்து வேறு உலகிற்கு அனுப்பிவிடுவோம்...''

சக்ரவர்த்தி மெல்லச் சிரித்தார்.

''எப்படித் தெரியும் காளி?''

''கோட்டைவாசல் வழியே யார் யார் வருகிறார்கள் என்று எனக்குத் தெரியும்?''

''அவர்களுள் துரோகிகளை அடையாளம் தெரியுமா?''

''தெரியும்.''

''அப்படியென்றால் இப்போதே அவர்களைச் சிறைப்படுத்தி விடலாமே! அதற்குக் கோட்டைக்கதவைத் தாளிடுவானேன்?''

சக்ரவர்த்தியின் கேள்வியில் நியாயமிருப்பதாகத் தோன்றியது. என்றாலும் காளியார் கணமும் தாமதிக்காமல், ''இங்கு இருப்பவர்களைப் பிடிக்கலாம். ஆனால், வந்து கொண்டேயிருப்பவர்களை...'' என்று கூறவும், சக்ரவர்த்தி சிறிது யோசித்து, ''காளி, உனது யோசனை சிறந்ததே. இன்று கதவுகளைச் சாத்தவேண்டாம். சுக்கில பட்ச பஞ்சமி அன்று கதவை அடைத்துவிடு. அதற்குள் கோட்டைக்குள் இருக்கும் நீ கூறும் துரோகிகள், ஒற்றர்கள், வெளியேறி விடுவார்கள்'' என்றார்.

'எப்படி?' என்று கேடபது போல் புருவத்தை வியப்புடன் உயர்த்திய காளியார். ''அதெப்படி சக்ரவர்த்திகளே, அவர்களாகவே வெளியேறி விடுவார்கள்? அவர்கள் நகரத்திற்குள்ளேயிருந்து நாசம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களே!'' என்று கேட்கவும், ''நான் வெளியேறப் போகிறேன்'' என்று கூறி நிறுத்தினார் சக்ரவர்த்தி.

''மகாராஜா...'' என்று ஏதோ கேட்க வாயெடுத்த காளியாரை நோக்கி, ''காளி, கோட்டைக்கதவுகளை விரைவில் பழுது பார். நான் நகரத்திலில்லை என்று தெரிந்தவுடன் அந்தத் துரோகிகளும் வெளியேறி விடுவார்கள்...'' என்றார்.

காளியார் அரசரையே பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தார் ராஜராஜரின் கம்பீரத் தோற்றத்தில் அவரது மனம் லயித்தது. அவரது மகனும் சக்ரவர்த்தியைப் போலவே வளர்ந்துவிட்டான். இளம் வயது என்றாலும் அளவுக்கு மீறிய வளர்ச்சி. இவ்வளவு ராஜதந்திரம் மிகுந்துள்ள இவரைப் போய் 'அறிவு மட்டம்' என்றும் 'புத்திச் சாமர்த்தியம் போதாதவரென்றும் கூறுகிறார்களே? எப்படி என்பது தான் அவருக்குப் புரியவில்லை. பாண்டிய மன்னர் சுந்தர பாண்டியனிடம் தோற்றதனால் அப்படிச் சொல்கிறார்களா? நாட்டைக் கைப்பற்றிய சுந்தர பாண்டியன் பொன்னமராவதியில் வீற்றிருந்து, சோழசக்ரவர்த்திகளைக் கூப்பிட்டனுப்பியதும், இவர் அங்கு சென்றாரே அந்தக் காரணத்திற்காக அறிவு குறைவானவர் என்று கூறி நகைக்கிறார்களா?

அதெப்படி ராஜதந்திர மற்ற செய்கையாக இருக்க முடியும்? பணிவது போல் பணிந்து..இழந்த சோழநாட்டைப் பெற்று மீண்டும் புலிக்கொடியை உயர்த்திவிட்டாரே, அது அறிவு பூர்வமான செய்கையன்றோ?

ஒரு சல்லிகூடக் கப்பமாகக் கொடுக்க முடியாது என்று கர்ஜனை புரிந்து போர்க்கொடி உயர்த்தினாரே, அதில் எந்தக் குறை உள்ளது?...

''என்ன காளி, அப்படியே கம்பம் போல் நின்றுவிட்டாய்?'' என்று சக்ரவர்த்திகள் கேட்ட பிறகுதான் காளிக்கு சுயநினைவு வந்தது. ''அரசே, அந்தப் பெண்ணைப் பற்றி நினைத்தேன். 'கோட்டைக் கதவை அடைத்துவிட்டால் அவள் எப்படி வருவாள்?' என்ற கவலை வந்தது'' என்றார்.

சக்ரவர்த்திகள் புன்முறுவல் பூத்தார். ''எந்தப் பெண்? தேவகுஞ்சரியைத்தானே சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''ஆமாம், அரசே... அந்தப் பெண்ணிற்குத்தான் தங்களிடம் எவ்வளவு மதிப்பு, இந்த நாட்டின் மீது எவ்வளவு அன்பு!...'' என்று கூறியவரை சக்ரவர்த்தி குறுக்கிட்டு, ''ஆமாம். ஆமாம். நானும்

கேள்விப்பட்டேன். திருக்குடந்தைச் சென்று அங்கிருந்து இரகசிய ஓலையை போசள நாட்டிற்கு எடுத்து சொல்லப் போகிறாளாம்'' என்றார்.

காளியாருக்கு வியப்புத் தாங்கவில்லை. அவரது வியப் புணர்ச்சியை அறிந்த சக்ரவர்த்தி, ''காளி, கவலைப்படாதே! குஞ்சரிக்கு ஏதும் ஆபத்து வந்துவிடாது. அவள் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வாள்'' என்றார்.

அப்படிச் சொன்ன சக்ரவர்த்திகள் சில நாட்கள் கழித்துச் செய்தி அனுப்புகிறாரே, 'உடனே கோட்டைவாசல்களை அடை. கிழக்கு வாசல் வழியாக வருபவர்களைச் சோதனையிட்டு உள்ளே அனுப்பு' என்று. 'சக்ரவர்த்திகள் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். துரோகிகளைக் கண்டுபிடிப்பதில் வெற்றி கண்டு விட்டார்' என்று காளி முடிவுசெய்தார்.

கதவுகள் 'கிரீச்' என்ற ஓசையுடன் மூடப்பட்டன. நூறு ஆட்களும் நான்கு யானைகளும் கதவைத் தள்ளினர். பெரிய இரும்புச் சட்டம் குறுக்கே போடப்பட்டது. நூறு நூறு வீரர்கள் வாயிலின் அருகே உள்ள கொத்தளங்களின் மறைவிடங்களில் நிறுத்தப் பட்டனர்.

''துரோகிகள் வருகிறார்களோ இல்லையோ, போர் வந்து விட்டது!'' என்று வீரர்களே பேசிக்கொண்டனர்.

கோட்டைக் கதவுகள் மூடப்பட்டு கொத்தளங்களில் வீரர்கள். நிறுத்தப்பட்டனரேயொழிய, பாடிவீட்டிலும் படைவீரர்கள் தங்கி யிருக்கும் விடுதிகளிலும் போருக்குப் புறப்படுவதற்கான ஆயத் தங்கள் ஏதும் தென்படவில்லை. அவர்கள் வழக்கமான பணிகளைச் செய்துகொண்டிருந்தனர்.

அங்காடி வீதியிலும் பெரும் வணிகர்களிடையேயும் பீதி ஏற்பட்டது. திடீரென்று ஏற்பட்ட கதவடைப்பு அவர்களது பொருளா தாரத்தைப் பாதிக்கும் என்பதால் மாளிகைக்குச் சென்று சக்ரவர்த்தி களைச் சந்திக்க விரும்புகின்றனர். ''பொழுது புலரட்டும், மறுநாள் காலையில் செய்வோம்'' என்று கூடிப் பேசினர். இன்னும் சிலர், ''கோட்டைக்கு வெளியே செல்ல இரகசிய வழி இருக்குமே! அதன் வழியே நாம் முக்கியமான பண்டங்களை அனுப்புவோம். வாங்கி வருவோம்'' என்று திட்டமிட்டனர். ஆனால், சற்று நேரத்திற்

கெல்லாம் ஒருவன் விரைந்து வந்து, ''இரகசிய வழியின் பக்கம் பலத்த காவலர்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்'' என்பதைத் தெரிவித்தான். அதனால் வணிகர்களின் கவலை அதிகமாகியது.

அன்றே அப்போதே மாளிகைக்குச் சென்று மன்னரைச் சந்தித்து விட முடிவுசெய்தனர். அர்த்தசாமப் பூஜைக்கு மன்னர் பெரிய கோயிலுக்கு வருவார். அப்போது, சமூகத்திடம் விண்ணப்பம் தெரிவிக்கலாம் என்று சிலர் தெரிவித்தனர்.

''சக்ரவர்த்திகள் சமீப காலமாக கோயிலுக்கே வருவதில்லை'' என்ற செய்தியை மற்றொருவன் தெரிவித்தான். ஒருவருக்கொருவர் மாற்றுக்கருத்துக்களை சொல்வதிலேயே நேரம் கழிந்து கொண்டிருந்தது.

மூத்த வணிகரான முத்தழகர் திடீரென்று எழுந்தார். ''பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை. நானே வருகிறேன். வாருங்கள் போவோம். வாணிபத்தைப் பற்றி மட்டும் பேசப்போவதில்லை. இன்னும் பல கருத்துக்களையும் நான் பேச வேண்டியிருக்கிறது. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல ஆயத்தங்கள் செய்துள்ள மன்னர், கோட்டைக்குள்ளே உணவுப்பண்டங்களைச் சேகரித்து வைப்பதற்கு என்ன வழி செய்திருக்கிறார் என்பதை நானறிய வேண்டாமா? என்னை இதுவ்ரையில் அழைத்து ஆலோசனைக் கேட்கவில்லை. ஒருவேளை அவருக்குத் தவறாக யாராவது யோசனை கூறியிருக்கலாம். அப்படியென்றால் நமக்கு கங்கைகொண்டசோழபுரத்தில் வேலையில்லை. நான் புறப்பட்டு விடுகிறேன். உங்களுக்கே தெரியும். வடக்கே காஞ்சிபுரத்தில்தான் என் உறவினர்களும் மகளும் மருமகப்பிள்ளையும் இருக்கிறார்கள். அங்கே சென்று எனது இறுதி நாள்வரை அமைதியாக இருக்கிறேன்'' என்று மேலாடையைச் சரிசெய்து கொண்டார். தலைப்பாகையை ஒழுங்குபடுத்திக்கொண்டார். அவரது எடுபிடி தன்னிடமிருந்த சிறு குப்பியிலிருந்து நறுமணத்துளிகளை மேலங்கியில் தடவினான். அந்த இடம் முழுமையும் ஆயிரம் மல்லிகைகள் பூத்தது போன்ற நறுமணம் எழுந்தது. முத்தழகர் வைத்ததுதான் மாளிகையில் சட்டம் என்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள்.

முத்தழகர் மற்ற வாணிகர்கள் புடைசூழ ராசராசசோழ சக்ரவர்த்திகளின் திருமாளிகையை அடையும் போது மாளிகையில்

உள்ளோர் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. தலைநகரில் மன்னரிருந்தால் மாளிகையிலுள்ளோருக்கு உறக்கம் நடுநிசிக்குப் பிறகுதான். விழித்தெழுவதோ விடிவெள்ளி முளைக்கும் முன்பு. சோம்பல் என்பது சிறிதும் இருக்காது.

சபை மண்டபத்தில் எதிரிலிச் சோழக் கடம்பராயருடன் மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிக் கருத்தறிந்து கொண்டிருக்கிறார் என்றும் சற்றுக் காத்திருக்குமாறும் செய்தி வந்தது.

எதிரிலிச் சோழக் கடம்பராயருக்கு வயது எழுபத்தைந்து தாண்டியிருக்கும். சோழவள நாட்டின் நன்மை ஒன்றைத் தவிர வேறு அறியாதவர். அவர் மட்டுமின்றி அவரது தந்தையார் குலோத்துங்க சோழக் கடம்பராயர் சோழநாட்டிற்குத் தொண்டாற்றி மன்னரின் பாராட்டுதல் பெற்றவர். தமது இறுதிக் காலத்தை குடுமியான் மலைக்கருகே சிறுமாளிகைக் கட்டிக்கொண்டு குடுமியான்மலைக் கோயில் இறைவனை வழிபட்டவாறு கழித்தார்.

எதிரிலிச் சோழக் கடம்பராயர் மட்டும் ராசராசனுக்குப் பக்க பலமாக இல்லாதிருந்திருந்தால் மன்னரின் நிலையே வேறாக இருந்திருக்கும். சோழநாட்டில் மற்ற குறுநில மன்னர்கள், சோழ மன்னருக்கு எதிராகச் சதி செய்வதும் பாண்டிய மன்னருடன் சேர்ந்து சதி செய்வதுமாக இருந்த போது கடம்பராயர் இதயபூர்வமான அறிவுரைகள் வழங்கி, மன்னர் களைத்தும் சோர்ந்தும், நம்பிக்கை யிழந்தும் போகாமல் காத்து வந்தார்.

சக்ரவர்த்திகள் - கடம்பராயர் சந்திப்பு மிக இரகசியமாக நடைபெறுகிறது என்பதன் அடையாளமாக அந்த மந்திராலோசனை மண்டபத்தில் பணியாளர்கள் இல்லை. திருமந்திர ஓலை நாயகம் இல்லை. இருவரும் மிக நெருங்கி அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

கடம்பராயரைக் கேட்டுத்தான் கோட்டைவாயில்களை உடனே மூடுமாறு சக்ரவர்த்திகள் கட்டளையிட்டார். கடம்பராயர் ஏன் என்று அப்போது கேட்கவில்லை. கோட்டைக்கதவுகளை மூடச் சொல்வதில் ஏதோ முக்கிய நோக்கம் இருக்கிறது என்பது அவருக்குத் தெரியும்.

இரவு விருந்துக்கு பிறகு இருவரும் பேசுவதற்கு ஏற்பாடு கடம்பராயர் இரவில் ஏதும் உண்ணும் வழக்கமில்லை. பால் மட்டும் ஒரு குவளை அருந்துவார். அவரது ஒழுக்கநெறியே அவரைத் திடமுடன் வாழச் செய்தது.

சக்ரவர்த்திகளும் கடம்பராயரும் சற்று நேரம் மௌனமாக இருந்தனர். சக்ரவர்த்திகளே பேச்சைத் தொடங்கட்டும் என்று கடம்பராயர் எதிர்பார்த்தார். கடம்பராயர் பல கேள்விகளைக் கேட்பார் என்று மன்னர் எதிர்பார்த்தார். தலைநகரத்தைவிட்டு மன்னர் எங்கே சென்றிருந்தார் என்று அவர் கேட்டிருக்கலாம்.

பாண்டிய மன்னரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டபடி திறைப் பணம் ஒரு சல்லிகூட அனுப்பாதது குறித்து பாண்டிய நாட்டினின்று ஓலை வந்திருப்பது சம்பந்தமாகக் கேட்டிருக்கலாம். கடைசி கடைசியாகக் கோட்டைக்கதவுகளை அடைப்பது குறித்துத் தன் சந்தேகங்களை வினவியிருக்கலாம்.

பெருமூச்சு ஒன்று எழுந்து கடம்பராயரின் மீசையைத் துடிக்கச் செய்தது.

''கடம்பராயர் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருப்பது போல் தோன்றுகிறது'' என்று அரசரே கேட்டு மௌனத்தைக் கலைத்தார்.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு மெல்லிய குரலில், ''மௌனம் ஏதுமில்லை அரசே! பல பல சந்தேகங்களைக் கேட்க எண்ணினேன்...'' என்றார்.

''கேளுங்களேன்...''

''கேள்வி கேட்க இது நேரமன்று. கோட்டைக்கதவுகளை மூடச் சொன்ன செய்தி இந்த நேரம் மதுரையை நோக்கிப் பாதித் தொலைவு சென்றிருக்கும்...''

''செல்லட்டுமே! செல்ல வேண்டும் என்பதற்காகத்தானே அப்படிச் செய்யச் சொன்னேன்?...''

''இல்லை, இல்லை. மன்னருக்கு வேறு ஓர் எண்ணமும் இருந்திருக்க வேண்டும்.''

''அதெப்படிச் சொல்லிவிட்டீர்கள்?''

''கோட்டைக்கதவு மூடச் செய்த செய்தி மதுரையை நோக்கிச் செல்வதில் எந்தவித முக்கியமும் இருப்பதாகத் தெரியவில்லை.''

''ஏன் முக்கியமில்லை? கோட்டைக்கதவுகளை மூடிவிட்டால் அடுத்தது போர்தானே?''

சக்ரவர்த்திகள் இப்படிக் கூறியதற்கு கடம்பராயர் இடி இடியென நகைத்தார். இப்படி மற்றவர்கள் அரசர் முன்பு நகைக்க அஞ்சுவார்கள்.

''ஏன் நகைக்கிறீர்கள் கடம்பராயரே?''

''மன்னித்து விடுங்கள், மகாராஜா! தங்களுக்கு இப்படிப்பட்ட யோசனை எப்படி எழுந்தது? கோட்டைக்கதவுகள் எப்போது மூடப்படும்? பகைவீரர்கள் கோட்டையைச் சூழும் முன்பே பகை வீரர்கள் வந்து விட்டார்களா? போசள நாட்டு மன்னர் வீர நரசிம்மனின் குதிரை வீரர்கள் சிலர் கொள்ளிடக் கரையோரமாக வந்தனர். ஆனால் அவர்கள் பகை உணர்ச்சியோடு வரவில்லை. அவர்கள் ஏதோ செய்தி கொண்டுவந்திருந்தனராம். அந்தச் செய்தியை நமக்குக் கிடைக்காமல் அழகியமணவாளன் செய்து விட்டதாகத் தகவல்...'' என்று கடம்பராயர் கூறினார்.

இப்போது சக்ரவர்த்திகள், ''ஹோ ஹோ'' என்று நகைத்தார்.

''கடம்பராயரே! பார்த்தீர்களா, கோப்பெருஞ்சிங்கன் செய்துள்ள காரியத்தை! வீரநரசிம்மன் மனத்தில் தவறான எண்ணம் ஏற்படுமாறு செய்தால் அவரது நட்பு நமக்கு இல்லாது போய்விடும் என்பது கோப்பெருஞ்சிங்கனின் எண்ணம்'' என்றார் மன்னர்.

''கோப்பெருஞ்சிங்கனுடைய நடவடிக்கைகள் எனக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை. கோப்பெருஞ்சிங்கன் தன் மகன் இளையமணவாளன் செய்யும் காரியங்களை ஆதரிக்கிறான் என்றே தெரிகிறது. சோழநாட்டின் மீது அவர்களுக்கு என்ன கோபம்? ஏனிப்படி பாண்டியர்களின் கையாளாக விளங்குகிறான் என்றே தெரியவில்லை!'' என்று கூறிவும், சக்ரவர்த்திகள் மீண்டும் நகைத்து, ''சோழநாட்டில் ஒரு பல்லவ நாடு உதயமாக வேண்டுமாம்!'' என்றார்.

''ஆமாம். அப்படித்தான் அவனுக்கும் பேராசை. சுதந்திரப் பல்லவ நாடு! பிறகு வாணகோவரையன் கேட்கமாட்டானா? சேதிராயன் கேட்கமாட்டானா? மலையமான் கேட்கமாட்டானா? சோழநாட்டைச் சின்னாபின்னமாக்க விரும்புகிறார்களா? கட்டு மூங்கிலாக இருப்பதை ஒத்தை ஒத்தையாகப் பிரித்து விட விரும்புகிறார்களே! அப்படியென்றால் நெல்லூரில் உள்ள விஜய கண்ட கோபாலனும் சித்தூர் புடொரியரசனும் திருக்காளத்தி யாதவராயனும் தனியே பிரிந்து போக எவ்வளவு நேரமாகி விடும்?'' - அவர் குரலில் கவலை தோய்ந்திருந்தது.

''கடம்பராயரே! நல்லவேளையாக அப்படியொன்றும் நேர்ந்து விடவில்லை. விஜயகண்டகோபாலன் எப்போதும் நம் மீது

அன்புடையவன். இங்குள்ள நிலையைத் தெரிவித்து ஓலை எழுதியனுப்பியிருக்கிறேன்... படைவீரர்களைத் திரட்டி ஆயத்த நிலையில் இருக்குமாறு...'' என்று மன்னர் கூறியவுடன் சற்று மாறுபட்ட நகைப்புடன், ''ஓலையை யாரிடம் கொடுத்து அனுப்பினீர்கள்?'' என்று கேட்டார்.

''தேவகுஞ்சரியின் மூலம். அவள் திருக்குடந்தை சோதிடர் வீட்டில் தக்கவரைச் சந்தித்துக் கொடுத்திருப்பாள்'' என்று கூறியவுடன் கடம்பராயர் தன் இடையிலுள்ள கச்சில் தொங்கும் பையிலிருந்து ஓர் ஓலையை எடுத்து அவரிடம் நீட்டினார்.

''ஆம். இதே ஓலைதான். எப்படித் தங்களிடம் வந்தது? குஞ்சரி தவறு செய்து விட்டாளா?'' என்று பரபரப்புடன் கேட்டார் சக்ரவர்த்தி.

''இல்லை. இல்லை. குஞ்சரி தவறு செய்யவில்லை. இந்த இளம் வயதில் அதிஅற்புதமான யோசனையுடன் காரியங்களைச் செய்கிறாள். அழகும் இளமையும் அவளுக்கு விரோதிகளாக உடன் வருகின்றன. அவள் சோழநாட்டின் நன்மைக்காகக் காரியங்கள் பல செய்கிறாள் என்பதை இளையமணவாளன் அறிந்துவிட்டான். ஓலையை அவள் கொடுத்த ஆளிடமிருந்து, மணவாளனது ஆட்கள் பறித்தனர். நமது ஒற்றர்கள் மட்டும் இலேசுப்பட்டவர்களா? அதைப் பறித்துவிட்டனர். நல்லவேளையாக ஓலையிலுள்ள மொழி அவர்களுக்குப் புரியவில்லை'' என்று கடம்பராயர் கூறினார்.

''ஆமாம், ஆமாம். குஞ்சரி தன் வயதுக்கு மீறிய பணியில் இறங்கியிருக்கிறாள். இப்போது நமது ஒற்றர்களில் யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்றே புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால்தான் குஞ்சரி தன் குலத்தொழிலை விட்டு நாட்டுப் பணிக்காகத் தன்னை அர்ப்பணிக்க முன்வந்தபோது நாம் அங்கீகரித்து ஆமோதித்தோம். கடம்பராயரே, அவள் இளம் வயதினள். அழகுத் தெய்வம். நாட்டிய அரசி. அவளுக்கு எந்தவித இடையூறும் நேராதபடி தொடர்ந்து உதவவேண்டும். நேற்று முன்தினம் அவள் துரோகக்கூட்டத்தாரிடம் சிக்கிவிட்டாள்'' என்று கவலையுடன் கூறினார்.

கடம்பராயர் பொருள் புதைந்த புன்னகை உகுத்து, ''தப்பி விட்டாள்...'' என்றார். சக்ரவர்த்திகளும் சிரித்துக்கொண்டார்.

''விஜயகண்டகோபாலனுக்கு அனுப்பப்பட்ட ஓலையை நல்லவேளை தாங்கள் பறித்துக்கொண்டீர்கள். எப்படியாவது நெல்லூருக்குச் செய்தியனுப்ப வேண்டும்'' என்று கூறிய சக்ரவர்த்திகளின் பேச்சில் குறுக்கிட்டு ''கோட்டைக் கதவுகளை மூடுமாறு கூறினீர்களே, ஏன் கிழக்குவாசலை மட்டும் திறந்து வைக்குமாறு சொல்லிவிட்டீர்கள்?'' என்று கேட்டார் கடம்பராயர்.

''கோட்டைக்குள்ளே கோப்பெருஞ்சிங்கனும் வாணகோவரையனும் சம்புவரையனும் சேதிராயனும் தனது பரிவாரங்களுடன் நுழைந்துகொண்டு சதிசெய்யாமல் இருக்க. ஒவ்வொருவராகப் பார்த்து உள்ளே அனுப்புமாறு கட்டளையிட்டுள்ளேன்'' என்றார்.

கடம்பராயர் ஒன்றும் பேசவில்லை. ''சக்ரவர்த்திகளே! தங்களுக்கு நான் தனியே ஏதும் எடுத்துரைக்க வேண்டியதில்லை. எனக்கோ வயது அதிகமாகிறது. மறதியும் வந்து வந்து மதியை மறைக்கிறது. தாங்கள் எடுத்த இந்த நடவடிக்கை ஒரு விதத்தில் சரியென்றாலும் மற்றொரு விதத்தில் பயங்கரமான விளைவை ஏற்படுத்தும். மதுரைக்கு இந்தச் செய்தி இன்னும் சில நாட்களில் எட்டிவிடும். சுந்தரபாண்டியன் முன்பே பெருஞ்சீற்றத்துடனிருக்கிறான். நாம் வலிய வந்து போர்க்கொடி உயர்த்துவது தெரிந்தால் உடனே படைகளுடன் வந்துவிடுவான். இம்முறை போரின் போக்கே வேறுவிதமாக இருக்கும். காடவராயன், சம்புவராயன் போன்றோர் பாண்டியர் படைகளுக்கு மிக மகிழ்ச்சியுடன் உதவுவார்கள்...'' என்று கூறும்போது சக்ரவர்த்திகள் குறுக்கிட்டு, ''உதவட்டுமே! யானை தன் தலையிலேயே சேற்றைப் போட்டுக்கொள்வதைப் போலத்தான்... என்றார்.

''அப்படிச் சொல்லாதீர்கள் அரசே நமக்குத் தூசிப்படைகளையும் முன்னணிப்படைகளையும் அளித்து உதவுபவர்களே சிற்றரசர்கள்தாமே! நமது நிரந்தரப்படையின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பது தாங்கள் அறியாததா? படைவீரர்கள் உதவியும் வராமல், எதிர்ப்பும் பலமாக வந்தால்? சற்று யோசனை செய்யுங்கள்...'' என்றார்.

ராஜராஜசோழருக்கு அப்போதுதான் கவலை ஏற்பட்டது. 'எந்தத் தைரியத்தில், துணிவில் இப்படிச் செய்துவிட்டோம்?' என்று கவலைப்பட்டார்.

சக்ரவர்த்திகள் முகம் கணத்தில் மாறியதைக் கண்டுகொண்ட கடம்பராயர், "நெருக்கடியான நேரத்தில் கவலைப்படக்கூடாது, வைத்த காலைப் பின்னுக்கு இழுப்பதா? பெருவுடையார் இருக்கிறார். காப்பாற்றுவார். நாம் உடனே செய்ய வேண்டியது, துவார சமுத்திரத்துக்குத் தக்க தூதுவரை அனுப்பி இப்போது ஏற்பட்டுள்ள நிலையை விளக்கிக் கூற வேண்டியது. இது மிக அவசியம். நெல்லூருக்கும் விஜயகண்டகோபாலருக்கும் தக்க லிகிதத்தை அனுப்புகிறேன்" என்றார்.

சக்ரவர்த்திகள் மௌனமானார். அவர் கண்ணெதிரே புரிந்து கொள்ள முடியாத தோற்றங்கள் நிழலாடின. செவிகளில் 'போர், போர்' என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது. பலர் சேர்ந்து கூச்சலிடுவது போன்ற எதிரொலி எழுந்தது.

கடம்பராயர் எழுந்து சென்று திரும்பி வருவதையும் அவர் பார்த்துக்கொண்டுதான் இருந்தார். யாரையோ சமாதானம் செய்துவிட்டு வருவது போல் தோன்றியது.

கற்சிலை போல் அமர்ந்து கொண்டிருக்கும் சக்ரவர்த்திகள் அருகே சென்ற கடம்பராயர், "நகரத்து வணிகர்கள் சமூகத்தைக் காண வந்திருக்கிறார்கள். கோட்டைக்கதவுகளை உடனே திறக்க வேண்டுமாம்" என்றார்.

கனவுலகிலிருந்து விடுபட்டவர் போல் தன் உடலைச் சிலிர்த்துக்கொண்டு, "கடம்பராயரே, என்ன சொன்னீர்கள்? கோட்டைக்கதவுகளைத் திறப்பதா? முடியவே முடியாது. அவர்களது வியாபாரத்தை நகரத்துக்கு வெளியே கொண்டுசெல்லுமாறு சொல்லிவிடுங்கள்" என்று கூறினார்.

கடம்பராயர் திகைத்தார். மன்னர் என்ன சொல்கிறார்? நகரத்தை விட்டு வணிகர்களை வெளியே போகச் சொல்கிறாரா? நகர மக்களுக்கு உணவு வேண்டாமா? மாளிகைக்கு உணவு வேண்டாமா? போர் வீரர்களுக்கு உணவு வேண்டாமா?

"என்ன உத்தரவிடுகிறீர்கள் அரசே!"

"ஆம். கதவைத் திறக்க முடியாது. அங்கு இருக்கிறாரே முத்தழகர் அவர் கோப்பெருஞ்சிங்கனின் கையாள். கடம்பராயரே முதலில் அவரைச் சிறையிலடையுங்கள்" என்று கர்ஜித்தார்.

கடம்பராயர் சற்று நிதானித்தார். மன்னரின் கோபத்தை அப்படியே வணிகர்களிடம் பிரதிபலிக்க விடக்கூடாது. அதே போது கோட்டையின் கதவையும் திறக்கக்கூடாது என்ற முடிவுடன் வணிகர்களிடம் சென்றார்.

வணிகர்கள் நீண்ட நேரமாகக் காத்திருந்ததால் பொறுமை யிழந்திருந்தனர். கடம்பராயரின் பேச்சை அவர்கள் கேட்கத் தயாராகயில்லை. அவர் ஏதோ சொல்ல வாயெடுத்ததும் ''எங்களுக்கு எந்தவிதச் சமாதானமும் வேண்டாம். வணிகர்கள் கோட்டைக்கு வெளியே சென்றுவர எந்தவிதத் தடையுமிருக்கக் கூடாது'' என்று கூவினர்.

''அதெப்படி முடியும்?'' என்றார் கடம்பராயர் மெல்லிய குரலில்.

''முடியாதுதானே! அப்போது நாங்கள் வருகிறோம்'' என்று மிகக் கோபமாக வணிர்கள் தலைவர் அங்கிருந்து புறப்பட்டார்.

அவர்கள் சற்றுத் தொலைவுகூடச் சென்றிருக்கமாட்டார்கள். கடம்பராயர் கைதட்டி வீரர்களை அழைத்து, ''வணிகர்கள் அனைவரையும் சிறைப்படுத்தி விடுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

# 10

மேல்வானத்தில் சந்தனக்கிண்ணியைக் கவிழ்த்தது போன்றிருந்த சந்திரன் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந் தான். மெல்லிய குளிர்ந்த காற்றும் தொலைவில் மலைச் சிகரத்திற்கும் அப்பால் வெட்டிப் பாயும் மின்னொளியும் மழை மிக விரைவில் வந்துவிடுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

கோட்டை மதிலை ஒரு முறைச் சுற்றிப்பார்த்து வந்து தெற்குக் கோட்டையின் மேலேறி யார் வரவையோ உற்று நோக்குவது போல் நின்றுகொண்டிருந்தார் காளியார். அவரது முதுமையையும் போர்க் காலத்துக் காவல்வீரர் உடை மாற்றியது. கோட்டைக் கதவுகளை மூடவேண்டும் என்ற உத்தரவு வந்தவுடனேயே அவர் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டார். ''போர் போர்'' என்று அவர் உதடுகள் முணுமுணுத்தவாறிருந்தன.

கோட்டைக் காளிக்கு அன்று சிறப்பான பூஜை செய்யச் சொன்னார். "அம்மா, தாயே! காளி, பைரவி! கொற்றவை அம்மா! இந்தச் சோழநாட்டை நீதான் காப்பாற்ற வேண்டும். இந்தப் பூமி யுத்தத்தை இந்த முறை தாங்க வேண்டுமென்றால் துரோகிகள் ஒழிய வேண்டும். கூட இருந்து குழியை வெட்டுபவர்கள் ஒழிய வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் ஒழிய வேண்டும். பார்க்கும் போது வானளாவப் புகழ்ந்து பின் வசை பாடும் மனிதர் மாய வேண்டும். தாயே! என் சக்ரவர்த்திக்குத் தைரியமும் தந்திரமும் வருங்கால நிகழ்ச்சிக்கு ஏற்ற திட்டமிடுதலும் தரவேண்டும்" என்று அவர் வேண்டும்போது உணர்ச்சிவசப்பட்டார். அவர் கண்கள் பனித்தன.

"தேவி, இந்தப் பொன்னி வளநாட்டைக் காப்பாற்றத் தங்களையே தியாகம் செய்துகொள்ள முன்வந்துள்ள என் குழந்தைகளுக்கு வலிமையும் தைரியமும் அளிப்பாய் தாயே!" என்று வேண்டிக்கொள்ளவும் அவர் மறக்கவில்லை.

உண்மையாக உழைப்பவர்கள் சாதாரணக் குடிமகன்களா யிருந்தனர். சண்டைக் காலத்தில் வாளெடுத்துச் சுழற்றுவதும் சமாதானவேளையில் ஏரெடுத்துப் பூமி உழுவதுமாக இருந்த கபடமற்ற வேளாளர்கள் அரசர்க்கு உள்ளன்பு காட்டி வந்தனர். அவர்கள் பெயர் தெரியாது. சிலர் குதிரை மீதமர்ந்து வேல் வீசும் வீரர்கள். சிலர் களிறை நடத்திச் செல்லும் யானைப்படை வீரர்கள். தேரோட்டிகள். வாள் வேல் செய்யும் உலைக் கூடத் தொழிலாளிகள். நெசவுத்தொழில் செய்யும் தொழிலாளிகள். அவர்களுக்குப் பொன்னிதான் தாய். பொன்னி வளநாட்டை ஆண்டு ரட்சிக்கும் சோழமன்னர்தாம் தெய்வம். அவர்கள் நன்றாக வாழ்ந்தால் நாடு, அரசர் அனைவரும் வாழ்வர். அதைத்தான் வேண்டிக் கொண்டார் காளியார். தேவகுஞ்சரியையும் அவர் மறக்கவில்லை.

ஒரு பெண்; பருவவயதில் உல்லாசமாக மாளிகையில் சகல சௌபாக்கியங்களுடனும் வாழவேண்டிய ஒரு பெண்; பிறப்பாலே குலத்தொழில் செய்வதற்காகவே தனது அழகையெல்லாம் புலப்படுத்தி ஆடவரை மயக்கும் நெறியுடைய பெண் - கல்லிலும், முள்ளிலும் காட்டிலும் மேட்டிலும் அலைகிறாள். நாட்டிற்காக; நாடு காக்கும் நல்லரசருக்காக. அவள் நன்றாக வாழ்ந்தால்தானே சக்ரவர்த்திக்கும் நல்லது.

குஞ்சரியைப் பற்றிய செய்தி வரவில்லையே என்று ஏங்கினார் காளியார். கோட்டைக்கதவுகளை மூடு முன்பாகவே அவள் வந்து சேர்ந்துவிட்டால் நல்லது என எண்ணியிருப்பார். கதவுகள் மூடப் பட்ட பிறகோ அவருக்கு ஒவ்வொரு நொடியும் பயம் அதிகரித்தது. ஏதாவது ஆபத்தில் சிக்கிக்கொண்டு விட்டால் அவளை மீட்பது எப்படி என்ற பயம் அவரைப் பிடித்துக்கொண்டது.

ஒருமுறை அவளுடைய வீட்டிற்குப் போய்ப் பார்த்தார். குஞ்சரியின் தாயார் பரவைநங்கை சோகமே உருவாக இருந்தாள். காளியாரைக் கண்டவுடன் முதலில் அவள் தன் உள்ளக் கவலையைப் புலப்படுத்திக்கொள்ளவில்லை. காளியாரின் முகத்தோற்றத்தைக் கண்டபிறகு தான் நங்கை தன் வேதனையை புலப்படுத்தினாள். தன் வேதனையை அதிகம் தெரிவித்தால் நாட்டுப் பணிக்காகச் சென்றிருக்கும் தன் மகளின் போக்கை தான் ஒப்புக் கொள்ளாதது போன்றாகிவிடுமே என்ற பயத்தில் சற்று உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டு, ''குஞ்சரி சௌக்யமாக இருக்கிறாளா? சேதி ஏதாவது வந்ததா?'' என்று மெல்லக் கேட்டாள்.

காளியார் ஏதும் பேசவில்லை. பிறகு, ''நங்கை, குஞ்சரியின் சுக சௌக்யங்களை அறியத்தான் நான் இங்கு வந்தேன். நீயே முந்திக் கொண்டாய். உம்... குஞ்சரி வந்தால் உடனே எனக்குத் தகவல் தெரிவித்து விடு'' என்று கூறிப் புறப்பட்டார்.

சோகம் நெஞ்சை அடைக்க, ''சுவாமி, என் மகள் என்ன ஆனாள்? தங்களுக்கே தெரியவில்லை என்றால்... அவள் கதி என்ன? இந்தச் சின்ன வயசில் அவள் தலையில் இப்படி எழுதிவிட்டதே...'' என்று நங்கை விம்மினாள்.

''நங்கை, உன் வருத்தம் எனக்குப் புரிகிறது. பருவ வயதில் உனக்கு உதவியாக, உன் பரம்பரைப் பெயரை நிலைநாட்ட வேண்டியவள். நாட்டிற்காக அலைவது என்றால் யார்தான் சம்மதிப்பார்கள்... உம்?'' என்று காளியார் கூறவும், நங்கை கண்களைத் துடைத்துக்கொண்டு காளியாரை நோக்கி, ''என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? என் பரம்பரை - அப்படியென்ன மகத்தான பரம்பரை? சூரியகுலப் பரம்பரையா? சிபி சக்ரவர்த்தி பரம்பரையா? அதை நானும் விரும்பியதில்லை. குஞ்சரிக்கும்

விருப்பமில்லை. அதனால்தான் அவள் தங்களைப் போன்றவர்களிடம் பழகினாள். மகேசனுக்குத் தொண்டுசெய்வதும் நாட்டிற்குத் தொண்டுசெய்வதும் ஒன்று என்ற எண்ணம் அவளுக்குச் சிறிய வயதிலேயே உதித்துவிட்டது. பரிபூரணனுக்கு அடிமை செய்து வாழ இச்சைப்பட்ட அவள், பாண்டியர் படையெடுப்பைச் சகித்துக் கொள்வாளா? புலிக்கொடி உயர்ந்து பறக்கச் சிறு உதவியாவது செய்தாள் என் மகள் என்றால் எனக்கு மகத்தான பெருமைதான். ஆனால் - சுவாமி அவள் எங்கிருக்கிறாள், என்ன செய்கிறாள்? என்ற செய்தி எப்போதாவது எனக்கு எட்டினால் போதும்'' என்று கூறினாள்.

காளியார் அயர்ந்துவிட்டார். நங்கை ஒரு வீர மகள். அவளது மகள் குஞ்சரியைப் பற்றிக் கேட்க வேண்டுமா என்று எண்ணியவராய், அங்கிருந்து புறப்பட எழுந்து, ''நங்கை, குஞ்சரி எங்கிருந்தாலும் சௌக்யமாய் இருப்பாள். அவளுக்கு மகத்தான பணி காத்திருக்கிறது. அந்தப் பணிகளை முடிப்பதற்காகவாவது குஞ்சரி நீடூழி வாழ வேண்டும். எனக்கு ஏதாவது தகவல் தெரிந்தால் உடனே சொல்லியனுப்புகிறேன். இங்கே வீட்டிற்கு வந்தால் உடனே எனக்குத் தெரிவித்து விடு'' என்று கூறினார்.

நங்கை தெரிவிக்க வேண்டியே நேரவில்லை. காளியார் கோட்டை மதிளின் மீது இங்கும் அங்குமாக ஏறு நடை போட்டுக் கொண்டிருந்தபோது யாரோ வரும் காலடி ஓசை கேட்கவும் பரபரப்புடன் திரும்பினார். மதிலின் மீது வர உத்தரவு பெற்றவர் ஒருவருமில்லை.

மங்கிய நிலவொளியில் குஞ்சரி ஒரு மோகினியைப் போல் வந்து கொண்டிருந்தாள். இரண்டு அடி வேகமாக எடுத்து வைத்த காளியார், ''யார் அது, குஞ்சரியா?'' என்று ஆவலுடன் கேட்டார்.

''ஆம் சுவாமி குஞ்சரியேதான்'' என்று கூறி முல்லை மெல்லரும்பு கோத்தது போன்ற பல்வரிசை தெரிய நகைத்தாள்.

''குஞ்சரி... எப்போது வந்தாய்? நலமாயிருக்கிறாயா? இளைத்தாற்போல் காணப்படுகிறாயே...'' என்று கேட்டு முடிப்பதற்கே அவருக்கு ஏனோ மூச்சு வாங்கியது.

''குஞ்சரி, அந்தத் துரோகி இளையமணவாளனிடமிருந்து எப்படித் தப்பினாய்?'' என்று அடுத்துக் கேட்டார்.

''நீ தப்பித்து வந்து விட்டாய் என்பது தெரிகிறது. ஆனால், நெருக்கடியான நிலையில் உன்னிடம் சக்ரவர்த்தி பல முக்கியமான பணிகளை ஒப்படைப்பார் எனத் தோன்றுகிறது'' என்று தொடர்ந்து கூறினார்.

காளியார் ஏனோ உணர்ச்சி வசப்பட்டிருக்கிறார். அவரை யறியாமல் ஒருவிதப் படபடப்பு அவரிடம் மேலோங்கியிருக்கிறது என்பதை உணர்ந்துகொண்ட குஞ்சரி, அவரைச் சற்று அமைதிப் படுத்த விரும்பி, ''பாட்டா, என் சௌக்யங்கள் இருக்கட்டும். தங்கள் உடல் நலம் எப்படி? போர் வருவதற்கு முன்பே கோட்டை மதிலின் மீது குடியிருக்க ஆரம்பித்துவிட்டீர்களே! இந்த வாடைக்காற்றில் தாங்கள் நின்றுகொண்டிருந்தால் எப்படி? சக்ரவர்த்திகள் சௌக்யமா? அரசியார் உடல் நலமுடனிருக்கிறார்களா?'' என்று பேச்சைத் திசை திருப்பினாள்.

''வாடையா? என்னை ஒன்றும் செய்ய முடியாது. வாடைக்குப் பயந்தால் வரப்போகும் யுத்தத்திற்கு என்ன செய்வது? இந்தத் தடவை கோட்டையை மிகவும் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். பலப்படுத்தும் வேலைகளைத் தொடங்கி விட்டேன். ஆனால், நமக்குப் படைப்பலம்தான் போதாது போலிருக்கிறது. நமக்கு நண்பர்களா யிருந்து துரோகிகளாக மாறியவர்களின் தாக்குதலையும் எதிர்த்து நிற்கவேண்டும். ஆமாம். நீ எப்படித் தப்பி வந்தாய் மணவாளனிடமிருந்து என்பதைப் பற்றிக் கேட்டேனே, உடனே சொல். அப்போதுதான் எனக்கு நிம்மதி ஏற்படும்'' என்று கூறிய காளியார், அப்படியே மதிலின் மீதமர்ந்தார்.

குஞ்சரிக்கே நினைத்தால் உடல் சிலிர்த்தது! இளைய மணவாளனிடமிருந்து எப்படித் தப்பி வந்தோம், சயகேசியையும், செங்கழனியையும் ஏமாற்றிவிட்டதை நினைத்த போது சிரிப்பு வந்தது.

சம்புவரையர் மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விருந்து முடிந்து நாட்டியத்தைத் தொடங்கும் சமயம் வந்து விட்டது!

இன்னும் சிறிது நேரத்தில் அவள் சோழநாட்டுச் சிற்றரசர்கள் எதிரே காலில் சதங்கையுடன் குதித்தாட வரப் போகிறாள். மதுவின் மயக்கத்திலிருக்கும் 'பெரியவர்கள்' அவளது இளமையைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டார்கள். ஆனால், மணவாளன் வந்து

விட்டால் அவன் விழிகள் முதலில் குஞ்சரியின் மீதுபடும். தேடி வந்த மூலிகைக்கொடி காலில் சுற்றியதுபோல் அவன் களிப் படைவான். நாட்டிய நாடகம் முடியும் வரையில் காத்திருப்பான். பிறகு அவனே நேராக வந்து அவள் கரங்களைப் பற்றி இழுத்துச் சென்று விடுவான்.

அவளைத் தப்பித்துச்செல்ல விட்டதற்காக ஒற்றைக் கரத்தானை அவன் என்ன பாடுபடுத்தினான்? குஞ்சரியை அன்று மாலைக்குள் கொண்டு நிறுத்தாவிடில் தலையை வாங்கிவிடுவதாக எச்சரித்தான். நான்கு திசைகளிலும் அவர்கள் ஓடினர்.

சம்புவரையர் மாளிகையில் அன்று கூடியிருந்த சிற்றரசர்களின் எதிரே குஞ்சரியைப் பெருமையுடன் நிறுத்தி ராஜராஜனின் முதல் தோல்வி என்று எடுத்துக்கூற ஆசைப்பட்டான்.

அவன் கனவில் மண்ணைப் போட்டுவிட்டுத் தப்பி விட்டாளே என்று எண்ணும்போது மணவாளனுக்கு ஆத்திரம் பொங்கியது. ஆத்திரத்துடனும் தோல்வி உணர்ச்சியுடனும் விருந்திற்கு வந்த அவன் எதிரே குஞ்சரி தென்பட்டிருந்தால்...?

குஞ்சரி அப்படித்தான் பயந்தாள். புதியவரின் பேச்சை நம்பி நாடகக் கோஷ்டியினரிடம் சேர்ந்தோமே என்று வருத்தப்பட்டாள். இன்னும் சிறிது நேரத்தில் விருந்து மண்டபத்திற்குச் செல்ல வேண்டும்.

செங்கழனி அப்போது அங்கே வந்தான். அவன் பார்வையில் ஏதோ குற்ற உணர்ச்சியிருந்தது. பசியுமிருந்தது; பாசமும் ததும்பியது. குஞ்சரியின் மிக அருகே வந்து நின்றான்.

குஞ்சரிக்குத் தன்னையறியாமலே ஓர் எண்ணம் உதயமாயிற்று. மெல்லப் புன்னகை ஒன்று பூத்தாள். அந்தப் புன்னகையொன்றே செங்கழனியைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. அவனும் 'ஹி ஹி' என்று பல்லைக் காட்டிக்கொண்டு 'குஞ்சரி' என்று அழைத்தவாறு அருகே நெருங்கினான்.

''எனக்குத் தலையை வலிக்கிறது செங்கழனி! சற்று வெளியே நின்று, வெளிக்காற்றைச் சுவாசித்தால் தேவலாம்...'' என்றாள் குஞ்சரி.

''தலையை வலிக்கிறதா?... ஐயோ... வைத்தியர்கூட இங்கில்லையே! இன்னும் சிறிது நேரத்தில் நிகழ்ச்சியைத் தொடங்க வேண்டுமே...'' என்று கையைப் பிசைந்தான் செங்கழனி.

அவன் கரங்கள் துடித்தன, குஞ்சரியை மெல்லத் தொடுவதற்கு. குஞ்சரி புரிந்துகொண்டாள்.

''செங்கழனி'' என்று மீண்டும் குழைந்தாள். செங்கழனி அவளை நெருங்கி நின்று, ''என்ன வேண்டும் குஞ்சரி? தலையை ரொம்பவும் வலிக்கிறதா?'' என்று கேட்டு அவளது நெற்றியைத் தொடுவதற்குச் சென்றான்.

குஞ்சரி மெல்லநகர்ந்து கொண்டு ''அந்தத் தோப்பிற்குச் சென்று சற்று நேரமிருந்தால் தலைவலி ஓடிவிடும்'' என்றாள்.

செங்கழனி திடுக்கிட்டான்.

''நீயும் துணைக்கு வரலாம்...'' என்று குஞ்சரி கூறியவுடன் செங்கழனி துள்ளிக் குதித்தான்.

''வா... வா... போகலாம். உன்னுடன் தனியே பேச வேண்டி யிருக்கிறது'' என்று அவள் கரத்தைப் பற்றப் போனவனிடமிருந்து மிக லாகவமாகச் சுழன்று, தோப்பை நோக்கித் துள்ளிக் குதித்து விரைந்தாள்.

தோப்பை நெருங்கியவுடனேயே, தோப்பின் இருளிலிருந்து சட்டென வெளி வந்த உருவம், குஞ்சரியைத் தொடர்ந்து வந்த செங்கழனியின் மண்டையில் தாக்கவும், அவன் நிலைகுலைந்து வீழ்ந்தான்.

''குஞ்சரி, ஓடிவா... உம்... உம்...'' என்ற குரல் கேட்டு அந்த உருவத்தைப் பின்தொடர்ந்தாள் குஞ்சரி. புதியவர்தான் தன்னை அழைப்பது என்பதைப் புரிந்துகொண்டு விட்டாள் குஞ்சரி. அவரைத் தான் இன்னார் என அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை அவளால்.

தோப்பைவிட்டு வெகுதூரம் ஓடிவந்த பிறகு இருவரும் நின்றனர்.

''களைப்பாயிருக்கிறதா? தலைவலி போய்விட்டதா?'' என்று புதியவர் கேட்டார்.

குஞ்சரி திகைப்புடன், ''தங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''எப்படியாவது உன்னைக் காப்பாற்றிவிடுவதாக வாக்குக் கொடுத்திருந்தேனே! நாடகக்குழு தங்கியிருக்கும் இடத்திற்கு வந்து

மறைந்து கொண்டிருந்தேன். நீயும் செங்கழனியும் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன்'' என்று கூறி மெல்ல நகைத்தார். மீசைக்குள்ளும் தாடிக்குள்ளுமிருந்து நகையொலி மட்டும் கேட்டது. அவரை அடையாளம் காட்டவில்லை.

வியப்புற்ற குஞ்சரி அவரைப் பார்த்து, ''சரி, நான் எப்படியும் உடனே கங்கைகொண்டசோழபுரம் போக வேண்டும். இங்கு மட்டும் நம்மைத் தேடி மண்வாளன் ஆட்கள் வந்துவிட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டாள்.

''நம்மை என்று ஏன் சொல்கிறாய்? என்னை ஏன் அவர்கள் தேடுகிறார்கள் என்று சொல்'' மீண்டும் நகைத்தார் அவர்.

''சரி, ஐயா, என்னைத்தான் தேடி வருகிறார்கள் என்றே வைத்துக் கொள்ளுங்கள். நான் அகப்பட்டுக்கொண்டால் தங்களை மட்டும் விட்டுவிடுவார்களா?'' என்று குஞ்சரி கேட்கவும் புதியவர் நகைத்து,... ''குஞ்சரி, கவலைப்படாதே! உன்னைவிட கங்காபுரிக்கு நீ செல்ல வேண்டும் என்பதில் நான் அவசரப்படுகிறேன்...'' என்றார்.

''தங்களுக்கு அவசரமா?...'' குஞ்சரி வியப்புடன் கேட்டாள்.

''ஆம். கங்கைகொண்டசோழபுரத்தில் உனக்கு மிக முக்கியமான பணிகள் காத்திருக்கின்றன'' என்றார்.

குஞ்சரி மீண்டும் திகைத்தாள். ''ஐயா, தாங்கள் யார்? நாட்டு வளப்பம் முழுமையும் அறிந்திருக்கிறீர்களே!'' என்று கேட்டாள்.

''சமயம் வரும்போது சொல்கிறேன். இப்போது கங்காபுரிக்குச் செல்ல வழி தேடுவோம்'' என்றார் அவர்.

## 11

'பழமுதிர்சோலை' என்றழைக்கப்படும் அழகர்கோயிலருகே உள்ள மலையின் மீது, பாண்டிய மன்னர் சுந்தர பாண்டியன் தமது பரிவாரங்களுடன் அருவி நீராடச் சென்றிருந்தார். போர், பூசல் அனைத்தையும் மறந்து, புலவர்கள், கலைஞர்கள், உற்றார், உறவினர், பட்டத்தரசி, பட்டத்திளவரசனுடன் மிகவும் குதூகலமாகப் பொழுதைக் கழிக்கச் சென்றிருந்தார்.

மாற்றார் படையெடுப்பெனும் அஞ்சுதல் இன்றி, பாண்டிய நாட்டின் முன்னேற்றம் ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டிருந்த சுந்தரபாண்டியனுக்கு இப்போதெல்லாம் கோயில் திருப்பணிகளில் கவனம் சென்று கொண்டிருந்தது.

திருவரங்கத்திற்குப் பொன் வேய்ந்த பிறகு, தென்பாண்டிய நாட்டில் அதுபோன்று அழகுக்கு அழகு செய்து பார்க்க, திருக் கோயில்க்ளில் திருப்பணி செய்வது குறித்துத் திட்டம் தயாரிக்குமாறு தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். அதற்காகத் தலங்கள் தோறும் தீர்த்தங்கள். தோறும் இறைவனைத் தரிசிக்கச் சென்று வரலானார். அவ்வாறு புறப்பட்ட கோயில் திரு யாத்திரையில் அழகர் கோயிலும் ஒன்று.

சுந்தர பாண்டியனைப் பொறுத்தவரை அவருக்குச் சைவ - வைணவ வேற்றுமையில்லை. தில்லையும் திருவரங்கமும் அவருக்குச் சமமே. அரங்கநாதரையும் கூத்தரசரையும் பொன்னாலும் வைர வைடூரியங்களாலும் அழகுபடுத்துவதில் முனைந்தார்.

சோழநாட்டுப் படையெடுப்பின் போது கவர்ந்த பொருள்களை அக்கோயில்களுக்கே செலவிட்டதோடு, சோழமன்னர் ராஜ ராஜனுக்குத் திரும்பவும் நாட்டையளித்து ஆளுமாறு செய்த பரந்த இதயம் படைத்தவர்.

படைத்தளபதிகளும் முதலமைச்சரும் அவரது விரிந்த உள்ளத்து அறக்கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

குறிப்பாக, இளவரசன் குலசேகரன் தந்தையின் போக்கை ஆதரிக்கவில்லை. அழகர்கோயிலில் தங்கியிருந்த ஓய்வான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கேட்டான்.

''மும்முடிச்சோழபுரத்தில் மகுடாபிஷேகம் செய்து கொண்டீர்கள். விஜயகண்டகோபாலனை வென்று நெல்லூரில் முடிசூட்டு விழா நடத்திக்கொண்டீர்கள்...''

இதைக் கேட்டு பாண்டிய சக்கரவர்த்தி பெரிதாக நகைத்தார்.

''குழந்தாய்! எனக்கு என்றுமே வேற்று நாட்டைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையே கிடையாது. சோழநாட்டைக் கண்டால் எனக்கு இளவயது முதல் ஒருவித எரிச்சல். நாடுகளைப் பிடிக்கும் நாட்டாசை பிடித்தவர்கள் அவர்கள். மதுரையை வென்றவர்கள் என்று

சொல்லிக்கொள்வதில் அவர்களுக்கு மிகுந்த ஆசை. நம் நாட்டைச் சூறையாடி, பொன்னும் பொருளும் கொள்ளை கொண்டு போவது ஒரு விளையாட்டு அவர்களுக்கு. பராந்தகச் சோழர் என்று ஒருத்தர் சோழநாட்டில் ஆண்டு வந்தார். அவரது காலத்தில் நமது நாடு மிகவும் பலம் குன்றி விளங்கியது. அந்தச் சந்தர்ப்பத்தை அவர் மிகவும் பயன்படுத்திக் கொண்டார். மதுரை அரியணையில் வந்தமர்ந்து முடிசூடிக் கொண்டார். அவர்தான் முதன்முதலில் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தவர். அதே சிதம்பரத்து விமானத்திற்குப் பொன் வேய நானும் ஆசை கொண்டேன்.

''பராந்தகரைத் தொடர்ந்து பல சோழ மன்னர்கள் மதுரையைத் தங்கள் விளையாட்டுப் பூமியாகக் கொண்டிருக்கிறார்கள். ஆதித்த கரிகாலன் என்ற சோழ இளவரசன் நமது மூதாதையர் வீரபாண்டியன் தலையைக் கொய்து பந்தாடினானாம்.

''இவ்வளவு அக்கிரமங்களும் செய்து அதைப் பெருமையாகப் பட்டயங்களில் குறித்துக்கொண்டார்கள்'' என்று கூறி சுந்தரப் பாண்டியன் சற்று நிறுத்தினார்.

''எதற்கு அப்பா, அவர்கள் அது போல் செப்புப் பட்டயத்தில் எழுதி வைத்தார்கள்?''

''ஆம்; மகனே! செப்புப்பட்டயத்தில் பொறித்தார்கள். கற்களிலே செதுக்கினார்கள். புலவர்களை விட்டுப் பாடல்களாக எழுதச் சொன்னார்கள். ஏனென்றால் அவை என்றென்றும் அழியாது இருக்கும். நமது தோல்வியைக் காலாகாலத்திற்கு எடுத்துக்கூறும். நாம் அடிமையாய் வாழ்ந்த கதையை உலகம் உள்ள அளவுக்கும் பறைசாற்றும்.''

''காலாகாலத்திற்கு அவமானமல்லவா?''

''ஆம். மகனே! நமக்கு என்றுமே அவமானம் ஏற்படவேண்டும் என்பதே அவர்களது எண்ணம். அதை நிறைவேற்றிக் கொண்டார்கள்''.

''நாம் அதை அழிக்கமுடியாதா?''

''நடந்த உண்மையை நாம் மறைக்கக்கூடாது. அதற்கு மாறாகப் பாடம் கற்பிக்க வேண்டும் அவர்களுக்கு. பழிக்குப்பழி வாங்க

வேண்டும். சந்திர சூரியர் உள்ள வரையில் சோழர்களுக்குக் களங்கம் ஏற்படச் செய்ய வேண்டும். மீன்கொடியை உயரப் பறக்க விட வேண்டும்.''

''இதற்குப் படையெடுத்து நாட்டைப் பிடிக்காமல் முடியுமா? பிடித்த நாட்டை நம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டு காலா காலத்திற்கு ஆட்சி செலுத்தாமல் முடியுமா? தாங்கள் பிடித்த நாட்டிலே மகுடாபிஷேகம் செய்துகொண்டு திரும்பிவந்து விடுகிறீர்களே, அதனால் என்ன பயன் தந்தையே?''

''நன்றாகக் கேட்டாய் மகனே! காவிரிக்கரையைத் தாண்டி சோழ நாட்டில் புகுந்து 'ஹதா ஹதம்' செய்தோம். வீடுகளையும், மாளிகைகளையும் நமது வீரர்கள் இடித்துப் பாழ்செய்தார்கள். அக்னிக்கு இரையாக்கினார்கள். பெண்டு பிள்ளைகள் ஓலமிட்டு ஓடினார்கள். சோழர்களின் நாடு நகரமெல்லாம் புகுந்து துவம்சம் செய்தோம்...'' - இதைக் கூறும் போது சுந்தரபாண்டியன் முகத்தில் இயற்கையாக உள்ள தைரியப் பெருமிதம் மேலும் அதிகமாகியது. புஜங்கள் துடித்தன. கண்களில் தனி ஒளி ஏற்பட்டது.

''ஆமாம். கேள்விப்பட்டேன். எல்லாவற்றையும் அழித்து விட்டீர்களா? சோழ ராஜராஜன் பயந்துகொண்டு மனைவி மக்களுடன் ஓடி ஒளிந்துகொண்டானாம்!''

''நான் விட்டேனா? முடிகொண்டசோழபுரத்தில் மகுடா பிஷேகம் செய்துகொண்டேன்.''

''முடிகொண்டசோழபுரமா? அது எங்கே அப்பா இருக்கிறது? நான் கேள்விப்பட்டதில்லையே?''

''சோழர்களின் பழைய தலைநகரம் பழையாறை. அதற்குத்தான் முடிகொண்டசோழபுரம் என்று பெயர். மதுரை மகுடத்தை அடைந்த வெற்றிக்களிப்பில் ஒரு மாளிகையே அங்கு கட்டி விட்டான் சோழன். அங்கே நான் சென்றமர்ந்தேன். அமைச்சர் பிரதானிகளை அழைத்து, சோழநாட்டுச் சிற்றரசர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் முடிசூடிக்கொண்டேன். சோழரின் முடிகொண்டசோழபுரமாக ஆக்கினேன். ஆகா, அந்தக் கோலாகலமான சம்பவத்தை நான் மறக்க மாட்டே . நான் மறந்தாலும் மக்கள் மறக்கமாட்டார்கள். அந்தப் புகழ்ப் பாடலை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? யார் அங்கே?'' என்று கர ஒலி எழுப்பிப் பணியாளை அழைத்தார்.

''புலவர்களை வரச் சொல்லு'' என்று கட்டளையிட்டார்.

மிக்க மரியாதையுடன் கையில் சுவடியுடன் வந்து நின்றார் தமிழ்ப்புலவர்.

''எங்கே, நமது மெய்க்கீர்த்தியைப் படியுங்கள்'' என்று உத்தரவிட்டார். புலவர் பாடத் தொடங்கினார்.

''பனி மலர்த் தாமரை திசைமுகன் படைத்த மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப் பொன்னி சூழ் நாட்டிற்புலியாணை போயகலக் கன்னி சூழ் நாட்டிற் கயலாணை கை வளர, வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித் தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக் காவியு நீலமும் நின்று கவினிழப்ப வாவியுமாறு மணி நீர் நலனழித்துக் கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும் மாடமு மாளிகையும் மண்டபமும் பல விடித்துத் தொழுது வந்தடையா நிருபர் தந்தோகையர் அழுத கண்ணீராறு பரப்பிக் கழுதை கொண்டுழுது ஆடகப் புரிசை ஆயிரத் தளியிற் சோழ வளவன் அபிஷேக மண்டபத்து வீராபிஷேகஞ் செய்து...'' பாண்டிய மன்னர் கையசைத்தார். புலவர் அத்துடன நிறுத்தினார்.

இளவரசன் தந்தையின் புகழ் கேட்டு மெய்ம் மறந்தான்.

''ஆகா! சோழர் கொற்றம் ஒடுக்கினீர்களா? பிறகு மீண்டும் எப்படி ராஜராஜன் துளிர்த்து எழுந்துவிட்டான்?'' என்று சந்தேகத்தைக் கேட்டான் இளவரசன்.

சுந்தர பாண்டியன் பயங்கரமாக நகைத்தார்.

''அதுவா! நானிட்ட பிச்சையடா, நானிட்ட பிச்சை! பிச்சையைப் பெற்று பயந்து ஒடுங்கியிருந்த ராஜராஜன், கொழுந்துவிட்டான். வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டான். என் அடிபணிந்து, ஆண்டு தோறும் அனுப்பி வைப்பதாகக் கூறிய திறையை அனுப்பாது நிறுத்திவிட்டான். நான் அளித்த பிச்சை. பட்டத்துராணியுடனும், சுற்றத்துடனும் நாடிழந்து காஞ்சி சென்று வாழ்ந்துகொண்டிருந்த வனைத் திரும்ப அழைத்து, 'இந்தா, பிழைத்துப் போ. உன் நாட்டை உனக்கே தருகிறேன்' என்று அளித்தேனே, அந்த நன்றியை மறந்து விட்டான்...''

''சக்கரவர்த்திகளே, ஏன் சோழ மன்னனுக்கு மீண்டும் நாட்டை அளித்தீர்கள்? அதைப் போல் தான் விஜய கண்ட கோபாலனுக்கும் திரும்பவும் அளித்தீர்கள் காஞ்சியை'' என்று இளவரசன் வேதனைப் பட்டுக் கொண்டான்.

''மகனே! இதைத்தான் முதலிலேயே சொன்னேன். நமக்கு மாற்றான் நாட்டை ஆளும் ஆசை இல்லை என்று. பொன்னமராவதியில் தங்கியிருந்து, ராஜராஜனை அங்கே வரவழைத்து நாட்டைத் திருப்பியளித்தோம். அதைப் பாடல்களாக்குமாறு புலவர்களிடம் கூறினோம். கற்களில் செதுக்கச் செய்தோம். சோழ நாட்டில் நமது பிரதிநிதியை அமரச் செய்து ஆள்வதைவிட அவர்களையே ஆளச் செய்யக் கொடுத்த தம்து செய்கையை வருங்காலம் நினைவில் கொண்டு பாராட்டும் வகை செய்து விட்டோம். இப்போது சொல்லு. நமக்கு நாடாசை உண்டா இல்லையா என்று!'' என்று கூறி சுந்தர பாண்டியன் தன் மீசையை மெல்லத் தடவிக் கொண்டார் பெருமிதத்துடன்.

இளவரசன் சமாதானமடைந்ததாகத் தெரியவில்லை. ''தந்தையே! அந்தச் சோழனை அப்படியே விட்டு விட்டது எனக்குச் சம்மதப்படவில்லை பாருங்கள். அவன் ஒப்பந்தப்படி நடந்து கொள்ளவில்லை...'' இப்படிக் கூறிக் கொண்டிருக்கும் போது ஒற்றர்கள் இருவர் வந்து அடிபணிந்து நின்றார்கள்.

பார்வையிலேயே என்ன செய்தி என்று கேட்பதை உணர்ந்த அவர்கள், வாய்ப்பொதித்து மிகவும் பணிவுடன் மெல்லிய குரலில், கங்கை கொண்ட சோழபுரத்தில் கோட்டைக் கதவுகள் அடைக்கப் பட்டதையும், யுத்தத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதையும் கூறினார்கள். மேலும், கண்ணனூர் கொப்பம் அருகே போசாளர்கள் படைகள் முகாமிட்டிருப்பதையும் தெரிவித்தார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டு சுந்தரபாண்டியன் சற்றேனும் அதிர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. அருகே உள்ள சிற்றோடையில் சிறு கற்களை எடுத்து வீசிக்கொண்டேயிருந்தார். பிறகு மெல்லிய நகை முகத்தில் தவழ அலட்சியமாக, ''கோட்டைக் கதவுகளை மூடி விட்டானா? ஐயோ, உள்ளேயேயிருந்து பசியால் வாடி இறந்து போகும் எண்ணமோ! மேலும், யுத்தத்திற்கு ஆட்களைச் சேர்க்கும் முரசு ஒலித்து ஒரு வாரமாகியும் ஒருவர் கூடச் சேரவில்லையாமே! உலைக்கூடத்தில் வேலும் வாளும் ,துருப்பிடித்துக் கிடக்கின்...வாம்'' என்றார்.

இந்தச் செய்திகள் மன்னருக்கு எப்படித் தெரிந்தன என்று அங்கிருந்தோர் அனைவரும் வியப்புடன் நோக்கினர்.

மீண்டும் மன்னர் நகைத்து, "க்ஷேத்ராடனம் செய்து கொண்டிருக்கும் எனக்குச் சோழ நாட்டுச் செய்தி எப்படித் தெரிந்தது என்று பார்க்கிறீர்களா? அதோ, சோழ நாட்டுச் சிற்றரசரின் பிரதிநிதி - அவர் அனைத்தும் கூறி விட்டார். சிற்றரசர்கள் ஒருவருடைய உதவியும் ராஜராஜருக்குக் கிடைக்காது. சோழப் படைகளில் உள்ளவர்கள் முன்பே விலகி வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று விட்டனர். ஆபத்துக்காலத்தில் உதவுவதற்கு ஒருவரும் முன்வரப் போவதில்லை."

இளவரசன் மௌனமாயிருந்தான். பிறகு, "சம்புவரையர், மலையமான் ஒருவரும்?...."

மதுரை மாமன்னர் தலையை அசைத்தார். "ஒருவரும் உதவப் போவதில்லை. ராஜராஜன் தவறான போக்கைக் கையாள்கிறான். யாருடைய தவறான யோசனையாலோ, இப்படி நம்மை விரோதித்துக் கொள்கிறான் - பாவம், இம்முறை அவன் பிழைப்பதே கஷ்டம்!" என்றார்.

தொலைவில் மலை முகட்டின் மீது மேகங்கள் படித்து, இடியோசையை எழுப்பின.

## 12

அந்த நடுநிசிக் கோலாகலம், திடீரென்று ஏமாற்றத்தில் முடிவடைந்தது. சம்புவரையர் மாளிகையில் விருந்துக்கும், மதுவின் ஆட்சிக்கும் பிறகு நடனம், நாட்டியம், நாடகம் யாவும் நடக்குமென்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அவை பாதியில் அரை குறையாக முடிந்தது ஒரு விதத்தில் அதிர்ச்சியையே அளித்தது என்று கூறலாம்.

நடனக் குழுவினர் செங்கழனியைத் தேடினார்கள். குஞ்சரியைத் தேடினார்கள். நேரத்தைக் கடத்த விரும்பாமல் ஏதோ கோமாளித் தனமாக நிகழ்ச்சிகளை நடத்தி நகைப்பை ஊட்ட முயன்று கொண்டிருந்தனர்.

மணவாளன் கவனம் குஞ்சரி அங்கு வருவதை எதிர்பார்த்து இருந்தது. சம்புவரையரிடம் அவன் பெருமையுடன் கூறியிருந்தான், குஞ்சரியின் திறமையைப் பற்றி; அழகைப் பற்றி.

''ஆ, அப்படியா சொல்கிறாய்? அவ்வளவு அழகா?'' என்று சம்புவரையர் ஆவலுடன் கேட்டார்.

''ஆமாம், பாட்டா! கங்காபுரியில் இப்படியொரு ரம்பை ஊர்வசி வளர்கிறாள் என்பது எனக்குத் தெரியாது'' என்றான் மணவாளன்.

''உனக்கே தெரியாது என்றால் எனக்கு மட்டும் தெரிவதற்கு நியாயம் உண்டா?'' என்று சம்புவரையர் கேட்டார். அவரது மகன், மகள் திருமணமாகி குஞ்சரி வயதில் அவர்களுக்குப் பெண்கள் இருக்கிறார்கள்.''

''பாட்டா, குஞ்சரியை இங்கே நடனமாட அழைத்தது உங்களுக்கு அவளது அழகையும் ஆற்றலையும் புலப்படுத்த அல்ல...'' என்று கண்களை ஒரு மாதிரி மூடிக்கொண்டு பெரிய வெற்றியை அடைந்து விட்டவன் போல் கூறினான்.

''பிறகு?...''

''நமது பொது விரோதி ராஜராஜனுக்குப் பாடம் கற்பிக்க, முதல் தோல்வி என்று எடுத்துக் கூற...''

''ராஜராஜனுக்கு முதல் தோல்வியா? அதுதான் ஒரு மாமாங்கத்திற்கு முன்பே நடந்து விட்டதே! பாண்டியனிடம் அடிபணிந்து, கொடி, குடை, வாள், மகுடம் இழந்த அன்றே சோழ குலத்திற்கே முதல் தோல்வி தம்பி!'' என்று தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார் சம்புவரையர்.

''அந்தத் தோல்வி தான் உலகமறிந்ததாயிற்றே! அந்தத் தோல்விக்குப் பிறகு எழுந்திருக்கவே மாட்டான் ராஜராஜன் என்று நினைத்தேன்...''

''தம்பீ! ஒன்று சொல்லட்டுமா? என்ன இருந்தாலும், உன்னை விட வயதில் பல ஆண்டுகள் மூத்தவன் ராஜராஜன். நீ அவன், இவன் என்று ஒருமையில் அழைப்பது சரியில்லை... நமக்கு விரோதியாக இருந்தாலும் சோழமன்னர் நமக்கு எல்லாம் தலைவர்...'' என்று சம்புவரையர் குறுக்கிட்டார்.

மணவாளனுக்கு ஜிவ்வென்று கோபம் வந்தது. பல்லிடுக்கில் சிக்கியிருந்த எலும்புத் துண்டைக் குத்தி எடுத்துத் 'தூ' வென்று துப்பி, ''என்ன பாட்டா, உமக்கும் பழைய அடிமைப் புத்திப் போகவில்லை. சோழ மன்னன் உமக்கு வேண்டுமானால் தலைவனாயிருக்கலாம்.

எங்களுக்குத் தலைவனல்லர். கோப்பெருஞ்சிங்கன் பரம்பரை அதை ஏற்காது. நாங்கள் பல்லவ குலத்தோன்றல்கள். பாட்டா, நீர் வேண்டுமானால் புலிக்கொடியை மார் மீது போர்த்திக் கொள்ளும்; நாங்கள் மாளிகையின் தரை விரிப்பாகத்தான் அதைப் பயன்படுத்திக் கொள்கிறோம். இங்கு உங்கள் மாளிகையில் நாம் விருந்தினராகக் கூடியிருப்பது உமது சோற்றைத் தின்று மதுக்குடித்து மயங்கி வீழ்ந்திருந்து திரும்பிச் செல்ல அல்ல. நாம் அனைவருமே 'சோழர்க்குலப் பூண்டையே நசுக்கி விட ஒன்று சேர வேண்டும்' என்பதைப் பேசக் கூடியிருக்கிறோம்....'' என்றான் சீற்றத்துடன்.

அவன் சொல்லி வரும் போது, சம்புவரையர் கடகடவென்று சிரித்து, ''எப்படியெல்லாம் கோபம் வருகிறது! நான் என்ன சொல்லி விட்டேன்? இருநூறு முந்நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் பழக்கத்தைக் கூறினேன். வாணகோவரையர்கள், மலையமான்கள், பழுவேட்டரையர்கள், முத்தரையர்கள், அனைவரும் சேர்ந்த ஒரு கூட்டு அரசே சோழ அரசு. சமாதானக் காலத்தில் தங்கள் தங்கள் ஊர்களில் அமைதியாகக் காலங் கழிப்போம். உழுது பயிரிட்டு, ஆடை நெய்து, தெய்வம் தொழுது, கலை வளர்த்துச் சுதந்திரமாகக் காலங்கழிப்போம். போர் என்றால், அந்நியர் படையெடுப்பு என்றால், தஞ்சைக்குப் படை வீரர்களை அனுப்புவோம், அனைவரும், கேடயம், வேல், வாள் ஏற்றுப் போர்களம் புகுவோம்... இதில் சோழ அரசர் வேறு, நாம் வேறு என்று பிரிக்க மாட்டோம்....'' என்று கூறி வரும் போது மணவாளன் குறுக்கிட்டான்.

''ஏன். பாட்டா, எங்கள் பெயரை மறந்து விட்டீர்கள்? காடவரையர்களின் பங்குக் குறைவானதா? நடந்த கதையை மறந்து விட்டீர்களா? எங்கள் குலத் தந்தை அபராஜிதர் மட்டும் சோழருக்கு உதவியிராவிடில் சோழர்கள் என்ற பெயரே ஏற்பட்டிருக்குமா?'' என்று கோபமாகக் கேட்டான்.

மீண்டும் சம்புவரையர் நகைத்தார். ''தம்பி, பார்த்தாயா, பார்த்தாயா, நீங்களும் சோழர் குலம் உயர, பரம்பரை பரம்பரையாக உதவி வந்திருப்பதாக நீயே சொல்கிறாயே! அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். உனக்குக் கோபம் வந்துவிட்டதே! உம்; போகட்டும் நமக்குள் சிறு விஷயங்களில் கருத்து வேற்றுமை

எதற்கு? பொதுக் கொள்கையில் நமக்கு உடன்பாடு. ராஜராஜனின் கொற்றம் ஒடுக்கவேண்டும். உம்; அது போகட்டும். அந்த அழகி குஞ்சரியைப் பற்றி - அவள் இங்கே நடனமாட வருவதால் ஏதோ ராஜராஜனுக்குப் பாடம் கற்பிக்க என்றாயே. அதைப் பற்றிச் சொல்லு'' என்று பேசி சம்புவரையர் மணவாளனின் கோபத்தைத் தணித்தார்.

மணவாளனும், நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டான். ''அதுவா, பாட்டா! குஞ்சரியைப் பற்றி எங்களைப் போன்ற இளைஞர்கள் நன்றாக அறிவார்கள். எங்களுடைய கனவுக்கன்னி அவள்...''

''கனவுக்கன்னியா....?'' சம்புவரையர் வாயைப் பிளந்தார்.

''ஆமாம், பாட்டா! அவள் கன்னி. கனவில் மட்டும் தான் அவளைப் பற்றி நினைக்க முடியும். நெருப்பு என்றால் நெருப்பு.''

''கற்புக்கரசி கனல் போன்றிருக்க வேண்டும். சரி தானே...''

''என்ன பாட்டா, பொது மகளிர்க்குக் கற்பு என்று ஒன்றுண்டா?... அவளை யாரென்று நினைக்கிறீர்கள்? கங்கை கொண்ட சோழபுரத்து, பதியிலாதார் கூட்டத்தில் தலைசிறந்தவள் நங்கை. அவள் மகள் குஞ்சரி. குஞ்சரி தன் எழிலைக் கொண்டு எங்களைப் போன்றவர் களை மோகவலை விரித்துப் பித்துப் பிடித்து அலையச் செய்து, தொழிலைச் சரிவரச் செய்து கொண்டு போக வேண்டியவள் தானே! ஏன் அப்படி ராஜராஜருக்குத் துணை போகிறாள்?...'' என்று மணவாளன் உணர்ச்சி பொங்கக் கேட்டான்.

''நீ சொல்வது புரிகிறது மணவாளா! இவ்வளவு நாள் உன்னைப் போன்ற இளவரசர்கள் அவளை விட்டு வைத்திருப்பதே அதிசயம் தான். ஆனால், சக்கரவர்த்திக்கு அவள் துணையாயிருக்கிறாள் என்பது தவறு என்று மட்டும் சொல்லாதே'' என்று சம்புவரையர் சிரித்துக் கொண்டே கூறினார்.

''பார்த்தீர்களா? பார்த்தீர்களா உங்களுக்கு இன்னும் சக்கரவர்த்தி மோகம் போகவில்லையே?''

''எனக்கு இன்னும் எந்த மோகமும் போகவில்லை. அதற்குச் சொல்லவில்லை. கோயிலில் நடனமாட ராஜராஜனால் வடக்கே யிருந்து கொண்டமர்த்தப்பட்ட அவர்களுக்கு வேண்டிய நிலம், நிதி,

வாழ்க்கை வழிகளைச் சக்கரவர்த்திகள் பரம்பரையாக ஒவ்வொரு ஊர்கோயிலில் உள்ளவர்களுக்கும் செய்து வருகிறார்கள். அப்படியிருக்க, அரசருக்கு விசுவாசமாக அவர்கள் இருப்பது சரிதானே?''

மணவாளன் சீறியெழுந்தான். ''பாட்டா, நீங்கள் வேடிக்கையாகப் பேசுகிறீர்களா, வினையாகப் பேசுகிறீர்களா என்றே தெரியவில்லை. அரசருக்கு நன்றியாக இருப்பது வேறு; அரசியல் காரியங்களில் கலந்து கொண்டு அரச குடும்பத்தவர்கள் போல் செயல்புரிவது வேறு... குஞ்சரி சதிவேலைகளில் ஈடுபட்டிருக் கிறாள். அதனால், மிகவும் ராஜராஜனுக்கு நெருக்கம். அவனுடைய புதல்வன் ராஜேந்திரனுக்கு குஞ்சரியின் மீது ஒரு கண்...'' என்று படபடப்புடன் பேசினான்.

''ஓகோ! தந்தை மகன் இருவருக்கும் குஞ்சரியின் மீது...'' என்று கூறி சம்புவரையர் குறும்புத்தனம் குமிழியிட நகைத்தார்.

''ராஜராஜனுக்கு எப்படிப்பட்ட எண்ணம் என்று என்னால் சொல்ல முடியாது. ராஜேந்திரனுக்கும் எனக்கும் போட்டி. ஒருவரோடு ஒருவர் மோதியேயிருக்கிறோம். அந்தப்புர மகளிர் நிலைக்குக் குஞ்சரியின் நிலையை உயர்த்தி விடுவதாக ராஜேந்திரன் கொக்கரித்தான். நான் அவளை என் அந்தப்புரத்திற்கே அழைத்துச் சென்று விடுவதாக சூளுரைத்து விட்டேன்...''

''வாளோடு வாள் மோதியதோ?''

''இல்லை! இப்போது கருத்துப் போர். முதல் போர்த் தொடங்கி விட்டது. குஞ்சரியை நான் சிறைப்பிடித்தேன்...''

''சிறைப்பிடித்து வந்தவளையா இங்கு நாட்டியமாடச் சொல்லியிருக்கிறாய்? அவள் தப்பிப் போகாமல் எப்படி இருக்கிறாள்?''

''பாட்டா, என்ன இன்று எல்லாம் எதிர்மறையாகவே பேசுகிறீர்களா? அல்லது நடந்த விஷயம் முழுமையும் உங்களுக்குத் தெரியுமோ?''

''இல்லை. இல்லை; உம் சொல்லு மேலே''

''ராஜராஜனின் சார்பில் ரகசிய செய்தி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் குஞ்சரி. அச்சமயம் குஞ்சரியைக் கவர்ந்து வந்து எனது செங்காட்டு மாளிகையில் சிறையில் வைத்து விட்டேன்...''

''ஓகோ... முதல் வெற்றி... சரி தான்''

''அப்படியில்லையே, பாட்டா! எனது வேலைக்காரர்கள் முட்டாள்கள். அவளை நழுவ விட்டு விட்டனர்...''

''அதானே கேட்டேன். ராஜராஜன் மகன் ராஜேந்திரன் சும்மாயிருந்திருக்க மாட்டானே என்று...''

''எரிச்சலைக் கிளப்பாதீர்கள் பாட்டா. நான்கு திக்கிலும் எனது ஒற்றர்கள் விரைந்தனர். என்ன வேடிக்கைப் பாருங்கள்; இன்று விருந்து மாளிகையில் நாடகம் நடத்த வந்த குழுவின் குஞ்சரி யிருக்கிறாள்... அவள் இருப்பது முதலில் எனக்குத் தெரியாது. நான் இங்கு வந்திருப்பதும் அவளுக்குத் தெரியாது. ஆனால் நான் எப்படியோ தெரிந்து கொண்டு விட்டேன். நாடக நாட்டிய நிகழ்ச்சிக்குப் பிறகு குஞ்சரியை எனது மாளிகைக்குக் கொண்டு செல்ல முடிவு செய்துவிட்டேன்...''

''அதுவரை நீ எப்படிப் பொறுமையாக இருக்கிறாய்? மதுவை அளவோடு அருந்தியிருப்பதால் பொறுமையுடனிருக்கிறாய்...''

''பாட்டா, இந்தச் சமயத்தில் பொறுமைதான் வெற்றியைத் தரும். இல்லாவிடில் குஞ்சரி தப்பி ஓடிவிட்டால் பிறகு எனக்கும் ராஜேந்திரனுக்கும் நேர் எதிரே போர் தான்!''

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது நேரம் நிசியைத் தாண்டிவிட்டது. சபை மண்டபத்திலுள்ள மற்ற சிற்றரசர்கள் மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் சுவையில்லாமல் ''போதும் நிறுத்து'' என்று கூறினார்கள்.

''மணவாளா!'' என்ற குரலைப் பலமாக எழுப்பினார் ஒருவர். "எங்கே, நீ சொன்ன நடனப் பெண்? அவளை வந்து ஆடச் சொல்லு. இவர்களை இங்கு விட்டு ஓடச் சொல்லு...'' என்று கூவினார்.

அந்த இருளில் அந்தக் குரல் பயங்கரமாக ஒலித்தது.

''குஞ்சரி, குஞ்சரி!'' என்று பலர் கூவும் குரல் எழுந்து இருளில் எதிரொலித்தது. இருளைக் கிழத்து ஒளியூட்டும் தீவர்த்தியின் ஒளியில் காவலர்கள் அங்குமிங்கும் ஓடுவது பயங்கரமாயிருந்தது.

இரண்டு நாட்கள் கழித்தே மணவாளனுக்குத் தெரியும். குஞ்சரி கங்கை கொண்ட சோழபுரம் சென்றடைந்து விட்டாள் என்பது.

நிலவொளியில் மதில் மேல் காளியாருடன் அவள் பேசிக் கொண்டிருப்பதைக் கோட்டைக்கு வெளியே தொலைவிலிருந்து

பார்க்கும் போது அவனுள்ளத்தில் ஏமாற்றமும் அவமானமும் நெருப்பாய் செந்நாக்கு நீட்டி எரிந்தன.

கடந்த சில நாட்களாக இரவில் மதிலின் மீது காளியார் எதிரே அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது குஞ்சரிக்கு வழக்கமாகி விட்டது. காலையில் நேரஞ்சென்று தான் எழுந்திருப்பாள். அவளுக்கோ, அவள் தாய்க்கோ விரோதிகளின் பயம் இப்போது இல்லை வீட்டு வாயிலில் காவல்காரர்கள் பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தனர்.

மேற்குத் திசையில் சந்திரன் தன் கலை குறைந்து களையிழந்து காணப்பட்டான். விடிய இன்னும் ஒரு ஜாமம் இருக்கலாம். காளியார் ஒரு முறை மதிலைச் சுற்றி வரப்புறப்பட்டார்.

''நானும் வருகிறேன்!'' என்று குஞ்சரி எழுந்தாள்.

''இல்லை, குஞ்சரி; நீ இங்கேயே இரு. சில இடங்கள் என்னைத் தவிர மற்றவர்களால் செல்ல முடியாது. இங்கேயே நீ இரு நான் வந்து விடுகிறேன். இல்லாவிடில் நீ வீட்டிற்குப் போய் விடேன். நாளைக்குச் சந்திப்போம்'' என்றார்.

குஞ்சரி மௌனமாயிருந்தாள்.

# 13

குஞ்சரி மௌனமாயிருந்தாள். காளியார் கையில் வேலுடன் மதிலின் மீது கம்பீரமாக நடந்து செல்வதைப் பார்த்தவாறு இருந்தாள். அவரைத் தொடர்ந்து வெளிச்சம் காட்டிச் செல்லும் தீவர்த்தித் தாங்கி உடன் செல்லவில்லை. தான் செல்வது ஒருவருக்கும் தெரியக்கூடாது என்பது அவர் திட்டமாயிருக்கலாம்.

குஞ்சரி அவர் கம்பீரமாக நடந்துச் செல்வதைப் பார்த்தவாறு இருந்தாள். அவள் மனத்தில் அவருடைய நாட்டுப் பற்று சுழன்று நின்றது. முதிய பருவத்திலும் அவர் மகத்தான பொறுப்பை ஏற்றிருப் பதை நினைக்கும் போது, தான் சோழநாட்டிற்காகப் பாடுபடுவது மிகவும் சிறு துரும்பளவு எனத் தோன்றியது.

அவருக்குத் தன் மீதுள்ள பரிவும் பாசமும் அவளை நெகிழச் செய்தன.

''இல்லை, குஞ்சரி, நீ இங்கேயே இரு. சில இடங்களில் என்னைத் தவிர மற்றவர்களால் செல்ல முடியாது. இங்கேயே நீ இரு; நான் வந்து விடுகிறேன். இல்லாவிடில் நீ வீட்டிற்குப் போய் விடேன்! நாளைக்குச் சந்திப்போம்'' என்று கூறிச் சென்றாரே, அந்த வார்த்தை களில் தான் என்னைப் பற்றிய நலன் எவ்வளவு புதைந்திருக்கிறது?'' என்று எண்ணியபோது தந்தை என்றொருவர் இருந்தால் இதைவிட அதிகமாக அன்பு காட்டியிருக்க முடியாது என்று எண்ணினாள்.

தொலைவில் சிறு வெளிச்சம் தோன்றி மறைந்தது அவள் கண்களில் பட்டது. சோழபுரம் ராஜபாட்டையில் தெற்கு வாசல் வழியாக அந்த நிசியிலும் மக்கள் நடமாட்டம் எப்போதுமிருக்கும். கோட்டைக் கதவுகளை அடைத்தவுடன் வெளியூரிலிருந்து வருபவர் களுக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டு அவர்கள் புறப்பாடியிலேயே தங்கியிருக்கலாம்.

மக்களுக்குத்தான் எத்தனை துன்பம்? பகையரசர்கள் என்று ஏன் இருக்க வேண்டும்? எல்லாரும் ஒற்றுமையாக சமாதானமாக இருக்கக் கூடாதா? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மூதறிஞர்கள் சொல்லியதற்கேற்ப நடக்கக்கூடாதா என்றும் எண்ணினாள்.

சோழ சக்கரவர்த்திக்கு வேற்றுநாட்டைப் பிடிக்கும் ஆசை இல்லையே? அப்படியிருக்கும் போது எவ்வாறு இவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டன என்றும் ஒரு முறை எண்ணினாள். அமைதி யாக அவள் இருக்க முயன்றாளே தவிர மனம் மௌனமாயிருக்க வில்லை. உள்ளத்தில் அமைதியில்லை.

வீட்டிலே இருந்திருந்தால் வீணையை எடுத்து மீட்டத் தொடங்கியிருப்பாள். அவள் சும்மாயிருந்தாலும் அவள் தாய் வீணையை எடுத்து வைத்துக் கொண்டு விடுவாள்.

''குஞ்சரி, நான் பாடிக்கொண்டே வீணையை மீட்டுகிறேன். அதற்கு ஏற்றபடி நீ ஆடவேண்டும். ஒருவருமில்லாது நாம் நமக்குள்ளே அனுபவித்துக் கொள்ளுமாறு ஆடவேண்டும். சில பாடல்களைக் கோயிலில் பாட முடியவில்லை'' என்பாள்.

அம்மாவுக்குப் பிடித்த சில பாடல்களும், பதிகங்களும் உள்ளன. மாணிக்கவாசகர் என்றால் தாய்க்குத் தேன் என்று குஞ்சரி அறிவாள்.

குஞ்சரியின் தாய்க்கு இனிமையான குரல் உண்டு. வீணையின் நாதத்துக்கு ஏற்ப அவள் குரல் ஒலிக்கும்.

''அயன் தலைகொண்டு செண்டு ஆடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடி
கயம் தனைக் கொன்று வரிப்போர்த்துப் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயம் தனைப்பாடி நின்று ஆடி ஆடி
நாதர்க்குச் சுண்ணம் இடித்தும் நாமே''

என்று பாடும்போது அஞ்சரி மெய்மறப்பாள்.

பிரமதேவன் தலையைக் கிள்ளி அதைப் பந்தாக வைத்து ஆடும் பரம சிவனாகி விடுவாள். சூரியனது பல்லை உடைக்கும் சக்தி பெற்று விடுவாள். யானையைக் கொல்வாள். அதன் தோலை அணிவாள். யமனை உதைப்பாள். முப்புரங்களை எரிப்பாள். இவ்வளவும் செய்யும் பரம சிவனாவாள். பிறகு பரமசிவனது புகழ் பாடும் தில்லை நகரத்துப் பெண்களாவாள். அவர்கள் சிவன் புகழ் பாடிக்கொண்டே பொற்சுண்ணம் இடிக்கும் நிலையில் இரண்டறக் கலப்பாள்.

குஞ்சரியின் தாய் வீணையை இசைப்பதை நிறுத்திப் பெருமூச்சு விடுவாள்.

குஞ்சரி ஆடுவதை நிறுத்திவிட்டுத் தாயின் அருகே சென்று, அவளுள்ளத்தின் எதிரொலியாய்ப் பெருமூச்சு எழும் காரணத்தை வினவுவாள்.

''குஞ்சரி, மாணிக்கவாசகப் பெருமானுடைய பாடலைக் கற்றுப் பாடக் கூடியவர்கள் வர வரக் குறைந்து வருகிறார்கள். அதை விட அதற்கேற்ப அபிநயம் புரியும் மங்கையர்கள் அருகி வருகிறார்கள். அதை நினைக்கும் போது சோழநாட்டினின்று இசைச் செல்வமே போய்விடுமோ என்று தோன்றுகிறது. காந்தாரப் பண்ணும், குறிஞ்சிப் பண்ணும் ஒருவரும் அறிவதில்லை. இதை நினைக்கும் போது எனக்குப் பெருமூச்சு வருகிறது'' என்பாள்.

குஞ்சரி அதைக் கேட்டுக் கலகலவென்று நகைத்து, ''இதற்காகவா அம்மா, வருத்தப்படுகிறாய்? யார் இருந்தாலும், இல்லாது போனாலும் நாம் இருக்கிறோம். நாம் தேவாரப் பாடல்களை

விடாது இசைப்போம். நீ பாடு நான் ஆடுகிறேன். சக்கரவர்த்திகளிடம் முறையிடுவோம். ஒவ்வோர் ஊர்க்கோயிலிலும் தேவாரப்பதிகங்கள் இசைக்கப்பட்டாக வேண்டும் என்று கட்டமையிடச் செய்வோம்'' என்று உற்சாகமாகப் பேசினாள்.

தாய் மெல்ல நகைத்தாள். ''அடி, பெண்ணே! நமது சக்ரவர்த்திக்கே அந்த உணர்ச்சி அருகி வருகிறது. பரணி பாடல்கள் தெரியுமா என்று கேட்கிறார்!'' என்றாள்.

குஞ்சரியின் முகம் வாடியது. ஆமாம். தாய் சொல்வது சரிதான். அன்று அவளையே சக்ரவர்த்தி அப்படித்தான் கேட்டார்.

''குஞ்சரி, உனக்குப் பரணி தெரியுமா?'' என்றார்.

''பரணி பாட வேண்டியதுதான். பாண்டியர் கொட்டம் ஒடுக்கிய வுடன் பரணி பாடி அதற்கேற்ப ஆட வேண்டியது எனது முதல் வேலை'' என்றாள் குஞ்சரி.

''இனி ஒரு பரணி எழுதப்பட வேண்டுமா? பாண்டியர் தோல்வியை ஜெயங்கொண்டார் முன்பே பாடியிருக்கிறார். உனக்கு அந்தப் பாடல் தெரியாதா?'' என்று கூறி, வழக்கத்துக்கு விரோதமாக மெல்லக் கண்சிமிட்டிய ராஜராஜசோழ சக்ரவர்த்தியே.

''மீனம்புகு கொடி மீனவர்
விழி அம்(பு) உக ஓடிக்
கானம்புக வேளம் புகு
மடவீர்! கடைதிறமின்''
என்று பாடினார்.

''பொருள் விளங்குகிறதா குஞ்சரி?'' என்று அவர் கேட்கும் போது குஞ்சரியின் முகம் சிவந்தது.

கால்சதங்கையைக் கழற்றி ஒரு மூலையில் போட்டாள். ''அம்மா, இனி நான் நடனமே ஆடப் போவதில்லை!'' என்றாள்.

தாய் வியப்புடன் மகளைப் பார்த்தாள், ''உன் கோபம் எனக்குப் புரிகிறது. ஆனால், நீதான் புரிந்துகொள்ளவில்லை. தெரிந்தோ, தெரியாமலோ நீ அரண்மனைக்கு அடிக்கடி போய் வருவதால், அரசாங்க காரியங்களில் ஈடுபடுவதால் உனக்கு ஒருவித வெறுப்பு ஏற்படுகிறது. இல்லையா? அது கோபமாக மாறுகிறது'' என்றாள்.

குஞ்சரி தாயின் அருகே அமர்ந்து "அம்மா, எனக்குப் பரணி பாடல்களைப் பற்றித் தெரியும். அரண்மனையில் அதிகம் பாடுவது பரணி பாடல்களைத்தான். விழாக்களில் பரணி பாடல்களுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். ராஜராஜ நாடகம் கடந்த சில ஆண்டு களாகக் கோயிலில் நடைபெறுவது நின்றுவிட்டது தெரியுமா?" என்று கூறிப் பேச்சை நிறுத்தினாள்.

"ஆமாம்... ராஜ ராஜ நாடகத்தில் நான் கலந்து கொண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பாண்டியர்களின் படையெடுப்பிற்குப் பிறகு சோழீசர் கோயிலில் நாட்டிய நாடகத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. என்னைக் கூப்பிடவும் இல்லை. வயதான என்னை எதற்குக் கூப்பிடுகிறார்கள்?"

"அப்படியில்லை அம்மா! தங்கள் மதிப்பு என்றைக்கும் குறையாது. ராஜராஜ நாடகமே நடப்பது நின்றுவிட்டது. பாண்டியர் படையெடுப்பிற்குப் பிறகு நமது நாட்டில் ஒழுங்குமுறையே போய்விட்டது. முக்கியமாகக் கோயில்களின் நிர்வாகத்தைச் செவ்வனே கவனிப்பவரில்லை..."

"அது தெரியும் மகளே! கோயில் பூசை செய்வோரும் கோயில் சொத்தைப் பாதுகாப்போரும் நடந்து கொண்ட தகாத முறை ஒன்றே மன்னரின் கையாலாகாததனத்தைக் காட்டிவிட்டது."

"அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். சக்ரவர்த்தியின் நிலையில் யார் இருந்திருந்தாலும் சுயத் தியாகம் செய்து கொண்டிருப்பார்கள். எனக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. தங்களுக்குத் தெரிந் திருக்கும் சோழநாட்டின் நிலை. பாண்டியர்கள் படையெடுப் பிற்குப் பிறகு நமது நாட்டில் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது..."

"அதற்கு யார் காரணம்? மன்னரின் பலஹீனம்தானே?"

"அப்படிச் சொல்லாதீர்கள். கோயிலில் நடைபெற்ற அதர்மச் செயல்களுக்கு அவர் எப்படிப் பொறுப்பேற்பார்...? தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும். குஞ்சரி, தெரியும். தெரியாமல் நான் வீண்பழி சுமத்துபவளல்லள். சிவபுரத்துக் கோயிலில் நடைபெற்ற அக்கிரமங் களைக் கேள்விப்பட்டதிலிருந்து நானே கூனிக்குறுகி விட்டேன். பொன்னி பாயும் சோழ வளநாட்டுச் செல்வமே கோயில்கள்தாமே? கோயிலைச் சுற்றித்தானே வீடுகள்? கோயிலைத்தானே நாம்

பெரிதாகக் கட்டினோம்? நாம் அணிந்து அழகு பார்க்கும் ஆடை ஆபரணங்கள் ஒவ்வொன்றையும் இறைவனுக்கு அணிவித்து அழகு பார்த்தோம். ஆனந்தம் கொண்டோம். தெய்வம் நமக்குத் தாய் தந்தையாக விளங்குகிறது. சில சமயங்களில் குழந்தையாகவும் விளங்குகிறது குஞ்சரி! பள்ளி எழுப்புகிறோம். பூபாளம் பாடி துயிலெழுந்திராய் அப்பனே, அம்மையே' என்கிறோம். அப்போது ஊஞ்சலில் அமர்த்தி அசைத்து ஆட்டி மகிழ்கிறோம். நீலாம்பரி அற்புதமாக எழுகிறது நமது குரலிலிருந்து. கிரீடமும் பதக்கமும் மேகலையும் காப்பும் தண்டையும் இரத்னஹாரமுமாக இறை வனுக்கும் இறைவிக்கும் அணிவித்து நம் குழந்தைகளுக்கு அழகு பார்ப்பது போல் அழகுப் பார்த்து ஆனந்தமடைகிறோம். பயபக்தியும் அதில் நிறைந்திருக்கிறது.''

''உம், சிவபுரத்தைப் பற்றிச் சொல்லுங்கள் அம்மா...''

''அது ஒரு பெரிய கதை. நம் ஊர் பதியிலாதார்களும் சம்பந்தப் பட்டிருப்பதால் அதைக் கூறுகிறேன். எனக்கும் வெட்கம் வந்து சூழ்ந்து கொள்கிறது. நாணமும் அச்சமும் அவமானமும் கலந்து வந்து உடலை எள்ளளவாக்குகின்றன...''

''சொல்லுங்கள் அம்மா! ஆவலைத் தூண்டிவிட்டு இவ்வளவு அமைதியாக வர்ணிக்கிறீர்களே! நமது சோழபுரத்துப் பதியிலாதாரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, சொல்லுங்கள்.''

''குஞ்சரி, வர்ணித்து வளர்த்திச் சொல்லப்பட வேண்டிய செய்தி அன்று அது. வேதனையை வளர்த்துவானேன்? சிவபுரத்தில் நமது முன்னோர்கள் அற்புதமான கோயிலை எழுப்பித்தனர். சிவபுரத்து நடராசரை நீ கண்டுகளித்ததில்லை அல்லவா? நமது மதிப்பு மிகுந்த பேரரசர் அருண்மொழிவர்மர் என்று பெயர் கொண்ட ராஜராஜசோழ சக்ரவர்த்தியின் செய்கை எல்லாமே பிரமாண்டமானவை. தஞ்சையில் பெரிய கோயில். அதில் பெரிய விமானம். பெரிய நந்தி; பெரிய கோட்டை மதில் சுவர். அதே போல் பெரிய நடராசர்.

''ஆகா, சக்ரவர்த்தியின் பெயரே சிவபாதசேகரன்! அந்த நடராசருக்கும் சிவகாமி அம்மைக்கும் ஆபரணங்கள் அளித்திருக் கிறார் என்றால் அவை கொஞ்ச நஞ்சமன்று. பாண்டிய நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட முத்து, கடல் கடந்தநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட மரகத, வைர, வைடூரியங்கள், குவளால நாட்டுத் தங்கம்,

வடக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட இரத்தினங்கள் இவற்றிலிருந்து செய்யப்பட்ட ஆபரணங்களை அவர் சிவபுரத்து ஆடவல்லாருக்கும் அம்மை சிவகாமிக்கும் ஏராளமாக அளித்திருந்தார்.

''அவருக்குப் பிறகு வந்த சோழ அரசர்களும் சிவபுரத்து ஈசனுக்கும் அம்பிகைக்கும் நிறைய அளித்தனர். நாம் எல்லோரும் ஆண்டவனின் தொண்டர்கள். ஆண்டவன் அதிகாரி. நாம் பணியாட்கள். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை நாம் பாதுகாத்து, அதைப் பயன்படுத்தி, நித்திய காரியங்களைச் செவ்வனே செய்ய வேண்டியதொன்றே நமது பொறுப்பு. அரசர்கள் ஏராளமான இறையிலி நிலங்களை அளித்திருந்தனர். கிராமங்கள் முழுமையுமே கோயிலுக்குச் சொந்தம் என்று ஏற்படுத்தியிருந்தனர். அவற்றைப் பாதுகாப்பதே நமது கடமை. நாம் அறங்காவலர்களாகத் தான் இருக்க முடியும். ஆனால், கடந்த பல ஆண்டுகளாக நாம் என்ன செய்தோம்!'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள் குஞ்சரியின் தாய் பரவைநங்கை. உணர்ச்சி வயப்பட்டிருக்கிறாள் என்பது நன்றாகப் புலப்பட்டது.

''அம்மா, அம்மா, எனக்கு நேரமாகிறது. எனக்கு மாளிகைக்குப் போக வேண்டும். சக்ரவர்த்தியைச் சந்திக்க வேண்டும். சிவபுரத்துச் சம்பவத்தைச் சொன்னால் அதைப் பற்றி அவரிடம் கேட்பேன். சோழநாட்டில் கோயில்களின் அவலநிலையைப் பற்றி அவரிடம் வாதாடுவேன்...'' என்று குஞ்சரி பேச்சை விரைவில் முடிக்க விரும்பினாள். அவளுக்கு அரசரை ஒரு நாளாவது பார்க்காமல் இருக்க முடியாது.

''நமது மாமன்னருக்குத் தெரியாத விஷயமன்று. சிவபுரத்தைப் பற்றிச் சொன்னேனல்லவா? அங்கு நடந்ததைப் போல் பல பல சம்பவங்கள்...''

''இன்னும் சிவபுரச் சம்பவத்தைப் பற்றிக் கூறவில்லையே! நம் ஊர் பதியிலாதார் சம்பந்தப்பட்டிருப்பதாக நீங்கள் கூறினீர்களே, சொல்லுங்கள்''.

''குஞ்சரி, உனக்குத் தெரிந்திருக்கும். நம் இனத்தவர்களை ராஜராஜ சோழசக்ரவர்த்தி சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வடக்கிலிருந்து தஞ்சைக்கு அழைத்து வந்து குடியேற்றினார். நமது பணியே தெய்வத்தொண்டு. தெய்வத்திற்கு தாசானுதாசர்களாய் நாம்

இருக்க வேண்டியவர்கள். ஆனால், காலம் பொல்லாததாகி விட்டதே. எப்படி எப்படியெல்லாமோ மாறிவிட்டோமே! பெண்களையே போகப் பொருட்களாக நினைக்கும் ஆண்கள் நம்மைத் தங்களுக்காகவே படைத்துவிட்டதாக எண்ணிவிட்டனர்...''

''அம்மா, சிவபுரத்தில் நடந்தவற்றைப் பற்றிச் சொல்ல வந்தீர்களே... அதை விட்டுவிட்டுப் பெண்ணாய்ப் பிறந்து விட்ட நம்மைப் பற்றியே சொல்லி வருகிறீர்களே! ஏதோ தாங்கள் இவ்வளவு நாட்களாக மனத்தில் அடக்கி வைத்துக்கொண்டிருப்பனவற்றைக் கொட்டிவிட முயலுகிறீர்கள் என நினைக்கிறேன்.''

''குழந்தாய், குஞ்சரி! உன்னை விவரம் அறியாதவள் என்று சொல்லமாட்டேன். இந்த உலகத்தை என்னைவிட அதிகம் புரிந்து கொண்டவள் நீ. இன்றைய நாட்டு வளப்பமும் நடப்பும் என்னை விட உனக்கு அதிகம் தெரியும். இந்த நாட்டின் மக்கள் சில ஆண்டுகளாகவே தங்கள் பண்பினின்று மாறிவருகிறார்கள். ஒழுக்கம் மெல்ல மெல்ல அவர்களிடமிருந்து குறைகிறது.'' இதைச் சொல்லிச் சிறிது நிறுத்தினாள் தாய். சற்று விழிகளை மூடிக் கொண்டாள்.

''அம்மா, இன்று தங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என்று குஞ்சரி பதறிப்போய்க் கேட்டாள்.

தாய் மெல்ல நகைத்தாள். ''குஞ்சரி, எனக்கு ஒன்றும் நேர வில்லை. சில பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்துக் கொண் டேன். நமது வீதிக்கு வருபவர்களைப் பற்றிய செய்திகள் நாட்டின் நிலையைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன.''

''அம்மா, சக்ரவர்த்திகளிடம் சொல்லி எப்படியாவது நமது வீதிக்குள்ள அவப்பெயரை மாற்றட்டுமா?''

தாய் மீண்டும் சிரித்தாள். ''உன்னால் என்ன, சக்ரவர்த்திகளாலும் முடியாது. யாராலும் முடியாது. நாடு முழுவதற்கும் அந்த நோய் பரவிவிட்டது. ஆண்கள் நெறி தவறுவதோடு பெண்களையும் தவற வழிகாட்டுகிறார்கள்.''

''சிவபுரத்தைப் பற்றிச் சொல்ல வந்த தாங்கள் எங்கெங்கோ சென்றுவிட்டீர்கள். எனக்குத் தெரியும் நாட்டில் கட்டுப்பாடு, ஒழுங்கு, பணபு யாவும் குறைந்துவிட்டதென்று. எல்லாம், பாண்டியர் கள் படையெடுப்பிற்கு பிறகுதான் நேர்ந்தது'' என்றாள் குஞ்சரி தாயிடமிருந்து சிவபுரம் செய்தியைக் கேட்டறிய விரும்பி.

''பாண்டியர்கள் ஏன் படையெடுத்தார்கள்? மக்களிடம் ஒற்றுமைக் குறைவு இருந்ததால்... ஒற்றுமைக்குறைவு எப்போது ஏற்படுகிறது? ஒழுக்கக்குறைவு ஏற்படும் போது...'' என்று சற்றுக் கோபத்துடனேயே கூறினாள் தாய்.

''அம்மா, மக்களிடையே ஒற்றுமைக்குறைவு என்று சொல்லாதீர்கள். இளையமணவாளன் செய்த சதி. நாடாள அவனுக்கு ஆசை. அது போகட்டும். சிவபுரம் கதை சொல்லுங்கள்'' என்று தாயின் கோபத்தைச் சற்று தணித்தாள்.

''சிவபுரச் சம்பவம் கதையன்று பெண்ணே! உண்மையில் நடந்தது. சிவபுரம் கோயில் மிகப் பழமையானது. ராஜராஜசோழ தேவர் ஏராளமான ஆஸ்திகளை அதற்கு அளித்திருக்கிறார் என்று சொன்னேனல்லவா? அங்கே இரு பூசாரியர்கள். வணக்கத்துக்கு உரியவர்கள். அவர்கள் கங்கைகொண்டசோழபுரம் வர ஆரம்பித்தார்கள். ஊரைச் சொன்னாலும் பெய்ரைச் சொல்லக் கூடாதல்லவா? அவர்களுக்கு நமது தெருவில் ஒரு பெண்ணுடன் நட்பு...''

''சிவ, சிவ...!''

''ஏன் குஞ்சரி, உடனே சிவ சிவ என்று சொல்கிறாய்?''

''நீங்கள் சொல்வதற்கு முன்பு நான் மற்ற கதைகளைச் சொல்லட்டுமா? அவர்கள் இருவரும் சிவபுரத்து இறைவியின் நகைகளை எடுத்து வந்துத் தங்கள் இறைவிகளுக்குப் போட்டு அழகு பார்த்தார்கள். இவ்வளவுதானே?''

''என்ன சொன்னாய்? இவ்வளவுதானே என்றா? யாருடைய நகைகளை எடுத்து வந்து யாருக்குப் போட்டு அழகுப்பார்த்தார்கள்? அது கொடிய குற்றமல்லவா? உனக்கு நாட்டுச் சட்டம் தெரியுமா? சிவன் சொத்தை அபகரிப்பது பெரிய ராஜத் துரோகச் செயல். சிவபுரத்துக் கோயில் பூசாரிகள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். கங்கைகொண்டசோழபுரத்து நமது குலத்துப் பெண்களையா தேர்ந்தெடுக்க வேண்டும்? அம்பிகையின் ஆபரணங்களை எடுத்து வந்து தங்கள் அருமை நாயகிகளுக்குப் பூட்டி அழகு பார்த்தார்கள். அழகிலே மெய்மறந்தார்கள். அப்படியே அந்த நகைகளை அவர்களுக்கே கொடுத்துவிட்டார்கள். இன்னும் அவர்கள் செய்த மகத்தான குற்றம் என்னவென்றால் பாண்டியர்களுக்கு ஒற்றர்களாக இருந்தது தான்.''

''ஐயோ, அப்புறம்?''

''செய்தி தெரிந்தது. ஊரார் விவரம் அறிந்தார்கள். ஊராருள் இரண்டு கட்சி ஏற்பட்டது. இருவரும் மோதிக்கொண்டனர். பாண்டியர்கள் மறைமுகமாகப் பணம் கொடுத்தார்கள். மகளே, நமக்கு ஏற்பட்ட பெரிய கொடுமை, நமது நாட்டைப் பாண்டியர்களும், போசளர்களும் யுத்த பூமியாகக் கொண்டதுதான். போசளவீரர்கள் பாண்டியர்களை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு இங்கே செய்துள்ள அக்கிரமங்களுக்கு எல்லையில்லை, சிவபுரத்தில் ஒரு சிறு கலகமே நேர்ந்துவிட்டது...''

''ஓ, அப்படியா! நமது மாமன்னர் இவற்றை அறிந்தும் சும்மாவா இருந்தார்?''

''சும்மாயிருப்பாரா? தக்க அதிகாரிகளை அனுப்பினார். அவர்கள் சிவபுரம் சென்றார்கள். விசாரித்தார்கள். தண்டனை வழங்கினார்கள். தண்டனை என்றால் சாதாரண தண்டனையன்று. பூசாரியர்களின் வேலை பறிக்கப்பட்டது. அவர்களது உடைமைகள் பறிக்கப்பட்டன. நிலங்கள் பறிக்கப்பட்டன.''

''சரியாத தண்டனை...''

''குற்றமிழைக்க விட்ட பிறகு தண்டனை வழங்குவதில் என்ன சிறப்பு இருக்கிறது? கோயில் அறங்காவலர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? கண்காணிப்பாளர்கள் சதிக்கு உடந்தையாக இருந்தார்களா? இதற்கெல்லாம் மிகச் சுலபமாக விடை கூறிவிட முடியும். நமது மாமன்னர் பலங்குன்றி விட்டார். அவரது அதிகாரம் இனி செல்லாது. தவறு செய்பவர்களை யாரும் கண்டுவிட மாட்டார்கள் என்று எண்ணியதுதான் அதற்குக் காரணம். அவர்கள் எண்ணுவதற்குக் காரணங்கள் இருந்தன. நமது சக்ரவர்த்திக்குத் திறமைக்குறைவா, திட்டங்குறைவா என்பது தெரியவில்லை...'' என்று கூறி நிறுத்தினாள். குஞ்சரி ஏதும் பேசவில்லை. சிறிது நேரம் மௌனம் நிலவியது.

குஞ்சரியே மௌனத்தை உடைத்தாள். ''அம்மா, நமது சக்ரவர்த்திக்கு எந்தவிதத் திறமைக் குறைவுமில்லை, வீரத்திலும் குறையுமில்லை. ஆனால் அவர் யாரை நம்புவது, யாரை நம்பக் கூடாது என்று இனம் பிரிக்கத் தெரியாத வெள்ளை உள்ளத்தவராக

இருந்துவிட்டார். அதனால் ஏற்பட்ட பலனை அனுபவித்தார். சற்று முன்பு தாங்கள் பாடி, அதற்கு அபிநயம் பிடிக்கச் சொன்னீர்களே - அந்தப் பாடலின் பெருமைக்கு மாறுதலான நிலையை அடைந்து விட்டார். அம்மா, நான் கூறியது போல் மீண்டும் புதிய பரணி பாடப் படும் வரை நான் ஓயப்போவதில்லை'' என்று கூறும்போது குஞ்சரியின் தாயின் முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை.

பலவித பாவங்களை முகத்தில் ஒவியந்தீட்டவல்ல தன் தாயின் முகத்திலிருந்து உள்ளத்துணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடிய வில்லை. தான் அரசியல் காரியங்களில் ஈடுபடுவது பிடிக்க வில்லையோ என்றுகூட நினைத்தாள். அப்படியிருக்க முடியாது. தாயின் பரிபூரண ஆசி தனக்குக் கிடைத்திருக்கிறது என்பது அவளுக்குத் தெரியும்.

குஞ்சரி அந்தச் சம்பவத்தை தாயுடன் அன்று பேசிக் கொண்டிருந்ததை இப்போது நினைத்துப் பார்க்கிறாள்.

அப்படியே மெல்ல மதிலின் மீது மல்லாந்துப் படுத்துக் கொள்கிறாள். அவளுக்கு நேர் மேலே ஆகாயத்தில் சந்திரனில்லை. மேற்குப்பக்கமாக ஓடி ஒளிய முற்பட்டிருக்கும் வேளை. அவளுடைய சிந்தனைக்கொடி எங்கெங்கோ படருகிறது. அவளையறியாமல் ஒருவித அச்சம், அந்தக் கொடியின் இடையே தடை செய்கிறது.

சோழநாட்டிற்கு அக - புற ஆபத்துக்கள் நெருங்கிக் கொண்டிருக் கின்றன என்ற மெல்லிய குரல் அவள் செவிகளில் ஒலிக்கிறது.

தன்னை இளையம்மணவாளனிடமிருந்து காப்பாற்றிய அந்தப் புதியவர் யார் என்ற எண்ணம் எழுந்தது. தன்னை மிகவும் அறிந்தவராக அவர் இருக்க வேண்டும். இந்த நாட்டு நடப்பை மிகவும் அறிந்தவராக இருக்க வேண்டும். ''அவர் யார்!... யார்!'' என்று சிந்திக்கலானாள்.

அப்போது காவல் கோபுரத்தினின்று, மதிளின் மீது யாரோ ஏறி வரும் காலடியோசை கேட்டது. அந்த ஓசை விட்டுவிட்டுக் கேட்டது. யாரோ தயங்கித் தயங்கி வருவது போல் தோன்றியது.

அந்த ஓசை அவள் வெகு அருகே வருவது போன்ற பிரமை. குஞ்சரி துள்ளி எழுந்தாள்!

# 14

கங்கைகொண்டசோழபுரத்து வீதிகள் எப்போதும் கலகலப்பாக இருக்கும். பொன்னி வளநாட்டுத் தலைநகர் என்பதோடு இப்போது கோட்டைக்கதவுகள் திடீரென்று அடைக்கப்பட்ட நிகழ்ச்சியும் சேர்ந்துகொண்டு மக்களைப் பரபரப்படையச் செய்திருந்தன.

வெளியேயுள்ளவர்கள் உள்ளே வரக் கட்டுப்பாடு விதிக்கப் பட்டிருந்தது. அதனால் சில நாட்களாக அயல்நாட்டு வணிகர்கள் ஒருவரும் உள்ளே வர முடிவதில்லை. நகரத்து முக்கியமான வணிகர் கள் சிறையிலடைக்கப்பட்ட செய்தி மக்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

''வணிகர்கள் என்ன செய்தார்கள்? அவர்களைச் சிறை யிலடைப்பானேன்?''

''மிகவும் தீர்க்கதரிசன மற்ற போக்கு நகரத்திலிருந்து பண்டங்கள் வெளியே சென்றால்தானே, வணிகர்களுக்குப் பிழைப்பு நடக்கும்?''

''பிழைப்பு நடப்பது இருக்கட்டும் ஐயா. இங்கு மக்களுக்குப் போதுமான தானியங்கள் இருக்கின்றனவா என்று கவனித்ததாகத் தெரியவில்லையே...''

''எல்லாம் கடம்பராயரின் திட்டமாம்! சக்ரவர்த்திக்கு அவர் தான் தவறாக யோசனை கூறிவருகிறாராம்...''

''கடம்பராயருக்குக் கிடைக்கும் செய்திகளை வைத்துக் கொண்டுதானே அவர் மன்னருக்கு யோசனை கூறவேண்டும்? கடம்பராயருக்கு மகாப் பெரிய மதியூகிகள் அவ்வப்போது செய்தி கூறுகிறார்களாம்.''

''அந்த மதியூகிகளில் கிழவர் காளிராயர் ஒருவர்.''

''காளிராயர் மட்டுமா? நாட்டியக்காரி நங்கைதான் அந்தரங்க ஆலோசனை'' என்று கூறியதும் கூடியுள்ளவர்கள் நகைத்தனர்.

நகைப்பொலி அடங்கியதும் கூட்டத்துள் ஒருவன் தனக்குப் பெரிய ரகசியம் தெரிந்திருப்பதைப் போல், சற்று மெல்லிய குரலில் ''குஞ்சரியைத் தெரியுமல்லவா? அவள்தான் மன்னருக்கு அந்தரங்கமாக அவ்வப்போது செய்திகள் தெரிவிக்கிறாள்'' என்றான்.

'குஞ்சரி' என்ற பெயரைக் கேட்டவுடனேயே அங்கிருந்தவர்கள் ஏதோ கற்பனையை மனத்தில் செய்து கொண்டு பரவசமடைந்த நிலையை அடைந்தனர். ஒருவர், "ஆகா! சரியான ஆலோசகர்தாம். அந்தரங்கமாக இருக்கத் தகுதி வாய்ந்தவள்தான்!" என்றார்.

"அதுதானே பார்த்தேன். பாண்டிய மன்னருக்கு எப்போதும் சோழநாட்டின் மீது ஒரு கண் ஏன் என்று! குஞ்சரியைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்பிவிட்டால் ஆபத்து நீங்கிவிடும்" என்றார்.

"நமது மன்னர் அதற்குச் சம்மதிக்கமாட்டார். நாடா, குஞ்சரியா என்றால் குஞ்சரிதான் என்று கூறுவார்" என்று மற்றொருவர் கூறவும் கூட்டத்தில் பெரும் நகைப்பொலி எழுந்தது.

"அவர் சம்மதம் என்ன? அவளைத் தூக்கிக்கொண்டு போய் பாண்டிய நாட்டில் சேர்த்துவிட்டால் என்ன செய்வாராம்?" என்று ஒருவர் கேட்டார்.

"மன்னர் சும்மாயிருக்கமாட்டார். பாண்டிய நாட்டின் மீது போர் தொடுப்பார்..." என்றார் ஒருவர்.

"போரா? பாண்டியர்களுடன் மோதி அவர் பட்டபாடு போதாதா? பொன்னமராவதி மாளிகையில் நடந்ததைச் சொன்னால் உலகம் சிரிக்கும்" என்று ஒருவர் கூறவும் கூட்டத்தினர் அனைவரும் அவரைச் சூழ்ந்துகொண்டு, "அதென்ன பொன்னமராவதி மாளிகைக் கதை? சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று வற்புறுத்தினர்.

அவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அவர் பெரிய தலைப்பாகை அணிந்திருந்தார். பெருஞ்சால்வையைப் போர்த்தி யிருந்தார். காதில் குண்டலங்கள் அசைந்தாடின. வெற்றிலையை வாய் குதப்பிக் கொண்டிருந்தது. வெற்றிலையைத் துப்பிவிட்டு, ஓர் அசட்டுச் சிரிப்பு தன் காவிப்பல் தெரியச் சிரித்து விட்டு, "சோழநாட்டுப் பெருமக்களே! அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்? சுந்தர பாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து வந்தான், வந்தானா?" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"எங்களைக் கேட்கிறீர்களே, புலவரே! அதற்குள் தங்களுக்கு மறந்துவிட்டதா?" என்று கூட்டத்தில் ஒருவர் கூறவும் மற்றவர்கள் 'ஹோ ஹோ' என்று சிரிக்கவும், புலவர் தன் முகத்தில் வழிந்த அசட்டுத்தனத்தை துடைத்துக்கொண்டு, "எனது அன்பார்ந்த கங்கை கொண்டசோழபுரத்துப் பெருமக்களே! சுந்தர பாண்டியர் நமது

நாட்டில் புகுந்து துவம்சம் செய்து, மாளிகைகளை அழித்து மக்களைத் துன்புறுத்தி ஏராளமான பொன் பொருள்களை எடுத்துக் கொண்டு மதுரைக்குத் திரும்பினார். திரும்பினாரா...?''

''ஆம்! ஆம். திரும்பித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அவர் இங்கே இல்லை'' - மீண்டும் கூட்டத்தில் நகை ஒலி.

''மதுரையை நோக்கித் திரும்பியவர் வழியில் பொன்ன மராவதியில் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது நமது சோழ சக்ரவர்த்தி தோல்வியுற்றதால் மனங்குன்றிப் படையிழந்து, அணிகலன்கள் இழந்து சோர்ந்து போய் காஞ்சியை நோக்கிப் புறப்பட எத்தனிக்கையில், பாண்டிய மகாராஜா சொல்லியனுப்பினார். 'ராஜராஜசோழா! பெரும் மாமன்னரின் பெயரைப் பூண்டவரே! மதுரையில் உனது முன்னோர்கள் புரிந்த அட்டகாசத்துக்குக் குறைவில்லை. எவ்வளவு காலம் பாண்டிய நாட்டை ஆண்டீர்கள்? அப்போது பாண்டியர் குலத்துக்கு இழைத்த அநீதிகள் கொஞ்சமா! அதற்குப் பழிவாங்கவே சோழநாட்டின் மீது படையெடுத்தேன். மும்முடிச் சோழபுரத்துச் சிங்காதனத்தில் அமர்ந்தேன். மகுடாபிஷேகம் செய்து கொண்டேன். சோழநாட்டை ஆள எனக்கு ஆசை இல்லை. உங்கள் நாட்டை உங்களிடமே கொடுத்து விடுகிறேன். பிழைத்துப் போங்கள். இங்கே சிறையிலிருக்கும் உங்கள் பெண்டுபிள்ளைகளையும் அழைத்துச் செல்லுங்கள்' என்று பெரு மனத்துடன் சொன்னார்'' என்று கூறி நிறுத்தினார்.

''ஆகா! எவ்வளவு பெருந்தன்மை பாண்டிய அரசருக்கு'' என்று கூட்டத்தினர் ஆகாகாரம் செய்தனர்.

நமது அரசர், பொன்னமராவதிக்கு விரைந்தார். சுந்தர பாண்டியர் கால்களில் விழுந்தார். சுந்தர பாண்டியர் சொன்ன நிபந்தனைகளை ஏற்றார். வருடம் தோறும் ஏராளமான பொன்னும் மணியும் திறையாகச் செலுத்தி வருவதாக ஒப்புக்கொண்டார். பாண்டிய மன்னர் தாம் சிறை பிடித்திருந்த அந்தப்புரத்து மகளிர், அரச குலத்தவர்கள் அனை வரையும் விடுதலை செய்தார். இதுதான் பொன்னமராவதி மாளிகைச் சம்பவம். மகத்தான சம்பவம்'' என்று கூறிப் புலவர் நிறுத்தவும் கூட்டத்தினர் மெய்சிலிர்த்து நின்றனர். தங்களுக்கு ஏதோ சாம்ராஜ்யம் திரும்பக் கிடைத்து விட்டது போல் உணர்ந்தனர்.

புலவர் மீண்டும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இந்தச் சம்பவம் உங்களுக்கு எப்படியிருக்கிறதோ, எனக்கு மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. புலவர் பரம்பரையைச் சேர்ந்த ஜெயங் கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடி நூறு வருடங்கள் கூட ஆக வில்லை. அதற்குள் சோழநாட்டிற்கு இப்படியொரு தோல்வி ஏற்பட்டு விட்டதே. அழியாத அவப்பெயர் ஏற்பட்டுவிட்டதே. நான் எப்போது மதுரைப் பரணி பாடப் போகிறேன்?" என்று கூறும் போதும் அவர் குரல் தழுதழுத்தது.

"நீங்கள் என்றுமே பாட முடியாது. பாண்டிய நாட்டுப் புலவரொருவர் கங்காபுரிபரணி பாடிக்கொண்டிருக்கிறாராம்!" என்றார்.

கூட்டத்தினர் மீண்டும் நகைத்தனர். அடுத்த கணம் கூட்டத்தினரே திகைக்கும்படியான ஒரு குரல் கேட்டது!

# 15

தங்கள் நாட்டைக் குறைகூறித் தாங்களே மகிழ்ந்து கொண்டிருக்கும் கூட்டத்தில் திகைக்கும்படியான குரல் அங்குக் கேட்டது.

குஞ்சரி நின்று கொண்டிருந்தாள்! அவள் முகத்தில் இதுபோன்ற கடுமை என்றுமே தெரிந்ததில்லை. விழிகளும் உதடுகளும் உள்ளத்துச் சீற்றத்தை உறுதிப்படுத்தின.

"கங்காபுரிப்பரணியா பாடுகிறார்கள்? உங்களைப் போன்ற நாட்டுத்துரோகிகள் இருக்கும் வரை எல்லாப் பரணிகளும் பாடி விடுவார்கள்" என்று குஞ்சரி கூறும்போது அவளுக்கு வார்த்தைகளே வரவில்லை.

தனக்கு நாலைந்து சொற்களாவது வந்தன என்பதே குஞ்சரிக்குப் பெரும் ஆச்சரியமே! அவள் உள்ளம் வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது. சோழநாட்டை விட்டே ஓடிவிடவேண்டும் என்ற வேகமும் அவ்வப்போது எழுந்தது. கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டாவது சென்றுவிட வேண்டும் என்ற துடிப்பு இதயத்துடிப்போடு சேர்ந்து ஒலித்தது. துரோகிகளைப் போன்று அவள் நாட்டின் மீது வெறுப்புற்று அவ்வாறு எண்ணங் கொள்ளவில்லை. நாட்டிற்காகத்

தன் உடலையும் உயிரையுமே கொடுத்து விட வேண்டும் என்று நினைக்கக்கூடியவள் கோழை போல் போல் ஓடிவிடமாட்டாள். அவளுக்குத் தன் உடல் மீது வெறுப்பு. உயிர் மீது அன்று!

முதல் நாள் இரவு நடந்த சம்பவம் அவளது சிந்தனையையே மாற்றிவிட்டது.

கோட்டை மதிலின் மீது மல்லாந்து படுத்துக்கொண்டு, சந்திரனற்ற வானவீதியைப் பார்த்துக்கொண்டிருந்த போது யாரோ தயங்கித் தயங்கி நடந்து வரும் ஓசை கேட்டது. அவள் அருகே வருவது போன்ற பிரமை. ஆனால் உண்மையிலேயே அந்த ஓசை, நெருங்கியது... அவள் துள்ளி எழுந்தாள்.

அவள் அருகே வந்து நின்றவர் -

"யார்?... யார்?" - குஞ்சரி வார்த்தைகள் வராமல் பேசினாள். அந்த உருவம் மெல்ல நகைப்பது அந்த மங்கிய இருளிலும் தெரிந்தது.

குஞ்சரி அடையாளம் தெரிந்துகொண்டு விட்டாள். பரபரப்புடன், "வாருங்கள்... வாருங்கள்...!" என்று கூறியவாறு கலைந்திருந்த தன் ஆடையைச் சரிசெய்துகொள்ள முயன்றாள்.

சோழநாட்டு இளவரசர் மீண்டும் சிரித்தார். அந்தச் சிரிப்பு இயற்கையாக இருக்கவில்லை. அவர் குஞ்சரியின் மிக அருகே வந்து விட்டார்.

"குஞ்சரி, இந்த நேரத்தில் நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று இளவரசர் ராஜேந்திரசோழர் கேட்டார்.

வயதுக்கு மீறிய வளர்ச்சியும் கம்பீரத்தோற்றமும் ஒரு சில சமயங்களில் தந்தைக்கு மகனுக்கும் வேற்றுமை தெரியாது செய்து விடும். புரவி மீது அமர்ந்து செல்லும் போது யார் சக்ரவர்த்தி, யார் இளவரசர் என்று ஒரு கணம் வித்தியாசம் தெரியாது.

குஞ்சரி மறுமொழி கூறாமல் தலையைக் குனிந்துகொண்டாள்.

குஞ்சரி எதிர்பாராதவிதமாக ராஜேந்திரன், மிக அருகே வந்து அவள் முகவாயை மெல்லத் தொட்டு "குஞ்சரி, நடுநிசியிலே கோட்டை மீது எதற்காக இருக்கிறாய்?" என்று கேட்டார்.

தன்னை நெருங்கி இளவரசர் தொட்டு விடுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அவர் கேட்கும் கேள்விக்கு மறுமொழியாக

என்ன கூறுவது என்று அவளுக்குத் தெரியவில்லை. ஆமாம் அவள் என்ன செய்துகொண்டிருக்கிறாள்?

தன்னைத்தானே அவள் கேட்டுக்கொண்டாள். 'நாம் இந்த வேளையில் எதற்காக இங்கு வந்தோம். என்ன செய்து கொண்டிருக் கிறோம், வானவெளியைப் பார்த்து நிற்கக் கோட்டை மதில் ஒன்று தானா', இடம் கிடைத்தது?

சோழீச்சர் கோயில் விமானத்தளத்தின் மீது அமர்ந்து பார்த்திருக் கலாம். வீட்டின் முற்றத்தில் அமர்ந்து பார்க்கலாம். பிறகு ஏன் வந்தோம்? நாம் என்ன கோட்டைக்காவல்காரரா? அல்லது காவலருக்குச் சொந்தமா? காவலருக்குச் சொந்தமோ இல்லையோ, காளியாருக்கு நான் சொந்தம். முன்பிறவியில் காளியார் எனக்கு உறவுமுறையாக இருந்திருக்கலாம்.

ஆமாம். காளியாருக்காகவா நாம் கோட்டை மதில் மீது வந்தோம்?

''என்ன குஞ்சரி! திகைத்து நின்றுவிட்டாய்! முகத்தை நிமிர்த்தாமலே என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்ட இளவரசர் கரம் இப்போது மேலும் இறங்கியது. முகவாயிலிருந்து இறங்கிய வாள் பிடிக்கும் அந்தக் கரம் இடையைச் சுற்றித் தவழ முயன்றது.

சர்ப்பம் போல் தலை நிமிர்ந்தாள் சீற்றமுடன். நாகத்தின் 'உஸ் உஸ்' என்ற சத்தம் பெருமூச்சாகப் பொங்கியது.

சற்றே நகர்ந்துகொண்ட குஞ்சரி, இளவரசரை உற்று நோக்கி, ''இந்த நேரத்தில் நீங்கள் இங்கு எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

ராஜேந்திரனின் சிரிப்பு அந்த அமைதியைக் கலைத்தது.

''நான் வராமல் வேறு யார் இங்கே வர முடியும் குஞ்சரி!'' என்று அவர் சொல்லிக்கொண்டே, மீண்டும் குஞ்சரியை நெருங்கினார். குஞ்சரி நகர்ந்தாள்.

''இளவரசே, மதில் மீது வந்து கோட்டையைப் பாதுகாப்பது குறித்துக் கவனிக்க ஆட்களிருக்கிறார்கள். ஆனால், நகரத்துக் குள்ளே, நமது விரோதிகள் சதிசெய்கிறார்களே... அவர்களைக் கண்காணித்து அவர்களை நசுக்கத்தான் ஆளில்லை. அதை நீங்கள் கவனித்திருக்கலாமே என்பதற்காகத்தான் கேட்டேன்!'' என்று கூறும் போது அவள் சொற்களில் அழுத்தமும் சற்றுக் கண்டிப்பும் ஒலித்தன.

"ஓகோ!... குஞ்சரி! ராஜீய விவகாரங்களில் பூரணமாக உன்னை ஆட்படுத்திக்கொண்டு விட்டாய் என்று தோன்றுகிறது" என்று கூறிய இளவரசர், "இப்படி உட்கார்ந்து பேசலாம். இன்னும் சொல்லப் போனால் நீ சற்று முன்பு மல்லாந்து படுத்துக்கொண்டிருந்தாயே அதுபோல் நீ மீண்டும், ஆகாயத்தைப் பார்த்துப் படுத்துக் கொள்! நான் அருகே அமர்கிறேன். இந்த மங்கிய நிலவொளியிலும் உனது சோபை பரிபூரணமாகத் தெரிகிறது" என்று கூறி அங்கேயே அமர்ந்து விட்டார்.

இளவரசர் இவ்வளவு உரிமையுடன் அவளிடம் பேசியது இதுவே முதல் தடவை. சக்ரவர்த்தியைக் காணச்செல்லும் போது சில வேளைகளில் அங்கே இளவரசர் இருப்பார். புன்முறுவல் பூப்பார். ஓரிரண்டு வார்த்தைகள் பேசுவார்.

ஒரொரு சமயம் மாளிகை நிலாமுற்றத்தில் அரசருக்கும் அந்தப்புரத்து ராஜமாதர்களுக்குமாக அவள் ஆடியபோது இளம் வயதினனான ராஜேந்திரன் இமைக்காமல் நாட்டியத்தை ரசிப்பான். நாட்டியத்தை ரசிப்பானா, நாட்டியமாடும் குஞ்சரியின் குலுங்கும் பொலிவழகை ரசிப்பானா என்பது சொல்ல முடியாது. என்றாலும், ராஜேந்திரனுக்குக் குஞ்சரியை நெருங்கிப் பேச வேண்டும் என்ற துடிப்பு இருந்து வந்தது.

சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன. பாண்டியர்களின் படையெடுப்பிற்கு பிறகு ராஜேந்திரன் மதிப்பு உயர்ந்தது. மரியாதையும் மிக உயர்ந்தது. 'நீ' என்று அழைத்தவர்கள் 'நீங்கள்' என்று அழைக்கலாயினர்.

குஞ்சரியுடன் நேருக்கு நேர் சந்தித்துப் பேசும் போதெல்லாம் ராஜேந்திரன் அவளது அழகைப் புகழ்வான். நாணம் மிகுதியால் குஞ்சரி தலைகுனிவாள். அந்த நாணத்தையும் மரியாதை கலந்த பணிவையும் ராஜேந்திரன் வேறுவிதமாக எடுத்துக்கொள்வான். ஒரு முறையாவது குஞ்சரியைத் தனியே சந்திக்க எண்ணினாலும் அதை வெளிப்படுத்துவதில்லை. சக்ரவர்த்தியுடன் பேசிக் கொண்டிருப்பாள். அல்லது நடனமாடி மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி கொண்டிருப்பாள்.

இன்று நல்ல வாய்ப்பு. மதில் - புற உலகுக்குப் புலப்படக்கூடிய இடம் என்றாலும், இருக்குமிடம் ஒருவராலும் அணுக முடியாது.

அரண்! அதுவும் எதிரிகளின் படையெடுப்பு எனும் அச்சம் நிலவுங் காலத்தில், அந்த இடம் மிகப் பாதுகாவலுடன் முக்கியமானவர்களைத் தவிர மற்றவர்கள் அணுக முடியாத இடம்.

குஞ்சரி அங்கு வந்ததை இளவரசர் எப்படி அறிந்து கொண்டார்.

ராஜேந்திரன் மதில் மீது அமர்ந்து தன்னைப் பார்த்துப் பேசும் ஒவ்வொரு கணமும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். ராஜேந்திரன் முகத்தில் காமவேதனை கொப்பளித் திருப்பது தெரிந்தது. என்ன பேசுகிறார் அவர். ஓர் இளமங்கையிடம் பேசும் வார்த்தைகளாக இல்லையே! தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு எந்த ஓர் இளம் வயதினரும் பேசும் பேச்சுத்தான் என்றாலும் இந்த ஆபத்தான காலத்தில் இப்படி நடந்து கொள்ளலாமா?

நகரத்திற்குள்ளே சதிகாரர்கள், கோட்டையின் வெளியே நம்பிக்கைத்துரோகிகள். இவர்கள் அனைவருக்கும் பின்புறம் பாண்டியஒற்றர்கள். அவ்வளவு பேரும் இருக்கும் போது இளவரசருக்குக் காமப்பேச்சுப் பேசும் எண்ணம் எப்படி வந்ததோ!

''இளவரசே! வெறுந்தரையில் உட்கார்ந்திருக்கிறீர்களே...'' என்று குஞ்சரி பேச்சை மாற்ற முயன்றாள்.

''வெறுந்தரையா! அடடா! சோழநாட்டு நாட்டிய அரசி அமர்ந்திருந்த இடம். பூமலர் போன்ற உடலோடு உறவாடிய அந்தத் தரைக்குக் கிடைத்த பாக்கியம்கூட எனக்குக் கிடைக்கக்கூடாதா குஞ்சரி?'' என்று இளவரசர் கூறவும் குஞ்சரி அவரது பேச்சின் திசையை மாற்ற விரும்பியவளாய், ''இளவரசே, இந்த மதில் மகத்தான பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். இல்லாவிடில் சோழநாட்டு இளவரசனின் மேனியின் மீது தாங்களும் ஒட்டிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு அவற்றிற்கு கிடைத்திருக்குமா?'' என்றாள்.

''குஞ்சரி! மண்ணுக்கும் தூசுக்கும் புழுதிக்கும் அந்தப் பாக்கியம் கிடைப்பதென்றால் எனக்கு மகிழ்ச்சிதான். உன் மேனியுடன் உறவாடிய அவை என்னைத் தழுவுவதில் பெருமை யடைகின்றன என்றால் அவற்றிற்கு ஏற்பட்ட பெருமையைக் கண்டு நான் பொறாமை அடைகிறேன்'' என்று ராஜேந்திரன் கூறவும் குஞ்சரி திகைத்தாள் மேலே என்ன பேசுவதென்று.

''குஞ்சரி, ஏன் அப்படியே சிலைபோல் நிற்கிறாய்? உன் பின்னணியில் இருக்கும் சந்திரன் உன் முதுகுப்புறத்திற்கு மட்டும் தன் கதிர்களை அனுப்பிக் குளிப்பாட்டுகிறான். ஆற்றின் படுகையிலோ, சோழகங்க ஏரியின் ராஜ ஹம்ஸப் படகிலோ, மாளிகை நிலா முற்றத்திலோ, போதை எழுப்பும் முல்லைக்கொடி காட்டிலோ நீ அப்படியே நிற்க, நான் எதிரே அமர்ந்து உன்னை ரசிக்க, மறைத்தும் மறையாத மயக்கமூட்டிப் பிரகாசித்து நிற்கும் அவயங்களை ரசிக்க, உன் துடிக்கும் உதடுகளை ரசிக்க, நொடிக்கு நூறு முறை இமைக்கும் விழிகளை ரசிக்க வாய்ப்புக் கிடைத்துவிட்டால் நான் இந்த சாம்ராஜ்யத்தையே அர்ப்பணித்துவிடத் தயார்...''

ராஜேந்திரன் பேசிக்கொண்டே இருந்தான். குஞ்சரியின் மெய் சிலிர்த்தது. இளவரசரது புகழ் வார்த்தைகளாலன்று. சொல்லுக்குச் சொல் ஏறும் போதை வார்த்தைகளால். அடுத்து என்ன நேருமோ என அஞ்சினாள்.

''இளவரசே, நிறுத்துங்கள். புகழ்வதற்கு நல்ல இடம் காலம் பார்த்தீர்கள்...'' என்று சற்றுக் கடுமையான குரலை அம்பு போல் வீசி, பாதுகாப்பு அரண் தேடிக்கொண்டாள்.

''ஏன், இந்த இடத்திற்கு என்ன? காலமும் சரியானதே!'' இளவரசர் விடவில்லை.

''ஆமாம். பாண்டியன் கோட்டை முற்றுகைக்குத் திட்டமிடும் வேளையில் என்னை வர்ணிப்பதுதான் சரியா? போர்வீரர்களிடையே இருந்து புதுத் திட்டங்களை வகுக்க வேண்டிய நீங்கள் ஒரு பேதைப் பெண்ணுக்குப் புகழ்மாலை சூட்டக் கோட்டைமதிலுக்கு வருவது தான் ஏற்ற இடமோ?''

''போரும் வீரர்களும் என்றுமிருக்கிறார்கள் நாட்டிய சுந்தரி! உன் பூஞ்சிரிப்பு எனக்குப் புதுத்தெம்பூட்டும்!''

''பூவையரிடமிருந்து புதுத்தெம்பு பெறுவது புகழ்மிக்க வீரர்க்கு அழகல்ல!''

''ஒரு புன்னகைக்கு நாட்டையே காலடியில் காணிக்கையாக்கச் சித்தமாக இருக்கிறேனே, குஞ்சரி...''

''யாருடைய சிரிப்புக்கு யாருடைய நாட்டைக் காணிக்கை யாக்குகிறீர்கள்?''

''யாருடைய நாடா? என் நாடு. என் தந்தையின் நாடு. ராஜ ராஜ பெருஞ் சக்கரவர்த்தியின் நாடு அவருக்குப்பிறகு ஆளும் உரிமை பெற்று இளவரசராக மகுடாபிஷேகம் சூட்டப்பெற்ற என்னுடைய நாடு..''

''இருக்கலாம். உங்களுடையதாகவும் இருக்கலாம். கலிங்கம் வரை சென்று மாற்றார் கொற்றம், கொடி, குடையைப் பறித்து வந்த குலோத்துங்கச் சோழர் ஆண்ட பூமியாகவும் இருக்கலாம். கங்கை வரை சென்று கங்கை நீரை மாற்றரசர் தலையில் சுமந்து வந்து சோழ கங்கப் பேரேரியில் சமர்ப்பித்த கங்கைகொண்டசோழராய்ப் புகழ் பெற்றவரின் பூமியாகவுமிருக்கலாம். கடல்கடந்த நாடுகளி ளெல்லாம் சோழர் பெருமை உயர்த்திய ராஜராஜரது நாடாகவு மிருக்கலாம். தில்லை நடராஜர் சபைக்குப் பொன் வேய்ந்த பராந்தகரது பூமியாகவுமிருக்கலாம். மறைந்து போன சோழநாட்டை மீண்டும் நிலைநிறுத்திய விஜயாலயர் பெற்றெடுத்த மரகத பூமியாகவுமிருக்கலாம். இளவரசே! இந்தப் பூமி அவர்கள் யாருக்கும் சொந்தமில்லை. உங்களுக்கும் சொந்தமில்லை. உங்கள் தந்தைக்கும் சொந்தமில்லை. பொன்னி பாயும் இந்த வளநாட்டிற்கு உரிமை யாளர்கள் பட்டிதொட்டிகளிலும் நகரப்பட்டினங்களிலும் வயல் வெளிகளிலும் கடலோரங்களிலும் மேட்டிலும் பள்ளத்திலும் மாளிகைகளிலும் குடிசைகளிலும் வாழ்கிறார்களே லட்சோப லட்சம் மக்கள், அவர்களுடையது! அவர்களுடையது என்றுகூடச் சொல்ல மாட்டேன். அவர்களைப் படைத்த இறைவனுடையது...'' என்று குஞ்சரி கூறும்போது அதைக் காதிலே வாங்கிக்கொள்ளாதவனாக ராஜேந்திரன்,

''குஞ்சரி! என் தேவதையே! உன் சொற்களெனும் தீங்கனிச் சாறு என்னைப் போதைக்கடலில் அமிழ்த்திக் கொண்டேயிருக்கிறது. அதோ மெல்ல மேல்வானில் மறையும் சந்திரன் தனது கடைசி பாணத்தால் என்னைத் தாக்கித் துன்புறுத்துகிறான். குஞ்சரி, இனியும் நான் உனது பேச்சை மட்டும் கேட்டு மௌனமாயிருக்கமாட்டேன்! என் அருகே வா. நாம் இப்போதே கோட்டையைவிட்டு வெளியேறி, வசந்த மண்டபத்திற்குள்ளே போய் விடுவோம்!'' என்று பிதற்றிய வாறு குஞ்சரியின் கரங்களைப் பிடித்திழுக்கத் தாவினான்.

குஞ்சரி விரைந்து நடந்தாள். இளவரசர் குறிதவறியது. மதிலின் தரையை முத்தமிடுவது போல் சாய்ந்தார்.

அப்போது குஞ்சரி பயந்து நடுநடுங்கி, "இளவரசே! காயம் பட்டு விடப் போகிறது. அமைதியடையுங்கள். அந்தப்புரத்தினில்லாத அழகிகளா? என்னைவிட நாட்டியக்கலையில் சிறந்தவர் களில்லையா? முகரக்கூடிய மல்லிகையல்லள் நான். தேன் மாந்தக் கூடிய மலரல்லள் நான் இளவரசே! தவறான எண்ணத்தை இந்த நொடியினின்று பொசுக்கிவிடுங்கள். நாட்டிற்காக அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட என்னை சுகபோகங்களுக்காக அழைக்காதீர்கள்!" என்று கூறி ஓரடி எடுத்து வைக்க முற்பட்டாள்.

இளவரசர் அவளை நோக்கிச் சீற்றம் பாதி, சிருங்கார உணர்ச்சி பாதியாக, "குஞ்சரி! நாட்டிற்காக உழைக்க முற்பட்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். பூங்கொடி புயலைத் தடுத்து நிறுத்த முடியுமா? கஜேந்திரன் துதிக்கையில் முல்லைக்கொடி படர முடியுமா? சோழீசர்க் கோயில் பரம்பரை வழக்கப்படி நான்கு வேளையும் நர்த்தன மாடிக் கைங்கர்யம் செய்ய வேண்டிய நீ, ராஜீய விவகாரங்களில் இறங்குவதை என் தந்தை சக்ரவர்த்தி ஏனோ அனுமதித்திருக்கிறார்! எனக்குத் தெரியும்! அவர் ஏன் உன் சேவையைப் பெறுகிறார் என்று! அந்தப்புரத்தில் உனக்கு ஓரிடம் தர அவர் உள்ளெண்ணம் முயலுகிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் குறுக்கிடுவதால் அவர் ஒதுங்கி விடுவார். தவறாகவும் எண்ணமாட்டார். குஞ்சரி, உன் குவளை விழியிலிருந்து குளிர்ப்பார்வையை வீசு... கோபம் கொண்டு தணலைக் கொட்டாதே..." என்று கூறி மெல்ல எழ முயன்ற இளவரசரை நோக்கிச் சீறினாள் குஞ்சரி.

"என்ன சொன்னீர்கள் இளவரசே! தகாத வார்த்தைகளை இனியும் சொல்லாதீர்கள். நான் இன்னும் இங்கேயிருந்தால் உங்கள் தாபத் தணல் கொழுந்து விட்டெரியத் தொடங்கிவிடும். என் தவறு தான், இப்படித் தனியாகக் கோட்டை மதிலின் மீது அமர்ந்திருப்பது! நான் சென்று வருகிறேன் இளவரசே..." என்று கூறி வேகமாகப் படி வழியே இறங்க முற்பட்டவளை நோக்கித் தாவிய இளவரசர் இருள் சூழ்ந்த படிக்கட்டுகளின் ஓர் திருப்புமுனையில் அவளைத் தாவிப் பிடித்துத் தன் பரந்த மார்போடு சேர்த்தணைக்க முற்பட்ட போது, குஞ்சரி தன் பலங்கொண்ட மட்டும் இளவரசரைப் பிடித்துத் தள்ளினாள்.

படிக்கட்டுகளில் உருண்டு விழுந்தார் இளவரசர்.

குஞ்சரி தப்பினோம் பிழைத்தோம் என்று திரும்பிப் பாராமல் ஓடினாள்.

''நில் குஞ்சரி, நில்! குஞ்சரி, ஓடாதே!'' என்ற குரல் கேட்டது. ஆசையை உள்ளடக்கிய குரலாயில்லை அது. அபயமளிக்கும் குரல். காமப்பசியுடன் கூடிய இளவரசரின் குரலன்று அது. காத்து ரட்சிக்க வந்த காளியாரின் குரல்.

படிக்கட்டுகளில் உருண்டு விழுந்த இளவரசர் தட்டுத்தடுமாறி எழுவதற்கு முயன்றார். காளியாரின் வலுவான குரல் அவரை நிமிர்ந்து நிற்கச் செய்தது. எங்கெங்கே அடிபட்டிருக்கிறது என்று இப்போது கவனிக்க முடியவில்லை. எனினும், இதயத்தில் ஊமைக்காயம் ஏற்பட்டுவிட்டது. காயத்திலிருந்து குருதி கசிவதற்குப் பதில் குரோதம் கசிந்தது. வெஞ்சினம் கொப்பளித்தது. பழிவாங்கும் மனப்பான்மை வித்திட்டது.

''யார், ராஜேந்திரனா?'' என்று காளியார் கேட்டார். அவரது பிடியை உதறித்தள்ளி, 'ஹூம்' என்று உறுமினார் இளவரசர். காளியாருக்கு இளவரசரிடம் பற்றுண்டு. பிறந்த காலத்திலிருந்து தெரியும். தோளிலே இளவரசரைச் சுமந்த பெருமை அவருக்கு உண்டு. அந்த அன்பும் இளவரசர் வாழ்வில் நாட்டமும் கலந்த உரிமை 'ராஜேந்திரனா?' என்று ஒருமையில் அழைக்க வைத்தது.

''இங்கு எங்கே வந்தீர்கள்?'' - இளவரசர் குரலில் அடிபட்ட வேங்கையின் கர்ஜனையிருந்தது.

காளியார் நகைப்பது மெல்ல ஒலித்தது.

''அதே கேள்வியை நான் கேட்கலாமா?''

''கேட்கலாமே!... இளவரசருக்கு எங்கும் எப்போதும் வர உரிமை உண்டு. மற்றவரை எங்கே, ஏன் வந்தீர்கள் என்று கேட்கவும் உரிமை உண்டு. உரிமையை நிலைநாட்ட வேண்டுமோ காளியாரே!'' வேங்கை சீறியது.

''உரிமையை நிலைநாட்டத்தான் நாம் இப்போது பாடுபடுகிறோம். சோழர்களின் பரம்பரைக் கிரீடம் தங்கள் முடியில் அமர்ந்து, என்றென்றும் அந்த முடி சாயாது இருக்க வேண்டும் என்ற உரிமையை நாட்டத்தான் நாங்கள் பாடுபடுகிறோம். சற்று முன்பு

கணையில் தப்பிய மான் போல் ஓடினாளே, அவளும் அதற்காகவே பாடுபடுகிறாள்...'' காளியார் உள்ளத்தில் பெரும் பரபரப்பு இருந்தாலும், அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் அடக்கமாகப் பேசினார்.

''ஆமாம்... ஆமாம்... குஞ்சரி நாட்டுக்காகப் பாடுபடுவது எனக்கு மிக நன்றாகத் தெரியும். இளையமணவாளனைச் சந்தித்ததும், அவன் மாளிகையில் இருந்ததும் குடந்தைக்குச் சென்றதும் எனக்குத் தெரியும். இன்னும் ஒரு முகமறியாத மனிதன், அவன் யாரென்றே தெரியவில்லை. அவனுடன் நெடுஞ்சாலையில் கூடிக்குலாவியதும் தெரியும்... காளியாரே! உங்களுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பும் எனக்குத் தெரியும்....'' என்று இளவரசர் சொல்லி வரும்போது காளியார் தன்வசம் இழந்தார்.

''இளவரசே... இத்துடன் பேச்சை நிறுத்துங்கள். இனி ஒரு வார்த்தை பேசினாலும் நான் இளவரசர் என்ற மரியாதையினின்று மீற வேண்டியிருக்கும்...'' என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

கேலி நிறைந்த குரலில் இளவரசர், ''ஆகா! சோழநாட்டு ரட்சகர் என்ன செய்து விடுவீர்கள்?'' என்று கேட்கவும், நொடிகூடத் தயங்காத காளியார் ''அடாது கூறும் நாவை நறுக்கிவிடுவேன்'' என்றவுடன், இளவரசர் ஒரு கணம் என்ன செய்வது என்று அறியாது திகைத்தார்.

குஞ்சரியிடம் ஏற்பட்ட அவமானம், காளியாரிடம் ஏற்பட்ட அவமானம் ஆகிய இரண்டும் அவரைச் சீறியெழச் செய்தன.

''ஓகோ, உங்கள் வாள் அவ்வளவு கூர்மையானதா! யாரங்கே?'' என்று கர ஒலி எழுப்பவும் அரச மெய்க்காவலர்கள் இருவர் விரைந்து வந்து, ஏவலுக்கு ஏற்பப் பணிந்து நின்றனர்.

''காளியாரை உடனே சிறையிலடையுங்கள். எனது மறு உத்தரவு வரும் வரை அவரை அங்கேயே வைத்திருங்கள். அவரைச் சந்திக்க யாரையும் அனுமதிக்காதீர்கள்'' என்ற கட்டளைக்குரல் அந்த நிசியில் பயங்கரமாக ஒலித்தது.

குஞ்சரி வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள். காளியார் காராக்கிருஹத்தை நோக்கிக் காவல்வீரர்கள் தொடரச் சென்று கொண்டிருந்தார்.

எங்கோ ஒரு பறவை சோகமாகக் குரல் எழுப்பியது.

காளியார் சிறையிலடைக்கப்பட்டது ஒருவருக்கும் தெரிய வில்லை. குஞ்சரிக்கும் தெரியாது. இளவரசரின் பிடியினின்றி தப்பி ஓடிவந்தவள் வீட்டிற்குச் சென்று படுக்கையில் விழுந்து குமுறிக் குமுறி அழுதாள். விடிந்து வெகு நேரம் உறங்கினாள்.

தன்னைத் தேடி காளியார் வருவார் என்று எதிர்பார்த்தாள். பகல் முழுவதும் வீட்டிலேயே இருந்தாள். இளவரசர் தன்னிடம் நடந்து கொண்ட விதம் அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. அழகிலோ, வீரத்திலோ இளவரசர் குறைந்தவரல்லர். என்றாலும், குஞ்சரிக்கு ஏனோ காதல் உணர்ச்சியே ஏற்படவில்லை. தன் உடலே மனிதர் களுக்காகத் தோன்றவில்லை என்ற எண்ணம் அவளுக்கு. உணர்ச்சிப்பிழம்பு அருவியாய்ப் பெருக்கெடுக்கத் தக்க இந்த வயதில், ஆடவர் தீண்டும் இன்பம் பெறவே அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால், வெளிமனிதர்களுக்கு வேறுவிதமான எண்ணம் உண்டு.

அவளையும் மன்னர் ராஜராஜரையும் தொடர்பு படுத்திப் பேசுவது அவள் செவிகளிலும் விழாமலில்லை. இளவரசருக்கே அப்படியொரு சந்தேகமுண்டு. ''தந்தையிடம் பழகும் நீ என்னை வெறுப்பதேன்'' என்று அவர் கடைசியாக ஒரு கேள்வியும் கேட்டது அவள் உள்ளத்தில் இப்போதும் முள்ளாய்க் குத்துகிறது.

காளியாரிடம் சொல்லி விம்மி விம்மி அழவேண்டும் போல் தோன்றியது.

''காளியார் வருவார் வருவார்'' என்று மாலை வரையில் எதிர்பார்த்தாள். ''நாமே சென்று சந்திப்போம்... நேற்று இரவு நடந்ததை எடுத்துக் கூறுவோம்'' என்று புறப்பட்டு, கடைவீதி வழியே சென்று கொண்டிருந்த போது மக்கள் கூட்டமாகப் பேசிக் கொண்டிருப்பதைக்கண்டாள். புலவரொருவர் நடுநாயகமாக நின்று கலிங்கத்துப் பரணியைப் பற்றி உயர்வு நவிற்சியுடன் பேசுவதைக் கேட்கும் போது அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

'என்ன மக்கள் இவர்கள்! சொந்த நாட்டைக் குறைத்துப் பேசுவதில் என்ன மகிழ்ச்சியோ இவர்களுக்கு! அடிமை அரக்கனை வரவேற்க இப்போதே பூபாளம் பாடுகிறார்களா?' என்று வேதனையும் அடைந்தாள்.

''புலவரே! கங்காபுரிப்பரணி பாடுவீர்களோ, மதுரைப் பரணி பாடுவீர்களோ! அப்போது சுயமரியாதையுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணமே உங்களுக்கு அற்றுவிட்டதா?'' என்று குஞ்சரி கேட்கவும், அனைவரும் திடுக்கிட்டுக் குரல் வந்த திசையை நோக்கினர். ஒரு கணம் கூட்டத்தில் அமைதி நிலவியது.

''ஓ குஞ்சரி...'' என்று கேலிக்குரலில் ஒலிக்க ஒருவன் கேட்டான்.

''என்னம்மா கேட்கிறாய்? பரணியின் கதைத் தலைவி யாரென்றா?'' என்று புலவர் அவள் கேட்காத கேள்வியைக் கேட்டதாகப் பாவித்துக் கேட்டார்.

''ஏன், நம் குஞ்சரிதான்!'' என்றது ஒரு குரல். ''ஓ! ஓ'' என்று சிரிப்பு.

''கபாடம் திறக்க வல்லவள்...'' ஒரு குரல்.

''முருகி சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் செருகும் குஞ்சரியே! பவள உதட்டைத் திறமினோ!'' ஓர் இளைஞன் பாடினான்.

அங்கே நகை ஒலி அடங்க நீண்ட நேரமாகியது.

''குஞ்சரி, சொன்னால் கோபிக்கமாட்டாயே! உன்னைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தோம். மீண்டும் போர் வரப் போகிறதாமே!'' என்று ஒருவர் கேட்டார்

''கேளுங்கள். இதில் எனக்கென்ன கோபம்? வேதனை, வருத்தம், பயம் இவைதான் போரென்றால்...'' என்றாள் குஞ்சரி.

அதற்குள் கூட்டத்தினர் அவளை நெருங்கிச் சூழ்ந்தனர். அவர்கள் விடும் மூச்சு அவள் முதுகில், தோளில், கழுத்தில் உராய்ந்தது. குஞ்சரிக்கு ஒருவிதத் திகில் ஏற்பட்டது. என்றாலும், கூட்டத்தினர் கேள்விகளுக்குத் தக்க மறுமொழி கூறி, அவர்களது அறியாமையை, துரோகத்தனத்தை, அடிமை மனப்பான்மையை மாற்றி விடுவோம் என்று எண்ணினாள்.

''மீண்டும் போர் என்றால் நாட்டுக்குக் கெடுதல் தானே?'' ஒரு குரல்.

''ஆமாம். சந்தேகமில்லாமல். ஒன்று மறியாத உங்களைப் போன்ற பாமரமக்கள் சிக்கித்தவிப்பார்கள். வீடு - வாசல், மனைவி - மக்கள், சுற்றம் என்று இழந்து தவிப்பார்.'' - குஞ்சரி.

''ஆமாம். ஆமாம். நியாயம்தான். சோழநாட்டு மக்களுக்கும். பாண்டிய நாட்டு மக்களுக்கும் ஒரு விரோதமுமில்லை. ஆனால் சண்டை மட்டும் வரப்போகிறது அப்படித்தானே?'' - புலவர் கேட்டார்.

''ஆமாம். பாண்டியர்கள் படை திரட்டுகிறார்கள்'' - குஞ்சரி.

''ஏன், நீங்கள் படையெடுப்பிற்கு ஏற்பாடுகள் செய்ய வில்லையோ? பாண்டியர்கள் மீது பழியைப்போடுகிறாய்?'' என்று ஒருமையில் ஒருவர் கேட்டார்.

''ஏனென்றால்... இதென்ன கேள்வி? குஞ்சரி சோழநாட்டிற்கு வேண்டியவள்!'' - மற்றொருவர்.

''சோழ நாடென்றால், மக்கள் எல்லோரையும் சேர்த்துத் தானே?''

''ஆமாம். ஆமாம். மக்கள் இருந்தால்தானே நாடு?''

''அப்படியென்றால் நமக்கெல்லாம் குஞ்சரி வேண்டியவளா?''

இதைக் கேட்ட இளைஞரைப் பார்த்துக் கூட்டமே சிரித்தது. குஞ்சரி சீறினாள். கண்களில் நீர் சேர்ந்தது.

''அதெப்படிச் சொல்ல முடியும்? நமக்கெல்லாம் வேண்டி யவளோ இல்லையோ! சக்கரவர்த்திக்கு நெருக்கம்...'' - ஒரு குரல்.

''மன்னவன் என்றால் மன்னுயிர் சேர்ந்ததன்றோ?'' - புலவர்.

''அதெப்படி, நாம் போரை விரும்புகிறோமா?''

இந்தக் கேள்விக்கு மட்டும் குஞ்சரி மறுமொழி கூற விரும்பினாள். அவர்களது மனத்தை மாற்றும் வகையில் தகுந்தவாறு எடுத்துக்கூற முடியும் என்று நம்பினாள்.

''நாம் போரை விரும்பவில்லை என்பது உண்மையே. போரினால் நம் வளநாடு சீரழிந்ததை மறந்து விடவில்லை. போரை விடக் கொடுமையானது அடிமைத்தனம். பாண்டிய நாட்டு மக்கள் நம்மை அடக்க விரும்புகிறார்களே'' என்று குஞ்சரி தொடங்கிய உடனேயே, ஓரிருவர் சீற்றத்துடன், ''அப்படியில்லை! பாண்டிய மக்களுக்குச் சோழ மக்களின் மீது கோபமே இல்லை. சொல்லப் போனால் எந்தவித வித்தியாசமே அவர்கள் பாராட்டுவதில்லை. வெள்ளாறும் காவிரியும் பாயும் பூமியானலென்ன? வைகையும் பொருனையும் பாயும் பூமியானாலென்ன? அவர்களுக்கு எல்லாம் ஒன்றே'' என்று இடைமறித்த போது, குஞ்சரி மிக அமைதியுடன் கேட்டாள் :

''சரி. மக்கள் விரும்பவில்லை. பிறகு ஏன் சுந்தரபாண்டியர் நம் நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தினார்?...''

குஞ்சரியின் இந்தக் கேள்விக்கு உடனே ஒருவராலும் மறுமொழி கூற முடியவில்லை. அவர்களது மௌனத்தைத் தொடர்ந்து. ''சரி, அந்தப் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவது அரசரது கடமை அன்றோ? அதனால் நமது மன்னர் ராஜராஜர் முதலில் போரில் ஏற்பட்ட தோல்வியை மாற்ற விரும்பினார். பிறகு எப்போதும் போர் நடைபெறாதிருக்க நமதுபடைகளைப் பலப்படுத்த விரும்பினார். அதை அறிந்த பாண்டிய மன்னர் மீண்டும் படை யெடுக்கப் படை திரட்டுகிறார். இதை அங்குள்ள மக்கள் தடுத்திருக் கலாமல்லவா? மக்கள் உயிரைப் போக்கும் போர் வேண்டாம் என்று அங்குள்ள மக்கள் கிளர்ந்தெழுவதுதானே?'' என்று அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

கூட்டத்தினர் அவள் பேச்சுவன்மையில் மெய் மறந்திருந்தனரா, அல்லது அவளது மெய்யழகில் மெய்மறந்திருந்தனரா என்று சொல்ல முடியாதவாறு அமைதி நிலவியது.

''அதனால் நான் சொல்கிறேன். சோழநாட்டு மக்களாகிய நாம் பாண்டியரின் விரோதமனப்பான்மையை அடக்க வேண்டும். என்றுமே பயந்து பயந்து நாம் வாழ முடியாதே! நமக்கென்று கலை, இலக்கியம் வாழ்க்கை முறை என்று இருக்கிறதே! நமது முன்னோர்கள் கடல் கடந்து தூர தூர தேசங்களுக்குச் சென்று புலிக்கொடியின் பெருமையை அங்கெல்லாம் நிலைநாட்டியிருக்கிறார்களே! கலிங்கம் வரை சென்றார்கள்; அதையும் தாண்டி கங்கைக்கரை வரை சென்றார்கள். அதையும் தாண்டி இமயமலை வரைக்கும் சென்றார்கள். வடக்கே புண்ணிய பாரத நாட்டின் மீது படையெடுத்து கண்ணபிரான் பிறந்த துவாரகையை அழிக்க விரும்பிய அயல் தேசத்து அரசர் படையை நிர்மூலமாக்க ராசேந்திரசோழர் படைகளுடன் சென்றாரே தெரியுமா? அந்தப் பெருமையை யெல்லாம் அழித்து ஒழிக்க விரும்பும் பாண்டிய மன்னரது போக்கை அங்குள்ள மக்கள் ஏன் தடுக்கவில்லை? அதுதான் என் கேள்வி.

''நாம் நமது நாட்டைக்காட்டிக் கொடுக்கலாமா? இங்கே நமது குறுநிலமன்னர்களே கூடிச் சதிசெய்கிறார்கள், நமது சக்ர வர்த்தியை எதிர்த்து. அதை நாம் முறியடிக்க வேண்டாமா?''

குஞ்சரியின் குரல் தழுதழுத்தது. அவள் முகத்தில் மக்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளும் இரக்க உணர்ச்சி தோன்றியது கூட்டத்தினரின் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள விரும்பினாள்.

''நாட்டியமாடும் ஒரு பெண்ணுக்கு ஏன் இவ்வளவு அக்கறை என்று கேட்கலாம். என் கண்ணெதிரே தேசத்துரோகச் செயல் நடை பெறும் போது, என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை...'' என்று கூறும் போது ஒருவர் குறுக்கிட்டு, ''உனக்கு மட்டும் என்னம்மா அவ்வளவு தேசபக்தி?'' என்றாரே. பார்க்கலாம் - கூட்டத்தில் அமைதி குலைந்தது.

''உனக்கு இளையமணவாளரைப் பிடிக்காதா?''

''அவரது மாளிகையில் தங்கியிருந்ததாகச் சொன்னார்களே?''

''சம்புவரையர் மாளிகையில் இரவு நடனத்திற்குச் சென்றாயாமே?''

''திடீரென்று ஓடி வந்துவிட்டாயா?''

''ஆமாம். அந்தத் தாடி, மீசையுடன் திருட்டுவிழி விழித்துக் கொண்டிருக்கும் ஒருவருடன் நீ வண்டியில் பயணம் செய்தாயே, யார் அவர்?''

''அதுசரி, நேற்று கோட்டைமதிலின் மீது உன்னைப் பார்த்ததாகச் சொன்னார்களே?''

''ஆமாம். இளவரசருடன் பேசிக்கொண்டிருந்தாள் என்றார்கள்!''

''இளவரசன் ராஜேந்திரன்தானே வடக்கே யாரையோ விரட்டப் படைகளுடன் சென்றதாக இப்போது இவள் சொன்னாள்?''

''இல்லை... இல்லை... ராஜேந்திரசோழச் சக்கரவர்த்தி. அவர் வேறு. அவர் கங்கைகொண்ட சோழர். இவர் கங்கை கொன்ற சோழர்! அவர் பெயரைக் கெடுக்க வந்தவர் இந்த இளவரசர்..''

''ஏன் ராஜராஜர் என்ற பெயரை மட்டும் நமது மாமன்னர் காப்பாற்றிவிட்டாரோ....?''

''ஐயன்மீர்... ரொம்பவும் சொல்லாதீர்கள்! குஞ்சரிக்கு வேண்டியவர்கள் அவர்கள். சக்ரவர்த்தி காதில் விழுந்தால் நம்மைத் தொலைத்துவிடுவார் தொலைத்து...!''

"அவர் தொலைப்பாரா மாட்டாரோ! காளியார் காதில் விழுந்தால், 'என் குஞ்சரியை என்ன சொல்லி விட்டீர்கள்?' என்று வாளை எடுத்துச் சுழற்றுவார்!"

"நம்மிடம்தான் வாளைச் சுழற்றுவார். இளவரசரிடம் வாலைச் சுருட்டுவார்! இந்தக் குஞ்சரியால் காளியாருக்கும் இளவரசருக்கும் பெருந்தகராறு..."

"அடடா, எல்லாம் கண்டவர்களைப் போல் பேசுகிறாயே!... காளியாரும் இளவரசரும் இந்த அழகியால் சண்டை போட்டுக் கொண்டுவிட்டார்களா?"

"ஆமாம்! காளியார் சிறைக்கம்பியை எண்ணிக் கொண்டிருக்கிறார்...!"

"யார், கோட்டைக்காவல் காளியாரா? கோட்டையின் எல்லாக் கதவுகளையும் மூடச் சொல்லி உத்தரவு போட்ட மூடரா?"

"ஆமாம். அதோ சாது போல் நமக்கு உபதேசம் செய்கிறாளே... இந்தக் குஞ்சரியால் ஏற்பட்ட தகராறு. காதல் போட்டி!"

"ஐயோ, பாண்டியர் படைகள் நகரை நோக்கி வரும் வேளையில் முக்கியமான இருவரும் இப்படிச் சண்டையிட்டுக் கொண்டார்களே?"

"ஆமாம். எல்லாம் பெண்ணால்! அழகுப் பெண்ணால்! பெண் அரசியலில் தலையிட்டு எந்த நாடு விளங்கிற்று...?"

"அப்படிச் சொல்லாதே. ஔவைப்பாட்டி இரண்டு அரசர் களுக்குள் சமரசம் செய்து வைத்ததை மறந்துவிட்டாயா?"

"அவள் ஔவைப்பாட்டி. இவள் அழகுச்சிலை! ஆடலரசி. இப்போதுகூட இவள் பாண்டிய நாட்டிற்குத் தூது சென்று படையெடுப்பை நிறுத்தலாம். அதைச் செய்யாமல் இங்கே இருந்து இளைஞர்கள் மனத்தில் சலனத்தை ஏற்படுத்தி, அரசருக்கும், இளவரசருக்கும் காதல் போட்டியை ஏற்படுத்தி, நல்லவர் ஒருவர் சிறையிலிடப்படக் காரணமாகி ஹூம். ஹூம்... சுந்தர பாண்டியனிடம் குஞ்சரி நேரே செல்லட்டும். மதுரைக்குக்கூடச் செல்ல வேண்டாம். பாண்டியர் படைகள் மதுரையைவிட்டுப் புறப்பட்டு விட்டன. இன்னும் சில தினங்களில் கண்ணனூர்க் கோட்டம் வந்தடைந்து விடும். அங்கே செல்லட்டும்..."

குஞ்சரியின் உடல் நடுங்கியது. கூட்டத்தினரின் குரல் அங்கங்களை அணு அணுவாகத் தாக்கியது. மக்கள் பேசும் அவதூறுச் சொற்கள் அங்கங்களை அப்படி அப்படியே அரித்து எடுத்தன. இரு கரங்களும் முகத்தை மூடி அழத் துடித்தன. இரு கால்களும் செயலிழந்து துவண்டு அங்கேயே வீழ்ந்துவிடத் துடித்தன.

'ஐயோ இதுவரைக் கன்னித்தன்மையிலிருந்து கடுகளவும் மாறாத என் மீது எவ்வாறெல்லாம் இழி சொற்களை வீசுகிறார்கள்?

'தெய்வத்தொண்டு செய்யும் பதியில்லாதார் குலத்தில் நான் பிறந்ததாலேயே ஆடவர்களின் போகப்பொருளாக விளங்கியாக வேண்டுமா? ஈசனே! கங்கைகொண்டசோழீசனே! ஆடவல்லானே, திருக்கடவூரில் திகழும் அபிராமி அன்னையே! தோன்றாத துணையாயிருந்து அருள் செய்யும் பாதிரிப்புலியூர் தீவண்ணனே! மோனத்துயில் புரியும் அரங்கனே! சமயபுரத்தில் வீற்றிருக்கும் மாரியம்மனே! அகிலத்துக் குழந்தைகளைக் காக்கும் அகிலாண் டேஸ்வரியே! உங்களுக்குத் தெரியாதா? உங்கள் செவியடைத்து விட்டதா? நாட்டிற்காக நான் உயிர் உடல் பொருள் அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்துதானே, இயற்கையையும் மீறி அரசியல் விவகாரங்களில் இறங்கினேன்? என்னால், ஒரு பெரும் படை யெடுப்புத் தடுக்கப்படுமானால் அதைவிட பெருமகிழ்ச்சி ஏதுமில்லை.

'சோழவளநாட்டுப் பெயர் அழியப்படாமல் நிலைத்து நிற்க இந்தச் சிறுதுரும்பு உதவும் என்றால் அதைவிடப் பெருமகிழ்ச்சி ஏதுமில்லை!'

''பாண்டிய மன்னரிடம் தூது செல்வதால் சோழர் பெருமை குறையாது என்று நீங்கள் கூறினால் இதோ, இப்போதே நான் போகச் சித்தமாயிருக்கிறேன் புலவர்களே! கங்காபுரிப் பெருமக்களே! 'இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, சந்திரன் கெட்டதும் பெண்ணாலே' என்று பெண்குலத்தையே பழிக்கக் கதை கூறுகிறீர் களே, நான் அந்த அவப்பெயரை மாற்றுகிறேன். 'குஞ்சரி, குஞ்சரி என்று ஒரு நடனப்பெண் இருந்தாள். அவள் நாட்டைக் காக்க உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தாள்' என்று வருங்காலம் கூறட்டும். சொல்லுங்கள் - பாண்டிய மன்னரிடம் செல்ல எது வழி என்று சொல்லுங்கள்...'' என்று உணர்ச்சி

மிகுதியால் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக பெருகக் கதறியவாறு பேசுவதைக் கேட்டு, கூட்டமே ஆடாது அசையாது நின்றது.

''உடல், பொருள், ஆவி...!'' என்று ஒருவர் திரும்பவும் குஞ்சரி கூறியது போல் திரும்பக் கூறி, ''பொருள், ஆவி வேண்டாம். உடல் மட்டும் போதும்'' என்று கூறவும் கூறியவரின் கன்னத்தில் மறு நொடி பளீரென்று ஓர் அறை விழுந்தது!

''உடலா?... ஏய்... ஒரு பெண் அகப்பட்டுக்கொண்டால் என்னவெல்லாம் பேசுவீர்கள்? உம்...'' கர்ஜித்தது ஒரு குரல்.

கூட்டத்தினர் திகைத்தனர். குஞ்சரியும் திகைத்தாள்.

இளையமணவாளன் கம்பீரமாக அங்கே நின்று கொண்டிருந்தான்.

''உம். என்ன கூட்டமிங்கே? கோட்டையை நோக்கிப் பாண்டியர் படைகள் வந்து கொண்டிருக்கும் நேரத்தில் இங்கு வீண் வம்புப் பேச்சா? கலைந்துசெல்லுங்கள்!'' என்ற கம்பீரமான குரல் மந்திரம் போல் அனைவரையும் கட்டுப்படுத்தியது.

குஞ்சரியை மிகவும் தகாத முறையில் பேசிய இளைஞன்கூட மூக்கிலிருந்து வடியும் ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு பரிதாபமாகக் குஞ்சரியைப் பார்த்தவாறு நகர்ந்தான்.

இளையமணவாளன் குஞ்சரியின் கரத்தை அழுத்தமாகப் பிடித்து, ''குஞ்சரி! வா, போகலாம்! மக்கள் என்பவர் பலதரப்பட்ட மனப்பான்மையர். அவர்களிடம் நாற்சந்தியில் நின்று விவாதிக் கலாமா! வா, போகலாம்!'' என்றான்.

அவன் கை அழுத்தம், குஞ்சரியின் இதயத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது.

'ஐயோ, இவ்வளவு காலமாக யாரிடமிருந்து தப்பிவந்தோமோ, அவரிடம் சிக்கி விட்டோமே' என்று அவள் அஞ்சினாள்.

அழகியமணவாளன் கை தட்டினான். சிவிகையை விரைந்து கொண்டு வந்தனர்.

''குஞ்சரி! நீ நடந்து வரலாமா? நாட்டிய ராணியே! சிவிகையில் ஏறி அமர்ந்துகொள்'' என்றான்.

குஞ்சரி தயங்கினாள்.

''தயங்காதே குஞ்சரி! நீ நினைப்பது போன்று ஏதுமே நடக்காது. நல்லதும் சரி, கெட்டதும் சரி, பாண்டியர் படைகள் விரைந்து வரும் வேளையில் நீ நல்ல காரியம் ஒன்றைச் செய்ய முடியும்...'' என்றான்.

''என்னால் முடியுமா?'' என்று விம்மினாள் குஞ்சரி.

''முடியும். வா. சொல்கிறேன்!'' என்று கூறி அவளைச் சிவிகையில் ஏற்றி அமரச் செய்துவிட்டுக் குதிரை மீது பின் தொடர்ந்தான் சோழ அரசனின் பரம விரோதியான மணவாளன்.

# 16

கங்காபுரி என்று அழைக்கப்பட்ட கங்கைகொண்டசோழபுர நகரம் சுற்றிலும் மதிற்சுவரால் சூழப்பட்டுப் பாதுகாப்பு மிகுந்து திகழ்ந்தது.

நான்கு திக்கிலும் நான்கு கோட்டைவாசல்கள். தெற்கும் வடக்கும் உள்ள வாயில்கள் மிகவும் பலத்த காவலுடன் திகழ்ந்தன. மேற்குக் கோட்டைக்கதவு எப்போதும் திறக்கப்படுவதில்லை. கிழக்குக் கோட்டைவாயில் வழியாகப் பழையாறையினின்று அரச குடும்பத்தவர் அவ்வப்போது வந்து செல்வர்.

நகரத்திற்கு வெளியே பொன்னேரி என்று அழைக்கப்படும் சோழகங்கப் பேரேரி ஆண்டு முழுமையும் வற்றாமல் நீர் நிறைந்து அலைகள் கரைகளில் மோதிக்கொண்டிருக்க மறுகரைக்குச் செல்லும் படகுகள் சென்ற வண்ணமாயிருக்க பரந்துவிரிந்து கம்பீரமாகத் திகழ்ந்தது.

சென்ற சில நாட்களாக கங்காபுரியின் கோட்டைக்கதவுகள் அனைத்தும் மூடப்பட்டு பலத்த காவலுடன் விளங்குவதால் வெளியூரினின்று நகரத்திற்குள் செல்ல விரும்புபவர் செல்ல முடியாமல் கோட்டைக் காவல் அதிகாரியின் உத்தரவுக்காக வெளியே காத்திருந்தனர். ஒரு கரையில் குடில்கள் பல புதிதாக எழுந்தன. அவர்கள் தங்குவதற்குப் புறச்சேரிகளிலுள்ள குடியிருப்பு வீடுகளில் நெரிசல் மிகுந்தது.

இவ்வளவு பலத்த காவல் இருந்தும் இளையமணவாளன் கோட்டையைவிட்டு வெளியேறி விட்டான் என்ற செய்தி சோழ

சக்ரவர்த்தி ராஜராஜன் செவிகளுக்கு எட்டியது. அதைத் தொடர்ந்து காளியார் சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியும் அவருக்குக் கிடைத்தது.

சக்ரவர்த்தி திடுக்கிட்டார் என்று சொல்வதைவிட அதிர்ச்சிக் குள்ளானார் என்று சொல்வதே தகும். உத்தரவிட்டது தனது குமாரன் இளவரசர் ராஜேந்திரன் என்று அறிந்ததும் அவரது சினம் மேலோங்கியது. தனது புதல்வர் என்பதற்காக அது நியாயமா யிருக்கும் என்று அவர் நினைக்கவில்லை.

உடனே அமைச்சரை அழைத்து அவரது கருத்தை வினவினார். அவருக்கும் இளவரசர் செய்தது மாபெரும் தவறு என்பதும் காளியார் போன்ற உண்மை ஊழியரைச் சிறையிலடைக்க உத்தரவிட்டது தவறு என்பதும் தெரியும். இருந்தாலும் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கப் படைகளைத் திரட்டிக்கொண்டு இருக்கும் இந்தச் சமயத்தில் இளவரசருடன் மனத்தாங்கலைக் கொள்ளக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தார்.

ஆனால், நகரத்தில் வேறுவிதமான கருத்து உலவத் தொடங்கியது. இளவரசருக்கும் சக்ரவர்த்திக்கும் பெரும் கருத்து வேற்றுமையென்று ஒரு சிலரும் காளியார் பாண்டியர்களுக்கு உளவு சொல்லி வந்தார் என்று ஒரு சிலரும் பேசத் தொடங்கினர். இளவரசரை ஆதரிக்கும் சார்புடையவர்கள், சக்ரவர்த்தி செய்தது சரியென்று கூறியவர்கள், காளியார் போன்ற நாட்டுக்கு உண்மையாக உழைப் பவர்களைச் சிறையிலடைத்தது மன்னிக்க முடியாத குற்றம் என்று தைரியமாகக் கூறியவர்கள் என்று நகரத்தில் பல விதக் குழுக்களாக கருத்து வேற்றுமை நிலவ ஆரம்பித்தது. இன்னும் சிறிது நாட்களில் இந்தக் கருத்துப் புயல்கள் நாடெங்கும் பரவத் தொடங்கி விடும்.

ராஜராஜருக்கு இரவெல்லாம் உறக்கம் பிடிக்கவில்லை. மற்றொரு செய்தியும் வந்து சேர்ந்தது. குஞ்சரியைக் காணவில்லை என்பதுதான் அது.

'குஞ்சரி எங்கே போயிருப்பாள்? காளியார் சிறையிலடைக்கப் பட்டதற்கும் குஞ்சரி காணாமல் போனதற்கும் தொடர்பு இருக்க வேண்டும். என்று முடிவு செய்தார் சக்ரவர்த்தி. தமது நேர் பார்வை யிலேயே விசாரிக்க வேண்டும்' என்று உடனே ஒவ்வொரு கோட்டை வாயிலுக்கும் தாமே நேரே சென்றார்.

காளியார் திடீரென சிறையிலடைக்கப்பட்ட பிறகு, பீதியும் செய்வதறியாத நிலையும் கொண்டிருந்த மதில் காவல் வீரர்களுக்குச் சக்ரவர்த்தியின் விஜயம் புதுத்தெம்பை அளித்தது. மதில் மீது ஏறி கோட்டைக்கு வெளியே கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை உற்று நோக்கினார். மதிலின் மீதிருந்து நகரின் மையத்தில் கம்பீரமாகத் திகழும் கங்கைகொண்ட சோழீசர்கோயில் விமானத்தைப் பார்த்துப் பரவசமடைந்தார். தமது மூதாதையர்கள் எழுப்பிய அந்தக் கோயிலைப் போல் தம்மால் ஒரு சிறு கோயில் கூடக் கட்ட முடிய வில்லையே என்ற எண்ணம் தோன்றிய போது அவரது தலை தாமாகவே தாழ்ந்தது. அது கோயில் விமானத்தைப் பார்த்து வணங்கிய தாக அங்கு வந்து நின்ற தெற்கு வாசல் காவல் வீரன் நினைத்துக் கொண்டான். தன்னருகே வந்து நின்று வணங்கிய காவல் வீரனை நோக்கி என்ன விஷயம் என்று கேட்பது போல் புருவத்தை உயர்த்தினார்.

''சக்ரவர்த்தி! என்னை மன்னிக்க வேண்டும். சில செய்திகளைத் தெரிவிக்காமல் இருந்தால், அவை எனது நெஞ்சுக்குள்ளேயே இருந்து ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் வெடித்துக் கொண்டு வந்துவிடும்'' என்று பூர்வபீடிகையுடன் தொடங்கினான்.

சக்ரவர்த்தி அவனை உற்றுப்பார்த்தார். அவனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. பல ஆண்டுகளாகக் கோட்டைக் காவல் பொறுப்பிலுள்ள பல நூறு பேர்களுள் அவனும் ஒருவன். நம்பிக்கை மிகுந்தவன். சென்ற முறை நடந்த பாண்டியர்கள் படையெடுப்பின் போது தனது வீரத்தைப் புலப்படுத்தியவன்.

சொல்ல வந்ததைக் கூறுமாறு தலையை அசைத்தார். சக்ரவர்த்தி, அன்று மதில் மீது நடந்த சம்பவத்தை விவரிக்க விவரிக்க சக்ரவர்த்தியின் உடலில் குருதி கொதித்தது. அந்த செய்தியைச் சொல்லி முடிக்கும் முன்பாக அந்த வீரன் பயத்தால் வார்த்தைகளை முடிக்க முடியாது சிறிது மௌனமாக நின்றான்.

சக்ரவர்த்தி மூன்றே கேள்விகளைத்தான் கேட்டார்.

''மதில் மீது குஞ்சரி எப்போதாவது வருவாளா? நாள் தோறும் வருவாளா?''

''அநேகமாக ஊரில் குஞ்சரி இருந்தால் தினமும்தான் வருவாள்.''

''மதிலின் மீது உத்தரவின்றி ஒருவரும் செல்லக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா? ஏன் அனுமதித்தாய்?''

சக்ரவர்த்தியின் இந்தக் கேள்விக்கு உடனே மறுமொழி கூறாமல் வீரன் சற்றுத் தயங்கினான்.

சக்ரவர்த்தியின் இந்தக் கேள்வியும் குற்றச்சாட்டும் அவனைத் திடுக்கிட வைத்தன. குஞ்சரியின் வனப்பில் அவன் மயங்கியதுண்டு. செய்வது சேவகமென்றாலும் அவனும் மனிதன்தானே! அவனுக்கும் ஆசை என்பது உண்டுதானே! இறைவன் இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு அழகை ஏன் அள்ளித் தெளித்திருக்கிறான் என்று அவன் நினைத்ததுண்டு. பதியிலார் குலத்தில் பிறந்த இந்த இளமங்கை துணிவுடன் வீதியில் உலவி, மாளிகைக்குள் சென்று வந்து ராஜீய விவகாரங்களில் சம்பந்தப்படுகிறாளே என்று எண்ணியதுண்டு.

சோழீசர்கோயிலில் இறைவன் சந்நிதியில் பாதச் சதங்கை குலுங்க அவள் நடனமாடியதையும் அவன் கண்டிருக்கிறான். அதே செஞ்சீரடிகள் கோட்டைமதில் மீதும் பாறைகளின் மீதும் படர்ந் திருக்கும் முட்செடிகளின் மீதும் நடந்துவருவதையும் கண்டிருக் கிறான். அவன் குஞ்சரியை எப்படித் தடுக்க முடியும்? அரசரின் அபிமானத்தைப் பெற்றவர்கள் குஞ்சரியின் குடும்பத்தார் என்று வெளியே பேசிக்கொள்வார்கள். அதை மனத்தில் கொண்டு குஞ்சரியை எங்கும் எவரும் தடைசெய்தது கிடையாது. அவன் மட்டும் எப்படித் தடுப்பான்? மேலும் காளியாருடன் மதில் மீது அமர்ந்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கும் உரிமை அவள் ஒருத்திக்கு மட்டும் இருக்கும் போது அவளை அவன் தடுத்துவிட முடியுமா?

காவல்வீரன் மறுமொழி சொல்லாது நிற்பதைக் கண்டு சக்ரவர்த்திக்கு கோபம் பொங்கியது. ஆனால் வீரன் புத்திசாலி, பேச்சை உடனே மிக எளிதில் மாற்றிவிட்டான்.

''மகாராஜா, நான் என்ன செய்ய முடியும்? அரண்மனையில் அந்தப்புரம் வரையில் அந்தப் பெண்ணுக்குச் செல்ல உரிமை உண்டு. காளியார் ஏதும் தடைசொல்வதில்லை. மூன்றாவது மனிதரைப் போல் நினைத்து நான் தடுத்துவிட முடியுமா?'' என்று கூறி வாய் புதைத்து நிற்கவும், ராஜராஜசோழர் கோபம் தணிந்தவராய் ''அப்படியென்றால் நீ சொல்வது சத்தியம் என்று சொல்லு'' என்றார்.

காவல்வீரன் அவர் பாதத்தில் தடாலென்று விழுந்து, ''மகாராஜா, என்னை மன்னித்துவிடுங்கள். நான் இளவரசருடன் கூடவே மதில் மீது ஏறிவந்து, மரியாதைக்காக மறைந்து நின்று கொண்டேன்'' என்று கூறி, இளவரசர் ராஜேந்திரன் குஞ்சரியிடம் தகாத முறையில் நடந்து கொண்டதையும் குஞ்சரி அஞ்சி படிக்கட்டு களில் இறங்கி ஓடிவந்ததையும் காளியார் எதிர்பட்டதையும் அவருக்கும் இளவரசருக்கும் வாக்குவாதம் நடந்ததையும் எடுத்துக் கூறினான்.

ராஜராஜர் உடல் மெல்ல நடுங்குவது எளிதில் புலப்பட வில்லை. அந்தக் காற்று ஒருவேளை அறிந்திருக்கும். அவர் ஏதும் பேசவில்லை.

''வழக்கம் போல் கோட்டைக்காவல் மிகக் கவனமாக இருக்கட்டும்'' என்று கட்டளையிட்டுவிட்டு விரைந்து படிக்கட்டு களில் இறங்கி மாளிகைச் சபைமண்டபத்தை நோக்கி விரைந்தார் அவர். உடனே இளவரசர் இராஜேந்திரனை அழைத்து வரச் செய்தார்.

இராஜேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டிய பிறகு அவருடைய போக்கில் சோழமன்னர் தலையிட்டதில்லை. பாண்டியர் களோடு போரிடப் படைகளைச் சேகரிப்பதிலும் போர்த் திட்டம் வகுப்பதிலுமாகக் கவனம் செலுத்திக்கொண்டிருந்த மாமன்னரால், இளவரசரின் நடவடிக்கைகளைக் கேட்டறியவும் கட்டுப்படுத்தவும் முடியாமலிருந்தது. ஆனால், காளியாரைச் சிறையிட்டதும் குஞ்சரியிடம் முறைதவறி நடந்துகொண்ட முறையும் அவ்வாறு எளிதில் விசாரிக்காமல் விடக்கூடியவை அல்ல என்று மாமன்னர் எண்ணினார்.

இளவரசர் ராஜேந்திர சோழதேவர் அழைத்து வரப்பட்டார். பொதுவான நாட்டுநடப்பைப் பற்றியும் கோட்டைப்பலத்தையும், பாதுகாவலைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்துவிட்டு, காளியாரைச் சிறையிலிட்டதைப் பற்றியும் கேட்டார்.

இளவரசர் ராஜேந்திரர் சொன்ன விஷயங்கள் மன்னருக்கே வியப்பை அளித்தன. 'காளியாருக்கும் பாண்டியர்களுக்கும் தொடர்பு உண்டு. காளியாரும் குஞ்சரியும் தவறான முறையில் பழகுகிறார்கள். குஞ்சரிக்கும் இளையமணவாளனுக்கும் இரகசியச் சந்திப்பு உண்டு' என்ற செய்திகளைத் தன் மகன் சொல்லக் கேட்டு மன்னர்

திடுக்கிட்டார். அவனைக் குறித்துத் தவறாக நினைத்துவிட்டோமே என்றும் ஒரு கணம் நினைத்தார்.

''குஞ்சரியை உடனே அழைத்து வாருங்கள். அவளையே விசாரித்து விடுவோம்'' என்று மன்னர் கட்டளையிட்டார்.

குஞ்சரியை அழைக்கச் சென்றவன், எவ்வாறு அவளை அழைத்து வர முடியும்? குஞ்சரியைக் காணவில்லை என்று செய்தியை கொண்டுவந்தான் அவன். பொருள் பொதிந்த பார்வையை தன் தந்தையின் மேல் வீசிய இளவரசர் கம்பீரமாக அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்றார்.

அந்தப் பார்வை, 'தந்தையே என்னைக் குறித்த தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள்' என்று சொல்வது போல் இருந்தது.

# 17

கட்டுண்ட நாகம் போல் குஞ்சரி சிவிகையில் அமர்ந்து சென்று கொண்டிருந்தாள். மணவாளனும் சிவிகையைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான்.

ஓரிடத்தில் சிவிகை நின்றது. மெல்லக் கீழே இறக்கினார்கள் சிவிகை சுமப்போர். அது ஒரு சிறு மாளிகை. அவள் அதற்கு முன்பு கங்கைகொண்டசோழபுரத்தில் அந்த மாளிகையைக் கண்ட தில்லை. அதற்குள் மணவாளனே வந்து விட்டான். சிவிகையின் திரையை விலக்கி குஞ்சரியை உள்ளே அழைத்தான்.

''நாம் எங்கே இருக்கிறோம்?'' என்று குஞ்சரி கேட்டாள்.

''கங்கைகொண்டசோழபுரத்தில் - அதிலென்ன சந்தேகம்?'' என்று கூறி மெல்ல நகைத்தான் மணவாளன்.

எந்த மாளிகையிலிருந்து தப்பிவந்தாளோ, யாரிடம் சிக்கக் கூடாது என்று எண்ணினாளோ அவனுடைய மாளிகைக்கே வந்து சேர்ந்துவிட்டாள்!

''ஐயா, என்னைப் பாண்டிய மன்னரிடம் தூது அனுப்புவதாகச் சொன்னீர்களே!'' என்று சிவிகையில் ஒரு காலும் மண்ணில் ஒரு

காலுமாக வைத்தவாறு மணவாளனை ஏறிட்டுப் பார்த்துக் கேட்டாள், குஞ்சரி. இதுதான் அவனை முதன்முறையாக நேருக்கு நேர் சந்திப்பது.

நெடிய உருவம். கண்களிலே பிறரை மயக்கும் ஒருவிதக் காந்த சக்தி. சற்றே அழுத்தமும் பருமனுமான உதடுகள். அரச பரம்பரைக்கே உள்ள ஆடை ஆபரணங்கள். உடலெங்கும் பூசப்பட்ட சந்தனத்தின் நறுமணம். எப்போதும் வெற்றிலை போடுவதால் காவி ஏறிய பற்கள் சுக போகங்களிலே எப்போதும் மூழ்கிக்கிடப்பதால் குழிவிழுந்த கண்கள். மெலிந்த தோள்கள்.

குஞ்சரி தலையைத் தாழ்த்திக் கொண்டாள். 'என்ன நேருமோ... இப்படி இங்கு வந்து சிக்கிக்கொண்டோமே' என்ற கவலையுடன் அவள் நிற்பதைப் பார்த்தும் கவனிக்காதவன் போல், அவளது இடது புஜத்தைத் தனது கரங்களால் அணைத்து, "குஞ்சரி, வா உள்ளே போகலாம்... இந்த மாளிகை என்னுடையதுதான் நீ பார்த்ததில்லையா? இந்த நகரத்தில் எனக்குத் தெரியாத இடமுண்டா?" என்று கூறியவாறு அவளை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான்.

பிற ஆடவரது அதிலும் மணவாளனது ஸ்பரிசம் தணலைப் போல் அவளைச் சுட்டது. தன்னை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். சிவிகை அங்கில்லை. மக்கள் நடமாட்டம் குறைவான நகரத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள வீதி அது.

மாளிகையின் நடுக்கூடத்தில் ஒவ்வொரு தூணும் சிற்ப வேலைப்பாடுகளுடன் கம்பீரமாக நின்றது. மேல்விதானத்தில் வித வித ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. தரையில் ரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது.

"வா, குஞ்சரி! உனக்கென்ன கூச்சம்? நடுநிசியென்றும் குளிரென்றும் இரவென்றும் பாராமல் செல்லும் உனக்கு இந்த மாளிகை வேற்றிடமில்லை. நானும் அயல் மனிதனில்லை, வா,வா!" என்று கூறி அவளைக் கூடத்தில் ஓர் ஓரத்தே இருந்த அறைக்குள் அழைத்தான்.

குஞ்சரி தயங்கினாள். ஒரே ஓட்டமாக வெளியே ஓடிப் போய் விடலாமென்று எண்ணினாள். அதற்குள் மணவாளன் அவளது வலது கரத்தைப் பற்றி "ஏன் தயங்குகிறாய்? மதுரைக்குச் செல்வதைப் பற்றி நாம் பேசுவோம்... வா...." என்றழைத்தான்.

''இங்கேயே பேசுவோமே! சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்லுங்கள். நான் உடனே புறப்படுகிறேன்'' என்று கவலை தோய்ந்த குரலில் கூறினாள் குஞ்சரி.

மணவாளன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் எகத்தாளம் இருந்தது. பழிவாங்கும் குணமும் இருந்தது. 'ஏமாந்தாயா' என்று கேட்காமல் கேட்பதுமிருந்தது.

''நாம் பேசப் போவதோ மிக ரகசியமானது. இங்கே பேசலாமா? 'சோழநாட்டில் தூண்களுக்கும் காது உண்டு' என்று உனக்குத் தெரியாதா குஞ்சரி...'' என்று அவளது கரத்தை மெல்ல அழுத்தி அறைக்குள் இழுத்தான்.

அந்த மாளிகையில் யாரும் இல்லையா? ஆளரவமே கிடையாதா? பணியாட்கள் இல்லையா?

அந்த அறை நடுக்கூடத்தைவிட மிகவும் பெரியதாக இருந்தது. சுற்றுச்சுவரில் வித விதமான சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. அந்தச் சித்திரங்கள் வேற்றுநாட்டு ஓவியர்களைக் கொண்டு எழுத வைத்தனவாகத் தோன்றின. சாளரங்களை வண்ணத் திரைச் சீலைகள் அலங்கரித்தன.

பெரிய மஞ்சம் ஒன்று அறை நடுவே திகழ்ந்தது.

கொதிக்கும் சுடுநீர்க் குளத்தில் மூழ்குவது போன்ற உணர்ச்சி குஞ்சரிக்கு மேலிட்டது.

மஞ்சத்தின் மீது கம்பீரமாக உட்கார்ந்து தலையணையின் மீது சாய்ந்தவாறு, ''குஞ்சரி, ஏன் அங்கேயே நிற்கிறாய்? இப்படி உட்காரேன்'' என்று காவிப்பற்கள் தெரியச் சிரித்தவாறு அவளை அழைத்தான் மணவாளன்.

''இல்லை, இல்லை. இப்படி இருக்கிறேன். பஞ்சணை மெத்தையில் உட்காருவதில்லை என்று சபதம். உம். சொல்லுங்கள் சீக்கிரம். எனக்குப் பசிக்கிறது. உங்களிடம் திட்டங்களைக் கேட்டறிந்து இன்று இரவே முடிந்தால் புறப்பட்டு விடுவேன்'' என்றாள் குஞ்சரி. சொற்கள் நடுக்கத்துடன் வந்தன.

எங்கிருந்தோ குளிர்ந்த காற்று மெல்ல வீசியது. கையது கொண்டு மெய்யது தழுவியவாறு நின்றாள் குஞ்சரி.

''பஞ்சணை உனக்கு விரோதமா? ஆச்சரியமாயிருக்கிறதே! மன்னர் மாளிகையில் தரையிலா படுப்பாய்?'' - மணவாளன் சிரிப்பில் அருவருப்பு இருந்தது. குத்தலும் குத்தியது.

''நான் எதற்காகப் பிறர் வீட்டில் படுக்க வேண்டும்?'' சீறினாள் குஞ்சரி.

''உங்கள் வீட்டில்கூட பஞ்சணை இல்லையா? உன் தாய் எதில் படுக்கிறாள்?''

''அவசியமற்ற கேள்வி. படுக்கையையும் பஞ்சணையும் பற்றியா பேச வந்தோம்? அடக்கமாகப் பேசுவது நல்லது. நாம் இங்கு வந்தது வேறு விஷயத்திற்காக. மறந்துவிட்டீர்களா?'' குஞ்சரி தணல் கக்கினாள்.

''நான் மறக்கவில்லை குஞ்சரி.''

''பிறகு சொல்லுங்கள்.''

''சொல்வதா? சொல்ல ஏதுமில்லை. பள்ளி அறையில் பேச்சுக்கு ஏது இடம்?'' - மணவாளன் சிரிப்பு 'ஏமாந்தாயா?' என்று கேட்பது போல் ஒலித்தது.

ஆ! நன்றாக அகப்பட்டுக் கொண்டோம் என்பதை நொடியில் புரிந்துகொண்டாள். இந்தப் போதில் மணவாளனிடம் கோபமாக பேசியோ, விவாதித்தோ பயனில்லை என்பதையும் புரிந்து கொண்டாள். பசியால் பல நாட்கள் காத்திருந்த கொடியவிலங்கு எதிரே நிற்கிறது. மோதித் தாக்கத் தக்க சூழ்நிலை இல்லை. பலமுமில்லை. தந்திரம் ஒன்றே ஆயுதம்.

தன் பாவத்தை நொடியில் மாற்றிக்கொண்ட குஞ்சரி ''குளிர்ந்த காற்று எங்கிருந்து வருகிறது?'' என்று வினவினாள்.

''குளிர்ந்த காற்றா? ஆகாகா?'' என்று பலமாகச் சிரித்த மணவாளன், மஞ்சத்திலிருந்து துள்ளி எழுந்து. ''இந்த அறைக்கு அருகே அல்லிக்கேணி. அதில் காற்றுத் தவழ்ந்து இந்த அறைக்கு வருகிறது. மணவாளனிடம் காற்றுக்கும் பிரியம் உண்டு. உனக்கு தானில்லை... இதோ பார்'' என்று திரைச் சீலையை அகற்றினான்.

மிகப் பெரிய சாளரங்கள் வழியே வெளியே அல்லிக்குளம் தெரிந்தது. குஞ்சரி மெல்ல சாளரம் அருகே சென்றாள். உயரமான

அந்த சாளரத்தின் வெளியே குளம். குளத்தைத் தாண்டி நந்தவனம் நந்தவனத்திற்கு அப்பால் மதிற்சுவர்.

''ஓ! நீ பசிக்கிறது என்று சொன்னாய் அல்லவா. மறந்து விட்டேன்'' என்று கையைத் தட்டினான்.

சொல்லி வைத்தாற் போல் நான்கு பணிப்பெண்கள் ஓடோடி வந்து மணவாளன் எதிரே நின்றனர். ஆளரவமே இல்லையோ என்று ஐயப்பட்ட அங்கே பணிப்பெண்கள்!

''இந்த நகரத்து ஆடலழகி அரண்மனைக்கு வேண்டியவள். இப்போது நமக்கும் மிக வேண்டியவள். பசியை ஆற்ற இனிய சுவை விருந்தளியுங்கள். ஆடை ஆபரணங்களை அளியுங்கள். மணமிக்க தைலம் பூசுங்கள். கூந்தலை வாரிப் பூச்சூடுங்கள். மலர் தொடுத்துக் கொண்டையில் சுற்றுங்கள். அதோ அந்த ஓவியம் நாண வேண்டும் உங்கள் ஒப்பனையைக் கண்டு. ஒரு நாழிகை கழித்து வருகிறேன்'' என்று கூறி குஞ்சரியை நோக்கி புன்னகை புரிந்து அவளையும் பணிப் பெண்களையும் அந்த அறையில் விட்டுச் சென்றான் மணவாளன்.

குஞ்சரியின் அதரங்களிலும் புன்முறுவல் நெளிந்தது. 'முட்டாள். தப்பி செல்ல எனக்கா வழி தெரியாது? நீ போ. பணிப் பெண்கள் எனக்கு அலங்காரம் செய்துவிட்டுப் போனவுடன் அவர்களை அனுப்பிவிட்டுத் தப்பி விடுகிறேன். இந்த மாளிகை இருக்குமிடம் எனக்குத் தெரிந்து விட்டது. அதோ சோழீசர் கோயில் விமானம் தெரிகிறது. நகரத்தின் மேற்குப் பகுதியில் இருக்கிறோ மென்பதைப் புரிந்துகொள்ளக் கூடிய சக்தி எனக்கில்லையா?' என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டாள்.

மணவாளன் சொல்லியபடி பணிப்பெண்கள் குஞ்சரியை அலங்கரித்தனர்.

''நீங்கள் எல்லாம் என்னைச் சற்றுத் தனியே விட்டுச் செல்லுங்கள். நான் ஓய்வெடுக்க வேண்டும்'' என்றாள் குஞ்சரி. அவர்கள் வணக்கம் செலுத்திவிட்டு மறவாமல் அறைக்கதவை மூடிக்கொண்டு சென்றனர். ஆனால், வெளிப்புறம் தாளிட மறக்கவில்லை.

குஞ்சரி சாளரத்தின் மீது பரபரப்புடன் ஏறினாள். துணிவுடன் வெளியே குதித்தாள். தப்பிச்செல்ல முடிந்ததா?

# 18

பாண்டியர் படைகள் மதுரையினின்று புறப்பட்டுவிட்டன. கங்கைகொண்டசோழபுரத்தை அடையும் முன்பு காவிரிக்கரையில் அவை பாடியிறங்கி இருந்தன.

சுந்தரபாண்டியன் மதுரையிலேயே தங்கியிருந்தான். படைத் தலைவர்களே முன்னின்று போரை நடத்தினால் போதும் என்று திட்டமிட்டு, எண்ணிக்கையில் குறைவான படை வீரர்களையே அனுப்பியிருந்தான்.

''நமது படைவீரர்களுக்கு வேலையே இருக்காது. சோழநாட்டில் எந்தப் பட்டிதொட்டிகளுக்கும் செல்ல வேண்டாம். ஆங்காங்கே உள்ள குறுநில மன்னர்களே நமது பணியை மேற்கொள்வார்கள்'' என்று சுந்தரபாண்டியன் சொல்லிப் பெரிதாகச் சிரித்தான்.

''அப்படிச் சொல்லாதீர்கள். பெரும்படைகளைத் திரட்டு கிறானாம் சோழன் ராஜராஜன். திறை செலுத்துவதை அவமானமாகக் கருதுகிறானாம்'' என்றார் அமைச்சர் குருகுலத்தரையன். மீண்டும் சுந்தரபாண்டியன் நகைத்தான். ''அமைச்சரே! அவமான உணர்ச்சி ஏற்படாமல் இருக்குமா? எத்தகைய சோழ சாம்ராஜ்யம்! திக்கெட்டும் புகழ்க்கொடி பறக்க ஆண்டவர்களல்லவா அவர்கள்? நமது மதுரையம்பதியிலேயே இருந்து ஆண்டு வந்தபோது நமக்கு அவமானமாக இருந்திருக்காதா! அதை நினைத்துப் பார்க்கச் சொல்லுங்கள், போதும். அடிமைத்தனம் என்ன என்பதை அவர் களுக்கும் நாம் இப்போது கற்பித்தால் தான் பிறகு எந்தக் காலத்தும் நம் நாட்டைப் பற்றிக் கனவிலும் நினைக்கமாட்டார்கள்'' என்று கூறும் போது சுந்தரபாண்டியனிடம் உறுதியான முடிவு இருந்தது. இந்த முறை சோழர்களிடம் அவர்களது நாட்டை மீண்டும் ஒப்படைப் பதில்லை என்ற திடமான முடிவு அவரிடம் இருந்தது.

''சோழநாட்டை மூன்று கூறுகளாகப் போடப் போகிறேன். குறுநில மன்னர்கள் நாட்டை ஆளுவார்கள். அவர்களுக்குப் பெரும் சாம்ராஜ்ய ஆசை இருக்காது. மேலும் நமக்குச் சோழநாட்டை ஆளவேண்டும் என்ற ஆசை என்றுமே இல்லை. பிறர் மண்ணில் ஒரு பிடிகூட நமக்கு வேண்டாம். நமது பூமியில் சிறு மணலைக் கூட மாற்றான் அபகரிக்கவும் விடமாட்டோம்'' என்று உறுதியாகக்

கூறியதைக் கேட்ட அமைச்சருக்குச் சோழசாம்ராஜ்யத்தின் முடிவு மனக்கண் முன் தெரிந்துவிட்டது.

''ஆனால்...'' என்று சுந்தரபாண்டியன் ஏதோ சொல்ல வாயெடுத்துச் சற்று நிறுத்திச் சிந்திக்கத் தொடங்கினான்.

''அரசே!'' என்று குரல் கொடுத்து அவரது சிந்தனையை கலைத்து, அவர் சொல்ல வேண்டியதைக் கேட்டறிய முற்பட்ட குருகுலத்தரையன், ''ஏதோ முக்கியமான ஒன்றைச் சொல்ல முற்பட்டீர்களே...'' என்று கூறவும் சுந்தரபாண்டியன் சற்றுக் கவலை நிறைந்த குரலில், ''குருகுலத்தரையரே! வடக்கேயிருந்து சோழர்களது படையெடுப்பு ஒன்றிறைக் குறித்து மட்டும் இதுவரை கவலை கொண்டிருந்தோம். இனிமேற்கேயிருந்து வரக்கூடிய எதிர்ப்புக்கு நாம் ஈடுகொடுக்க வேண்டியிருக்கும்...'' என்றான்.

''எதைச் சொல்கிறீர்கள் அரசே? கொங்கு நாட்டவர்களைத்தான் நாம் முன்பே அடக்கிவிட்டோமே!'' என்றார் குருகுலத்தரையர்.

''கொங்குநாட்டவரைச் சொல்லவில்லை. அதற்கும் மேற்கே துவாரசமுத்திரத்தினின்று போசளர்கள் நம்மை விழுங்க எப்போது நேரம் என்று காத்திருக்கிறார்கள்'' என்று கூறிப் பெருமூச்சுவிட்டான் சுந்தரபாண்டியன்.

சுந்தரபாண்டியன் இதுபோல் பெருமூச்சுவிட்டு குருகுலத் தரையன் கண்டதில்லை. கவலையென்பதே அறியாது எடுத்த காரியத்தைத் தோல்வியின்றி முடிக்கக்கூடிய அவனுக்கு இப்படி யொரு கவலை உள்ளத்தே இருப்பது வியப்பாக இருந்தது.

''போசள மன்னர் வல்லாளத்தேவன்தான் முன்பே காலமாகி விட்டானே!'' என்று குருகுலத்தரையன் கூறினார்.

''வல்லாளத்தேவனை விட அவன் மகன் வீர நரசிம்மன் திறமை மிகுந்தவன். சோழ, பாண்டிய நாடுகள் இரண்டையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவருவதே அவனது நோக்கம். அதற்குச் சோழர்களைத் தமது வலையில் சிக்கவைக்கத் திட்டமிடுகிறான். அவனை முறியடிக்க வேண்டும்'' என்றான் சுந்தரபாண்டியன்.

''உடனே நமது பெரும் படைகளைத் துவாரசமுத்திரம் நோக்கி நடத்திச் செல்வோம்...'' என்றார் குருகுலத்தரையன்.

சுந்தரபாண்டியன் உடனே மறுமொழி கூறவில்லை. அந்தக் கூட்டத்தில் சிங்கம் போல் நடை பயின்றான்.

''அது சாத்தியமில்லை குருகுலத்தரையரே! நமது படைகளை விடப் பன்மடங்கு பெரியது போசளர்ப்படைகள்...''

''படைபலத்துக்கு அஞ்சுவது நமது குணமன்றே...?''

''இந்தச் சமயத்தில் போசள நாட்டின் மீது படையெடுப்பது சரியில்லை. போசளப்படையின் ஒரு பகுதியை முன்னெச்சரிக்கை யாகக் காவிரியின் வடகரையில் தண்டச்சோறு போட்டுத் தங்க வைத்துள்ளான். அவர்களைத் நாம் அங்கே தாக்கினால், கொங்கு நாட்டையும் நமது எல்லையையும் தென்மேற்கேயிருந்து தாக்குவான். கொங்குநாட்டவனும் அவர்களுடன் சேரமாட்டான் என்று சொல்ல முடியாது. சோழர்கள், போசளர்கள், கொங்கு நாட்டவர் என்று மும்முனைத் தாக்குதலுக்கு நாம் ஈடுகொடுக்க முடியுமா என்பது சந்தேகமே. நாம் தந்திரத்தைக் கையாள வேண்டும்...''

''தந்திரமா?''

''ஏன் தந்திரம் வீரத்துக்கு உடன்பாடில்லையோ?''

''அப்படிச் சொல்லவில்லை.''

''மும்முனைப் போட்டியைத் தவிர்க்கவே தந்திரம். பிறகு நமது திறமைதான் உறுதுணை. போசளமன்னனின் பகல்கனவைத் தவிடு பொடியாக்க இரண்டே வழிகள். ஒன்று, அவனை படைபலத்தால் வெல்வது. மற்றொன்று அவனுடன் மணவினைத் தொடர்பு கொணடு நம் பக்கம் சேர்த்துக்கொள்வது...''

''மணத்தொடர்பா? நம்மிடம் போசள மன்னனுக்கு மணம் புரிவிக்கத் தக்க பெண் இல்லையே!''

''நம்மிடமில்லாவிட்டால் என்ன? அவனிடமிருக்கிறது. போசளன் சோழ, பாண்டியர்களுடன் திருமணம் மூலம் தொடர்பு கொள்ள ஆசைப்படுகிறான்.''

சுந்தர பாண்டியன் இவ்வாறு கூறி·நிறுத்தியவுடன், குருகுலத் தரையன் திகைத்தவராய், ''அரசே! எங்களுக்குத் தெரியாத செய்தி களையெல்லாம் நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள். ஒற்றர்கள்

தங்களுக்கு மட்டும் இரகசியச் செய்தியைக் கூறுகிறார் களா? அல்லது தாங்கள் இரகசிய ஒற்றர்படையினரை ஏற்படுத்திக் கொண்டிருக் கிறீர்களா?'' என்று வினவவும் சுந்தர பாண்டியன் மீண்டும் நகைத்தான்.

''குருகுலத்தரையரே! போசள மன்னனுக்குத் தூது அனுப்புங்கள் - அவரது சகோதரியை மணம் புரிந்து கொள்ளச் சம்மதம் என்று'' என்றார்.

''தாங்களா? இந்த வயதிலா?'' - குருகுலத்தரையன் வியப்புடன் கேட்டார்.

''குருகுலத்தரையரே! ஏன் நான் மணம் புரிந்துகொள்ளக் கூடாதோ? அந்தப்புரத்திலுள்ள நூற்றுக்கணக்கான அழகிகளுள் ஒருத்தியாக போசள இளவரசியையும் சேர்த்துவிட்டால் போகிறது'' என்று கூறிக் கண்சிமிட்டினான். பிறகு திடமான கருத்துடன் அமைதியான குரலில், ''குருகுலத்தரையரே! திருத்தங்காவில் திருமாலுக்கும் சிவபிரானுக்கும் கோயில் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள் என்பதை நான் அறிவேன். அந்த நல்ல காரியத்துடன் நான் இடும் இப்பணியையும் மேற்கொள்ளுங்கள். துவார சமுத்திரத்திற்குப் பெண் கேட்டுத் தூது அனுப்புங்கள். உடனே செயலாற்றுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

குருகுலத்தரையன், தக்க தூதுவரை அனுப்பிச் செயலாற்ற எழுந்த போது அவரைச் சுந்தர பாண்டியன் அருகழைத்து, ''குருகுலத்தரையரே! அதிலும் சோழனின் போட்டியிருக்கிறது. வீர நரசிம்மனிடம் சோழனும் தூது அனுப்பத் திட்டமிட்டிருக்கிறான்'' என்றான்.

குருகுலத்தரையனுக்கு வியப்புத்தாங்கவில்லை சக்ரவர்த்திக்கு ஞானதிருஷ்டியில் இவையெல்லாம் தெரிகிறதா என்று ஆச்சரியப் பட்டார்.

''ஆமாம். கங்கைகொண்டசோழபுரத்திலிருந்து நாட்டிய மங்கை ஒருத்தி வீரசிம்மனிடம் தூதுசெல்லப் போகிறாளாம்'' என்று கூறிய போது குருகுலத்தரையன் பேச நாவெழாமல் அரசனுக்குள்ள ஆற்றலைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து மூழ்கி நின்றார்.

# 19

மணவாளனின் மாளிகை நந்தவனம் மிகப்பெரியது. அங்கே மலர்ச்செடிகளும் கொடிகளும் நிறைந்திருந்தன. தோட்டத்தைச் சுற்றிலும் கோட்டைமதிலை போன்ற சுவர். பவழமல்லியின் மணம் காற்றுவீசுவதற்குத் தகுந்தவாறு பரவியது. நாகலிங்க மலர்கள் பூக்கத் தொடங்கியதால் எழும் மணம் தெய்வீகத்தன்மையை அளித்தது செண்பகமலரும் மல்லிகையும் இளம் உள்ளங்களுக்கு ஏற்றவாறு மனமயக்கத்தை அளித்தன.

குஞ்சரியின் புலன்களை அவை ஏதும் தூண்டவில்லை. மணவாளனின் பிடியினின்று தப்பி ஓடினால் போதும் என்ற ஒரே நோக்கம். இப்போது மதிலைத் தாண்டி விட்டால் கோயிலை நோக்கி ஓட்டம் பிடிப்பது அவளுக்குக் கஷ்டமில்லை.

மதிலை ஒட்டி வளர்ந்திருந்த மரத்தின் மீது ஏறினாள். ஆபத்து வேளையில் மரம் ஏறுவதும் அவளுக்கு ஒன்றும் கடினமாகத் தோன்றவில்லை. மரக்கிளை மதிலை ஒட்டிச் சாய்ந்திருந்தது.

அதன் வழியே மெல்ல எச்சரிக்கையாக மதிலின் மீது இறங்கினாள். மதில் மீது நடப்பது அவளுக்குப் பழக்கமானதுதான். ஆனால், இங்கே மதில் அகலக்குறைவாக இருந்தது. அங்கிருந்து கீழே குதிப்பது அவ்வளவு எளிதன்று. மிக அருகே அடர்த்தியாகக் கொடிகள் படர்ந்திருந்தன. அதைப் பற்றிக் கொண்டு கீழே இறங்கினாள். அவள் இறங்கு முன்பே கொடி அறுந்துவிட்டது. கீழே புதர் அடர்ந்திருந்ததால் அவள் மேனிக்கு எந்தவிதத் துன்பமும் நேரவில்லை. ஆனால், அச்சத்தால் அவள் அதிர்ச்சியடைந்தாள்.

"நமக்கு எதற்கு இந்த அரசாங்க விவகாரம். மற்ற பெண்களைப் போல் வாழ்க்கைக் கரும்பின் அணுக்களைச் சுவைத்தவாறு காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கலாம். மனிதர்கள் விரும்பும் உடலழகை வேண்டியவர்களுக்கு ஈந்து வேண்டுவன பெற்றிருக்கலாம். அல்லது இந்த உலகத்துச் சிற்றின்ப நினைவுகளின்றி ஈசன் இணையடி நிழலெனும் பேரின்பத்தை அடைய வழிகோலியிருக்கலாம்.

"நாட்டைக் காப்பாற்றும் முயற்சியில் நாம் ஈடுபடுவானேன்? கள்வனைப் போல் மதில் ஏறிக் குதிப்பானேன்? மணவாளனின்

பிடியில் சிக்காமல் மறைந்து ஓடுவானேன்? இளவரசருக்கும் எனது நாட்டுப் பணியின் மீது நாட்டமில்லை. இறைவன் என்னிடம் ஏனோ வீணே படைத்து விட்ட அழகுடலின் மீது நாட்டம். என்னை அவருக்கு அர்ப்பணிப்பதாயிருந்தால் நாட்டைக்கூட அவர் மறந்து விடுவார். எனக்குப் பிறகுதான் சோழநாடு என்றுகூட முடிவுசெய்து விடுவார்.

''மணவாளனுக்கு அந்தக் கவலையே இல்லை. அவனுக்குச் சோழநாடு எப்போதும் முக்கியமானதன்று. மங்கையரின் மேனிக்குப் பிறகுதான் மற்றவை. நான் தலையசைத்தால் மணவாளன் சோழநாட்டிற்கு ஆதரவாளனாகவும் மாறிவிடக்கூடும்.

இப்படிப்பட்ட நிலையில் நான் என்ன செய்யவேண்டும் என்று யோசனை கூறக்கூடிய காளியாரும் காராக்கிருகத்தில் அடைக்கப் பட்டு விட்டார். என்ன அநியாயம்! நாம் அவருடைய அன்புக்குப் பாத்திரமானவள். நம்மையும் கூட இளவரசர் ஏதாவது பழி சுமத்தித் தண்டனையளித்து விடலாம்.

''தண்டனைதானே! மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம். வயதுக்கு மீறி அரசியல் பூசலில் இறங்கினோமே. அதற்காக மகிழ்ச்சி யுடன் ஏற்றுக்கொள்வோம்!'' - குஞ்சரியின் சிந்தனை விரிந்தது.

மதிலினின்று குதித்த இடத்திலேயே சிறிது நேரம் உட்கார்ந்து விட்டாள். சற்று இளைப்பாறிய பிறகு நேராகத் தாயிடம் சென்று நடந்தவற்றைச் சொல்ல எண்ணினாள். பிறகு சக்ரவர்த்தியிடம் முறையிடத் திட்டமிட்டாள்.

மதிலின் மறுபக்கம் யாரோ பேசும் குரல் கேட்டது.

''இந்தப் பக்கம் வந்திருக்க முடியாது...''

''வந்திருந்தாலும் மதிலின் மீது ஏறியிருக்க முடியாது.''

''ஏறினாலும் குதித்திருக்க முடியாது.''

''குதிக்கமாட்டாள்.''

''ஏன்? உனக்கு எப்படித் தெரியும்?''

''குதித்தால் கால் ஒடிந்துவிடும். எந்த நடனக்காரியாவது நொண்டியாவதை விரும்புவாளா?''

''இவள் நடனக்காரியல்லள். மாளிகையில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துக்கொண்டு இளவரசியாக ஆசை கொண்டவள்...''

குரலொலி மிகத் தெளிவாக கேட்டது. அவர்கள் அந்த இடத்தை விட்டு நகராமலே பேசிக்கொண்டிருக்கிறார்கள், மணவாளனின் ஆட்கள்!

அந்த நெருக்கடியான நேரத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''இளவரசியாகப் போகிறேனாம்! அப்படி ஒரு ஆசையாம். இறைவா! கங்காபுரிச் சோழீசா! நீயே சொல் எனக்குச் சோழநாட்டு இளவரசியாகும் எண்ணம் கடுகளவாவது இருக்கிறதா! அப்படி இருந்திருந்தால் இளவரசரின் பசிக்கு விருந்தளித்திருக்க மாட்டேனா?''

குஞ்சரி மூச்சுவிடாமல் அடக்கிக்கொண்டாள். 'ஏன் இவ்வாறு சொல்லாமல் ஓடிவந்தோம்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். பணிப்பெண்கள் மணப்பெண்கள் போல் அவளைச் சிங்காரித்திருந்தனர். விலை மதிப்பற்ற நறுமணப் பொருள்கள் அவள் உடலில் பூசப்பட்டிருந்தன. அந்த வாசனைத் தைலங்களின் மணமே மிகத்தொலைவிலும் வீசும். ஓடிவராமல் இருந்திருந்தால் மண வாளனின் பசிக்கு இரையாகியிருக்க வேண்டும். அவனது விருந்தாகி யிருந்தால் பாண்டிய நாட்டோடு சமரசம் பேசத் தன்னை உடனே அவன் அனுப்பியிருப்பான்.

'ஏன் அவ்வாறு செய்திருக்கலாமே... போரைத் தவிர்க்கலாமே!' குஞ்சரி இவ்வாறு நினைத்துச் சிரித்துக்கொண்டாள்.

''சோழசக்ரவர்த்தி யுத்தத்தைக் குறித்து அஞ்சவில்லை. பாண்டியர்களுக்கு அடிமையாக இருப்பதைவிடப் போர் செய்து மடிவது மேல் என்றுகூட அவர் ஒரு சமயம் கூறியிருக்கிறார். சுதந்தர உணர்ச்சியுடன் அவர் படை திரட்டுகிறார். அடிமைப்பட்டிருக்கும் நாட்டைச் சேர்ந்தவர்தானே நாமும்? விடுதலையடைய வேண்டும் எனும் வேட்கை நமக்கு இருப்பது நியாயம்தானே? விடுதலை வேட்கையை விட்டுவிட்டு, மணவாளனின் காமவேட்கைக்கு உட்படுவதால் என்ன பயன்? இதுவரை போற்றிக் காப்பாற்றிய கன்னித்தன்மை குலைந்துவிடும். இதுவரை பிற ஆடவர் ஸ்பரிசம் படா மேனியில் களங்கம் ஏற்பட்டுவிடும். அதற்காகவா இவ்வளவு நாள் நாம் வாழ்ந்தோம். என் உணர்ச்சியை மதித்து தாயும் வளர்த்தாளே, தாயுள்ளம் நொந்து போகச் செய்யலாமா?' -

குஞ்சரியின் கண்கள் அவளையுமறியாமல் பனித்தன. 'அம்மா' என்று வாய்விட்டு அலறவேண்டும் போலிருந்தது. பாண்டிய நாட்டிற்குத் தூது செல்வதைவிட போசளமன்னரிடம் செல்வோம். மன்னரிடமிருந்து ஓலை பெற்றுச் செல்வோம். உதவி கேட்டுச் செல்வோம்!

மெல்ல மெல்ல பேச்சுக்குரல் மதிலின் மறுபக்கம் குறைந்தது. இனியும் அந்த இடத்தில் மறைந்திருப்பதும் சரியன்று என்ற எண்ணத்தில் குஞ்சரி புதரின் மறைவிலிருந்து எழுந்தாள். படர்ந் திருந்த கொடிகளை விலக்கிக்கொண்டு ஓரடி எடுத்து வைத்தாள்.

அவளது தோளை ஒரு கரம் பற்றியது. அந்தப் பிடியில் முரட்டுத்தனமும் அழுத்தமும் தென்பட்டன.

''என்னிடமிருந்து அவ்வளவு எளிதில் தப்பமுடியாது!'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள் குஞ்சரி.

# 20

குஞ்சரியின் தோள்பட்டையை மிக அழுத்தமாகப் பிடித்து, ''என்னிடமிருந்து அவ்வளவு எளிதில் தப்ப முடியாது'' என்ற குரல் கேட்டவுடன் குஞ்சரி நடுங்கிவிட்டாள். உடலெங்கும் குப்பென்று வியர்த்து விட்டது. இலேசான நடுக்கம் வேறு. பிற ஆடவர் அப்படித் தன்னுடலை அழுத்திப் பிடித்ததால் ஏற்பட்ட வேதனையைவிட அந்தக் குரல்தான் அவளை நடுக்கமுறச் செய்தது.

மணவாளன் நின்றிருந்தான். ''குஞ்சரி, உன்னை இவ்வளவு எளிதில் இழப்பதற்காகவா, எனது சொந்த மாளிகைக்கு அழைத்து வந்தேன்'' என்று அவன் கூறிய சொற்கள் அம்பாகத் தைத்தன.

''நீ ஓடிப்போய் என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டு நகைத்தான் மணவாளன். குஞ்சரி ஏதும் பேசவில்லை.

''நீ யாருக்காக இவ்வளவு காலம் உழைத்தாயோ. அந்த இடத்திலும் உனக்கு நல்ல பெயர் இல்லை. உன்னைத் துரோகி என்று பட்டம் சூட்டியிருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியாதா?'' - மணவாளனுடைய சொற்கள் சடுசரமாக வீழ்ந்தன.

அவன் சொற்களைவிட அவனுடைய பிடியினின்று விடுதலை யடைய விரும்பினாள் குஞ்சரி. மெல்ல நெளிந்தாள். வலதுகரத்தால் அவனது பிடியைத் தள்ளி, ''என்னை விட்டு விடுங்கள்'' என்று சிணுங்கினாள்.

''ஏன் வலிக்கிறதா?'' என்று அவனது குழையும் குரல் அவளுக்குக் கொடூரமாய் ஒலித்தது.

''ஒரு பெண்ணை நடத்தும் விதம் உங்களுக்கே நன்றா யிருக்கிறதா?'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள் குஞ்சரி.

மணவாளன் 'ஹோ... ஹோ' என்று சிரித்துவிட்டான். ''நீ ஒரு பெண் என்பதையே மறந்து விட்டேன். ஒரு பெண் செய்யக்கூடிய காரியத்தையா நீ சோழமன்னருக்குச் செய்து வந்தாய்!'' என்று கூறி மீண்டும் நகைத்தான்.

குஞ்சரிக்கு இப்போது பயம் குறைந்து சீற்றம் மிகுந்தது. அவனது பிடியினின்று விடுவிக்க தன் உடலையே ஒரு முறை சிலிர்த்துக் கொண்டாள். மணவாளன் பிடி தளர்ந்தது.

''நீ எங்கேயும் போய்விட முடியாது. என்னை ஏமாற்றிவிட்டுத் தப்பிச்சென்று விடவும் முடியாது. பேசாமல் என்னுடன் வந்துவிடு. என் மாளிகைக்குள்ளிருக்கும் பாதாள வழியின் மூலம் கோட்டைக்கு வெளியே சென்று விடுவோம். பிறகு நீ உன் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்'' என்று மீண்டும் அவளுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டான்.

''நீங்கள்தான் கோட்டைக்கு வெளியே சென்று உயிர் தப்ப வேண்டும். என்னையும் ஏன் அழைக்கிறீர்கள். என்மீது என்ன அவ்வளவு அக்கறை?'' - குஞ்சரி சீறினாள்.

''உன் மீது எனக்கு எப்போதுமே பிரியம் அதிகம். உன்னை அடைய வேண்டும் என்று எவ்வளவோ ஆண்டுகள் ஏங்கியிருக் கிறேன். உன் தாயிடம் கெஞ்சியிருக்கிறேன். உன்னைக் காப்பாற்றும் நாயகன் போல் காளியார் வியூகம் அமைத்திராவிடில் நான் உன்னை எப்போதோ சேந்தமங்கலத்துக்குத் தூக்கிச் சென்றிருப்பேன்..'' என்று ஆசை கொப்பளிக்கப் பேசிக்கொண்டே போனவனை வேறுவிதமாக

மடக்க விரும்பிய குஞ்சரி, ''என் மீது மட்டும் உனக்கு என்ன அவ்வளவு ஆசை? என்னைவிட அழகிகள் இந்த கங்காபுரி யிலில்லையா?'' என்று கேட்டாள்.

''நல்ல கேள்வி கேட்டாய். உன்னைவிடப் பதின்மடங்கு அழகுள்ளவர்கள் கங்காபுரியில் மட்டுமென்ன, இந்தச் சோழ நாட்டிலிருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடும் போது நீ ஒரு சிறு முயல். என்றாலும் எனக்கே தெரியவில்லை. உன்னைத் தழுவ எனக்கு ஏனோ ஒரு ஆவல்'' என்று கூறிப் பெருமூச்சிட்டான்.

இதுவரை 'நீங்கள், நீங்கள்' என்று அழைத்து வந்த குஞ்சரி மணவாளனைத் துரும்பைப் போல் பாவித்து ''நீ ஒரு காமவெறியன்!'' என்றாள்.

''ஆம் காமவெறியன்தான்! உங்கள் இளவரசன் ராசேந்திரனும் காமவெறியன்தான். ஆனால், அவனால் ஒரு பெண்ணின் அருகில் கூடச் செல்ல முடியாது. உன்னிடமே அவனால் நெருங்க முடிய வில்லை என்றால் பிறகு அவனைத் தேடி எந்தப் பெண் வருவாள்?''

''இளவரசரை மரியாதைக் குறைவாகப் பேசாதே!'' - குஞ்சரி மீண்டும் சீறினாள்.

''உனக்கு அவன் இளவரசன். எனக்கு அவன் விரோதியின் மகன். அவர்கள் கண் எதிரிலேயே உன்னை அடைந்து காட்டுகிறேன் பார்...''

''கனவிலும் நடக்காது. ஏன் வீணே உனது நேரத்தை என்னை எண்ணியே கழிக்கிறாய்? என் நிழலைக்கூட உன்னால் மிதிக்க முடியாது. உன்னுடைய நடவடிக்கை அனைத்தும் சக்ரவர்த்திக்கு தெரியும். முதலில் உன்னைச் சிறையிலடைக்கச் சொல்லாமல் நான் உறங்கப் போவதில்லை'' என்று குஞ்சரி கூறவும், மணவாளன் மீண்டும் பயங்கரமாக நகைத்து, ''குஞ்சரி! இந்த மணவாளனை நீ மிகச் சாதாரணமாக நினைத்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. பேதைப் பெண்ணே! உன் சக்ரவர்த்தியால் என் நிழலைக்கூடப் பிடிக்க முடியாது. கோட்டைக்குப் பலத்த காவலிட்டார். கோட்டைக் கதவுகளை மூடினார். என்னவாகியது? எனது ஆட்கள் ஒருவரைக் கூட அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி என்று நீ மரியாதை வைக்கும் ராஜராஜன் சாதாரண மனிதனாக நடைமெலிந்து இதே சோழ நாட்டில் உலவப் போகிறான் பார்!

குஞ்சரி! நீ புத்திசாலிப் பெண்ணானால் இப்போதே என் ஆசைக்கு இணங்கு. என் மாளிகையில் சுகபோகமாயிரு. வீணே 'சோழநாடு, சோழநாடு' என்று அலைந்து திரிந்து உன் வாழ்வைக் கெடுத்துக் கொள்ளாதே!...'' என்று மணவாளன் பேசிக்கொண்டு போகும் போதே, குஞ்சரி தன் பலங்கொண்ட மட்டும் தனது வலது கையை மடக்கிக்கொண்டு அவனது வாயைப் பார்த்து ஓங்கிக் குத்தினாள். அது குறி தவறி மூக்கில் பட்டது!

'சளசள'வென்று குருதி பாயும் ஒலியும் கேட்டது.

''ஐயோ'' என்று மணவாளன் தன் மூக்கைப் பிடித்துக்கொள்ள எத்தனித்த போது, குஞ்சரி அங்கிருந்து விடுபட்டு ஓடத் தொடங்கினாள்.

''குஞ்சரி, ஓடாதே நில்'' என்று மற்றொரு குரல் கேட்டது.

இளவரசர் ராஜேந்திரன் நின்று கொண்டிருந்தார். அவருடன் சோழவீரர்கள் பலரும் நின்று கொண்டிருந்தனர்.

''உம், ஏன் நிற்கிறீர்கள். இவ்வளவு நாட்களாக விட்டு வைத்தது தவறு என்பதைச் சக்ரவர்த்தி இப்போதாவது உணருகிறாரா பார்ப்போம். சங்கிலி கொண்டு பிணைத்து, உடனே பாதாளச் சிறையிலடையுங்கள். பலத்த காவல் இருக்கட்டும். காலையில் பேசிக் கொள்வோம்'' என்று கூறிவிட்டு, குஞ்சரியின் பக்கம் திரும்பி ''பெண்ணே! உனக்கு எதற்கு ராஜ்ய விவகாரங்கள்? உன்னால் சோழ நாட்டைக் கவிழ்த்துவிட முடியுமா? துரோகச்செயலை எவ்வளவு காலம் மறைக்க முடியும்'' என்று கூறும் போது குஞ்சரி ஆக்ரோஷத்துடன், ''என்ன சொன்னீர்கள்? இளவரசர் என்பதனால் தான் தங்களைச் சும்மா விடுகிறேன். அந்த மணவாளன் மூக்கிற்கு நேர்ந்த கதி உங்களுக்கும் நேர வேண்டுமா? துரோகி என்று இன்னொரு மு:•:ற கூறினால் உங்கள் நாவை ஒட்ட நறுக்கி விடுவேன்'' என்று சீறினாள்.

ராஜேந்திரன் அலட்சியமாகச் சிரித்தார். ''ஆகா; மூக்கையும் நாக்கையும் நறுக்குமளவுக்கு பெரிய பட்டாக்கத்தி வைத்திருக் கிறாயோ? அந்தக் கத்தியை நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம்'' என்று கூறி, சேவகர்கள் பக்கம் திரும்பி, ''இவளையும் அரண்மனை விருந்தினர் கூடத்தில் தனிஅறையில் அடையுங்கள். சுற்றிலும் காவல் பலமாக இருக்கட்டும்'' என்று கட்டளையிட்டுவிட்டு ஒரு

பெண் தன்னை இவ்வாறு அவமானப்படுத்திவிட்டாளே என்ற வேதனை ஆத்திரமாக மாற விரைந்து சென்றான்.

குஞ்சரிக்கு ஏதும் புரியவில்லை. 'இந்த மாதிரி நடப்பதெல்லாம், கனவா? நனவா?' வினாடிக்கு வினாடிச் சம்பவங்கள் எதிர்பாராமல் மாறுகின்றனவே என்று திகைத்து நிற்கும் போது, ''உம். நேரமாகிறது. நடந்து வருகிறாயா அல்லது பல்லக்கு வேண்டுமா?'' என்று காவலன் ஒருவன் அதட்டினான்.

குஞ்சரியின் விழிகளிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர், மண்ணில் வீழ்ந்தது.

எந்தச் சோழ மண்ணிற்காக அவள் தன் மானம், மரியாதை, கற்பு இவற்றைக் காப்பாற்றி உழைக்கிறாளோ அவற்றுக்கு ஆபத்து வருமோ என்ற அச்சமும், சோழ மண்ணிற்கே ஆபத்து வந்துவிடுமோ என்ற கவலையும் நிறைந்தவளாய், காவலர்களைப் பின்தொடர்ந்தாள்.

## 21

**சோ**ழ மாமன்னர் ராஜராஜன் எதிரே காளியார் நின்று கொண்டிருந்தார். அவர் முகத்தில் முன் எப்போதையும் விடக் கம்பீரம் நிலவியது. சில நாட்கள் சிறையில் வாடியதால் ஏற்பட்ட தளர்ச்சி உடலுக்குத்தான். உள்ளத்துக்கு இல்லை.

''அமருங்கள் காளியாரே!'' என்று ராஜராஜன் சொல்லும் போதே ஏதோ குற்ற உணர்ச்சி குரலில் பிரதிபலித்தது.

''உட்காரமாட்டீர்களா? தாங்கள் நின்றால் நானும் நிற்க வேண்டி வரும்'' என்று அரசர் கூறும்போது காளியார் வாய் பொத்தி, ''அரசர்க்கரசே! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? நீங்கள் நிற்பதும் கூடாது! நான் அமருவதும் தகாது!'' என்றார். அவர் அதிகம் பேசவில்லை.

''இல்லை, இல்லை. நீங்கள் உட்கார்ந்தால்தான் தங்களுடன் மனம்விட்டுப் பேச முடியும். மன்னிப்புக் கேட்க வார்த்தைகள் வரவில்லை. காளியாரே!'' என்று மன்னர் கூறவும் காளியார் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்.

அவர் விழிகளில் உள்ளத்தில் ததும்பி நிற்கும் நன்றிப்பெருக்கு நீராய் வடிவெடுத்தது. குரல் தழுதழுக்க "சோழகுலத்தைக் காக்க வந்த மாமன்னர் அவர்களே! நீங்கள் சொற்களால் என்னைக் கொன்று விடாதீர்கள். மன்னிப்புக் கேட்பது, உட்காரச் சொல்வது போன்ற வார்த்தைகள் என் இதயத்தைச் சுடுகின்றன. கடமையைச் செய்யும் சோழநாட்டு ஊழியன் ஒருவனுக்கு அரசரின் அன்பு ஒன்றே போதும். அதற்குமேல் வேறு எந்தப் பரிசும் வேண்டாம்..." என்று கூறினார்.

"காளியார் அவர்களே. தங்களைப் போன்ற அரசகுல விசுவாசிகளின் மனம் புண்படும்படி செய்தது மன்னிக்க முடியாத குற்றம். இருந்தாலும் வயதில் என்னைவிட மூத்தவரான தங்களிட மிருந்து 'மன்னித்தேன்' என்ற வார்த்தையைப் பெற்றால் தான் என் மனம் ஆறுதல் அடையும். என் மனத்தில் அரசன் என்ற மமதை இல்லை..." - ராஜராஜர் குரலில் இதய ஒலியின் மெல்லிய ஓசை கேட்டது.

"உலகம் எங்கும் புகழ்ப் பெயர் நாட்டிய ராஜராஜசோழரின் மரபில் வந்த மாமன்னரே! 'இராசகேசரி' என்ற பட்டப் பெயருடன் அவர் சீரும் சிறப்புமாக அரசாண்டார். அதே ஒற்றுமை தங்களுக்கும் கிடைத்திருக்கிறது. தாங்களும் இராசகேசரி 'திரு மன்னி வளர இரு நில மடந்தையும், போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன் பெருந்தேவியராகி இன்புற' என்ற மெய்கீர்த்தி உடையவர், தங்கள் மூதாதை ராஜராஜர். தங்கள் மெய் கீர்த்தியைப் புலவர்கள் பாடக் கேட்டிருக்கிறேன். முழுவதும் எனக்கும் பாடமில்லை. 'சீமன்னி இருநான்கு திசை விளங்கு திருமடந்தையும் போர் மன்னுசய மடந்தையும் மணம் புணர' என்று தொடங்கும் அந்தக் கம்பீரமான சொற்களை என் மனத்தில் ஓர் வீர ஆவேசத்தை ஏற்படுத்தும். 'உட்பகையும் புறப்பகையும் மறக்கடித்து...' என்ற வாசகங்களைக் கேட்கும் போது மனத்தில் ஒருவித வேதனை உண்டாகும். சக்ரவர்த்தி அவர்களே! தங்களுக்குத் தெரியாதது ஏதுமில்லை. நமது நாட்டில் உட்பகையும் பூசலும் அதிகம் மலிந்திருப்பதால்தான் பாண்டியருக்குக் கொண்டாட்டமாக இருக்கிறது.

"மணவாளனுடைய சூழ்ச்சி நமது படைபலத்தையும் வென்று விடும் போலிருக்கிறது. அவனது சூழ்ச்சிகளை முறியடித்து வந்த என்னை அவன்தான் தீர்த்துவிடுவான் என்று எண்ணினேன். ஆனால்,

இளவரசர் இப்படிச் செய்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் உயிரோடு இருப்பேனோ, மாட்டேனோ! அடுத்து இந்த நாட்டை நல்ல முறையில் ஆட்சி நடத்த விருக்கும் இளவரசர் தர்மநியாயமாக நடக்க வேண்டாமா? விஜயாலய சோழ மாமன்னர் வளர்த்த பொன்னி வள்நாடு, இளவரசால் அவப்பெயர் பெற்று அழிய வேண்டுமா? சக்ரவர்த்தி அவர்களுடைய சமூகத்திற்கு நான் வேண்டிக்கேட்பதே, இளவரசரின் போக்கைத் தாங்கள் கண்காணித்துச் சீர்திருத்த வேண்டும்...'' என்று நீண்ட பிரசங்கம் போல் சொல்லி முடித்து மன்னரின் கால்களில் தடாரென்று வீழ்ந்துவிட்டார்.

மன்னர் ராஜராஜர் இதை எதிர்பார்க்கவில்லை. பரபரப்புடன் காளியாரைத் தூக்கி நிறுத்தி, ''என்ன செய்து விட்டீர்கள், காளியாரே! பாவமூட்டையைச் சுமக்கச் செய்கிறீர்கள். தங்களைச் சில நாட்கள் சிறையிலடைத்திருந்ததன் மூலம் அழிக்க முடியா பாவத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன். என்னைவிட வயதில் மிகுந்த நீங்கள் காலில் வீழ்ந்து வணங்கலாமா?'' என்று கேட்கவும், காளியார் விழிகளைத் துடைத்துக்கொண்டு,

''நான் சிறையில் வாடவேண்டும் என்பது ஆண்டவன் சித்தம். முன்பிறவியில் நான் செய்த பாவத்தின் தண்டனை. மன்னர் எடுக்கும் முடிவுக்கு எந்தவிதப் பாவமும் இல்லை. நாட்டின் நலனுக்காக மன்னர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கலாம். மற்றொன்று, நாட்டின் மாமன்னரை விட அனைவரும் சிறியவர்களே. குடிமக்கள் எப்போதும் வணங்குவதற்குக் கடமைப்பட்டவர்கள். சக்ரவர்த்தி அவர்களே, நமது எதிரே மகத்தான பிரச்னைகள் உள்ளன. கடந்த நாட்களில் பாண்டியர்கள், எந்தவித நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என்பது தெரியவில்லை. குஞ்சரியை போசளநாட்டிற்குத் தூது அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்திருந்தோமே...'' என்று காளியார் பேச்சின் திசையை மாற்றியவுடன், ராஜராஜர் ஏதோ நினைவுக்கு வந்தவர் போல், காளியாரை அருகே அழைத்தார். மிகவும் முக்கிய செய்தியை அவர் செவிகளில் மட்டும் கேட்கும் வகையில் கூறினார்.

''இப்போது யாரையும் நம்பமுடியவில்லை. செய்திகள் உடனுக்குடன் எதிரிகளுக்குத் தெரிந்துவிடுகின்றன. அதைப் போல் மதுரையினின்றும் செய்திகள் வந்து விடுகின்றன. பாண்டியர்களின்

பிடியினின்று சோழநாட்டை மீட்ட பிறகு ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்ய எண்ணியுள்ளேன்'' என்று கூறியவர் மிக மெல்லிய குரலில், ''காளியாரே! கோட்டையை உடனே பலப் படுத்துங்கள். மதுரையினின்று பாண்டியர் படைகள் புறப்பட்டு விட்டன என்ற செய்தி கிடைத்துள்ளது. ஆனால், சுந்தர பாண்டியன் படைகளுடன் வரவில்லை. 'அற்ப சோழர் படைகளை எதிர்க்க, படைத்தளபதியே போதும்' என்று கூறிவிட்டானாம். குஞ்சரியை உடனே துவாரசமுத்திரம் அனுப்ப எண்ணியுள்ளேன்'' என்றார்.

''நல்ல முடிவு அரசே! இளவரசருக்கு வீர நரசிம்மனுடைய மகளை மணம் புரிவிப்பதன் மூலம் நமக்குப் புதிய பலத்தைச் சேர்ப்போம். இதே எண்ணத்தைச் சுந்தர பாண்டியன் மனத்தில் கொண்டு தன் மகனுக்கு ஏன் கோசள நாட்டில் பெண் கேட்டு, புதிய உறவை ஏற்படுத்திக் கொள்ளமாட்டார்? அதனால் விரைவில் குஞ்சரியை அனுப்புவோம். மேலும் குஞ்சரியைச் சிறிது காலம் இளவரசர் காணாமல் இருப்பது நல்லது. அவள் மீதுள்ள மோகம் அப்போதுதான் மாறும்'' என்றார்.

இராஜராஜர் மெல்ல நகைத்தார். குஞ்சரியை அழைத்து வ்ருமாறு உத்தரவிட்டார். காளியார் கோட்டைவாயிலுக்கு விரைந்தார்.

ஆனால், நிலைமையே வேறு விதமாக இருப்பதை அவர்கள் எப்படி அறிவர்?

**ம**துரையினின்று புறப்பட்ட பாண்டியர் படைகள் ஒரே மூச்சில் கங்கைகொண்டசோழபுரம் நோக்கி வரும் நோக்கத்தில் விரைந்து வந்தன. போதுமான உணவுப்பண்டங்களைச் சேகரித்துக் கொள்வதற்காகவும் கங்கைகொண்டசோழபுரத்தில் கோட்டைப் பாதுகாப்பு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிந்துகொள்ளவும், இடையில் இரண்டொரு நாட்கள் காவிரிக்கரையில் பாடியிறங்கின.

பலவிதமான செய்திகள் அவர்களுக்குக் கிடைத்தன. போசளப் படைகள் கடல் போல் திரண்டு மதுரையைத் தாக்கச் செல்லப் போவதாக வந்த செய்தி, பாண்டிய வீரர்களுக்குக் கலக்கத்தை அளித்தன. பாண்டியர் படைகள் சோழர்த் தலைநகரைத் தாக்கும் போது அவர்களது கவனத்தையும் பலத்தையும் சிதற அடிக்க இம்முயற்சியை போசளர்கள் கடைப் பிடிக்கிறார்கள் என்பது ஒரு செய்தி.

அன்று மாலை கதிரவன் மேல்வாயில் வீழ்ந்து, இருளரசனின் ஆட்சி எங்கும் ஆக்கிரமித்த சமயத்தில், பாண்டியர் படைகள் தங்கியிருந்த இடத்தில் திடீரென பரபரப்பு ஏற்பட்டது.

மதுரை மாமன்னன் சுந்தர பாண்டியன் ஒருவரும் எதிர்பாராத விதத்தில் பாசறைக்குள் வந்துவிட்டான்.

தளபதியும் முக்கிய அதிகாரிகளும் விரைந்து வந்து பாண்டிய மன்னனை வரவேற்று, அவனது திடீர் விஜயத்தின் முக்கியத்துவம் அறியக் காத்து நின்றனர்.

தளபதியை அழைத்து, படைகளை அங்கே தங்கியிருக்குமாறு செய்தது சரிதான் என்று ஆமோதித்து, அவர் நடவடிக்கையை பாராட்டி, "நமது திட்டத்தை மாற்ற வேண்டும். அதை நிறை வேற்றவே நான் இங்கே வந்தேன். போசளப்படைகள் வருவதைத் தடுக்க ராஜதந்திரத்தைக் கையாண்டு நடவடிக்கை எடுத்து விட்டேன். கொங்குநாட்டுப் படைகள் வரமாட்டா. அது வேறு கதை. அங்கே பட்டத்துக் போட்டி ஏற்படுமாறு நமது ஒற்றர்கள் செய்து விட்டார்கள். நமது உதவி கேட்கவே வருவார்கள். படையெடுத்து அன்று கங்கைகொண்டசோழபுரத்தைத் தான் நாம் தாக்குவதாக சோழர்கள் நினைத்திருப்பார்கள். ஏராளமாகப் படை வீரர்களைத் திரட்டியிருக்கிறார்களாம். கங்கைகொண்டசோழபுரத்திற்குப் படைகள் போய்ச் சேரும் முன்பு நாம் படைகளைத் தடுத்து நிறுத்துவோம்.

"தஞ்சை வழியாக, திடக்குடந்தை சென்று கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி ஒரு பிரிவு முன்னேறட்டும். திருவரங்கம் வழியாக ஒரு பிரிவு செல்லட்டும். நான் ஒரு பிரிவிற்குத் தலைமை தாங்குகிறேன். இந்த முறை ராஜராஜனைச் சிறை செய்து மதுரைக்குக் கொண்டுசென்று விடவேண்டும்" என்றான்.

தளபதியும் மற்றவர்களும் கர ஒலி எழுப்பி, "மதுரை மாமன்னர் வாழ்க! சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியத் தேவர் வாழ்க! வாழ்க!" என்று வீரமுழக்கம் செய்தனர்.

அப்போது வீரனொருவன் விரைந்து வந்து, சக்ரவர்த்தியைக் காண மிக முக்கியமானவர் வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

சுந்தர பாண்டியன் வருபவர் யாராயிருக்கலாம் என்று சிறிது சிந்தித்து, வரச் சொல்லுமாறு கட்டளையிட்டான்.

சுந்தர பாண்டியன் எதிரே இளையமணவாளப்பெருமாள் வந்து நின்றான். அவன் உடைகள் புழுதி படிந்திருந்தன. முகத்தில் சோர்வு காணப்பட்டது. உறக்கமில்லாமல் பயணஞ்செய்த களைப்பு மேலிட்டிருந்தது. அத்துடன் மிக முக்கியமான செய்தி ஒன்றைச் சொல்லும் பரபரப்பும் காணப்பட்டது.

''கோப்பெருஞ்சிங்கன், புதல்வன் இளவரசன் இளைய மணவாளப்பெருமாள்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட வுடன், சுந்தரபாண்டியன் நிமிர்ந்து உட்கார்ந்து, ''வருக, வருக, மணவாளப் பெருமாளே! இப்படி அமருங்கள். பயணஞ் செய்த களைப்பு நீங்க சற்று ஓய்வு எடுத்து, பிறகு நாளைக் காலையில் என்னைச் சந்தித்திருக்கக்கூடாதோ?'' என்று உபசரிக்கவும், மணவாளன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு, ''பாண்டிய சக்ரவர்த்திகளே! மிகவும் முக்கியமான செய்தி, தாமதிக்க நேரமில்லை. இரகசியமான செய்தி'' என்று தெரிவித்தான்.

தாம் சோழ இளவரசரால் சிறையில் அடைக்கப்பட்டதையும் அங்கிருந்துத் தப்பி இரவும் பகலுமாக ஓடோடி வந்திருப்பதாகவும் மணவாளன் கூறியபோது, சுந்தர பாண்டியன் அருகிலுள்ளவர்களை அங்கிருந்து போகுமாறு கூறிவிட்டு, மணவாளன் கூறும் இரகசியச் செய்தியைக் கேட்க ஆயத்தமானான்.

# 22

'தம் தம்' என்று முரசு ஒலி தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தது. போர்வீரர்களை அழைக்கும் ஒலி என்பது விவரமறிந்தவர்களுக்குத் தெரியும். விவரமறிந்தவர்களுக்கு வயது நாற்பதற்கு மேலாகிவிட்டிருந்தது. சிலர் ஆயிரம் பிறை கண்டவர் களாயிருந்தனர். அந்த முரசு ஒலி அவர்கள் உடலில் மெல்லிய சிலிர்ப்பை ஊட்டியது. அச்சத்தால் அன்று. அவர்கள் அந்த ஒலியைக் கேட்டுப் பயந்து ஓடக்கூடியவர்களுமல்லர். இன்னும் சோழ நாட்டுச் சுதந்திர வீர உணர்ச்சி அவர்கள் குருதியோடு கலந்து ஓடிக் கொண்டிருந்தது. அவர்கள் தோளிலே போர்த்தினவு எடுக்கா விட்டாலும் எதிரிகளின் உடலைப் பதம் பார்க்க வேலையும், வாளையும் பிடிப்பதற்குத் துடித்துக்கொண்டு தானிருந்தது.

ஆனால்... அவர்கள் சற்று யோசித்தார்கள். சிறிது நாட்களாகத் தமது குடும்பத்தினருடன் கலந்துபேசிக் கொண்டிருந்தனர். இளைஞர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

''இப்போது போர் தேவைதானா?'' என்ற கேள்வியை அலசிக் கொண்டிருந்தார்கள்.

''சோழநாட்டில் யுத்தத்தைப் பற்றிப் பேசுவதே ஒரு மகிழ்ச்சி தான் தெரியுமா!'' என்று ஒரு பெரியவர் கூறினார். ஆனால், அவர் போரிலே தன் மகனை இழந்தவர். தன் உறுப்பு ஒன்றையும் இழந்தவர். இருந்தாலும், பரம்பரைப் போர்த்துடிப்பு அவரை விட்டகலவில்லை.

''என்ன பெரியவரே! சில நாட்களாகவே உணவுப் பொருட் களுக்குப் பெருந்தட்டுப்பாடு'' என்றான் இளைஞன் ஒருவன்.

''ஆமாம். அப்படித்தானிருக்கும். கோட்டை முற்றுகை யென்றால் உணவுப் பண்டங்களைச் சேமித்து வைக்க வேண்டாமா? அதனால் சற்றுத் தட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும்'' என்று சமாதானம் செய்தார் மற்றொரு பெரியவர்.

''கோட்டையை முற்றுகையிடுமளவுக்கு ஏன் விட வேண்டும். எதிரிகள் கோட்டையை முற்றுகையிடுகிறார்கள் என்றால், நமது பூமியில் பல காதம் நுழைந்து வந்து, ஆக்ரமித்த பிறகுதானே முற்றுகையிடுகிறார்கள் என்று அர்த்தம்? '' நல்ல கேள்வி கேட்டான் ஒரு வாலிபன்.

''அது அப்படியில்லை... வந்து... வந்து'' என்று ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தார் ஒரு பெரியவர்.

''எது எப்படியில்லை? பாட்டா! ஏன் எதிரியை எல்லை யிலேயே தடுத்து நிறுத்தக்கூடாது என்று கேட்கிறேன்?'' - மீசையை முறுக்கினான் ஒருவன்.

''நிறுத்தலாமே! உன்னைப் போன்ற இளவட்டங்கள் கங்கா புரியிலே காரிகைகளின் பின்னால் சுற்றிக்கொண்டிருந்தால், எல்லையில் என்ன, எதிரியின் தலைநகரிலேயே தடுத்து விடலாம்'' என்றார் பெரியவர் சற்றுக் கோபமாக.

அடிபட்ட வேங்கை போல் சீறினான் இளைஞன் : ''பாட்டா, எங்களைப் போய்ச் சொல்ல வந்துவிட்டீர்களே. உங்கள் மகாராஜாவின் இலட்சணம் என்ன! இந்த விஷயத்தில் இளவரசரின் நடவடிக்கைகளைப் பற்றிப் பேசட்டுமா?''

''அவனவன் செய்த தவறை அவனவன் அனுபவித்துக் கொள்கிறான். இளவரசருக்கு ஏற்ற மங்கையைக் கல்யாணம் செய்து வைக்காமல் காலங்கடத்துவதன் பலனை அனுபவிக்கிறார் மகாராஜா'' என்ற பெரியவரின் குரலில் சற்றுச் சீற்றம் குறைந்தது.

''பலனை நன்றாக அனுபவிக்கிறார் மகாராஜா. தந்தையும் மகனும் சேச்சே... சொல்ல நா கூசுகிறது. ஊரே பேசுகிறது. ராஜாங்க விவகாரத்தில் பதியிலாதார் பெண்கள் ஈடுபாடு கொள்ள ஆரம்பிப்பதும் அரசர் குடும்பத்தவர் அவர்களிடம் ஈடுபாடு கொள்ள ஆரம்பிப்பதும்... ஒழுக்கம் மரக்கால் என்ன விலை என்று கேட்க ஆரம்பிக்க வேண்டியதுதான்! நாங்கள் ஏதோ கட்டிளம் பெண்களின் நிழல் தொட்டு நடக்கிறோம் என்று குறைகூறுகிறீர்கள்.''

அங்கே சற்று நேரம் அமைதி நிலவியது. ''எனக்கே மகாராஜா நடவடிக்கை பிடிக்கவில்லைதான். அதற்காக ஆபத்துக் காலத்தில் விட்டுக்கொடுத்துவிட முடியுமா?'' என்று ஒருவர் பேசி அமைதியைக் கலைத்தார்.

''அப்படிச் சொல்லாதீர்கள். எவ்வளவு காலத்திற்குப் பாண்டிய நாட்டிடம் அடிமையாக இருப்பது?'' என்று குறுக்கே வெட்டினார் ஒருவர்.

''அதுசரிதான். அடிமைத் தளையை நீக்க இவ்வளவு காலம் என்ன செய்தார் மாமன்னர்?''

''நன்றாகக் கேட்டீர்கள்!''

''பதினைந்து ஆண்டுகள் ஓடியே போய் விடும் என்று எனக்கு எப்போதோ தெரியும்'' என்றார் முதிர்ந்தவர்.

''அதென்ன பதினைந்து ஆண்டுகள்?'' - கேட்டான் இளைஞன் ஒருவன்.

''தம்பி! நீ அப்போது ஐந்து வயதுச் சிறுவன். உனக்கு நினைவிருக்கிறதா, என்னவோ! பாண்டியநாட்டுப் படைகள் வெள்ளம் போல் சோழநாடு முழுவதும் பரவின. கண்ட கண்ட இடங்களில் வீடுகளையும் மாளிகைகளையும் கொளுத்தினர். விளைநிலங்களை அழித்தனர். நமது மகாராஜா வீரதீரமாகப் போர் செய்தார். கடைசியில் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை. வருடந்தோறும் இவ்வளவு பொன்னும் பொருளும் மணியும் தருவது என்று

உடன்படிக்கை செய்துகொண்டார். பாண்டியர் படைகள் திரும்பி விட்டன. தங்கள் ஊரைப் பார்த்து. அப்போதிருந்தே இவர் என்ன செய்திருக்க வேண்டும்...?'' என்று கேட்டு நிறுத்தினார் முதியவர். தொடர்ந்து பேசியதால் மூச்சு வாங்கியது.

''படைகளைப் பலப்படுத்தவில்லை என்று தங்களுக்கு எப்படித் தெரியும்?'' - இளைஞன் கேட்டான்.

''ஓ, நன்றாகத் தெரியுமே! முரசொலி கேட்டவுடன், இப்படி வீணே விவாதித்துக் கொண்டிருக்கிறாயே, அதிலிருந்தே தெரியும்! எங்கள் காலத்தில், முரசின் சப்தம் கேட்டவுடன் பறந்து ஓடுவோம்'' என்றார் பெரியவர் ஒருவர்.

''கண்மூடித்தனமாக நடந்துகொண்டீர்கள். மன்னர் என்றால் 'தெய்வம்' என்று நினைத்தீர்கள். அவர் செய்வது எல்லாம் 'சரி' என்று நம்பினீர்கள். எங்களால் அப்படி முடியவில்லை. அரசர் இப்போது போர் முயற்சியில் இறங்கியது தவறு. சரி, அப்படித்தான் இறங்கினாரே, தயக்கம் காட்டாமல் காவிரியைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் நமது படைகள் நுழைந்தனவா, இரகசியமாக நடக்க வேண்டிய காரியங்கள் பகிரங்கமாக நடக்கின்றன. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் திட்டம் எப்படியோ மதுரைக்கு எட்டிவிட்டது. ராஜதந்திரமா இது. குறுநிலமன்னர்களின் ஒத்துழைப்பைப் பெறவில்லை. அவர்கள் பகிரங்கமாகத் திட்டமிடுகிறார்கள், மன்னருக்கு எதிராக அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை...'' என்று சீற்றத்துடன் பேசினான் ஓர் இளைஞன்.

''தம்பி சொல்வது சரி. பழுக்காமலிருக்கும் போதே கனியை மரத்தி லிருந்து பறித்துவிடலாமா? சந்தர்ப்பம் சரியில்லை. முக்கியமாக மணவாளன் எதிர்க்கிறான். அவனைச் சரிக்கட்ட முடியவில்லை'' என்று கவலையுடன் கூறினார் ஒரு பெரியவர்.

''எல்லாம் ஒரு பெண்தான் காரணம்'' என்று கோபமாகக் கூறினார் பெரியவர்.

''ஒரு பெண் என்ன -பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். குஞ்சரிதானே?'' இளைஞன் மெல்ல நகைத்தான்.

''பதியிலாதார், கோயில் எல்லையுடன் நிற்காமல் மாளிகை விவகாரங்களில் நுழைந்ததால் வந்தவினை...'' என்று முதியவர் முணுமுணுத்தார்.

''குஞ்சரி விஷயத்தில் அரசரும் இளவரசரும் மனத்தாங்கல் கொண்டுவிட்டார்களாம்! குஞ்சரியை இளவரசர் சிறையிலடைக்க உத்தரவிட்டாராம். அரசர் தாமே நேரே சென்று விடுதலை செய்து விட்டாராம். இதை அறிந்த இளவரசர் தந்தையிடம் நேருக்கு நேர் - இதுவரை அப்படிச் செய்ததே இல்லையாம் - கடுமையான வார்த்தைகளைக் கூறிவிட்டார்ராம். குஞ்சரி துரோகியாம்! நாட்டைக் காட்டிக்கொடுப்பவளாம்... நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று பெரியவர் தமது செவியில் வீழ்ந்ததைக் கூறினார்.

''உம், பிறகு? குஞ்சரி இப்போது எங்கே?'' என்று சுவாரஸ்ய மாகக் கதை கேட்பது போல் 'உம்' கொட்டினார் ஒருவர்.

''குஞ்சரிக்கு மிக முக்கியமான பணி ஒன்றைக் கொடுத்து கங்காபுரியைவிட்டே வெளியே செல்லுமாறு கட்டளையிட்டு விட்டார் சக்ரவர்த்தி. துவாரசமுத்திரத்திற்குப் போகிறாள் குஞ்சரி.''

''துவாரசமுத்திரமா?''

''ஆமாம். போசள மன்னரின் உதவியில்லாவிடில் சோழநாடே நிர்மூலம்தான். அவரது உதவி வேண்டுமானால் அவரது மகளைத் தன் மகனுக்கு மணம் புரிவிக்க வேண்டும். இவ்வளவு நாட்கள் பிடிகொடுத்துப் பேசாதிருந்த சக்ரவர்த்தி, இப்போது குஞ்சரியைத் தூது அனுப்புகிறார்...''

''ஏன் குஞ்சரிதான் போக வேண்டுமா? தூது செல்ல வேறு ஒருவருமில்லையா?''

''அங்கேதான் ஐயா, ராஜதந்திரம்! குஞ்சரியை அனுப்பினால் நொடியில் காரியத்தைச் சாதித்து வருவாள். அழகி, நடனமாடத் தெரிந்தவள்... வேறு என்ன வேண்டும்...?''

''ஐயா, நான் தெரியாமல்தான் கேட்கிறேன். குஞ்சரி பாண்டியர்களுக்கு வேண்டியவளா? அல்லது சோழர்களுக்கு வேண்டியவளா?'' இப்படி ஒருவர் கேட்டபோது, அங்கிருப்பவர்கள் அனைவரும் பெரிதாக நகைத்தனர்.

''சோழச் சக்ரவர்த்திக்கு மிகவும் வேண்டியவள். அவளை அபிமான ஸ்திரியாக ஏற்றுக் கொள்ளப் போகிறார் மாமன்னர்'' என்று விவரம் தெரிந்தவர் போல் மற்றொருவர் கூறிய போது, அங்கிருந்தவர்கள் அனைவரும் 'ஹோ ஹோ' என்று பெரிதாக நகைத்தனர்.

அவர்கள் சிரிப்பொலியையும் மிஞ்சியது வீதிகளில் விரைந்து சென்ற குதிரைப்படைகள் எழுப்பிய ஒலி. பெரும் புழுதிப் படலம் எழுந்து வீதியை மறைத்தது.

முரசு ஒலியுடன், பேரிகை, பறை, எக்காளம் மற்றும் போர்க்கால வாத்ய ஒலி எழுந்து, ''கங்காபுரியை நோக்கிப் போர் நெருங்கி விட்டது'' என்பதை அறிவித்தது.

கங்காபுரி நகரின் வடக்கு வாயிலை விட்டுச் சில இரட்டை மாட்டு வண்டிகள் புறப்பட்டன. அவற்றிற்காகக் கதவுகள் திறக்கப் பட்டன. பிறகு பெரும் சப்தத்துடன் கதவுகள் மூடப்பட்டன. கதவுகள் மூடப்படும் வரையில் குஞ்சரியும் காளியாரும் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். நடுநிசியைத் தாண்டிய அதே வேளையில் மங்கிய நிலவொளியில் குஞ்சரியின் முகத்தில் படிந்த துயரச் சாயையைக் காளியார் கவனிக்கத் தவறவில்லை.

''குஞ்சரி, மனத்தைத் திடப்படுத்திக்கொள். எல்லாம் நல்ல முறையில் முடிவடையும். நம்மிடம் என்ன இருக்கிறது? சோழீசன் என்ன வகுத்திருக்கிறானோ, அதுபடிதான் நடக்கும். நாம் வெறும் பொம்மைகள்...'' என்றார் காளியார்.

குஞ்சரி மெல்லச் சிரித்தாள். ''எந்த சோழீசரைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள். அதில் விரக்தி பிரதிபலித்தது.

காளியார் வாய்விட்டுச் சிரித்துவிட்டார். ''இந்த நிலையிலும் உனக்கு நகைச்சுவை இருக்கிறதே!'' என்று கூறிய அவர், ''குஞ்சரி நமது சக்ரவர்த்திகளை இனி நம்புவதற்கு இடமேயில்லை. கோயிலில் குடிகொண்டிருக்கும், உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன், நிலவுலாவிய நீர்மலி வேணியனைச் சொல்கிறேன். மிகவும் தாமதமாகவே எதையும் புரிந்து செயலாற்றுகிறார். கடவுள் தான் இந்தச் சோழநாட்டைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. பிறகு குஞ்சரியே மௌனத்தைக் கலைத்தாள்.

''நடந்த சம்பவங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்றாள் குஞ்சரி.

''குஞ்சரி, விதி வலியது. அதன் விளையாட்டு ஈசனின் கட்டளை என்பதைச் சிறைக்கோட்டத்திலிருக்கும் போது உணர்ந்தேன். எனக்குச் சிறையா? என்று பலர் அதிசயித்தார்கள். சக்கரவர்த்தி அடைந்த துயரத்துக்கு எல்லையில்லை. ஆனால், உன்னைக்கூடச் சிறையிலிடுவது போல் தனி மாளிகையில் அடைக்கச் சொல்லிவிட்டானாமே அந்த மூர்க்கன்!'' என்று காளியார் கூறும் போது துயரமும் அவர் நெஞ்சையடைத்திருக்க வேண்டும்.

''மூர்க்கனோ இல்லையோ... ஆனால், அவன் காமாந்தகன். இளவரசரை அவன் என்று சொல்வதற்குப் பொறுத்தருளுங்கள். மாளிகைச்சிறையில் என்னை அடைத்துவிட்டு அவன் என் மீது பல குற்றங்களைச் சாட்டினான். அவற்றுள் இரண்டு பயங்கர மானவை..'' என்று குஞ்சரி கூறும் போது காளியார் குறுக்கிட்டு, ''கேள்விப்பட்டேன். மறந்து விடு குஞ்சரி! கனவென்று மறந்து விடு. வீண் பழிசுமத்தினோர் வீண் பழிக்காளாவர்'' என்று தேற்ற முயன்றார்.

''நான் எப்போதோ மறந்துவிட்டேன். என்னைத் துரோகி என்று சொன்னது மிக பயரங்கரமான குற்றச்சாட்டு. மற்றொன்று - சொல்லவே கூசுகிறது. எனக்கும் சக்ரவர்த்திக்கும் தவறான உறவைக் கற்பித்தான், சீ, இவன் எப்படி நமது அரசியாருக்கு மகனாகப் பிறந்தான்?'' என்று கூறும் போது குஞ்சரியின் விழிகளில் நீர் திரண்டது.

''உம்... உம்... பெரிதாக அதைப் பிரசாரம் செய்து வருகிறான். முதியவர் வேடத்தில் உன்னை மணவாளனிடமிருந்து காப்பாற்றி யவர் சக்ரவர்த்தியாம். உன்னைச் சம்புவரையர்மாளிகைச் சதிக் கூட்டத்தில் அவர் சந்தித்துக் காப்பாற்றினாராம்!''

''உண்மைதான் என்னைப் புதியவர் ஒருவர் காப்பாற்றினார். இன்று வரை யார் அவர் என்று எனக்குத் தெரியாது. இளவரசர் எப்படித் தெரிந்துகொண்டார்?''

''உம். நடந்ததை மறந்துவிடு. சக்ரவர்த்தி உன்னைப் பூரணமாக நம்புகிறார். இல்லாவிட்டால் மாளிகைச்சிறையிலிருந்து உன்னை விடுதலை செய்யத் தாமே வந்திருப்பாரா?''

''ஆம். சக்ரவர்த்திகள் வந்தார். மிகவும் முக்கியமான பணியைச் செய்யக் கட்டளையிட்டார். ஆனால், நான் அதைச் செய்யவில்லை'' என்று சொல்லிச் சற்று நிறுத்தினாள் குஞ்சரி.

துவாரசமுத்திரம் சென்று போசள மன்னரைச் சந்திக்குமாறு இராஜராஜர், குஞ்சரிக்குக் கட்டளையிட்டிருந்தார். தன் மகன் இளவரசன் இராஜேந்திரனுக்கு, போசள மன்னர் நரசிம்மனின் மகளை மணம் புரிந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்திருந்தார். அந்தச் செய்தியைக் குஞ்சரி எடுத்துச்செல்ல வேண்டும் என்று மன்னர் விரும்பியதற்கு முக்கிய காரணம், கங்கைகொண்டசோழபுரத்தில் சிறிது காலத்திற்குக் குஞ்சரி இல்லாமலிருந்தால் இராஜேந்திரன் கோபம், அவச்சொல் கூறுவது எல்லாம் குறையும் என்பதே.

ஆனால், குஞ்சரி தன் தாயைச் சந்திக்க இரவோடு இரவாக வீட்டையடைந்தாள். போர்க்காலத்தில் தன் தாய் கங்கை கொண்ட சோழபுரத்திலிருப்பதை குஞ்சரி விரும்பவில்லை. தாய் துவார சமுத்திரம் சென்று விடுவது மிகவும் நல்லது என்று எண்ணினாள். போசள மன்னருக்கு ஓலை எடுத்து செல்லும் பணியை ஏற்று, தன் தாய் கங்காபுரியை விட்டுப் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்தாள்.

குஞ்சரியை விட்டுப்பிரிய அவள் தாய்க்கு மனமேயில்லை. ஆனால், நாட்டு நகர நிலையைக் குஞ்சரி விளக்கிய பிறகு கங்காபுரியைவிட்டுப் புறப்படச் சம்மதித்தாள். இரட்டைமாட்டுக் கூண்டுவண்டிகள் ஆறேழு நகரத்தைவிட்டுப் புறப்பட்டன. அரச குடும்பத்தார் சிலர் காஞ்சிக்குச் சென்றனர். சிலர் சிதம்பரம் வரையில் சென்றனர். புலி இலச்சினையுடன் பணிப்பெண்கள் சூழ, ஒரு குதிரைவீரன் காவலுக்கு உடன் வர வண்டிகள் புறப்பட்டன.

கோட்டைவாயிலை வண்டிகள் தாண்டியதும் குஞ்சரியின் கண்கள் கலங்கின. ''ஈசன் அருள் இருந்தால் விரைவில் சந்திப்போம்'' என்று தன் தாயிடம் கூறியபோது குஞ்சரியின் குரல் தழுதழுத்தது. தாய் விம்மி விம்மி அழுதுவிட்டாள்!

## 23

குஞ்சரியின் தாய் கோட்டைவாயிலைக் கடந்தவுடனேயே கோட்டைக்கதவுகள் மூடப்பட்டன. கதவுகளை மூடுவது ஓரிருவரால் மட்டும் செய்யப்படும் காரியமன்று. கோட்டைக்கதவுகளை மெல்ல நகர்த்தவே ஐம்பது பேர் வேண்டியிருந்தது. 'கிரீச்' என்ற ஒலி அமைதியைக் குலைத்தது, 'கடகட' வென்ற ஓசை வேறு. உயரமான

வாயிற் நிலைப்படிக்கருகில் நிரந்தரமாகக் குடியிருந்த வௌவால்கள் பல 'சடசட'வென்ற ஒலியுடன் பறந்தன. தங்களுடைய தலைகீழ்த் தவத்தைக் குலைத்துவிட்டதற்காக அவற்றிற்குக் கோபம் கூட! கதவு மூடப்பட்டவுடன் குறுக்குச்சட்டங்கள் இறக்கப்பட்டன அவற்றைத் தூக்குவதற்கு நூறு பேர்களுக்கு மேல் தேவை. ஆனால், மேலேயிருந்து இருவர் பல் சக்கரத்தைச் சுழற்றினர். கம்பிச் சங்கிலியில் கோக்கப்பட்டிருந்த குறுக்குச்சட்டங்கள் மெல்ல இறங்கின. அவை சாய்வாக இறங்கும் போது உள்ளே நுழைபவர்களைத் தடுப்பதற்கான பலம் எமக்குத்தான் என்று கம்பீரமாகக் கூறுவது போல் தோன்றியது.

திட்டிவாசல் மூடப்பட்டுத் தாளிடப்பட்டுப் பலமான பூட்டுகளைக் கொண்டு பூட்டப்பட்டது. குறுவாள் போன்று தோற்றமளிக்கும் திறவுகோலைக் காவல்வீரன் வடக்கு வாயில்காப்போர்களின் தலைவரிடம் கொண்டு கொடுத்தான். அவர் அதைத் தனது உள்ளங்கையில் செருகிக் கொண்டார். கையில் தீவர்த்தியை ஒருவன் பிடித்திருக்க மற்றொரு காவல் பணியாளன், ''எல்லாம் சரிவர இருக்கிறதா?'' என்று ஒரு முறை பார்த்தான்.

எங்கும் இருளுடன் அமைதியும் நிலவியது. கங்காபுரியின் கலகலப்புக்கே மாறுதலாக இருந்தது. மக்கள் உள்ளத்தில் பெரும் பீதி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அவை அடையாளமாகத் திகழ்ந்தன. அணிவகுத்து நின்றிருந்த வீரர்கள் இருபிரிவினராகப் பிரிந்து படிக்கட்டுகளின் வழியாக மதில் மீது ஏறிக் கொத்தளக் கூடத்தில் நின்றுகொண்டனர். எந்தச் சமயத்திலும் ஏற்படும் திடீர்த் தாக்குதலை எதிர்த்து நிற்கும் போர்க்கருவிகள் அவர்களிடமிருந்தன.

மூடப்பட்டக் கோட்டைக்கதவுகளை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த குஞ்சரியின் சிந்தனையைக் காளியாரின் குரல் கலைத்தது.

''குஞ்சரி, வருத்தப்படாதே! உன் தாய் நல்லதொரு பணியை மேற்கொண்டு செல்கிறாள். அதற்காக நீ மனமகிழ்ச்சியடைய வேண்டும்'' என்றார்.

குஞ்சரி காளியாரை ஒரு முறை நோக்கினாள். அவள் கண்களில் ததும்பி நின்ற நீர் மெல்லிய திரையாய் விளங்கியது.

"என் தாய் போய்ச் சேர்வதற்குள் கோட்டை தாக்கப்பட்டால் என்ன செய்வது என்று வேதனைப்படுகிறேன். தொடர்ந்து என் தாய் ஓய்வின்றிப் பயணஞ் செய்து பழக்கப்பட்டவளல்லள். துவார சமுத்திரத்தை அடைவதற்குள் இங்கே நிலை வேறு விதமாகி விட்டால்?" - குஞ்சரி கவலையுடன் பேசினாள்.

"குஞ்சரி கவலைப்படாதே! கோட்டையை அவ்வளவு எளிதில் நெருங்க விட மாட்டோம். முப்புறத் தாக்குதலை எப்படி எதிர்த்து நிற்பது என்ற கவலை தான் எனக்கு. இளவரசர் தெற்கு வாசலைக் காத்து நிற்பார். அரசரே படை வீரர்களின் அணிவகுப்பைப் பார்த்துக் கொள்கிறார். நான் ஒவ்வொரு கோட்டைவாயிலுக்கும் இணைப்பை ஏற்படுத்தி பாதுகாவலுக்கு ஏற்பாடு செய்வேன். அதற்குள் போசளர் படைகள் வந்துவிட்டால் பாண்டியர் படைகள் ஓடிவிடும்" என்று கூறி குஞ்சரியின் கவலையைப் போக்க முயன்றார்.

அதற்குள் இரண்டு வீரர்கள் ஓடோடி வந்து காளியார் முன் வணக்கம் செலுத்தி நின்று சக்ரவர்த்தி அழைப்பதாகக் கூறினார்கள். காளியார் உடனே விரைந்து சென்றார்.

குஞ்சரி, அந்த நடுநிசி வேளையில் மெல்ல நடக்கலானாள். 'இனி என்ன செய்யப் போகிறோம்? நமக்கென்ன பணி!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

'இங்குமங்கும் அலைந்தோம், இளவரசரிடம் அவப்பெயர் ஏற்படுத்திக் கொண்டோம். மன்னரையும் என்னையும் சம்பந்தப் படுத்திப் பேசும் அளவுக்கு ஊரில் அவப்பெயர் எழுந்துவிட்டது. தாயையும் நகரத்தைவிட்டு அனுப்பிவிட்டோம். இனி நம் நிலை என்ன?' என்று வேதனைப்பட்டுக் கொண்டாள் குஞ்சரி.

"இன்று இரவு எந்தவித ஆபத்தும் ஏற்படாதிருக்க வேண்டும்" என்ற சோழீசரைப் பிரார்த்தனை செய்து கொண்டாள். மெல்ல வீதி வழியே நடக்கலானாள். அவள் கால்கள் தள்ளாடின.

தெருவிளக்குகளில் சில எண்ணெய் இன்றி அணைந்து புகையை மட்டும் பரவவிட்டுக் கொண்டிருந்தன. நாட்டியத்தின் இடையிடையே எழும் இசையொலியும் மத்தளச்சப்தமும், தெருக் கூத்துப் பாடல்களின் அபஸ்வர ஒலியும் ஆங்காங்கே ஒலித்து நகரின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருக்க வேண்டிய வேளையில்,

கங்கைகொண்டசோழபுர நகரம் அமைதி நிறைந்து திகழ்ந்தது. அந்த அமைதி பயங்கரத்தை அளித்தது. தெருத் திண்ணையில் உறங்கு வோர்கூட வீட்டினுள்ளே சென்றடைந்தனர்.

குஞ்சரி மெல்ல நடந்து சென்று கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் அவளுக்கும் புலப்படாத வேதனை. உள்ளத்தில் ஏற்பட்ட சோர்வு உடலிலும் பிரதிபலித்தது. குஞ்சரி நடந்துகொண்டே யிருந்தாள். ராஜவீதியைக் கடந்து சந்துகளில் நுழைந்து அவள் கால் போன போக்கில் சென்றாள்.

அதோ, கங்கைகொண்டசோழீசர் ஆலயத்து விமானம் தெரிகிறது!

'அப்பா, சோழீசா! எங்கள் நாட்டை நீதான் காப்பாற்ற வேண்டும். பெருவுடையாரே! பிரமாண்டமான தோற்றத்துடன் கருவறையில் வீற்றிருக்கும் கருணாமூர்த்தியே! நீதான் காத்து ரட்சிக்க வேண்டும். பெரியநாயகி அம்மையே! இந்த நகரத்திற்கு வந்த துன்பங்கள் போதாதா? நகரத்து மக்கள் உமக்குச் சகல வித நிவேதனங்களையும் படைத்து, அபிடேக ஆராதனைகளை நாள்தோறும் தொடர்ந்து செய்விக்கும் சக்தியை அருளவேண்டும். நகரம் காப்பாற்றப் பட்டால் நான் உன் சந்நிதியிலேயே காலாகாலமும் நிருத்யாஞ்சலி செய்து கொண்டு கிடப்பேன். என் வாய் உன் அருளைப் பாடும். என் கரங்கள் உன் பெருமையை அபிநயங்கள் மூலம் தெரிவிக்கும். செஞ்சீரடிகள் நின்னைப் புகழ்ந்து பாடப்படும் இசைக்கு ஏற்பத் தாளமிட்டு ஆடும். இடையும் தோள்களும் நின்னைத் துதித்துப் பாடப்படும் பாடலுக்கு ஏற்ப நெளியும்' என்று விமானத்தை நோக்கி கரங்களைத் தூக்கிப் பிரார்த்தனை செய்துகொண்டாள், கோயில் மதில் ஓரமாக நடந்து கோபுரவாயிலை அடைந்தாள்.

நடுநிசி மெல்ல நகர்ந்தது. விடிகாலையை நோக்கி இருளரசன் பயணம் செய்து கொண்டிருந்தான். பொன்னேரியில் குளித்துத் தவழ்ந்து வந்த காற்றும், கொள்ளிட நீரில் நீராடி வந்த காற்றுமாக இளங்குளிர் நகரெங்கும் பரவியது. பயத்தால் இரவெல்லாம் விழித்திருந்த மக்கள் இழுத்துப் போர்த்தி கொண்டு உறங்க முற்பட்டனர்.

கோயில் கோபுர வாயிலில் குஞ்சரி அமர்ந்துவிட்டாள். உதய கால பூஜைக்காகக் காலைக் கதவு திறக்கப்படும் நேரத்தை

எதிர்பார்த்துக் காத்திருந்தாள். உடல் முழுவதும் வியர்த்து விட்டிருந்தது. மாற்று ஆடை உடுத்திப் பல நாட்களாகி விட்டன. அதே போல் சரிவர உண்டு பல நாட்களாகி விட்டன.

அவள் மெல்ல சிரித்துக்கொண்டாள். 'எதற்காக நாம் இப்படி அலைகிறோம்? அரசரின் மகுடத்தை நிலைநாட்டி வைக்கும் பணியில் நாம் ஏன் ஈடுபட வேண்டும்?' நிலைப்படியில் சாய்ந்து கொண்டாள். முன்பு சில வேளைகளில் சிறிது நேரம் அங்கே உட்கார்ந்துவிட்டு வந்ததும் உண்டு.

அவள் ஒவ்வொரு நிகழ்ச்சியாக நினைவுபடுத்திக் கொள்ள லானாள். மணவாளனிடம் சிக்கியது, தன்னைப் புதியவர் ஒருவர் காப்பாற்றியது, காளியாரின் கருணை, மதிலின் மீது இளவரசர் தன்னை நெருங்கித் தன் ஆசையைப் பூர்த்திசெய்ய முயன்றது... குஞ்சரி சம்பவங்களை மறக்க முயன்றாள். இந்த உடலின் மீது இச்சை கொண்டு அதற்காகத் தங்கள் தகுதியையே மறந்துவிட்ட சிற்றரசரையும் இளவரசரையும் நினைத்து வேதனைப்பட்டாள் அவள். களைப்பு மிகுதியால் அவள் விழிகள் மெல்ல மூடிக் கொண்டன.

தன்னை யாரோ தட்டி எழுப்புவது போன்ற உணர்ச்சி ஏற்படவே குஞ்சரி திடுக்கிட்டு விழித்தாள். கோயில் குருக்களும் பணியாட் களும் அவள் அருகே நின்றிருந்தனர்.

# 24

"யார்? குஞ்சரியா உட்கார்ந்திருப்பது?"

"இந்த வேளையில் இங்கே அமர்ந்திருக்கக் காரணம் என்ன குழந்தாய்?" என்று கோயிற் பூசை செய்யும் குருக்கள் குஞ்சரியைப் பார்த்துக் கேட்டார்.

திட்டிவாசல் கதவைத் திறந்து நுழைந்து அவர் உதய காலப் பூசைக்குச் செல்ல விரைந்து தன் பணியாட்களுடன் வந்தார். அன்று நேரமாகிவிட்டது. முதல் நாள் இரவு கோயிலைவிட்டுச் செல்ல நடுநிசியையும் தாண்டிவிட்டது. விலை மதிப்பற்ற ஆபரணங்களை எடுத்துப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டுச் செல்ல நேரமாகி விட்டது.

குஞ்சரி திடுக்கிட்டு எழுந்தாள். ''விடிந்துவிட்டதா சுவாமி!'' என்று கேட்டாள்.

''இன்னும் சிறிது நேரத்தில் விடிவெள்ளி தோன்றிவிடும். நடுநிசிக்குப் பிறகுதானே நான் இங்கிருந்து சென்றேன்! அப்போது உன்னைக் 'காணவில்லையே!'' குருக்கள் கேட்டார்.

அவரருகே தீவர்த்தியை வைத்துக்கொண்டு நின்ற மடைப்பள்ளி பணியாள் அந்த வெளிச்சத்தில் குஞ்சரியின் வனப்பை அமைதியாகப் பருகினான். திருவிழாக் காலங்களில் குஞ்சரி கோயிலில் இறைவன் எதிரே நாட்டியமாடும் போது பார்த்திருக் கிறான். அப்போது நெருங்கிப் பார்க்க அவனுள்ளத்தில் துடிப்பு ஏற்பட்டாலும் முடிவதில்லை. மடைப்பள்ளி இருட்டில் பரிசாரகர் அருகே அவன் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

கலங்கிய முகமும் அந்த நேரத்தில் அவன் விழிகளுக்குக் கந்தர்வ மங்கையை நினைப்பூட்டியது. முழங்கால் இரண்டையும் சேர்த்துப் பிடித்து அவள் அமர்ந்திருந்த கோலம் ஒரு பக்கமாகப் பார்த்த போது அவனுள்ளத்தில் காமத் தீ, தீவத்தி ஜ்வாலையுடன் சேர்ந்து எழுந்தது.

குஞ்சரி பரபரப்புடன் எழுந்தாள். ''சுவாமி, கதவைத் திறவுங்கள்!''

'கீசுகீசென்று ஆனைச்சாத்தங் கலந்து பேசிடும் பேச்சரவம் கேட்டிலையோ?' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன. 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியின் பாடலை இங்கு பாடுகிறேமே' என்று அவள் வித்தியாசம் பார்க்கவில்லை.

''குஞ்சரி, என்னம்மா ஏதோ கூறுகிறாய்?'' குருக்கள் கேட்டார்.

''ஒன்றுமில்லை. இன்று எனக்கு இறைவன் எதிரேயே அமர்ந்திருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. நீராடி விட்டு வந்து விடுகிறேன். எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?'' என்று குஞ்சரி கேட்டாள்.

''என்ன உதவி குழந்தாய், உனக்கில்லாததா? மன்னாதி மன்னர் எல்லாம் நீ கூப்பிட்டவுடன் தொண்டாற்றக் காத்திருக்கும் போது, இந்தக் கோயில் பூசை செய்வோன், கேட்டது நிறைவேற்றத் தயங்குவேனா?'' - குருக்கள் உள்ள நெகிழ்ச்சியுடன் கூறினார்.

''ஐயா, எனக்கு ஒரு மாற்றுடை வேண்டும்!'' குஞ்சரி கேட்டாள்.

''ஆகா, பட்டுப்பிதாம்பரம் தருகிறேன். அவ்வளவுதானே?'' குருக்கள் கோயிலினுள் நுழைந்தார்.

ஒவ்வொரு கதவாகத் திறக்கப்படும் 'கிரீச்' சென்ற சப்தம். 'டாண் டாண்' என்ற மணியோசை, சங்கத்தின் முழக்கம், பேரிகை ஒலி, மத்தள சப்தம், நாதஸ்வர இசை எழும் முன்பு தவிலின் 'டண் டண்' ஓசை.

குஞ்சரி நீராடி ஈரக்கூந்தலை அள்ளிச் செருகி ஆண்டவன் சந்நிதானத்தெதிரே வந்து நின்றாள்.

திருப்பள்ளி எழுச்சி பாடப் பட்டது. திரு விசைப்பா ஓதப்பட்டது. வீணையின் இனிய நாதம் எழுந்தது. தேவாரப் பாடல்களை கணீரென்று ஓதுவார்கள் பாடினர்.

*''தேரை நிறுத்தி, மலை எடுத்தான் சிரம்*

*ஈர் ஐந்தும் இற்ற ஆறு - உந்தீ பற*

*இருபதும் இற்றது என்று உந்தீ பற!''*

என்று பாடி ஆடும்போது அவள் தன்னை மறந்தாள். கருவறையின் முன் மண்டபத்தில் கோயில் பணியாட்கள் சேர்ந்து விட்டனர். உதயகாலப் பூசையைக் காண வந்தவர்கள் மெய்மறந்து நின்றனர்.

''யார், யார், குஞ்சரியா?'' என்று வியந்து கேட்டனர்.

குஞ்சரியின் முகத்தில் தெரிந்த பாவங்களைக் கண்டு வியந்தனர்.

கடைசியாக குஞ்சரி சிவபிரானை நோக்கி விண்ணப்பிக்கிறாள்.

*''திருத்தனே! நிமலா! நீற்றனே! நெற்றிக்*

*கண்ணனே! விண் - உளார் பிரானே!*

*ஒருத்தனே! உன்னை, ஓலம் இட்டு அலறி,*

*உலகு எலாம் தேடியும், காணேன்!*

*திருத்தம் ஆம் பொய்கைத் திருப்பெருந் துறையில்*

*செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்*

*அருத்தனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்*

*'அதெந்துவே?' என்று அருளாயே.''*

குஞ்சரி தன்னை மறந்தாள். அவள் செஞ்சீரடிகள் தாளமிட்டன. மூங்கிலைப் போன்ற தோள்கள் வளைய, கரங்கள் நெளிந்தன. இடை அசைந்தது. விழிகளில் இறைவன் ஒருவனே தெரிந்தான். குஞ்சரி ஆடினாள். ஒரு கணம் தன்னைச் சிவபெருமானாக எண்ணிக் கொண்டாள். அர்ச்சுனனுடன் சமர் செய்யும் வேடனாக மாறினாள். அண்டசராசரங்களை அதிர வைத்துப் பூமியை நோக்கிப் பாய்ந்த கங்காதேவியைச் சடையில் தாங்கிய செஞ்சடைச் சிவனானாள். திரிபுரத்தை எரிக்க மெல்லச் சிரித்த சிவன் ஆனாள்.

*''வளைந்தது வில்லு; விளைந்தது பூசல்;*

*உளைந்தன முப்புரம் - உந்தீ பற!*

*ஒருங்கு உடன் வெந்தவாறு - உந்தீ பற!*

*ஈர் அம்பு கண்டிலம், ஏகம்பர் தம் கையில்*

*ஓர் அம்பே முப்புரம் உந்தீ பற!''*

என்று அவள் பாடிக்கொண்டே ஆடினாள். மாணிக்கவாசகரது திருவுந்தியார் பாடல்களைப் பாடிக்கொண்டே பாடலுக்கேற்ப அபிநயித்துக்கொண்டே ஆடினாள். குஞ்சரி கதறித்தான் அழுகிறாள். நடனமிடும் சிவபிரானே! மாசிலாதவனே! நீறு அணிந்தவனே! நெற்றிக்கண்ணனே! தேவர்களுக்குத் தேவனே! ஒப்பற்றவனே! - அப்பா, நீ எங்கே என்னைவிட்டுப் போய்விட்டாய்? 'சிவனே சிவனே' என்று ஓலம் இட்டு அலறி உலகு எட்டும் தேடினேன். உன்னைக் காணவில்லை. தூயத் திருக்குளம் நிறைந்த திருப்பெருந்துறை நகரத்தில் குருந்த மரத்தடியில் விரும்பி அமர்ந்த மெய்ப் பொருளானே! அடியேன் ஆதரித்து அழைத்தால் 'அது என்ன' என்று அருள்வாயே!

என்ற பொருள் கொண்ட அருள் பத்துப் பாடல்களைப் பாடி முடித்தவுடன், குஞ்சரி தன்னை மறந்தாள். மூர்ச்சையாகிக் கீழே வீழ்ந்தாள்.

கண்விழித்த போது குஞ்சரி மலர் மஞ்சத்தில் படுத்திருப்பதை உணர்ந்தாள். அருகே பணிப்பெண்கள் சூழ, சோழ மாமன்னர் இராஜராஜர் கவலையுடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

நாணம் மிக அவள் மஞ்சத்தில் இருந்து எழ முற்பட்டவுடன், மன்னர் அவள் தோள் தொட்டு அமர்த்தி, ''குஞ்சரி, நீ கண்

விழிப்பாயோ என்ற கவலை எங்களுக்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது. இறைவன் சந்நிதியில் உன்னை மறந்து நீ ஆடினாய். நான் சுவாமி, தரிசனத்துக்கு வந்தேன். நீ ஆடிக்கொண்டிருந்தாய். ஈசனை வேண்டிப் பாடிக்கொண்டே ஆடினாய். நான் கவலையெல்லாம் மறந்து ரசித்துக்கொண்டிருந்தேன். உணர்ச்சியின் சிகரமாக நீ மயங்கி வீழ்ந்துவிட்டாய். குஞ்சரி, நீ பூரண ஓய்வு எடுத்துக் கொள் உனக்கு வேண்டியவற்றைப் பணிப்பெண்கள் கவனிப்பர்'' என்றார்.

குஞ்சரி நாணத்தால் தலைகுனிந்தாள். ''அரசர்க்கரசே! என்னை மன்னித்துவிடுங்கள். நெருக்கடியான நிலையில் தங்களை என்னைப் பற்றிக் கவலைப்படுமாறு செய்துவிட்டேனே! பாண்டியர் படைகளின் நடமாட்டம் எப்படி இருக்கிறது?'' என்று மெல்லக் கேட்டாள்.

''அதைப் பற்றிய கவலையை விடு குஞ்சரி! இளவரசர் தலைமையில் சென்ற படைகள், கிழக்குப்பக்கமாக வந்து கொண்டிருந்த பாண்டியர் படைகளை முறியடித்து ஓட்டிவிட்டன. தெற்கு, மேற்கு வாசல்களை நோக்கிப் படைகள் வரலாம் என்ற செய்தி வந்திருக்கிறது. நமது படைகள் அவர்களை முறியடிக்கும்'' என்றார்.

மகிழ்ச்சியால் குஞ்சரியின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

அப்போது வீரர்கள் வந்து வணங்கி நின்றனர். ''எதிரிப்படைகள் மேற்குக்கோட்டைவாயிலை நெருங்குகின்றன'' என்று செய்தி தெரிவித்தனர்.

''இதோ நான் வருகிறேன்'' என்று சோழச் சக்ரவர்த்தி புறப்பட்டார். புறப்படும் முன்னர், ''குஞ்சரி, இந்த இடத்தைவிட்டு அகலாதே!'' என்று கூறிச் சென்றார்.

பாண்டியர் படைகள் கங்கைகொண்டசோழபுரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த பெரும் மதிலை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன.

கோட்டை மதிலின் மீது சோழர்படைகள் கவசமணிந்து கையிலே நெடுந்தொலைவு பாயும் அம்புகளுடன் திரிந்து கொண்டிருந்தன!

# 25

'கோட்டையைச் சுற்றி பாண்டியர் படைகள் சூழ்ந்து கொண்டனவா இல்லையா?' என்ற செய்திகூட அறிய முடியாமல் குஞ்சரி அந்த அறையிலேயே துடித்துக்கொண்டிருந்தாள். வேளைக்கு உணவு வந்தது. பணிப்பெண்களைக் கேட்டால் தங்களுக்கு ஏதும் விவரம் தெரியாது என்று கூறிவிட்டனர். அவர்கள் குஞ்சரியுடன் பேசுவதற்குக்கூட அஞ்சினர்.

ஒருத்தி மட்டும் முன்பே குஞ்சரிக்கு அறிமுகமானவள். அவளைச் சற்று நிறுத்திப் பேச்சுக் கொடுத்தாள்.

இங்குமங்கும் பார்த்து மெல்லிய குரலில், ''குஞ்சரி, நான் உன்னுடன் பேசுவது தெரிந்தாலே மகாராணி கோபித்துக் கொள்வார்'' என்றாள்.

குஞ்சரிக்கு இந்தச் சொற்கள் அதிர்ச்சியை அளித்தன. 'என்னுடன் பேசக்கூடாதா? ஏன்?'' என்று ஒரு முறை சொல்லிக் கொண்டாள்.

பிறகு விழிகளில் நீர் ததும்ப ''ஏன் அப்படிச் சொல்கிறார் மகாராணி? நான் வேண்டாதவளா?'' என்று கேட்டாள்.

தலையை அசைத்தாள் பணிப்பெண். குஞ்சரியின் விழிகள் கலங்கியிருப்பதைக் கண்ட பிறகு, ''குஞ்சரி, உன்னைக் கண்டாலே, மக்ாராணிக்குப் பிடிக்கவில்லை. எங்களிடம் சொன்னாள்'' என்றாள். பிறகு கதவு அருகே சென்று எட்டிப்பார்த்து, அங்கேயே நின்று கொண்டாள்.

''ஏன், காரணம் தெரியுமா?'' குஞ்சரி நெஞ்சு தழுதழுக்கக் கேட்டாள். 'இந்த நாட்டிற்காக நாம் எத்தகைய ஆபத்துக்களை மேற்கொண்டுள்ளோம் நாம் ஆகாதவளாகி விட்டோமா?' கண்ணீர் இரண்டு சொட்டுகள் வீழ்ந்தன.

''குஞ்சரி, அழாதே! மகாராணிக்குப் பிடிக்கவில்லை என்றால் என்ன? மகாராஜாவுக்கு உன் மீது அளவு கடந்த அன்பு'' என்றாள் அவள்.

அவள் சொற்களில் குறும்புத்தனம் கலந்திருந்தது. குஞ்சரி விழிகளைச் சேலைத்தலைப்பால் துடைத்துக்கொண்டாள்.

''மகாராஜாவுக்குப் பிடிக்கிறது, மகாராணிக்குப் பிடிக்கவில்லை என்றால் வியப்பாக உள்ளது. ஒருவருக்குப் பிடித்தமான காரியத்தையும் மற்றவருக்குப் பிடிக்காத காரியத்தையும் நான் செய்ததாக நினைவேயில்லை. நான் செய்தது எல்லாம் நான் பிறந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கும் அங்கும் அலைந்ததே சக்ரவர்த்திகளின் நலனைக் காக்க முயன்றதே...'' என்றாள்.

''அதுதான் தவறு...'' பணிப்பெண் மெல்ல நகைத்தவாறு கூறினாள்.

''எது தவறு? நாட்டின் நலனையும் அரசர் நலனையும் காப்பதற்காக சுற்றம், வீடு, சுகம் காணாது உழைத்ததா?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் குஞ்சரி.

''ஆமாம்... நீ என்ன போர்வீரனா, தளபதியா, வேளக்காரப் படையைச் சேர்ந்தவருக்கு உறவினரா, அமைச்சரா ஆண்பிள்ளை செய்ய வேண்டிய காரியங்களை நீ செய்தாய். சக்ரவர்த்திகளை அவ்வப்போது சந்தித்தாய்...'' பணிப்பெண் சற்று அழுத்தமாகவே பேசினாள்.

''ஏன், பெண்கள் நாட்டிற்காகப் பாடுபடக்கூடாதா?''

''உன் தொழில் அதுவன்றே!''

''எங்களது தொழிலே தியாகம்தானே? ஈசனுக்கு உடலை உரிமையாக்க எங்கள் பரம்பரை வந்தது. பிறகு மெல்ல மெல்ல ஆண் வர்க்கத்தின் தணியாத சுயநலம் தங்களுக்கு எங்கள் உடலைப் பயன்படுத்தியது. நான் முற்றிலும் மாறுபட்டவள். இந்த நாட்டில் சுயநலக்காரர்கள் மிகுந்துவிட்டதை உணர்ந்தேன். துரோகிகள் தலைதூக்கிச் செயலாற்றுவதை அறிந்தேன். என் உள்ளுணர்வு என்னை உந்தித்தள்ளியது...''

''ஓ!''

''அதற்காக நான் சக்ரவர்த்தியைச் சந்திக்க நேர்ந்தது. காளியாரைச் சந்திக்க நேர்ந்தது...''

''மற்றவர்களை விட்டுவிட்டாயே! மணவாளனை, இளவரசரை..'' என்று பணிப்பெண் கூறிக்கொண்டே போகும் போது குஞ்சரி உரத்தகுரலில், ''நிறுத்தடி! உண்மை தெரியாது இப்படி யெல்லாம்

பேசினால் நா அழுகிவிடும்'' என்று கூறியவள் உணர்ச்சி வசப்பட்டு, ''அடி! நீயா இப்படிப் பேசினாய்? உன்னைச் சுற்றியுள்ளவர் வம்புச்சொல் உன்னை இப்படிப் பேசச் செய்கிறது. கங்கைகொண்ட சோழபுரத்து பெருவுடையார் மீது ஆணையாக, என் தாய் மீது ஆணை யாக நான் சொல்கிறேன் - கன்னி கழியாத வளாக இதுவரையில் காலத்தை ஓட்டிவிட்டேன். எனக்கு இந்த உடல் சுகத்தின் மீது ஆசையேயில்லை. என் இதயத்தில் சக்ரவர்த்தியை, சோழீசருக்கு நிகராப் பூசித்து வருகிறேன். அடாது சொல்பவர்கள் அழிந்து விடுவார்கள். இது சத்தியம், இது என் ஆணை'' என்று கூவினாள்.

பணிப்பெண் நடுநடுங்கிவிட்டாள். குஞ்சரியின் தோற்றமே பயங்கரமாயிருந்தது. அவள் போட்ட கூச்சல் மற்றவர் செவிகளில் வீழ்ந்துவிடப் போகிறதே என்று அச்சத்துடன் அங்கிருந்து செல்ல முற்பட்டாள்.

அங்கிருந்து நகர முயன்ற அவளது கரத்தைப் பற்றி இழுத்து, ''எங்கேயடி செல்கிறாய்? எனக்கு ஒரு வழிசொல்லிவிட்டுப் போ! என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் அவதூறு சொல்லட்டும்! கவலையில்லை. என் தாய் அறிவாள். ஈசனறிவான். ஏன், உங்கள் சக்கரவர்த்தியும் அறிவார். என் கவலை அதுவன்று. போரின் நிலை என்ன? பாண்டியர் படைகள் இப்போது எங்கே இருக்கின்றன? கேட்டு வந்து சொல். என் உள்ளத்தில் காலையிலிருந்து ஏதோ ஒருவிதக் கலக்கம். நெஞ்சை அடைப்பது போன்ற உணர்ச்சி. இந்த நாட்டுக்கு ஏதோ ஒரு துக்கமான சம்பவம் காத்திருக்கிறது என்று உள்ளுணர்வு சொல்கிறது.... உடனே கேட்டு வந்து சொல். இல்லாவிடில் என்னையாவது போகவிடு...'' என்று கூவியவள், ''நீ என்ன என்னைப் போக விடுவது? நான் சக்ரவர்த்தியின் ஆணைப்படி இங்கேயே நிற்கிறேன். செய்தியை மட்டும் அறிந்தால் போதும். சக்ரவர்த்தி இங்கே வருவார் என்று எனக்குத் தெரியும்...'' என்றாள்.

யாரோ கை தட்டும் ஓசை கேட்டது. பணிப்பெண் திரும்பிப் பார்த்துத் திகைத்துச் சற்று மரியாதையுடன் நகர்ந்துகொண்டாள். பட்டத்தரசி புவனமுழுதுடையாள் அங்கே வந்து நின்றிருந்தாள். அவளது பார்வையில் கனல் சுழன்றது.

''சக்ரவர்த்தி கட்டளைப்படி நீ இங்கே நிற்கிறாய்...! நீ இப்போதே போய்விடலாம். உன்னை நாங்கள் சிறையில் வைக்க வில்லை. போர்

நடக்கும் ஆபத்தான சமயத்தில்கூட சக்ரவர்த்தி உன்னை அந்தரப் புரத்திற்கே அழைத்து வந்துவிட்டார். இதைவிட அவமானம் வேறில்லை. அலங்கோல உடையுடன் உன்னை மஞ்சத்தில் கிடத்தி உன்னருகேயே இருந்தாரே ஒரு மாமன்னர் செய்யும் காரியமில்லை. பெண்ணே, யார் யாரை எங்கெங்கு வைக்க வேண்டுமோ அங்கே வைக்க வேண்டும். கோயிலில் ஆடுபவளை ஆசைநாயகியாக வைத்துக்கொள்வது அரசகுலத் தகுதிக்குக் குறைப்பட்டது...'' என்று அரசியார் சொல்லும் போது, ஏதோ சொல்ல வாய் எடுத்தாள் குஞ்சரி.

''சீ! குலத்துரோகியே. பேசாதே. என் மகன் மனத்தையும் மாற்றினாய். உன்னைக் கண்டிக்கத்தக்கவர் இல்லாது போய் விட்டார்கள். மிகவும் நெருக்கடியான சமயத்தில் சக்ரவர்த்திகளுக்கு இடையூறாக அவரது மனத்தில் சஞ்சலத்தை அளித்தாய். இந்த மாளிகையில் தங்கியிருக்காதே. இப்போதே போய்விடு. இங்கிருந்து போய்விடு. வேண்டுமென்றால் இந்த நகரத்தைவிட்டே போய்விடு...'' என்று கர்ஜித்த அரசியாரிடம் ஏதோ சொல்ல விரும்பினாள் குஞ்சரி.

''பெருமதிப்பிற்குரிய சோழப் பேரரசியார் அவர்களே! வாணர் குல நிலைவிளக்குப் போன்றவரே! இயல் வாழ்வும் இசை வாழ்வும் இமயமலை மகளறத்தின் செயல் வாழ்வும் திருத்தாலி பெற்றுடைய பேரரசியே! நீங்கள் என் தாய் போன்றவர்கள்'' என்று சொல்லும் போதே, சோழமாதேவி அவளருகே நெருங்கி, ''சீச்சி... என்ன சொன்னாய்? உனது இசையை நான் பாராட்டியது உண்மைதான். உனது நாட்டியத்தைப் பாராட்டியது உண்மைதான். அதனால் வந்த வினை நீ சக்ரவர்த்தியுடன் நெருங்கிப் பழகத் தொடங்கியது. நான் உனது தாயா?... சொன்ன நாவை வாளெடுத்து வெட்ட யாருமில்லையே?... யாரங்கே....? இவளை மாளிகையைவிட்டு வெளியே கொண்டுதள்ளுங்கள். முடிந்தால் கோட்டைக்கு வெளியே கொண்டுதள்ளுங்கள். இவள் இனி ஒரு கணம் என் முகத்தில் விழிக்க வேண்டாம். சக்ரவர்த்தியையும் இவள் சந்திக்கவே கூடாது. உம். என் கட்டளையை நிறைவேற்றுங்கள்'' என்று கோபம் மிகுதியுடன் கட்டளையிட்டாள்.

குஞ்சரி ஒரு கணம் திகைத்தாள். மறுகணம் திடுக்கிட்டாள். துடித்தாள் ஒரு கணம். குமுறினாள் மறுகணம்.

''அம்மா, தாயே'' என்று ஏதோ கூற வாயெடுத்தாள்.

''உம்; தூக்கிச்செல்லுங்கள் இவளை. காவலரைக் கூப்பிடுங்கள்.''

''அம்மா, ஒருவரும் என்னைத் தொட்டுத் தூக்க வேண்டாம். நானே செல்கிறேன். என்னைப் பெற்ற தாய் கோட்டைக்கு வெளியே நேற்றே போய்விட்டாள். தன் சொந்தக் காரியத்திற்காகச் செல்ல வில்லை. நாட்டிற்காகத்தான் செல்கிறாள். நானே சென்றிருப்பேன். எனக்கு இங்கு முக்கியமான காரியமிருந்தது'' என்று சொல்லி வந்தவளை, சீற்றத்துடன் அரசியார் தடுத்து, ''போதும் போதும்... முக்கியமான காரியத்தின் இலட்சணம்... நகரமே அல்லோ கல்லோலப் படும்போது அரசரை மயக்குவதுதான் முக்கிய காரியமா?''

''அ...ம்...மா...!''

''இங்கேயே தங்கியிருந்து எதிரிக்கு உளவுசொல்வதுதான் முக்கியக் காரியமா? ஏய்.... யாரங்கே?... இவளை இழுத்துச் செல்லுங்கள். இவள் பேச்சைக் கேட்டுக் கொண்டேயிருக்க எனக்கு நேரமில்லை..'' என்று கூறி சக்ரவர்த்தினி திருப்பிக்கொண்டாள் முகத்தை.

குஞ்சரி கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஒழுக, ''சோழர்க் குலப் பேரரசி அவர்களே! தங்கள் மாங்கல்யத்தின் பெயரால் நான் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். என்னை பற்றி மிக மோசமான அவதூறுகளைச் சுமத்துங்கள். ஆனால் 'துரோகி' என்ற பட்டத்தைச் சுமத்தாதீர்கள்'' என்று கூறமுற்பட்டவளை -

''ஆம் சுமத்துவேன். உனக்கென்ன மணவாளன் அந்தப்புரத்தில் வேலை?'' என்று சீறினாள்.

குஞ்சரி சற்று மௌனமாக இருந்து, ''பெண்கள் சுமத்தும் பழியை அவ்வளவு எளிதில் தீர்க்க முடியாது. காலம்தான் அதற்கு விடையளிக்க வேண்டும். சோழர்குலபேரரசி அவர்களே! நான் இப்போது போகிறேன். ஆனால், எங்கும் போய்விட மாட்டேன். தங்கள் அருகிலேயே இருப்பேன். நான் 'நிரபராதி' என்று நிரூபணம் ஆகும் வரை இங்கேயே இருப்பேன். நான் துரோகியல்லள் - நான் உங்கள் மகனை சகோதரன் போல் பாவித்தவள்.. இந்த நாடு ஒன்றுதான் எனக்கு மிகவும் பிடித்தமான காதலன். அவனைக் காக்கவே

இவ்வளவு பழிகளையும் மேற்கொண்டேன். வருகிறேன்...'' என்று கூறும் போது அவள் கண்ணீர் அருவி போல் பூமியில் சிந்தியது.

''உம். போ... வருகிறேன் என்று சொல்லாதே... போயே போய்விடு. நாட்டின் மீது எங்களுக்கு, இங்குள்ள ஆயிரமாயிரம் மக்களுக்கு இல்லாத அன்பு இவளுக்கு வந்துவிட்டது!'' என்று கூறி ராணி திரும்பிப் பாராமல் அங்கிருந்து சென்றாள்.

குஞ்சரியின் கரங்களைப் பிடிக்க வந்த பணிப்பெண்களை உதறிவிட்டு, குஞ்சரி கால்கள் தள்ளாட நடக்கலானாள்.

ஆனால், உள்ளத்தில் உறுதி குறையவில்லை!

# 26

குஞ்சரி தள்ளாடியவாறு வீதியில் நடந்தபோது மக்கள் பரபரப்புடன் இங்குமங்கும் ஓடுவதைக் கண்டாள்.

''பாண்டியர் படைகள் பின்னடைந்து விட்டனவாம். ஆனால், இளவரசர் ராசேந்திரன் படைகளைச் சின்னாபின்னப் படுத்தி விட்டார்களாம்'' என்று ஒருவன் கூறிக்கொண்டே ஓடினான்.

குஞ்சரி நெஞ்சை அழுத்திப்பிடித்துக் கொண்டாள். 'பாண்டியர் படைகள் பின்னடைந்து விட்டன என்றால் இவர்கள் ஓடுவானேன்?'' என்று அவள் ஒருவரைக் கேட்டாள்.

''அதென்னமோ தெரியாது. நாங்கள் வீட்டைக் காப்பாற்ற ஓடுகிறோம்'' என்றான் அவன் ஓடிக்கொண்டே.

குஞ்சரிக்குச் சிரிப்பு வந்தது. ''நாட்டைக் காப்பாற்ற நினைக்காமல் வீட்டைக் காப்பாற்ற நினைக்கிறார்களே என்று'' வாய்விட்டே சொல்லிக்கொண்டாள்.

காளியாரைச் சந்தித்துக் கேட்டால் விபரம் புரிகிறது என்று முதலில் மேற்குக் கோட்டைவாயிலை நோக்கிச் சென்றாள்.

அங்கே காளியார் இல்லை. சோழச் சக்ரவர்த்தியும் மற்றும் அமைச்சர் மண்டலத்தாரும் இரகசிய ஆலோசனை நடத்தச் சென்றிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்தாள். இரகசியக் கூட்டம் நடக்குமிடத்தில் நமக்கென்ன வேலை என்று எண்ணியவளாய் தெற்குக் கோட்டைவாயிலை நோக்கி நடந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போல் காளியார் மதில் மீது நின்று கொண்டிருந்தார். குஞ்சரி மதில் மீது ஏற முற்பட்ட போது வீரர்கள் தடுத்தனர். அவர்கள் புதியவர்கள். குஞ்சரியை அறியாதவர்கள்.

குஞ்சரி மதில் சுவரோரமாகவே நடந்தாள். காளியார் கவனித்து விட்டார். அங்கிருந்தே குரல் கொடுத்தார்.

குஞ்சரி சைகை மூலம், தானும் மதில் மீது வருவதாகத் தெரிவித்தாள். காளியார் தன் மறுப்பைச் கையசைப்பின் மூலம் தெரிவித்தார்.

குஞ்சரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. காளியார் கூடத் தன்னைத் தவறாக நினைத்து விட்டாரே என்ற கவலையுடன் மரத்தின் நிழலில் சோகமாய் உட்கார்ந்திருந்த போது வீரனொருவன் அவளருகே வந்து காளியார் கூறியதாகச் செய்தி தெரிவித்தான். காளியார் விரைவில் அவளிருக்கும் இடத்திற்கு வருவதாகவும் கோட்டை மதில் மீது ஒருவரையும் அனுமதிக்கக்கூடாது என்பது கடுமையான அரச கட்டளையென்றும் தெரிவித்த பிறகே குஞ்சரிக்கு நிம்மதியாக இருந்தது.

சொல்லியபடி காளியார் குஞ்சரியைத் தேடி வந்துவிட்டார். காளியாரைக் கண்டவுடன் குஞ்சரி விம்மி விம்மியழுதாள். மாளிகையில் நடைபெற்ற சம்பவத்தைக் கூறினாள்.

"நீங்கள் சொல்லுங்கள் காளியாரே! நான் துரோகியா? இப்போது சொல்லுங்கள். நான் பாண்டிய வீரர் தலையைப் பந்தாடிச் சீவி விடுகிறேன்" என்றாள் ஆக்ரோஷத்துடன். காளியார் குஞ்சரியைச் சமாதானப்படுத்தினார். "குஞ்சரி, போரின் போக்கே புரியவில்லை. நேற்று மிக வேகமாக வந்த எதிரிப்படைகள் கோட்டை மதிலை நெருங்காமலே பின்வாங்கியதன் மர்மம் புரியவில்லை. அதனால் தான் சக்ரவர்த்தி மந்திரிப் பிரதானிகளுடன் அவசர ஆலோசனை செய்யச் சென்றிருக்கிறார்" என்றார்.

"நான் சொல்லட்டுமா?" பாண்டியர் படைகள் பாய்வதற்காகப் பதுங்குகின்றன. நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஒரு வேளை இரகசிய வழியின் மூலமாக உள்ளே நுழைய முயலலாம்" என்றாள் குஞ்சரி கண்களில் ஒளிபொங்க.

காளியார் தனது கன்னத்தைத் தடவிக்கொண்டு "இரகசிய வழியா! அவற்றை அடைத்து விட்டோமே" என்றார்.

''இல்லை. மற்றொரு வழி இருக்கிறது. அதை உடனே கவனிக்க வேண்டும்'' என்றாள் குஞ்சரி.

காளியார் வைத்த விழி வாங்காமல் பார்த்தார். அவர் பார்வையில் சந்தேகமும் கலந்திருந்தது.

''மற்றொரு வழியா? எங்கே இருக்கிறது'' என்று காளியார் பரபரப்புடன் கேட்டார்.

''மணவாளன் மாளிகையில்...!'' என்று குஞ்சரி சொன்னவுடன் காளியார் அவள் முகத்தை கூர்ந்து நோக்கி மெல்லிய சிரிப்புட ''உனக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டார். ஏதோ நி வந்தவர் போல் ''ஆமாம். ஆமாம். உனக்குத் தெரிந்திருக்க நியாயமுண்டு'' என்றார்.

''என்ன பொருளில் நீங்கள் சொல்கிறீர்கள் காளியாரே? நீங்களும் சந்தேகப்படுகிறீர்களா?'' என்று குஞ்சரி சோகம் நிறைந்த குரலில் கேட்டாள்.

''இல்லை. இல்லை குஞ்சரி. நான் தவறாக நினைக்கவில்லை. ஊர் வாய் பொல்லாததாக இருக்கிறதே! இரகசியவழியைப் பற்றி நான் அரசரிடம் எவ்வாறு சொல்வேன்? உன்மேல் அவருக்குச் சந்தேகம் அதிகமாகும்'' என்றார். ''நான் சொல்கிறேன். சக்ரவர்த்தி எங்கே மந்திராலோசனை நடத்துகிறார். சொல்லுங்கள்'' என்றாள்.

காளியார் அவள் செல்வதையே பார்த்துக்கொண்டு நின்றார். ஆனால், அதற்குள் நிலைமை வேறுவிதமாக மாறிவிட்டது. பின்வாங்கும் பாண்டியர் படைகள் கோட்டை மதிலை நெருங்கி வருவதாகச் செய்தி வந்தது.

அம்புகள் 'விர் விர்' என்று மறுபக்கத்திலிருந்து பறந்து வந்தன.

# 27

**சோ**ழ சக்ரவர்த்தியும் மற்றும் மந்திரிப் பிரதானிகளும் கூடி மிக இரகசியமாக யோசனை செய்து கொண்டிருந்தனர். கோட்டைப் பாதுகாவல், கோட்டைவாசல் வீரர்களின் பலம், உள்ளே ஆயத்தமாகயிருக்கும் படைவீரர்களின் எண்ணிக்கை, வியூகத்தின் எண்ணிக்கை, சிறு சிறு குழுக்களாகப் பிரித்து தாக்குதல் நடத்தும் திறமை மிகுந்த வீரர்களின் எண்ணிக்கை இவற்றைப் பற்றிக் கலந்தாலோசித்தனர்.

கோட்டைக்கு வெளியே பழையாறை நகர்ப் பக்கம் சென்றுள்ள, இளவரசர் இராஜேந்திரன் தலைமையின் கீழ் உள்ள படை வீரர்களைப் பற்றிய பேச்சு வந்தது.

''நமது படைகளில் பாதி எண்ணிக்கைக்கு மேல் இளவரசர் தலைமையில் சென்றுள்ளனர்'' என்றார் படைத்தலைவர்.

''பாதிக்கும் மேலா?'' என்று சக்ரவர்த்தி கேட்டார். ''பாதிக்கு மேல் சென்றுவிட்டதால் நாம் இங்கே கோட்டை முற்றுகையை எதிர்த்து நிற்க வேண்டியிருக்குமே!'' என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

முதல் அமைச்சர் சற்றுச் சிந்தித்துவிட்டுக் கூறினார் : ''கோட்டைக்குள்ளிருந்து இன்னும் சில நூறு பேர்களை வெளி யேற்றினாலும் நல்லது. உணவுப் பிரச்னை சற்றுக் குறையும். அதனால் இளவரசர் தலைமையின் கீழ் திருக்குடந்தை அருகே பாடியிறங்கியிருக்கும் வீரர்களின் எண்ணிக்கை சரியானதே'' என்றார்.

''கோட்டைக்குள் உணவுநிலை எப்படியிருக்கிறது?'' என்று சக்ரவர்த்தி வினவியபோது -

''நான்கு நாட்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்கள் உள்ளன'' என்று முதல் அமைச்சர் விடை பகன்றார்.

சக்ரவர்த்தி திடுக்கிட்டவராய், ''ஏன்? முற்றுகை நான்கு நாட்கள் மட்டும்தான் நீடிக்கும் என்பது தங்கள் கணிப்போ?'' என்று சற்றுக் கோபத்துடன் கேட்டார்.

''அப்படியில்லை, சக்ரவர்த்தி! உணவுப்பண்டங்களை மொத்தமாக வாங்கி விற்பனை செய்யும் வணிகர்கள் கோட்டையை விட்டு வெளியேறி விட்டனர். கோட்டைக்குள் நவதானியங்கள், அரிசி ஏதும் கடந்த சில நாட்களாக வரவில்லை'' என்றார் அமைச்சர்.

''இரகசியவழியை எல்லாம் அடைத்தாகிவிட்டதா?'' என்று தளபதியை நோக்கிக் கேட்டார் சக்ரவர்த்தி.

''கங்கைகொண்ட சோழீசர் கோயிலுக்குள்ளிருக்கும் சுரங்க வழியைத் தவிர மற்றவற்றை அடைத்து, ஆங்காங்கே பலமான காவலுமிட்டு விட்டோம்'' என்றார் தளபதி.

"துவாரசமுத்திரத்திலிருந்து ஏதாவது செய்தி வந்ததா?" என்று கேட்டார் சக்ரவர்த்தி. "இல்லை" என்று திருமந்திர ஓலை நாயகம் மறுமொழி கூறினார்.

இவ்வளவையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த இராசராச வாணகோவரையர், தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார். அவருக்கு எண்பது வயதிற்கும் மேல் ஆகியிருக்கும்.

போர்க்களங்களிலே விழுப்புண் பெற்ற வடுக்களுடன் முதுமையிலும் ஆற்றல் குன்றாத வாணகோவரையர் ஆற கழுவூரி லிருந்து கங்கைகொண்டசோழபுரத்திற்கு இருபது நாட்களுக்கு முன்பே வந்துவிட்டார். வரும்போது தன்னுடன் சிறந்த வீரர்கள் ஐவரை அழைத்து வந்திருந்தார். அவர்களைத் தவிரக் கொல்லி மலையிலிருந்து வில்லவர்கள் நூறு பேரையும் வருமாறு ஏற்பாடு செய்திருந்தார்.

ஆறகழுவூர் மகதநாட்டுக்குத் தலைநகர். மகதநாட்டை ஆண்ட வாணர்கள். வல்லவரையர் வந்தியத்தேவன் மரபில் வந்தவர்கள். தனிநாட்டை ஆண்ட குறநில மன்னர்களாயினும் அன்புமிக்கவர்கள். ஆபத்து என்றால் ஓடோடி வந்து விடுவார்கள். பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பதைக் குறித்து இராஜராஜன் சொல்லியனுப்பி யிருந்தார். உடனே மகதைப் பெருமாளான இராஜராஜ வாண கோவரையர் அந்த முதிய பிராயத்திலும் தொலைவு பாராமல் வந்து சேர்ந்தார்.

பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பதற்கு ஏற்ற படைபலம் இருக்கிறதா என்று வாணகோவரையர் முதலில் வினவினார். மற்ற குறுநில மன்னர்களின் ஒத்துழைப்பு இருக்கும் என்று இராஜராஜன் தவறாகக் கணக்கிட்டு விட்டார். சம்புவரையரும் மலையமானும் கோப்பெருஞ்சிங்கனும் ஒத்துழைக்காமல் எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்துவார்கள் என்று முதலில் இராஜராஜன் எதிர்பார்க்கவில்லை. படைக்கு ஆள் சேர்க்கும் அறிவிப்புக் கேட்டு ஏராளமான பேர் சேருவார்கள் என்றும் எதிர்பார்த்தார். இரண்டும் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. என்றாலும், யுத்த தந்திரங்கள் மூலம் பாண்டியனை முறியடித்து விடலாம் என்று எண்ணினார். படைத்தளபதிகளும் அதற்கேற்பத் திட்டங்கள் வகுத்தனர்.

போர் முறையே திடீரென்று மாறியது. பாண்டியர் படைகள் மிக வேகமாக முன்னேறி வருவது அறிந்த பிறகுதான் இராஜராஜனுக்கு உள்ளத்திற்குள் அச்சம் ஏற்பட்டது. வாணகோவரையர் அருகேயிருந்து இரகசியமாக ஆலோசனைகள் கூறிவந்தார்.

கொல்லிமலை வில்லவர்களும் எதிர்பார்த்தபடி இரகசியமாக வந்து சேர்ந்துவிட்டனர். அவர்கள் வந்திருப்பதை ஒருவரும் அறியாதவாறு மிகவும் ஜாக்கிரதையாக அந்தச் செய்தியைப் பாதுகாத்தார் சக்ரவர்த்தி.

வாணகோவரையர், இரகசிய ஆலோசனையில் கலந்து கொள்ளாமல், அங்கே நடக்கும் பேச்சு வார்த்தைகளை மட்டும் கவனித்து வந்தார். பிறகு அவர் பேசினார். தன் திட்டத்தைக் கூறினார்.

''கோட்டைக்குள்ளேயும் வெளியேயும் எவ்வளவு வீரர்கள் இருக்கின்றனர் என்பது பெரிய விஷயமல்ல. தந்திரமுறையை எவ்வாறு கையாளப் போகிறோம் எந்தெந்த விதமாகத் தாக்கப் போகிறோம் தாக்குதலைத் தடுத்து நிற்கப் போகிறோம் என்பதுதான் முக்கியம். கொல்லிமலை வில்லவர்கள் குறிபார்த்து அம்பெய்யக் கூடியவர்கள். தாக்குதல் தொடங்குகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். பகலெல்லாம் பாண்டியர் படைகள் மிக பலமாகத் தாக்குவார்கள். திருப்பித் தாக்கி நமது சக்தியை இழந்துவிட வேண்டாம். பொழுது சாய்ந்து இருள் சூழ்ந்தவுடன் கொல்லிமலை வில்லவர் தங்கள் திறமையைக் காட்டுவார்கள்'' என்றார்.

கொல்லிமலை வில்லவர்களைச் சக்ரவர்த்தி கோயில் பிராகாரத்தில் போய்ப் பார்த்து வந்தார். இருளோடு இருளாக இருக்கும் கரிய நிறம். சுருட்டை மயிர். குள்ளமான தோற்றம். பாறை போன்ற மார்பு. சுறுசுறுப்பான விழிகள்.

வாணகோவரையர் கூறிய வில்லவர் திறமையை சக்ரவர்த்தி பார்த்தவுடனேயே புரிந்துகொண்டார்.

மந்திராலோசனைசபை நடந்து கொண்டிருக்கும் போதே பாண்டியர் படைகள் கோட்டையைச் சூழ்ந்துகொண்டு தாக்கத் தொடங்கி விட்டனர் என்ற செய்தி எட்டிவிட்டது.

மக்கள் வீதிகளில் பீதியடைந்து ஓடத்தொடங்கினர். வீட்டிற்குள்ளே சென்று கதவை அடைத்துக் கொண்டனர். குதிரைப்

படைகள் ஒவ்வொரு கோட்டைவாயிலையும் நோக்கி விரைந்து அணிவகுத்து நின்றன. ஒவ்வொரு கோட்டைவாயிற் கதவு களுக்கருகே யானைகள் வரிசையாக நின்றன.

"தம் தம்" என்று முரசு அதிர்ந்தது. கொம்பு ஒலித்தது. தாரையும் தப்பட்டையும் யுத்தம் யுத்தம் என்று சப்தித்தன. புலிக்கொடி ஏந்தி வீரர்கள் அணிவகுத்தனர். வேல் ஏந்தி வரிசை வரிசையாக 'வெற்றிவேல், வீரவேல்' என்று முழக்கமிட்டுப் படைவீரர்கள் வீதிகளில் அணிவகுத்து நடந்து சென்றனர். அதனால் தூசியும் தும்பும் எழுந்து வானத்தை எட்டின.

சக்ரவர்த்தியின் கட்டளைப்படி மதில்மேல் ஏறி வீரர்கள் திருப்பித் தாக்கவில்லை. அதிவேகமாகப் பறந்து வந்த அம்புகள் மதிலையும் தாண்டி உள்ளே வீழ்ந்தன.

நேரம் ஆக ஆக பாண்டிய வீரர்கள் அகழியை நெருங்கினர். மீன்கொடி காற்றில் அசைந்தாடியது. மதில் மீது அமைந்திருந்த அரண் வழியாக மதிலுக்கு வெளியே நடப்பதை அவ்வப்போது சொல்லி அனுப்பிக் கொண்டிருந்த வீரர்கள் கூட, திருப்பித் தாக்கும் கட்டளையைச் சக்ரவர்த்தி ஏன் இடவில்லை என்று கவலைப் பட்டனர். சக்ரவர்த்தியின் மந்திராலோசனை நடக்குமிடத்திற்கு ஓடோடிச் சென்ற குஞ்சரி அந்த இடத்தை அடைவதற்கு முன்பு, சக்ரவர்த்தி அங்கிருந்து புறப்பட்டு விட்டார். அவர் அமர்ந்திருந்த இரதம் விரைந்து சென்றது. குஞ்சரியை அவர் காணவில்லை.

"அரசே! அரசே" என்று குஞ்சரி கூவியது அவர் காதில் விழ நியாயமில்லை.

குஞ்சரி செய்வதறியாது திகைத்தாள். இங்குமங்கும் ஓடினாள். அதற்குள் குதிரை மீது வீரர்கள் விரைந்து சென்று கொண்டிருப்பதை குஞ்சரி கண்டாள். புலிக்கொடி ஏந்தி வீரர்கள் அணிவகுத்துச் செல்வதைக் கண்டாள். வீதியின் ஓரமாக நின்ற அவள், கடல்போல் படைகள் செல்வதைப் பார்த்துக்கொண்டே செய்வதறியாது நின்றாள். சொல்வதறியாது நின்றாள். 'ஓ' என்று கத்த வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

"வீரர்களே, எங்கே ஓடுகிறீர்கள்? குதிரை வீரர்களே, அணி வகுத்து எங்கே செல்கிறீர்கள்?" என்று குஞ்சரி, வீதியில் செல்பவர் களை நோக்கிக் கூவினாள்.

அணிவகுத்துச் செல்லும் படையினர் வழியில் யாரோடும் பேச மாட்டார்கள் என்பது அவளுக்குத் தெரியாது.

படையினர் எதிரே எந்தத் தடை ஏற்பட்டாலும் அதைத் தகர்த்து முன்னேறுவார்கள் என்று அவளுக்குத் தெரியாது.

வீரர்களுடனே சிறிது தூரம் ஓடினாள்.

"இரகசியவழி ஒன்று இருக்கிறது. அதைப் பற்றி சக்ரவர்த்தி யிடம் சொல்ல வேண்டும், சக்ரவர்த்தி எங்கே ஐயா இருக்கிறார்?" என்று குஞ்சரி கேட்டாள். யாரும் நின்று பேசவில்லை.

"வெற்றி வேல்... வீர வேல்" என்று கோஷமிட்டுச் சென்று கொண்டிருந்த வீரர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

கையிலே ஈட்டி ஏந்திச் சென்றனர். கையிலே வேல் ஏந்திச் சென்றனர். ஒருவராவது குஞ்சரியைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவர்களுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான். வீதியின் இருபுறமும் அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை.

குஞ்சரியைப் போன்று தேவலோக அரம்பரையர் இருந்தால்கூட அவர்கள் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். அவர்கள் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். அவர்கள் கோஷம் ஒன்றே ஒன்றுதான். எதிரியை வீழ்த்த வேண்டும்!

போர்வீரர்களின் அணிவகுப்பு சென்று மெல்ல மறைந்தது. வீதி அமைதியடைந்தது. ஒரு சிறு பறவைகூடப் பறக்கவில்லை. வீடுகள் உட்புறம் தாளிடப்பட்டிருந்தன.

குஞ்சரி கால்கள் தள்ளாட மெல்ல நடந்தாள். எங்கே செல்வது என்று புரியாது நடந்தாள். யாரைக் கேட்பது என்று தெரியாது நடந்தாள்.

அந்திமாலை விரைந்து வந்துகொண்டு இருந்தது. ஓராழிக் கதிரவன் ஓய்வுபெற மேல்திசையில் விரைந்திறங்கிக் கொண்டு இருந்தான்.

குஞ்சரி கங்கைகொண்டசோழீசர் கோயிலின் வெளிக் கோபுர வாயிலருகே சென்றமர்ந்தாள். கோயில் கலையிழந்துக் காணப் பட்டது. கோயில் வாயிலில் ஏழெட்டு வீரர்கள் குதிரை மீது வேலாயு தத்துடன் நின்று கொண்டிருந்தனர். வழக்கமாகக் கோயில் வாயிற்

படியருகே பூமாலை விற்பவர்களைக்கூடக் காணவில்லை. ராஜ வீதி வெறிச்சோடிக் கிடந்தது. அந்திப் பூஜை நடப்பதற்கான அடையாளமே தெரியவில்லை.

சோர்வும் பசியும் சூழ குஞ்சரி படிக்கட்டுகளில் வீழ்ந்தாள். அவள் விழித்தெழுந்தபோது எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. வீதி விளக்கு எரியவில்லை.

முன்கோபுர வாயில் வழியே கொல்லிமலை வில்லவர் கையில் வில்லுடன் வந்து கொண்டிருந்தனர். அந்த இருளில் சிவபெரு மானின் பூதகணங்கள் வெளியேறுவது போல் தோன்றியது.

இதுவரை கோபுரவாசலில் நின்றுகொண்டிருந்த குதிரை வீரர்கள் வில்லவர்களைப் பின்தொடர்ந்தனர். குஞ்சரி அவர்கள் செல்வதைப் பார்த்தவாறிருந்தாள்.

''குஞ்சரி!'' என்ற குரல் கேட்டது. பழக்கப்பட்ட குரல். தேவாரப் பதிகம் பாடும் ஆரூர் நம்பி கோயிலுக்குள்ளிருந்து வந்து கொண்டிருந்தார்.

''நம்பி, நீங்களா? இவ்வளவு நேரம் கோயிலுக்குள்ளேயா இருந்தீர்கள்?'' என்று குஞ்சரி கேட்டாள்.

''ஆமாம். கோளாறு பதிகம் பாடித் துதித்துக்கொண்டிருந்தேன். கங்கைகொண்டசோழபுரத்திற்கு வந்துள்ள இடரை நீக்குமாறு சோழீசரை வேண்டிக்கொண்டிருந்தேன்'' என்றார் நம்பி.

''அடடா, தெரிந்தால் நானும் வந்து கலந்துகொண்டி ருப்பேனே...'' என்று குஞ்சரி கூறினாள். அதில் சோர்வு நிறைந்திருந்தது.

''உன்னைப் பார்த்தால் மிகவும் சோர்வுற்றவள் போல் காணப் படுகிறாய்'' என்றார் நம்பி.

காலையிலிருந்தே தான் ஒன்றும் உணவருந்தாததைக் குறித்து குஞ்சரி கூறி, ''ஒரு வாய் தண்ணீராவது வேண்டும்'' என்றாள்.

''கோயிலுக்குள் செல்ல முடியாது. கோயிலுக்குள் செல்ல, இனிப் படைத்தளபதி அனுமதி வேண்டும். அருகேயுள்ள என் வீட்டிற்கு வா'' என்றழைத்தார் நம்பி.

அந்த இருளில் அவர்கள் தட்டுத்தடுமாறிச் சென்றனர். நம்பியின் வீடு சென்று சிறிது ஆகாரம் உண்டு, நீர் பருகி இளைப்பாறுவதற்காக

வெளித்திண்ணைக்கு வந்த குஞ்சரியின் பார்வை ஆகாயத்தை நோக்கிச் சென்றது.

தென்திசையில், வானத்திலிருந்து பூச்சொரிவது போல் தீச்சுடர்கள் வீழ்ந்துகொண்டிருந்தன.

நட்சத்திரங்கள் சிதறி வீழ்வது போல் ஒரு கணம் தோன்றியது. செவ்வந்தி மலர் ஒளிமயமாக வீசப்படுவது போல் ஒரு கணம் தோன்றியது.

நம்பியும் விரைந்து வந்து பார்த்தார். "கோட்டை வாயில் அருகே நெருப்புப் பந்தம் வீசப்படுகிறது" என்றார் அவர்.

"ஓ! எதிரிகள் வெளியேயிருந்து தீப்பந்தங்களை வீசுகிறார்களா?" என்று குஞ்சரி கேட்டாள்.

"எனக்கு எப்படித் தெரியும்? போர் என்றாலே எனக்கு வெறுப்பு உண்டாகிவிட்டது. இந்த யுத்தத்தால் யாருக்கு லாபம்? இறைவன் படைத்த மனித உயிரை, இப்படி வீணே மண்ணாசைக்குப் பலி கொடுப்பதால் உள்ள பயன் என்ன?" என்றார் நம்பி, வெறுப்பு நிறைந்த குரலில்.

"மண்ணாசை நமக்கில்லை. மண் உரிமைதான் ஐயா. நம்மை அடிமைப்படுத்தப் பாண்டியர்கள் நினைக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தவே நமது சக்ரவர்த்தி போரிட விரும்புகிறார்" என்றாள் குஞ்சரி.

நம்பி அவளை ஏறிட்டு ஒரு முறை நோக்கினார். "குஞ்சரி, இந்த இளவயதிலேயே அரசாங்க விவகாரங்களை நீ எப்படி அறிந்து கொண்டாய்? உன் தொழிலைக் கவனிக்காது இப்படி நீ அலைவது ஏன்?" என்றார்.

குஞ்சரி மெல்ல நகைத்தாள். அதில் வெறுப்பு மிகுந்திருந்தது.

சோழநாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்று உண்டு. இருக்க வேண்டும். நமக்குப் பிற நாட்டை அபகரிக்க வேண்டுமென்ற ஆசை இல்லை. கூடவும் கூடாது. அதைப் போல் மற்றவர் வந்து ஆக்கிரமிக்கும் போது தடுத்து நிறுத்தும் உணர்வு வேண்டாமா?" என்றாள்.

நம்பிக்கு வியப்புத் தாங்கவில்லை. "குஞ்சரி, வீட்டுக்குள்ளே போய்ச் சற்று இளைப்பாறு. காலையில் எழுந்து பார்த்துக் கொள்ளலாம்" என்றார்.

குஞ்சரி பரபரப்புடன் ''இளைப்பாறுவதா? கோட்டைவாசலில் என்ன நடக்கிறதோ? மதிலைச் சுற்றிப் பாண்டியர்ப் படைகள் வந்து விட்டன என்றால், உள்ளே நுழைய எவ்வளவு நேரமாகும்? நான் போகிறேன்...'' என்றாள்.

நம்பி சிரித்தபடி, ''நீ போய் என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''நான் எப்படியும் சக்ரவர்த்திகளை எச்சரிக்க வேண்டும். இரகசியவழி ஒன்று இருக்கிறது. அது எதிரிகளுக்கு மட்டுமே தெரியும். சக்ரவர்த்திகளிடம் சொல்லி அதை அடைத்து விடவேண்டும்'' என்று கூறிக்கொண்டே, நம்பியின் மறுமொழிக்குக் காத்திராமல் அங்கிருந்து விரைந்தாள்.

குஞ்சரி தெற்குக்கோட்டைவாயிலை நெருங்கும் போதுதான் விவரம் அறிந்தாள். கொல்லிமலை வில்லவர்கள் மதில் மீதிருந்து அம்பிலே தீப்பந்தம் தோய்த்து வெளியே எய்துகொண்டிருந்தனர்! இமை மூடித் திறப்பதற்குள் ஒவ்வொருவரும் இரண்டு மூன்று என்று நாணை வளைத்து எய்ததால், வானத்தே தீச்சுடர் பூமழை போல் மறுபக்கம் சென்று வீழ்ந்தது. பாண்டியர்ப்படைகள் மீது மாரி போல் வீழவும் அவர்கள் தீயின் தாக்குதல் தாங்காமல் உயிர் பிழைத்தால் போதும் என்று பின்வாங்கினர்.

குஞ்சரி தொலைவில் நின்று இதைப் பார்த்துக்கொண்டிருந் தாள். சோழர்ப்படைகள் மகிழ்ச்சி மிகுதியால் கூத்தாடின.

காளியார் தெற்குவாசல் மதில் மீது இருப்பதைக் கேள்விப் பட்டாள் குஞ்சரி. இருள் மெல்ல விலகி, வைகறை நெருங்கிக் கொண்டிருந்தது. ஓய்வு எடுத்துக்கொள்ள சோழர்ப்படைகள் பாடி வீடுகளுக்குச் சென்றனர்.

சோழச் சக்ரவர்த்தி இப்போது கோட்டைவாயிலருகே வந்து சேர்ந்தார். மதில் மீது ஏறி, பாண்டியர்ப்படைகளின் நிலையைக் கண்டறிய விரும்பினார்.

குஞ்சரியும் அவரைத் தொடர்ந்தோடினாள். அவளை யாரும் நிறுத்த்வில்லை.

''குஞ்சரி, இங்கே ஏன் வந்தாய்? மிகவும் அபாயகரமான இடமிது'' என்றார் இராஜராஜசோழச் சக்ரவர்த்தி.

''அந்த அபாயம் தங்களுக்கில்லையா?'' என்றாள் குஞ்சரி.

''மிகவும் சோர்வுற்றிருக்கிறாய். இரவு உறங்கவில்லையா? நேற்றெல்லாம் என்னைக் காணவில்லையே!'' என்றார் சக்ரவர்த்தி.

காளியார் குறுக்கிட்டுக் காலையில் நடந்தவை எல்லாம் கூறினார்.

குஞ்சரி குரல் தழுதழுக்க, ''சக்ரவர்த்தி அவர்களே! வில்லவர்கள் நேற்று தீ மாரி பொழிந்ததைக் கண்டேன். பாண்டியர் படையை பின்வாங்கியதாக நினைக்க வேண்டாம். அழகிய மணவாளன் அவர்களுக்கு இரகசியவழியைக் காட்டி விடுவான். உடனே அதைத் தடுக்க வேண்டும். அதைத் தங்களிடம் கூறவே நான் துடிதுடிக்கிறேன்...'' என்றாள்.

''இரகசியவழியா? எங்கேயிருக்கிறது குஞ்சரி? எங்களுக்குத் தெரியாத இரகசியமா?'' என்று கேட்டார் சக்ரவர்த்தி.

''அழகியமணவாளன்மாளிகையில், இரண்டாவது கூடத்துச் சயன அறையில்!'' என்று கூறிய குஞ்சரியை நோக்கி சக்ரவர்த்தி, ''உனக்கெப்படித் தெரியும் குஞ்சரி?'' என்றார். பிறகு, ''உம். உனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரிந்திருக்கும்? மற்றவர் சொல்லும் போது நான் நம்பவில்லை. குஞ்சரி, மணவாளன் சயன அறைக்கு நீ ஏன் சென்றாய்?'' என்று சந்தேகக்கண்களுடன் அவளை நோக்கிக் கேட்டார்.

குஞ்சரியின் விழிகளில் நீர் தளும்பியது. ''சக்ரவர்த்தி அவர்களே! தாங்களும் என்னைச் சந்தேகப்பட்டால் என் நிலை என்ன ஆவது? சந்தேகத்தைப் பிறகு விளக்குகிறேன். இப்போது உங்கள் வீரர்களை என்னுடன் அனுப்புங்கள்'' என்று கூறினாள்.

ஒரு கணம் சக்ரவர்த்தி யோசித்தார். ''சரி, உன்னுடன் வீரர்களை அனுப்புகிறேன்'' என்று சொல்லி வாய் மூடவில்லை. கோட்டைக்கு வெளியே பரபரப்பு. என்ன நடந்தது, என்ன நடக்கிறது என்று ஒருவருமே நினைக்க முடியாதபடி ஒரே கணத்தில் நூற்றுக்கணக்கான அம்புகள் பாய்ந்து வந்தன.

குஞ்சரி 'ஓ'வென்று ஓலமிட்டாள். அவள் சக்ரவர்த்தியைத் திடீரெனத் தழுவிக்கொண்டாள்.

''சர்சர்'' என்று இரண்டு அம்புகள் அவள் முதுகில் பாய்ந்து, மார்பு வரை வந்து, சக்ரவர்த்தியின் மார்பை ஒட்டி நின்றன.

# 28

இமை திறந்து மூடுவதற்குள் நடந்துவிட்ட அந்தப் பயங்கர நிகழ்ச்சியை மற்றவர் அறிவதற்கு முன்பே, மதிலின் மேல் நின்று கொண்டிருந்த காவல் வீரர்களின் மார்பில் அம்பு மழை பொழியவே அவர்கள் அனைவரும் சாய்ந்தனர். மன்னரின் மேல் அம்பு பாயாமல் வியூகமாக நின்றவர்கள் மீதும் அம்புகள் தைத்தன.

''அரசே, ஆபத்து, ஆபத்து! மறைவிடத்திற்குச் சென்று விடுங்கள்'' என்ற கூக்குரல் எங்கும் எழுந்தது. சக்ரவர்த்தி இராஜராஜர் குஞ்சரியை இருகரங்களிலும் சுமந்துகொண்டு மதிலின் மறைவிடம் வழியாகக் கீழே இறங்கும் போதுகூடக் குஞ்சரிக்கு உயிரிருந்தது.

வீரர்கள் இருவர் குஞ்சரியை மன்னரிடமிருந்து பெற்று குழந்தையைத் தூக்கி வருவது போல் தூக்கி வந்து, படிக்கட்டுகளின் வழியே இறங்கி, தெற்குவாசலில் உட்புற நுழைவாயிலருகே கிடத்தினர்.

இராஜராஜன் படிகட்டுகளின் வழியே ஒரே தாவாகத் தாவி இறங்கி ஓடி வந்தார்.

''குஞ்சரி!'' என்று கூவினார் அவர். குஞ்சரி மெல்லக் கண் திறந்தாள். இரு கைகளையும் எடுத்துக் கூப்பினாள். கரங்கள் தளர்ந்து வீழ்ந்தன; தலைசாய்ந்தது!

வீரர்கள் தலைகுனிந்து நின்றனர்... வாளைத் திருப்பிப் பிடித்தபடி! காளியார் கதறினார். தன் குழந்தை போல் அவளை வளர்த்தார். பழகினார். மனம் விட்டுப் பேசினார். அவளிடமிருந்து மேலும் மகத்தான பணிகளை எதிர்பார்த்தார். சோழநாட்டின் மேன்மைக்கு அவள் எடுத்துக்கொள்ளும் முயற்சியைப் பாராட்டினார். ஓர் இளம் பெண் இராஜிய விவகாரங்களில் இறங்குவது தவறு என்று அவர் ஒரு நாளும் கூறியதில்லை.

அழகும் கலைஞானமும் கொண்ட ஒரு மங்கை, தன்னந் தனியாக அலைகிறாளே என்று அவர் கவலைப்பட்டதில்லை. அவருக்குக் குஞ்சரியின் சுயக்கட்டுப்பாட்டில் மிகுந்த நம்பிக்கை யுண்டு. அவர் கூடச் சமீப காலத்தில், அவளுடைய நடவடிக்கை களில் சந்தேகம் கொண்டிருக்கிறார். 'விரதபங்கம் நேர்ந்திருக்குமோ?' என்று கவலைப்பட்டிருக்கிறார். ஆனால், அந்தச் சந்தேகம் நகரத்திற்குள் வரும் இரகசியவழியைப் பற்றிச் சக்ரவர்த்தியிடம் தெரிவிக்க அவள் முனைந்துத் துடித்தபோது தவிடு பொடியாகியது. குஞ்சரி நாட்டிற்கு உழைப்பதற்காகவே அவதாரம் எடுத்தவள் என்ற நம்பிக்கை அவர் மனதில் உறுதியானது.

அவர் கதறி அழுதபோது சிதறிய ஒரே ஒரு சொல் மட்டும் சக்ரவர்த்தியின் உள்ளத்தை உலுக்கியது. "காமக்கணைக்குத் தப்பிய கண்ணே குஞ்சரி! பாண்டியர்க் கணைக்கு இரையானாயே!" என்ற கதறல், எதற்கும் கலங்கா மன்னரின் விழிகளிலும் நீரைச் சேர்த்தது.

போர் தொடங்கிய முதல் சில நாட்களில் பாண்டியர் பதுங்கியது போல் இல்லாமல் காலையிலிருந்தே அவர்கள் சுறுசுறுப்பாக இயங்கலாயினர்.

குஞ்சரி கூறிய கடைசி வார்த்தைகள் மன்னரின் மனத்தைவிட்டு அகலவில்லை.

"அழகியமணவாளன் மாளிகையில், இரண்டாவது கூடத்துச் சயன அறையில்!" என்ற மகத்தான இரகசியத்தை மன்னர் மறக்கவில்லை. மெய்க்காவலர்களை அழைத்து உடனே மணவாளன் மாளிகைக்குச் சென்று சோதனை போடச் செய்தார்

குஞ்சரியின் சடலம் தெற்குவாசல் அருகே இன்னமும் இருந்தது. நாட்டைக் காப்பாற்ற முனைந்த வீராங்கனையின் விதி, அவளைச் சோழமண்ணிலேயே பகல் முழுவதும் கிடக்கச் செய்தது. சக்கரவர்த்தி அதே இடத்தில் நிற்க முடியவில்லை. கோட்டையைச் சுற்றிப் பாண்டியர் படைகள் சூழ்ந்தன. ஆழமும் அகலமுமுள்ள அகழியைக் கடக்கப் பாண்டியர்கள் மூங்கில் பாலத்தைக் கட்டுகிறார்கள் என்ற செய்தியும் கிடைத்தது. போரின் போக்கைக் குறித்து ஆலோசனை நடத்த இராஜராஜரும் அமைச்சர் குழுவினரும் படைத்தளபதியும் அருகேயுள்ள மாளிகைக்கு விரைந்தனர்.

போரின் போக்குக் குறித்தும் நிலவரம் குறித்தும் ஒற்றர் படையைச் சேர்ந்தவர் அவ்வப்போது அறிவித்தவாறிருந்தனர். கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டுள்ள பாண்டியர் படைகளின் எண்ணிக்கையை அறிந்த போது சக்ரவர்த்திக்குக் கவலை ஏற்பட்டது. இளவரசன் இராஜேந்திரன் தலைமையின்கீழ் சென்ற படைகளைப் பற்றிய செய்தி இன்னும் கிடைக்கவில்லை.

''அகழியைக் கடந்துவிட்டால் அடுத்து, ஏணிகளைக் கொண்டு மதில்மீது ஏறுவார்கள் எதிரிகள்!'' என்று வரும் பொருள் உரைத்தார் அமைச்சர் ஒருவர்.

''ஏணிகளின் மீது ஏறி வருபவர்களைத் தாக்க முனைபவர் மீது அம்பு மாரி பொழிந்து அவர்களைத் தடுத்துவிடும்'' என்றார் ஒருவர்.

''மதிலின் மீது ஏறிய பிறகு அவர்களைத் தாக்கலாம்'' என்றார் ஒருவர்.

''மதிலின் மீது நான்கு பக்கமும் ஏறுபவர்களோடு, நான்கு கோட்டை வாயில்களையும் யானைகளைக் கொண்டு முட்டி மோதி உடைக்க முயல்கிறார்கள். கோட்டைவாயில்களுக்கு எதிரே பாலம் அமைக்கப்படுகிறது'' என்றார் வேவு பார்த்து வந்துரைத்தவர்.

''கொல்லிமலை வில்லவர்களை அழைத்துத் தீப்பந்தங்களை எரியச் செய்யுங்கள்'' என்று சக்ரவர்த்தி கட்டளையிட்டார். பகலில் தீப்பந்தங்களை எரிவதால் ஏதும் பலனிராது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மறுமொழியாகச் சக்ரவர்த்தி சொன்னார்-

''தீப்பந்தம் எரிவதை நெடு நேரம் நீடிக்க முடியாது. ஆனால், அகழியை அவர்கள் நெருங்குவதைத் தடுக்க முடியும். அதற்குள் நாம் நமது வீரர்களை ஒழுங்குபடுத்திக் கோட்டைவாயிலைத் திறந்து வெளியேறி எதிரிகளைத் தாக்குவோம்'' என்றார். இந்த யோசனைக்குப் பூரணமாக ஆதரவில்லை என்றாலும் உடனே அதை நிறைவேற்ற உத்தரவிட்டார் படைத்தலைவர்.

மந்திராலோசனை நடந்துகொண்டிருக்கும் போது இரண்டு முக்கியமான செய்திகள் கிடைத்தன. ஒன்று, துவாரசமுத்திரத் திற்குச் சென்று கொண்டிருந்த குஞ்சரியின் தாயைப் பாண்டியர் படைகள் தடுத்து நிறுத்திவிட்டன என்பது. இளவரசர் படைகள் கங்கை கொண்டசோழபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தி மற்றொன்று.

சோழச் சக்ரவர்த்தி இராஜராஜன் சிந்தனையிலாழ்ந்தார். மந்திராலோசனைக் கூட்டத்தை முடித்து மற்றவர்களைத் தத்தம் இடத்திற்கு அனுப்பிய அவர், குஞ்சரியின் உடல் அடக்கம் குறித்து யோசனை செய்ய மாளிகையை நோக்கி விரைந்தார். பட்டத்தரசிக்கும் குஞ்சரியின் முடிவு குறித்த செய்தி எடுத்துக் கூறப்பட்டது. உள்ளூர மகிழ்ந்தாலும் வெளிக்குத் துயரத்தைப் புலப்படுத்திக்கொண்டாள்.

''நெருக்கடி மிகுந்த இந்த நிலையில் தாங்கள், குஞ்சரியை மறந்து எதிரியின் நடவடிக்கைகளை முறியடிப்பதில் கவனம் செலுத்துங்கள்'' என்றாள் அரசி.

சக்ரவர்த்திக்கு அரசியின் மனநிலை தெரியும். குஞ்சரியிடம் நம்பிக்கை இல்லாதவள் அவள் என்பதை அவர் அறிவார். குஞ்சரி இறந்ததில் அரசிக்கு மகிழ்ச்சி உண்டு என்பதையும் அவர் அறிவார். அவள் கருத்தை மாற்றக்கூடிய சமயம் இதுவன்று என்ற எண்ணத்தில், குஞ்சரியை அடக்கம் செய்வதைப் பற்றி யோசிக்கலானார்.

''கன்னிப்பருவத்தில் தியாகம் செய்த அவள் உடலை எரிக்க நான் விரும்பவில்லை'' என்றார்.

''அவளுடைய உறவினரிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்றாள் அரசி.

''அவளுக்கிருந்த ஒரே உறவினர் - தாய் - துவார சமுத்திரத்திற்குச் சென்றிருக்கிறாள். பதியிலாதார் குலத்தினளான குஞ்சரிக்கு உற்ற துணை தெய்வம்தான்'' என்று சொல்லும் போது மன்னரின் குரலில் சோகம் பொங்கியது.

மன்னரின் துயரத்தை மாற்ற விரும்பிய அரசி, ''அப்படியானால் அவளைப் புதைத்து விடுங்கள். போர் முடிந்த பிறகு அவள் நினைவாக ஏதாவது அடையாளச் சின்னம் அமைப்போம்'' என்றாள். அவள் கூறியதில் பொருள் வேறாக இருந்தாலும், அரசி கூறியதை அப்படியே ஏற்றார் மன்னர்.

''ஆம். குஞ்சரிக்கு அழியாத நினைவுச்சின்னம் அமைப்போம். அவள் இறந்து வீழ்ந்த தெற்குவாசல் அருகே என்றும் அழியாத நினைவுச்சின்னம் அமைப்போம்'' என்றார்.

''இறந்து போகும் ஒவ்வொருவருக்கும் நினைவுச்சின்னம் அமைப்பது என்றால் இந்த நகரமே இடம் போதாது!'' என்று கூறி மெல்லச் சிரித்தாள் அரசி.

''அப்படிச் சொல்லாதே தேவி! உனது மாங்கல்யத்தைக் காப்பாற்றியவள் குஞ்சரி!'' என்று கூறி மதில் மீது நடந்த சம்பவத்தை விவரித்த போது, அரசி அதிர்ச்சியடைந்து பேசாமடைந்தையானாள்.

தெற்குவாசல் அருகே குஞ்சரியின் உடலை நல்லடக்கம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியே பாண்டியர்கள் இடைவிடாமல் சரத்தை மாரி போல் பெய்து கொண்டிருந்தார்கள். கோட்டைக்குள்ளே தியாகி ஒருத்தியின் உடலை அடக்கம் செய்த இடத்தின் அருகே நின்று அனைவரும் கண்ணீர் உகுத்தவாறிருந்தார்கள்.

அந்தச் சமாதி, அங்கிருந்தவர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்தது. எதிரியை முறியடிப்பதில் முழுமூச்சுடன் ஈடுபடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டனர். நகரத்து நாற்புற வாயில் களையும் சுற்றி வந்து, எதிரிகள் ஓரிடத்தில்கூட ஊடுருவவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்ட இராஜராஜன், ஓய்வெடுப்பதற்காக மாளிகைக்கு வந்துக் கண்ணயர்ந்தார்.

நடுநிசி கழிந்திருக்கும். அவர் அருகே ஓர் உருவம் மெல்ல வந்தமர்ந்தது.

''அரசே... அரசே...!'' என்ற மெல்லிய குரல். இராஜராஜன் திடுக்கிட்டார். கண்களைத் திறப்பதா அல்லது அந்தக் குரலை மட்டும் கேட்டுப் படுத்திருப்பதா என்று புரியாமல், சக்ரவர்த்தி திரும்பிப் படுத்தார்.

''சக்ரவர்த்தி அவர்களே! உறங்கியது போதும். விழித்தெழுங் கள். அழகியமணவாளன் வீட்டு இரகசியப் பாதை வழியே பாண்டியர் படைகள் வருகின்றன'' என்றது அந்தக் குரல்.

சக்ரவர்த்தி துள்ளி எழுந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார். அருகே அரசி கவலையில்லாமல் உறங்கிக்கொண்டிருந்தாள்.

''யார், யார் - யார் அங்கே'' என்று குரல் கொடுத்தார்.

எங்கும் அமைதி. சாளரத்தின் வழியே நோக்கினார். நகரமே நன்றாக உறங்கிக்கொண்டிருந்தது. யுத்த தர்மம் இன்னும் இறந்து போகவில்லை. சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு அன்றையப் போருக்கு ஓய்வு என்ற தர்மம் கடைப்பிடிக்கப்பட்டது அன்று. ஆனால், சூரியன் உதிக்கும் முன்பு எந்த நொடியிலும் போர் தொடங்கலாம். ஆனால், கடந்த சில நாட்களாக இந்தத் தர்மம் கடைப்பிடிக்கப்படவில்லை.

சோழச் சக்ரவர்த்தியின் உறக்கம் கலைந்தது. தன்னைத் தட்டி எழுப்பியது யார் என்று அவர் ஆலோசித்தார்.

மாடத்தினின்று அவர் இறங்கி, தூங்கி வழிந்த காவல் வீரர்களை எழுப்பினார். பாசறைக்குச் சென்று தளபதியை அழைத்து வரச் சொன்னார்.

வீரன் சென்ற வேகத்திலேயே விரைந்து திரும்பினான். அவனுடன் தளபதியும் வந்து கொண்டு இருந்தார்.

''தளபதி! தங்களுக்குச் சொல்லியனுப்பினேன். தாங்கள் உறங்காமல் விழித்திருந்தீர்களா?'' என்று சக்ரவர்த்தி கேட்டார்.

''நான் தங்களிடம் விரைந்து வந்து கொண்டிருந்தேன். என்னை யாரோ தோளைப் பிடித்து உலுக்கியது போல் உணர்ந்தேன். 'மன்னரிடம் விரைந்து செல்லுங்கள். சோழசாம்ராஜ்யத்தின் வரலாற்றிலேயே மிக முக்கியமான சம்பவம் மிக விரைவில் நடக்கப் போகிறது. என்று நடக்கும் என்று சொல்ல முடியாது. இன்றே நடக்கலாம். மணவாளனுடைய மாளிகையில் உள்ள ரகசியவழியை உடனே சென்று கண்காணிக்கவும்' என்று யாரோ என் செவிக்கருகே மட்டும் கேட்கும் குரலில் பேசியது போல் தோன்றியது. நான் விரைந்து வந்தேன். என்ன ஆச்சரியம், தாங்கள் அழைத்ததாகக் கூறி வீரனொருவன் வந்துகொண்டிருந்தான்'' என்றார் தளபதி.

சோழமன்னர் உடலில் ரோமாஞ்சலி ஏற்பட்டது. ''தளபதி அவர்களே, நான் ஏதோ பிரமை என்று நினைத்தேன். அப்படியில்லை. யாரோ நம்மை எச்சரிக்கிறார்கள். நீங்கள் உடனே மணவாளன் மாளிகையை நோக்கிப் புறப்படுங்கள்'' என்றார்.

தளபதி விடைபெற்று விரைந்தார். அவர் சென்ற மறுகணம் அரசியார் பதறியவாறு ஓடோடி வந்தாள்.

அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ''என்ன தேவி, என்ன நேர்ந்தது?'' என்று சக்கரவர்த்தி பதறியவாறு கேட்டார்.

அரசி நடுங்கும் குரலில், அரசரது தோளைப் பிடித்துக் கொண்டு, ''என்ன சொல்வது என்றே தெரியவில்லை. என் கண் எதிரே ஓர் சம்பவம். அம்புகள் பாய்ந்து வருகின்றன. தங்கள் மார்பை

நோக்கி ஓர் அம்பு, மார்பை துளைத்து மறுபக்கம் வருகிறது. குருதி வெள்ளத்தில் தாங்கள் மிதக்கிறீர்கள். நான் கவலையின்றி உறங்கிக் கொண்டிருக்கிறேன். என்னை யாரோ தட்டி எழுப்பினார்கள். 'உன் கணவருக்கு ஆபத்து' என்ற குரல் கேட்கிறது. நான் விழித்துக் கொண்டேன். பயத்தால் உடல் நடுங்குகிறது... அருகே பார்த்தேன். தங்களைக் காணவில்லை. ஓடோடி வந்தேன்...'' என்று கூறிய போது அவள் விம்மி விம்மி அழுதே விட்டாள்.

மாமன்னர், அரசியின் விழிகளை மெல்லத் துடைத்தவாறு, ''தேவி, அழுவதற்கு ஏற்ற சமயமன்று இது. எனக்கு ஒன்றும் நேரவில்லை. இதோ பார், உயிருடன் தானிருக்கிறேன். ஆனால், என் மார்பை நோக்கி அம்பு பாய்ந்து வந்தது உண்மைதான். அந்த அம்பைத் தாங்கியவன் நானல்லன். அந்த அம்பு என் மீது பாயவில்லை, குஞ்சரியின் முதுகில் பாய்ந்து மார்பு வழியே நுழைந்து என் மார்பு வரை வந்து நின்றது. எனக்கு வந்த ஆபத்தைக் குஞ்சரி ஏற்றுக்கொண்டாள். உன் மாங்கல்யத்தை அவள் காப்பாற்றினாள்'' என்றார்.

அரசி தன் கழுத்தில் தொங்கும் ஆபரணங்களுக்கிடையே ஊசலாடும் மாங்கல்யத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

''இப்போதுகூட யாரோ நம்மை எச்சரிக்கிறார்கள்'' என்று கூறும் போது அவளது பயம் தீரவில்லை என்பது புலப்பட்டது.

இரண்டு வீரர்கள் குதிரை மீது விரைந்து வருவது தெரிந்தது. அவர்கள் பாய்ந்து ஓடிவந்து சக்ரவர்த்தியை வணங்கி, ''சக்ரவர்த்தி அவர்களே! தளபதியார் செய்தி சொல்லி அனுப்பினார். மணவாளன் மாளிகையில் உள்ள இரகசியவழியைக் கண்டுபிடித்து விட்டாராம். அந்த வழியின் மூலமாகப் பாண்டியர் படைகள் வரத்தொடங்கி விட்டன. அவர்களைத் தடுத்து நிறுத்த நமது வீரர்களே அங்கே விரைந்துள்ளனர். மாளிகை போர்க் களமாகிறது'' என்று மூச்சுத் திணற, பரபரப்புடன் கூறினார்கள்.

சக்ரவர்த்தி, அரசியின் பக்கம் திரும்பி, ''ஏதோ தெய்வ சக்தி நம்மைச் சூழ்ந்திருக்கிறது. அந்தச் சக்தி தக்க சமயத்தில் எச்சரித்துள்ளது'' என்றார்.

# 29

கங்கைகொண்டசோழபுரத்திற்கு அருகே கடல் போல் திகழ்ந்த கங்கைகொண்டபேரேரி என்றழைக்கப்படும் பொன்னேரியின் கரை எங்கும் பாண்டியர் படைகள் கூடாரமடித்துத் தங்கியிருந்தன. கோட்டைக்குள் செல்வதற்கான சமிக்ஞையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் அவர்கள். மதிலை முற்றுகையிட்டுத் தாக்கிக் கோட்டைக்குள்ளே நுழைய முடியும் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை.

சோழநாட்டின் குறுநில மன்னரின் தலைப்பிள்ளையாக இருந்து, சோழநாட்டிற்கே பகைவனாக மாறிவிட்ட இளையமணவாளன் சுந்தர பாண்டியனிடம் ஏதேதோ யுக்திகளையெல்லாம் சொல்லிப் பார்த்தான்.

சுந்தரபாண்டியன் தனக்குள்ளேயே நகைத்துக்கொண்டான். ஆனால், வெளியே மீசை துடிக்கக் கடுஞ்சீற்றம் பொங்கி நின்றது. பூமி அதிரக் காலைத் தட்டுவதும் முஷ்டியை மடக்கிப் பல்லைக் கடிப்பதும் எதிரே உள்ளவரைத் துச்சமாகப் பேசுவதுமாக மற்றொரு விதப் போர்த் தந்திரத்தால் தனக்கு மேலும் பக்க பலம் கிடைக்குமா என முயன்று கொண்டிருந்தான்.

கூடல்ஏழிசை மோகன் மணவாளப்பெருமாள் என்று பெயர் பெற்ற கோப்பெருஞ்சிங்கன் கூறிய திட்டங்கள் ஒன்றும் சுந்தரபாண்டியனுக்குப் பிடிக்கவில்லை.

''காடவராயரே!'' என்று கரகரப்பான குரலில் பேச்சைத் தொடங்கிய சுந்தரபாண்டியன், ''உங்கள் திட்டங்கள் ஒன்றும் பலன் தரவில்லை. உங்களுடைய யோசனை இல்லாதிருந்தால், இந்த நேரத்தில் கங்காபுரி மதுராபுரிக்கு மண்டியிட்டிருக்கும்'' என்றான்.

சோழநாட்டில் ஒரு பகுதியைத் தனக்கென அடைந்து, சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசாக இல்லாமல் சுதந்திர அரசாக திருமுனைப்பாடி நாட்டை மாற்றவேண்டும் என்ற இலட்சியம் கொண்டிருந்த மணவாளன் இன்னும் பாண்டியருக்குப் பூரண அடிமை ஆகிவிடவில்லை. விடுதலை வேட்கைப் பொங்கி நின்றது. சுந்தரபாண்டியன் குத்திக்காட்டி இழிவுபடுத்துவது போல் பேசுவது

அவனுக்குக் கோபத்தை வரவழைத்தது என்றாலும் வெளியே புலப்படுத்திக்கொள்ளாமல் இதுவரை தான் முயன்று செய்த திட்டங்கள் என்னவென்பதை விளக்கினான்.

''பாண்டியப் பேரரசர் அவர்களே! கங்காபுரியை விரைவில் வீழ்த்துவதற்குத் தங்களுக்குள்ள வேகத்திற்கு என் ஆர்வம் சற்றும் குறைந்ததன்று. போசள மன்னன் வீரநரசிம்மனுக்குச் சோழன் அனுப்பிய செய்தி போய்ச் சேர்ந்திருந்தால் நமது போர்த்திட்டமே மாறியிருக்கும். அப்படி நேராமல் தடுத்தேன்...'' என்று கூற முற்பட்ட மணவாளனைச் சுட்டெரித்து விடுவது போல் பார்த்தாலும், மணவாளன் புரிந்த செயல் என்னவென்று அறிய ஆவல் கொண்ட சுந்தரபாண்டியன், ''என்ன சொல்கிறீர்கள் கோப்பெருஞ்சிங்கரே! சோழ மணிமகுடத்தை முடியில் சூட்டிக்கொள்ளத் துடிக்கும் உமது ஆசை எனக்குத் தெரியும். அதனாலேயே எனக்கு இப்போது ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. நான் கங்காபுரியில் முடிசூடிக் கொள்வதைத் தடுக்க நீங்கள் இப்படியொரு சதிசெய்கிறீர்களோ என்று தோன்றுகிறது'' என்றவுடன் மணவாளன் குரலில் ஆக்ரோஷம் மிகுந்தது.

''சக்ரவர்த்தி அவர்களே, என்ன சொல்கிறீர்கள்? என்னைச் சந்தேகப்படுகிறீர்களா? கங்காபுரி அரியணையில் தாங்கள் அமர்ந்து சோழ மணிமகுடத்தை அணிந்துகொள்வதை நான் ஏன் தடுக்கப் போகிறேன். என் அபிலாஷை நான் எந்த நாட்டிற்கும் அடிமையாக இருக்கக்கூடாது. எங்கள் நாடான திருமுனைப்பாடி நாட்டில் எங்களைக் காவல்காரர்களாகச் சோழர்கள் நியமித்தார்கள். பெரிய அவமானமில்லையா அது? அவமானத்தைத் துடைக்கவே நான் விரும்புகிறேன்...'' என்று அவன் கூறிக்கொண்டிருக்கும் போது சுந்தரபாண்டியன் குறுக்கிட்டான்.

''குலோத்துங்கன் தன் மகளை உன் தந்தைக்கு மணம் புரிந்து கொடுத்துத்தான் உங்களைக் காவல்அதிகாரியாக நியமித்தார் என்பது என் நினைவு. உமது உடலில் சோழப் பரம்பரையின் இரத்தம் ஓடுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள்'' என்று கூறிச் சுந்தர பாண்டியன் மணவாளன் முகத்தைக் கூர்ந்து நோக்கினான்.

மணவாளன் மிகுந்த சீற்றமடைந்தான். இவனால் சுந்தர பாண்டியனை எதிர்த்துப் பேசமுடியவில்லை. குரலை உயர்த்திக்

கூடப் பேச முடியவில்லை. அவன் உள்ளத்தில் சோழநாட்டைப் பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை இருப்பது உண்மை. சோழநாட்டைத் துண்டு துண்டாக்கி விடவேண்டும். மிகக் கணிசமான பகுதியைத் தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருப்பதும் உண்மை. ஆனால், அதை வெளியே தெரிவிக்க அவனுக்குத் துணிவு இல்லை.

என்றாலும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ''பாண்டிய சக்ரவர்த்தி அவர்களே! தாங்கள் முற்றிலும் உணர்ந்தவர். எந்த ராஜ குமாரர் எந்த ராஜகுமாரியை மணந்திருக்கிறார் என்று அறிந்திருப் பவர்கள். ஆனால், எங்களைச் சாதாரணக் காவல்கூடத் தலைவனாக மட்டுமே எண்ணிவிட்டீர்கள். பல்லவர்களைப் பற்றித் தாங்கள் அறியாது இருக்க முடியாது. தொண்டை மண்டலம் என்பது காடுகள் அடர்ந்த பகுதியாக இருந்தது. சிம்மவிஷ்ணு சக்ரவர்த்தியும் அவரது மூதாதையர்களும் காடுகளை வெட்டித் திருத்தி நாடாக்கினர். அங்கெல்லாம் விளைநிலங்களை ஏற்படுத்திப் பயிராக்கினர். பயிர்களுக்குப் பாசன ஏரிகளை வெட்டினர். மக்கள் குடியிருக்க மங்கலங்களையும் ஊர்களையும் பட்டிகளையும் உண்டாக்கினர். காடுவெட்டி என்று அவர்களை மக்கள் அன்புடன் அழைக்கலாயினர். அண்டை நாட்டு மன்னர்கள் காடவராயர் என்று மதிப்புடன் அழைக்கலானார்கள். காடவராயர்கள் மரபில் வந்த மன்னர்களுக்கு கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயரும் உண்டு. நாங்கள் பல்லவ குலத்தவர்கள். எங்கள் போதாத காலம்... சோழர்களால் ஏமாற்றப் பட்டோம். காவிரி முதல் கோதாவரி வரை விரிந்து பரந்திருந்த நாட்டை ஆண்ட எங்கள் தாயகம் குறுகிவிட்டது. சோழர்களுக்கு மிகுந்த நட்பினராகத்தான் இருந்தோம். எங்கள் மூதாதை அபராஜிதவர்மர் காலத்தில்தான் சோழர்கள் துளிர்த்து எழத் தொடங்கினர். தஞ்சைப் பகுதியை ஆண்ட முத்தரையர்களை ஏமாற்றி விஜயாலயச் சோழர் சோழநாட்டை மீண்டும் ஏற்படுத்தினார். விஜயாலயரும் அவர் மகன் ஆதித்தரும் போர் முறை அறிந்தவர்கள். சாமர்த்தியம் மிகுந்தவர்கள். தோள்வலிமை மிக்கவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தந்திரசாலிகள். விஜயாலயரும் ஆதித்தரும் அண்டை அயல்நாட்டு மன்னர்களான சம்புவரையர், சேதிராயர், வாணகோவரையர், வேளிர் அனைவருடனும் மிக அன்புடன் பழகி தேனொழுகப் பேசித் தனக்கு அடங்கி நடக்குமாறு

செய்துகொண்டனர். அதைப்போல்தான் அபராஜிதருடனும் மிக நெருங்கிப் பழகினார் ஆதித்தர். உங்கள் மூதாதையர் படைகளை ஆதித்தரும் அபராஜிதரும் சேர்ந்து தோற்கடித்தனர். அதில் அபராஜிதரின் பங்கு மகத்தானது. அதற்கு ஆதித்தர் கொடுத்த பரிசு என்ன தெரியுமா -

சூழ்ச்சி செய்து அபராஜிதரைப் போர்க்களத்திலேயே படுகொலை செய்து விட்டார். சிநேகிதத் துரோகம் செய்து விட்டார். அதற்குப் பிறகு பல்லவநாடு கலகலத்து விட்டது. பல்லவ ஆட்சியில் படைத்தலைவராயிருந்தவர்களும் பெருந்தனக்காரர்களும் தங்களுக்குச் செல்வாக்கு மிகுந்த இடங்களை வளைத்துப் போட்டுக் கொண்டனர். எனது முப்பாட்டனார் அப்படியே காடவராயர் என்ற பட்டப் பெயருடன் ஆளத் தொடங்கினார். உம்... அதெல்லாம் பழைய கதை. பெயருக்குத்தான் அரசர். அரசர் தஞ்சை புரியிலிருந்து இடும் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலைதான். படையெடுப்புச் சமயத்தில் சோழர்களுக்கு நாங்கள் உதவ வேண்டும். இந்த நிலையில்தான் எனது தந்தை ஒரு சமயம் மிக முக்கியமான போர்க்களத்தில் உதவினார்...'' என்று கூறி நிறுத்திய மணவாளனை நோக்கிச் சுந்தரபாண்டியன் மெல்லிய முறுவலுடன்,

''உமது தந்தை குலோத்துங்கச் சோழருக்கு மிக வேண்டியவராயிருந்தார். பட்டப் பெயர்களெல்லாம் கொடுத்துச் சோழமன்னன் பாராட்டினானல்லவா?'' என்று கேட்டார்.

''ஆமாம். அதிலொன்றும் குறைவில்லை 'கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் வானிலை கண்ட பெருமாள் இராராசக் காடவராயர்...' என்ற பெரும் பெயர். தன் மகளையும் என் தந்தைக்கு மணம்புரிவித்தார்'' என்றர்ன் மணவாளன்.

''அப்படியென்றால் நான் சிறிது முன்பு சொன்னேனே அதில் தவறு ஏதுமில்லை. சோழரத்தம் உமது உடலில் ஓடுகிறது இல்லையா?'' என்று சுந்தரபாண்டியன் கேட்டார்.

''இல்லை, இல்லை. என் தாய் சோழ நாட்டு அரசகுமாரியல்லள். அவள் அந்தப்புரத்தை அலங்கரிக்கும் பல காரிகைகளுள் ஒருத்தி. என் தாய் பல்லவக்குலத்தைச் சேர்ந்தவள். பல்லவகுலத்தைச் சேர்ந்தவள் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். அதனால்தான் சுதந்தர நாட்டை நிறுவுவதில் துடிப்பாயிருக்கிறேன்''

என்று மணவாளன் கூறவும் மணவாளனுடைய பேச்சில் உள்ள உறுதியைக் கண்டு சோழனிடம் மணவாளன் வெறுப்படைந் திருப்பது உண்மையே என்று முடிவுசெய்தான்.

மணவாளன் புரிந்த செயல் என்னவென்று அறிய ஆவல் கொண்ட சுந்தரபாண்டியன், "போசள வீரநரசிம்மனுக்குச் சோழன் அனுப்பிய செய்தி போய்ச் சேரவில்லை என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"செய்தி கொண்டு சென்ற குஞ்சரியின் தாயைத் தடுத்தவனே நான்தானே! குஞ்சரி தன் தாய் மூலம் செய்தி அனுப்பினாள். வழியிலேயே குஞ்சரியின் தாயைத் தடுத்து நிறுத்தி, ஓலையையும் பறித்துக்கொண்டோம். அவளையும் தனியே ஓர் இடத்தில் நிறுத்தி வைத்திருக்கிறோம்..." என்று மிகவும் பெருமையுடன் கூறினான் மணவாளன்.

சுந்தரபாண்டியன் அந்தச் செய்தியைக் கேட்டுக்கொள்வதில் அக்கறை காட்டாதது போல் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "கிழவி ஒருத்தியிடம் சோழமன்னன் எதற்காக செய்தி அனுப்பினார்? வேறு தூதுவர்கள் இல்லையா?" என்றான்.

"சோழ அரசரின் தந்திரம் எங்களுக்குத் தெரியாதா? எந்தத் தூதர்களை அனுப்பினாலும் நாங்கள் கண்டுபிடித்து விடுவோம் என்பது அவருக்குத் தெரியும். குஞ்சரியை அனுப்புவதாக முடிவு செய்திருந்தார். குஞ்சரியைக் கொண்டு வேறு திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. முதலில் என்னை மயக்க அவளைப் பயன்படுத்தினார்."

"நீங்கள் மயங்கிவிட்டீர்களா?" என்று சுந்தரபாண்டியன் கேட்டான்.

"பாண்டிய மாமன்னர் அவர்களே! குஞ்சரியின் அழகில் நான் மயங்கியது உண்மைதான். இளம் வயதுக்கேற்ற ரூபலாவண்யங்கள் மிகுந்த அவள் அறிவு மிகுந்தவள். அழகையும் அறிவையும் ஒருங்கே படைத்த ஆண்டவன் அவளிடம் நாட்டுப்பற்றையும் சேர்த்துப் படைத்துவிட்டான். அவளை நம் பக்கம் இழுத்துக்கொள்ள எவ்வளவோ முயன்றேன். ஒரு நிலையில் அவள் தங்களிடமே தூது வரத் துடித்தாள். அதற்காக என் மாளிகையைத் தேடிவந்தாள்."

''மாளிகைக்கு வந்த மானை என்ன செய்தீர்கள்? என்னிடம் தூதுவர ஏற்பாடு செய்யவில்லையா?'' - சுந்தரபாண்டியன் ஆவலுடன் கேட்டான்.

''இல்லை! ஒரு கணத்தில் ஏமாந்துவிட்டேன். தப்பி விட்டாள்...'' என்று கவலை நிறைந்த குரலில் மணவாளன் கூறினான்.

''கவலைப்படாதீர்கள் மணவாளரே! கோட்டைக்குள் நுழைந்த வுடன் குஞ்சரியை முதலில் தேடிப்பிடியுங்கள். கங்காபுரி மாளிகை யில் மகுடாபிஷேகம் செய்து கொள்ளும் அன்று நாம் அறிவிக்கும் இரண்டு முக்கிச் செய்திகளில் ஒன்று - தங்களுடைய நாட்டைத் தாங்களே சுதந்தரமாக ஆள உறுதி தருவது. குஞ்சரியைத் தங்களுக்கு உரியவளாக்குவது'' என்று சுந்தரபாண்டியன் கூறியவுடன் மணவாளன் உடல் சிலிர்த்தது. படபடப்பு ஏற்பட்டது. என்ன தோன்றி யதோ என்னவோ, நெடுஞ்சாண் கிடையாகச் சுந்தர பாண்டியனின் காலில் வீழ்ந்து ''நன்றியை மறவேன் மதுரை மாமன்னரே, என் உயிர் உள்ளவரை நான் மறக்கமாட்டேன்...'' என்று உணர்ச்சி மிகுதியால் கூறினான்.

சுந்தர பாண்டியன் மெல்ல நகைத்துக் கொண்டு தன் மீசையைத் தடவியவாறு, ''மணவாளரே! என்ன காரியம் செய்துவிட்டீர்கள். சுதந்தரமாக நாட்டை ஆளப்போகும் தாங்கள் மண்டியிடலாமா? பாண்டிய மன்னரிடம் பல்லவர்கள் மண்டியிட்டதென்பதே கிடையாது. சொல்லப்போனால் பாண்டிய குல மங்கையைப் பல்லவ வேந்தர் மணந்திருக்கிறார். தங்கள் உடலில் பாண்டிய இரத்தம் ஓடுகிறது!'' என்று கூறி 'ஹோ ஹோ' என்று நகைத்தான். நாண முற்றுத் தலைகுனிந்த மணவாளன், ''நாம் உடனே கோட்டைக்குள் நுழையத் திட்டம் ஒன்று வைத்திருக்கிறேன். பொன்னேரிக் கரையில் ஒரு சுரங்கவழி இருக்கிறது. என் மாளிகைக்கு அது செல்கிறது. நமது படைகள் அதன் வழியாகக் கங்கைகொண்ட சோழபுரத்திற்குள் நுழையலாம்'' என்றான்.

சுந்தரபாண்டியன், அவனுடைய முதுகைத் தட்டிக் கொடுத்து. ''ஆகா! இந்த இரகசியவழியைப் பற்றி முதலிலேயே சொல்லி யிருந்தால் இவ்வளவு நாட்கள் தாமதப்பட்டிருக்க வேண்டாமே!'' என்றான்.

தனது படைத்தலைவரிடம் இரகசியவழியை நோக்கிப் படைகளுடன் செல்லுமாறு கட்டளையிட்டான்.

# 30

இராஜராஜசோழதேவர் திடுக்கிட்டு விழித்தார். கனவு ஏதும் கண்டதாகவும் அவருக்குத் தோன்றவில்லை. நனவில் ஏற்பட்ட நிகழ்ச்சி போலவே அப்போது அவருக்குத் தோன்றியது.

அருகே பட்டத்து அரசி லோகமாதேவியார் உறங்கிக் கொண்டிருந்தார். என்றாலும் அவளது உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பது தெரிகிறது. தன்னையறியாமல் உடல் அசைவதும் புலப்படுகிறது. முகம் சுருங்கி விரிகிறது. புருவம் மேலெழுந்து தாழ்கிறது. ஆனால், விழியில் சலனமில்லை.

''தேவி, தேவி!'' என்று இராஜராஜர் லோகமாதேவியின் தோள்களை அசைக்கிறார். உறங்கும் வேளைகளில்கூட உடல் முழுவதும் உள்ள ஆபரணங்களைப் பிரிந்து அறியாத அவளுடைய அலங்காரப்பித்தைப் பார்த்து அந்த போதிலும் அவருக்கு மெல்லச் சிரிப்பு வருகிறது.

வேளைக்கொரு புத்தாடை அணியவேண்டும், பட்டுப் புத்தாடை கசங்காமல் இருக்க வேண்டும். மல்லிகை, முல்லை செண்பகமலர்களைக் கூந்தலில் அணியவேண்டும். பலவித நறுமணப் பொருட்களை இட்டுக் கலக்கிய நீரில் குளிக்க வேண்டும். உடல் முழுவதும் வாசனை எப்போதும் நின்று நிலவும் திரவியங்களைப் பூசியிருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும் சக்ரவர்த்தி அவளை நெருங்கும் போது முடிவில் அவளுடலிலிருந்து வீசும் சுகந்த கந்தத்தைப் புகழ்ந்து பேசாவிடில் மறுநாள் வாசனாதித் திரவியங்களை அளிக்கும் வணிகரின் பாடு திண்டாட்டம்தான்.

''உம்து நறுமணப் பொருள்கள் ஒன்றும் தக்கபடி இல்லை'' என்று கண்டிப்பாகக் கூறி விடுவாள்.

கடந்த சில நாட்களாகவே அரசிக்கு வேண்டிய அலங்காரப் பொருட்கள் கிடைக்கவில்லை. கோட்டைக்கு வெளியே இருந்து ஒருவரும் உள்ளே நுழைய முடியாதபடி எதிரிப்படைகளின் முற்றுகை, யாருக்காவது சங்கடம் கொடுத்திருக்குமென்றால் அது தேவியாருக்குத்தான்! அதிக சங்கடத்தை அளித்தது!

புதிய உடைகள் வரமுடியவில்லை. நந்தவனத்துப் பூக்களைக் கொண்டுவரமுடியவில்லை.

"இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இந்த முற்றுகை நீடிக்கும்?" என்று அரசி கேட்டாள்.

இராஜராஜர் அதற்கு விடை கூற முடியவில்லை. உருவமற்ற, தோற்றத்தில் குஞ்சரி கூறியவை நிஜமாகவே நடக்கின்றன. மணவாளன் மாளிகை இரகசிய வழியின் மூலம் பாண்டியர் படைகள் வர முயன்றன. குஞ்சரி எச்சரித்தது உண்மை என்றாகிவிட்டது. அதனால் கோட்டைக்கு உள்ளே இருக்கும் படைவீரர்கள் அனைவரையும் திரட்டி மணவாளன்மாளிகை அருகே நிறுத்தி வைக்க ஏற்பாடு செய்தார். பொழுதுசாய்ந்த பிறகு ஒரு செய்தி வந்தது... கோட்டைவாயில்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் தாக்குவதற்குத் திட்டங்களைப் பாண்டியர்கள் வகுக்கிறார்கள் என்பதறிந்த சோழச் சக்ரவர்த்தி உடனே படைகளைப் பிரித்து நான்கு கோட்டை வாயில்களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்தார். அந்தப் பணியை முடித்துவிட்டு வந்து படுத்த இராஜராஜருக்கு அயர்ந்து உறக்கம் வந்தாலும் ஏதோ ஒரு நிகழ்ச்சி அவர் அருகே நடப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் அருகே யார் யாரோ வருகிறார்கள். யுத்தப் போக்கைப் பற்றிப் பேசுகிறார்கள். காளியார் வருகிறார். அவர் ஓடோடி வருவது அவரது மூச்சு மேலும் கீழும் இரைப்பதிலிருந்து தெரிகிறது.

"நாம் மிகவும் சங்கடமான நிலையிலிருக்கிறோம்" என்று அவர் கூறுகிறார். அவர் பேசுவது மட்டுமே சக்ரவர்த்திக்கு தெரிகிறது. சக்ரவர்த்தியும் ஏதோ பேசுகிறார். ஆனால், என்ன பேசினார் என்பது அவருக்கே இப்போது நினைவில் வரவில்லை.

காளியார் மிகவும் சோர்ந்து காணப்படுகிறார். குரலில் தடுமாற்றம் இருக்கிறது.

"இளவரசரது தலைமையின் கீழ் இயங்கி வந்த படைகளைச் சம்புவரையர் தம் செல்வாக்கால் தம் வயப்படுத்திவிட்டார். அந்தப் படைகளைக் கொண்டு ஒரு கோட்டை வாயிலைப் பலமாகத் தாக்கப் போகிறாராம். அதைவிட கவலை தரும் செய்தி, சேதிராயர், மலையமான் இவர்கள் அனைவரும் தத்தம் படைகளுடன் பாண்டியர்களுக்கு உதவ வந்து சேர்ந்துவிட்டார்கள். மீன் கொடியின் கீழே சிற்றரசர்கள்

தத்தம் கொடிகளைப் பறக்கவிட்டு அணிவகுத்து நிற்கும் காட்சி வேதனையைத் தருகிறது.''

இவ்வாறு சொன்ன காளியார் மற்றொன்றையும் கூறினார். இந்தச் செய்திகளைக் கண்டறிந்து வந்து கூறியவள் 'குஞ்சரி' என்று.

''அரசே, குஞ்சரி உயிரிழந்தும் ஆவி வடிவில் நமக்கு உதவி வருகிறாள். என்னைத் தொட்டுத் தட்டி எழுப்பினாள். என் உடல் சிலிர்த்தது. 'பாட்டா' என்று அவள் சில சமயம் அழைப்பது வழக்கம். அதே குரல்! அதே சிரிப்பு! விழிகளில் ஆயிரமாயிரம் வார்த்தைகளைத் தேக்கி வைத்துத் தெரிவிக்கும் அதே சுழற்சி.

''குஞ்சரி என்று நான் வாய்விட்டுக் கூவினேன். அவ்வளவு தான். நான் அப்படிக் கூவியிருக்கக்கூடாது. அருகே இருந்த காவல் வீரர்கள் என் தோளைத் தொட்டு உலுப்பி, 'என்ன நேர்ந்தது' என்று கேட்டார்கள்.

எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. நான் என்னவென்று சொல்வேன்? குஞ்சரி கூறியது உண்மையாக இருக்குமா என அறிய ஆவல். மதிலின் மீது ஏறிச் சுற்றிப்பார்த்து வரும்போது பல திசை களிலிருந்தும் படை வீரர்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. ரிஷபக்கொடி பிடித்த வீரர்களைக் கண்டேன். காடவர்க்கோன். நமக்கு விரோதமாக வெளிப்படையாக இறங்கி விட்டான்.''

சோழ சக்ரவர்த்தி இதைக் கேட்டுக் கொண்டிருந்தபோதுதான் காளியார் கூறிய வார்த்தைகள் அவருக்கே உடலில் ஒருவித நடுக்கத்தை ஊட்டின.

குஞ்சரி காளியாரை மீண்டும் அணுகினாள். அவள் அவரது முகத்தைத் தடவிக்கொடுத்தாள். கரங்களையும் பரந்த மார்பையும் தடவினாள். ''காளியாரே! சோழநாட்டிற்குப் பணியாற்றுவதற் கென்றே பிறந்த உங்களது இந்த கரங்களுக்கும் பகைவர் வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாத இந்த பரந்த மார்புக்கும் மீசை ஒன்றாலேயே எதிரியைக் கலங்க வைக்கும் கம்பீரத்திற்கும் இனி வேலை இருக்கப் போவதில்லை. நீங்கள் வந்த பணி முடிந்து விட்டது. பொன்னி பாயும் சோழவள நாட்டின் பெருமையைக் கட்டிக் காக்க நீங்கள் எடுத்துக் கொண்ட பணி முடிந்துவிட்டது. குலோத்துங்கச் சோழச் சக்ரவர்த்தியின் காலத்துக்குப் பிறகு உங்கள் மனத்தை மாற்றிக் கொண்டு பொன்பொருள் என்று சேர்த்திருக்கலாம். தங்களுக்கு ஒரு

சமயம் மணவாளனே சமிக்ஞை செய்திருக்கிறான்... ஏராளமான விளைநிலங்களைத் தருவதாக. துச்சமாக மதித்து, சோழச் சக்ரவர்த்திக்கு ஆற்றும் பணியே எடுத்த பிறவியின் இலட்சியம் என்று கடமையைத் தலையாக கருதினீர்கள். உங்களால் இயன்ற அளவுக்கு பாண்டியர்களைக் கோட்டைக்குள் நுழையாமல் தடுக்க முயற்சி எடுத்தீர்கள். ஆனால், இனி நம்மால் ஆகக் கூடியதில்லை. காளியாரே! நீங்கள் வந்த காரியம் முடிந்து விட்டது'' என்று கூறி மீண்டும் காளியாரின் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

இந்தச் செய்தியைக் காளியார் கூறிய போது விம்மி அழுது விட்டார். கலங்கா உள்ளம் கொண்ட காளியார் கண்ணீர் விடுகிறார். இராஜராஜருக்கும் வருத்தம் தாங்கவில்லை ''குஞ்சரி சொன்னதில் என்ன மறைந்து நிற்கிறது?'' என்று கேட்கிறார்.

காளியார் ஏதோ சொல்கிறார். காதில் விழவில்லை. ''காளியாரே!'' என்று கூவுகிறார்.

இராஜராஜர் திடுக்கிட்டு விழிக்கிறார். அருகே உறங்கும் தேவியாரை நோக்குகிறார்.

கைதட்டி, பணிப்பெண்ணை அழைக்கிறார்.

''காளியார் வந்தாரா?'' என்று வினவுகிறார். ''ஒருவரும் வரவில்லை'' என்று தெரிவிக்கிறாள் பணிப்பெண்.

லோகமாதேவியை எழுப்பவும் தேவி விழித்தெழுந்து முகத்தில் பயம் படர்ந்து நிற்க, ''அரசே'' என்று கூவி அவரை அணைத்துக் கொள்கிறாள்.

அற்புதச் சுகம் தரும் அந்த அணைப்பிலே இன்று அரசர் ஏதோ செந்தணலின் உணர்ச்சியை அடைந்தார்.

லோகமாதேவியின் உடல் படபடத்துக் கொண்டிருப்பதை நன்றாக உணர முடிகிறது. மார்பகம் விம்மித் தணிவது அஞ்சி நடுங்குவதால், கரங்கள் பின்னி, பின் முதுகை அணைப்பது பயத்தால்.

''தேவி, என்ன நேர்ந்துவிட்டது. ஏன் உடல் இப்படி நடுங்கு கிறது?'' என்று இராஜராஜன் லோகமாதேவியை மடியில் கிடத்திக் கொண்டு கேட்கிறார். வியர்வையால் உடல் நனைந்து, கச்சும் உள்ளாடையும் நனைந்துவிட்டன.

தான் கண்ட கனவை, காளியார் கனவில் வந்த செய்தியைத் தெரிவிக்கத் தேவியைத் தேற்றுகிறார்.

லோகமாதேவி அரசரது மடியினின்று எழுந்து, "நாம் இங்கிருந்து போய் விடுவோம்... உடனே புறப்பட்டு விடுவோம். எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு.

"என்ன தேவி, என்ன நேர்ந்துவிட்டது? எதையாவது கண்டு பயந்து விட்டாயா?" என்று இராஜராஜர் கேட்கிறார்.

அவருக்குத் தெரிகிறது, தான் கனவு கண்டதுபோல் தேவியும் ஏதோ தீய கனவு கண்டிருக்கிறாள் என்று.

"நாம் உடனே போய் விடுவோம், இந்த மாளிகையைவிட்டு. இங்கே அவள் சுற்றுகிறாள். அவளுக்கு இந்த மாளிகையைவிட்டுப் போக மனம் வரவில்லை" என்கிறாள் தேவி. அவள் குரலில் நடுக்கம் தெரிகிறது.

"யாரைச் சொல்கிறாய் தேவி?"

"அந்த நடன மாது - குஞ்சரியைச் சொல்கிறேன். அகால மரணமடைந்த அவளுடைய ஆவி இங்கேயே சுற்றுகிறது. அகால மரணமடைந்தவர்கள் யாரிடம் அதிகப் பற்றுதல் வைத்திருந்தார்களோ அவர்களைவிட்டுப் பிரியாமலே சுற்றிச் சுற்றி வருவார்களாம்!" - தேவியின் குரலில் பயம் பிரதிபலிக்கிறது.

"குஞ்சரிக்கு உன்னிடம் பிரியம் அதிகமா?" என்று அந்த நிலையிலும் சக்ரவர்த்தி கேட்கிறார்.

"பிரியமோ, இல்லையோ... அவள் சொன்னது என் காதில் ஒலிக்கிறது. இந்த மாளிகையைப் பாண்டிய நாட்டுப் படைகள் சூழப் போகின்றனவாம். நமக்கு உதவுவதற்கு ஒருவரும் வரமாட்டார்களாம். அதனால், உடனே மாளிகையைவிட்டு மறைவாக எங்காவது ஒளிந்து கொள்ள வேண்டுமாம்... குஞ்சரி தெளிவாகச் சொன்னது எனது செவிகளில் வீழ்ந்தது."

சக்ரவர்த்தி நிமிர்ந்து உட்கார்ந்தார். தான் கண்ட கனவுக்கும் தேவி கண்டதற்கும் தொடர்பு இருக்கவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

"நீங்கள் அதற்குச் சம்மதிக்கமாட்டீர்களாம். அவள் தெளிவாகக் கூறியது இதோ இன்னும் ஒலிக்கிறது....

"ஆமாம்: என் உள்ளத்தைக் குஞ்சரி நன்றாக அறிந்திருக்கிறாள். நான் மாளிகையைவிட்டுச் செல்வதா? மறைந்து வாழ்வதா? ஒருக் காலும் இல்லை. நான் நினைத்துப் பார்த்ததுகூடக் கிடையாது. விஜயாலயச் சோழர் தொடங்கி வைத்த சோழர் பரம்பரையில் இதுவரை மறைந்து வாழ்வதோ, ஒடிப்பதுங்குவதோ ஒருக் காலுமில்லை. இர்ராஜேந்திரச் சோழ மகாமன்னர் சிருஷ்டித்த இந்த கங்கைகொண்ட சோழபுரததை விட்டு வரமாட்டேன் என்பதைக் குஞ்சரி நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறாள். அதனால்தான் உன்னிடம் வற்புறுத்தி இருக்கிறாள்" என்றார் சக்ரவர்த்தி.

ஆமாம். தாங்கள் இந்த நகரத்தைவிட்டு நகரமாட்டீர்கள் என்று அவள் சொன்னாள். இங்கே தங்கியிருந்தால் என் மாங்கல்யத்திற்கே ஆபத்தாம். அவள் கூறியதைக் கேட்டது முதல் என் உடல் நடுங்குகிறது. அவள் பேசுவதை கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் போலும் தோன்றுகிறது. நீங்கள் என்னை எழுப்பி யிராவிடில் அவள் இன்னும் இன்னும் சொல்லியிருப்பாள். என்னை எச்சரித்திருப்பாள். என்னைக் கண்டால் வெறுக்கும் குணமுடை யவளாய் அவள் இருந்தால் என் நலனைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்வாளா?" தேவி சொல்லிக்கொண்டே போனாள்.

சக்ரவர்த்தி குறுக்கிட்டு, "என்ன சொல்கிறாய் தேவி? குஞ்சரி நேரே வந்து சொல்கிறாள் என்பதை நம்புகிறாயா?" என்று கேட்டார்.

"ஆமாம்! அவள் சொல்வது என் பயத்தை அதிக மூட்டுகிறது. விஜயாலயச் சோழர் படைத்த சோழநாடு என்பதெல்லாம் சரிதான். சோழர் பரம்பரையிலேயே மாற்றாரிடம் தோல்விகண்ட மன்னரே இல்லை. நீங்கள் பாண்டியரிடம் தோற்றீர்கள். நாட்டைச் சுந்தர பாண்டியர் அபகரித்துக் கொண்டார். அவர் கடைசியில் மனமிரக்கப் பட்டு சோழநாட்டைப் பரிசாகக் கொடுக்கிறேன் என்று நம்மிட மளித்தார். பொன்னமராவதி மாளிகையில் அவர் தங்கியிருந்தார். நாம் அனைவரும் அவரைக் காணச் சென்றோம். ஏதோ பிச்சை இடுவது போல் நமது நாட்டை நமக்கே திருப்பிக் கொடுத்தார். அப்போ தெல்லாம் உயிருக்கு ஆபத்தில்லை. நாம் மனச்சஞ்சலமடைந்தோம் என்பது மட்டுமே உண்மை. அவமானத்தால் உடல் குன்றிப்-

போனோம் என்பது உண்மை. சுந்தரபாண்டியரிடமிருந்து மீண்டும் சோழநாட்டைப் பெற்று வந்தோம். இப்போது சுந்தர பாண்டியர் படையெடுத்து வந்திருக்கிறார். கோட்டையைப் பல நாட்களாக முற்றுகையிடுகிறார். உணவுப்பண்டங்கள் வருவதில்லை. அருமை மகன் இராசேந்திரன் கோட்டைக்கு வெளியே எங்கோ சிக்கியிருக்கிறான். நகரத்திற்குள் புகுவதற்குண்டான இரகசிய வழியைப் பாண்டியர்கள் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் அதன் வழியே வரப்போகிறார்கள் என்று குஞ்சரியின் ஆவி கூறியது. அவ்வாறே நடந்ததா, இல்லையா? இப்போது நடக்காது என்பது என்ன நிச்சயம்? குஞ்சரி அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டாள். இம்மாளிகையைவிட்டு இன்னும் நான்கு நாழிகைக்குள் நாம் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டுமாம். இல்லாவிடில் இந்த மாங்கல்யம் என் கழுத்தில் இராதாம்!'' என்று லோகமாதேவி சோகம் நிறைந்த குரலில் கூறி, கழுத்தில் இருக்கும் மாங்கல்யத்தை எடுத்து வெளியே அரசரிடம் காட்டிய போது அரசர் நெகிழ்ந்து போனார். லோகமாதேவியைத் தேற்ற வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

''தேவி அஞ்சாதே. நீ ஏதோ கனவு கண்டிருக்கிறாய். இரவு நீ அவளை நினைத்துக்கொண்டே படுத்திருக்கிறாய். நாட்டிற்கு ஏற்பட்ட ஆபத்து உன் மனத்திலே கவலையை அளித்திருக்கும். கோட்டை முற்றுகை இன்னும் தீரவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்திருப்பாய். ஒருவருடைய தீராத நினைவே கனவில் வரும். பொழுது இன்னும் புலரவில்லை. பெருவுடை யாரையும் பெரியநாயகியையும் மனத்திலே நினைத்துக்கொண்டு உறங்கிவிடு. காலையில் நல்ல செய்தி கிடைக்கும்'' என்று கூறி அவளது கூந்தலைக் கோதிவிட்டு, கன்னங்களைத் தடவிவிட்டு, முதுகை வருடிவிட்டு இறுக அணைத்து இதழில் முத்தமிட்டு மஞ்சத்துத் தலையணைகளைச் சரிசெய்து படுக்கச் சொல்லி, போர்வையையும் போர்த்திவிட்டார். தேவி கண்களை மூடிக் கொண்டாள்.

இராஜராஜர் அரசிக்குச் சமாதானம் கூறினார். ஆனால், அவருள்ளத்தே புரியமுடியாத வேதனை ஏற்பட்டது. கனவில் காளியார் வருகிறார். அவர்தான் கண்ட கனவைப் பற்றிக் கூறுகிறார். விந்தையாக இருக்கிறது. அச்சத்தையும் அளிக்கிறது. ''என் அருகே

படுத்திருக்கும் தேவியிடம் குஞ்சரி கூறியதை என்னிடம் தெரிவித்திருக்கலாம். ஏன் சொல்லவில்லை. ஒருவேளை, நகரத்தை விட்டு நகர நான் சம்மதிக்கமாட்டேன் என்பதால் என்னிடம் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம்'' - தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்ட அரசர் மெல்ல எழுந்து சாளரத்தின் அருகே சென்றார்.

நகரம் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. மேல்வானில் சந்திரன் கீழே உறங்கிக்கொண்டிருந்தான். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. பறவைகள் விழித்தெழத் தொடங்கிவிட்டன. மாளிகைமாடத்துக் கூடுகளில் அடைந்திருக்கும் புறாக்கள் சடசடவென ஓசை எழுப்பின.

கங்கைகொண்ட சோழீசரது கோயில் விமானம் மங்கிய நிலவொளியில் நிழலாய்த் தெரிந்தது.

''சோழீசர்! நல்ல வழிகாட்டியருள்வீர்'' என்று விமானத்தை நோக்கி வணக்கம் தெரிவித்த சோழச் சக்ரவர்த்தி மீண்டும் மஞ்சத்தை நோக்கிச் செல்லத் திரும்பினார்.

யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. அரசர் சற்று நின்றார்.

இரண்டு வீரர்கள் விரைந்து வந்து அவர் எதிரே வணங்கி நின்றனர். அவர்கள் உடல் இலேசாக நடுங்கிக்கொண்டிருந்தது.

அவர்கள் ஏதோ சொல்ல முயன்றனர். நா தழுதழுப்பது தெரிந்தது. அவர்கள் தேர்ந்தெடுத்த வீரர்கள். அஞ்சுவது கூடாது. அவர்கள் அஞ்சவில்லை. ஆனால், அச்சத்தை விட வேறொன்று அவர்களது சொற்களைத் தடை செய்தது. அவர்கள் நடுங்கக்கூடாது. உடல் நடுங்கவில்லை. அவர்களது உள்ளம் நடுங்கியது.

''சக்ரவர்த்தி அவர்கள் வாழ்க!'' என்று தொடங்கும் வாழ்த்துரை களைக் கூறிச் சற்றுத் திடப்படுத்திக் கொண்டு, ''காளியார் அவர்கள் மீது அம்பொன்று பாய்ந்தது. மார்பிலே வந்துத் தைத்த அந்த அம்பு கோட்டைக்கு வெளியே இருந்து வரவில்லை. உள்ளே இருந்துதான் வந்திருக்கிறது. மதிலின் மீது வீழ்ந்த காளியாரை மெல்லக் கீழே எடுத்து வந்து கிடத்தி உள்ளோம். அம்பு எய்தவன் விரைந்து ஓடி விட்டான். அவனைப் பிடிக்கக் காவல் வீரர்கள் சென்றுள்ளனர்'' என்றனர்.

இந்தச் செய்தியைக் கேட்ட இராஜராஜரின் உடல் மெல்ல நடுங்கியது.

அமைச்சர் அவையை உடனே கூட்டுமாறு செய்தி விடுத்தார் சோழச் சக்ரவர்த்தி இராஜராஜர்.

# 31

அமைச்சரவையைக் கூட்டி முடிவுசெய்வதற்குள் நிலைமை வேறு விதமாகிவிட்டது. வேளக்காரப்படையைச் சேர்ந்தவர்கள் விரைந்து வந்தனர். இரகசிய மந்திராலோசனை மண்டபத்திற்குள் யாருடைய காவலையும் தள்ளிவிட்டுச் செல்லக்கூடிய உரிமை அவர்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் சபை மண்டபத்திற்குள் நுழைந்த வேகம் புயலை நினைவூட்டியது!

''உடனே புறப்படுங்கள், அரசே'' என்ற அவர்கள் குரலில் பதற்றமும் வேகமும் விரைவாக இயங்க வேண்டிய கட்டாயமும் இருந்தன.

மந்திரி மண்டலத்தார் அதிர்ச்சி அடைந்தனர். ஏதோ ஆபத்து என்பது அவர்களுக்குப் புலப்பட்டுவிட்டது. என்ன, ஏது என்று கேட்கக்கூட அவர்களுக்குத் தோன்றவில்லை.

''அரசியாரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டாக வேண்டும்'' என்று வேளக்காரப்படைத்தலைவர் கட்டளையிடுவது போல் கூறினார்.

''என்ன நேர்ந்தது...?'' என்று சக்ரவர்த்தி வார்த்தையைத் தொடங்குமுன்பே, ''பேச நேரமில்லை, அரசே! பாண்டியர் படைகள் நகருக்குள் புகுந்துவிட்டன. மாளிகை நோக்கி விரைவாக வருவது தான் அவர்களுடைய அடுத்த திட்டம். அதற்குள் தாங்கள் இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும்...'' என்றார் வேளக்காரப் படைத்தலைவர்.

''நகருக்குள் எவ்வாறு புகுந்தனர்?'' என்று அமைச்சர் அவையைச் சேர்ந்தவர் ஒருவர் கேட்கவும், ''அதை விளக்கிச் சொல்ல இப்போது நேரமில்லை... தப்பிச்செல்வதைத் தவிர வேறு வழியில்லை. பாண்டியர் படைகளுடன் நமது சம்புவரையரின் படைகளும் சேர்ந்துவிட்டன...'' என்று கூறிவிட்டு, இராஜராஜரைத்

தூக்கிச் செல்லாத குறையாக அவரை அந்த மண்டபத்தைவிட்டு வெளியே கொணர்ந்தனர்.

காளியாரை இழந்த துக்கமும் எதிரிகளின் படைகள் கோட்டைக்குள் நுழைந்துவிட்டதால் அவமானமும் சூழ இராஜராஜர் தழுதழுத்த குரலில். "என்னை எங்கே போகச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"முதலில் கோட்டையைவிட்டு வெளியேறி விடுவோம். பிறகு எங்கே செல்வது என்பதை முடிவுசெய்து கொள்ளலாம்" என்றார் வேளக்காரப்படைத் தலைவர்.

"கோட்டையை விட்டு வெளியேறுவதா?" விழிகள் கலங்கின. "வெளியேறி அவமானமடைவதைவிட நான் கோட்டைக்குள்ளேயே இருக்கிறேன். பட்டத்தரசியையும் மற்ற அந்தப்புரப் பெண்டுகளையும் காப்பாற்றுங்கள். போதும்" என்றார் குரல் தழுதழுக்க.

"முடியாது அரசே, முடியாது. தங்கள் உயிரைக் காப்பதாக எங்களால் உத்தரவாதம் தரமுடியாது" என்றார் வேளக்காரப் படைத்தலைவர்.

"என் உயிர் போனால் போகட்டும். இராஜேந்திர சோழச் சக்ரவர்த்தி அமைத்த நகரமும் கோட்டையும் மாற்றான் கரத்தில் சிக்குவதைப் பார்த்துக்கொண்டு இருப்பதைவிட மாள்வது நல்லது..." என்றார் அரசர்.

"தாங்கள் மாண்டுவிடுவது அவ்வளவு எளிதன்று."

"ஏன்? கோட்டைக்குள் நுழைந்தவர்கள் மிக எளிதில் என்னைக் கொன்று விடுவார்கள்."

"தங்களைக் கொல்வது அவ்வளவு எளிதன்று. வேளக்காரப் படையினர் அனைவரது உயிரையும் கொண்ட பிறகுதான் தங்கள் உயிரிடம் அவர்கள் நெருங்க முடியும். எதிரிகளுக்கு வேண்டியது தங்கள் உயிரன்று. தங்களை உயிருடன் சிறைப்பிடிப்பது அவர்களது இலட்சியம். மகாராணியுடன் தங்களையும் சேர்த்துச் சிறைப்பிடித்து மதுரைச் சிறைக்குக் கொண்டுபோக எண்ணம். இந்த அவமானத்தை அடைவது தங்கள் விருப்பமா?"

"நான்தான் சொல்லி விட்டேனே... எந்த அவமானத்தையும் அடைய எனக்கு விருப்பமில்லை. அதனால்தான் மரணத்தை ஏற்க ஆயத்தமாக இருக்கிறேன்..."

''தங்கள் விருப்பப்படி நிறைவேற்ற எதிரிகள் தங்கள் அடிமை களல்லர். சக்கரவர்த்தி அவர்களே! வீணே விவாதித்துக் கொண்டிருக்க நேரமில்லை. அதோ பயங்கரமான கூக்குரல் கேட்கிறது. ஜீவமரணப் போராட்டத்தில் நமது வீரர்கள் இறங்கி யுள்ளனர். சோழநாட்டின் பெருமையை நிலைநாட்ட வேண்டு மென்றால் தாங்கள் தப்பி ஓடித்தானாக வேண்டும். அரசியையும் அழைத்துக்கொண்டு ஓட வேண்டும். இல்லாவிடில் வீண் அவமானத்துக்கு காலாகாலத்திற்கும் அழியாத அவமானத்துக்கு உள்ளாக நேரும். அரசியாரையும் தங்களையும் விலங்கிட்டு ஊர் ஊராக அழைத்துச் செல்லப்படுவதை விரும்புகிறீர்களா? சுந்தர பாண்டியருடன் கல் தச்சர்கள் வந்துள்ளனர். கங்கைகொண்ட சோழீசரது ஆலயத்தில், தங்களை உயிருடன் பாண்டியர் சிறைப் பிடித்த செய்தியைப் பொறிக்கப் போகிறார்களாம்! காலா காலத்திற்கு சோழ பரம்பரைக்கே அவப்பெயரை ஏற்படுத்துவது உங்கள் யோசனையா?'' வேளக்காரப் படைத்தலைவர் கோபமாகவே கேட்டார். அரசர் தலையசைத்தார்.

''என்ன சொல்கிறீர்கள் அரசே?'' என்றனர் வேளக்காரப் படையினர்.

''இனி உங்கள் மறுமொழியைக் கேட்டு நிற்கு முடியாது. எங்கள் தோள்மேல் தங்களைச் சுமந்தாவது கோட்டைக்கு வெளியே சென்று விடுகிறோம். இந்த நேரத்திற்குள் அரசியார் கோட்டைக்கு வெளியே சென்றிருப்பார்கள்'' என்று உத்தரவிடுவது போல் பேசினர்.

சக்ரவர்த்தி ராஜராஜசோழ தேவருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'சோழநாட்டின் நிலை இப்படியாக வேண்டுமா?' என்று வேதனை அடைந்தார்.

கண் மூடி இமைப்பதற்குள் அவரைத் தூக்கித் தோளில் சுமந்து கொண்டு விரைந்தனர்.

வடக்குகோட்டைவாயிலை நோக்கி விரைந்தபோது, சக்ரவர்த்தியின் அருகே ஒரு குரல் கேட்டது :

''சக்ரவர்த்தி அவர்களே! வடக்குக்கோட்டைவாயிலுக்குச் செல்லாதீர்கள். வெளியே எதிரிகள் காத்திருக்கிறார்கள்...''

இராஜராஜருக்கு அக்குரல் தெளிவாக எச்சரித்தது.

''நில்லுங்கள், நில்லுங்கள்...!'' என்று அவர் கூவினார்.

குழந்தைபோல் காலையும் கையையும் உதைத்துக் கொண்டார்.

''வடக்குக்கோட்டைவாயில் நோக்கிச் செல்ல வேண்டாம். வெளியே எதிரிகளின் படைகள் மறைந்திருக்கின்றனவாம்'' என்று கூவினார் அரசர்.

''எல்லா கோட்டைவாயிலுக்கருகேயும் எதிரிப்படைகள் உள்ளனர். ஆனால், வடக்குக்கோட்டைவாயில் அருகே இரகசிய வழி இருக்கிறது. அந்த வழி யாருக்கும் தெரியாது. அதன் மூலம் சென்று விடுவோம்...'' என்றார் வேளக்காரப் படைத்தலைவர்.

மன்னரைத் தூக்கிக் கொண்டு ஓடினர் வேளக்காரப்படையினர். சிறிது தொலைவுகூடச் சென்றிருக்கமாட்டார்கள். எதிரே பீதி யடைந்த மக்கள் கூட்டங் கூட்டமாக ஓடிவந்து கொண்டிருந்தனர்.

''வடக்குக்கோட்டைவாசல் பிளக்கப்பட்டுவிட்டது. எதிரிப் படைகள் பாய்ந்து வருகின்றன'' என்ற ஓலத்துடன் மக்கள் ஓடினர்.

வேளக்காரப் படையினருக்கு ஒன்றும் தோன்றவில்லை.

''ஐயோ, அரசி இந்த நேரம் வடக்குக்கோட்டைவாயிலருகே சென்றிருப்பார்கள் என்று சொன்னீர்களே! அரசியைச் சிறைப் பிடித்திருக்க மாட்டார்களா?'' என்று ஓலமிட்டார் அரசர். வேளக்காரப் படையினருக்கு ஒன்றும் புரியவில்லை. மன்னரைக் கீழே இறக்கி விட்டனர். திடீரென்று ஏதாவது ஆபத்து வந்தால் என்ன செய்வதென்று மன்னரைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டனர்.

அதே குரல் மன்னரின் செவியருகே ஒலித்தது. மன்னரின் உடல் சிலிர்த்தது. அவரது மேனி மீது மெல்லிய சிலை படிவது போல் ஒரு பிரமை.

''சக்ரவர்த்தி அவர்களே! ஏன் தயங்குகிறீர்கள்? வடக்குக் கோட்டை வாசலுக்குச் செல்ல வேண்டாம் என்று தங்களை நான் சற்று முன்புதான் எச்சரித்தேன்...''

''நான் என்ன செய்வேன், குஞ்சரி! இவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்களே'' என்று வேதனையுடன் அரசர் கூறினார்.

வாய்விட்டு யாரிடம் அரசர் பேசுகிறார்? குஞ்சரி என்று உச்சரிக்கிறாரே...

''என்ன சொல்கிறீர்கள், சக்ரவர்த்தி அவர்களே!'' - வேளக்காரப் படைத் தலைவர் பணிவுடன் கேட்டார்.

''நான் என்ன சொல்ல இருக்கிறது. நான் சொன்னால் கேட்கவா போகிறீர்கள்? குஞ்சரி சொல்கிறாள். கேளுங்கள்!'' என்று மிகவும் சோகம் நிறைந்த குரலில் பேசினார் மாமன்னர்.

''குஞ்சரியா...?'' - சந்தேகமும் சற்று அவநம்பிக்கையும் கலந்த குரலில் கேட்டார் வேளக்காரப் படைத்தலைவர்.

குஞ்சரியின் குரல் வேளக்காரப் படைத்தலைவரருகே ஒலித்தது. சுவாமிமலைக்கருகே பல மாதங்களுக்கு முன்பு அவள் குரலைப் படைத்தலைவர் கேட்டிருக்கிறார்.

''விரைவாகச் செயலாற்றுங்கள். வடக்குக்கோட்டைவாயில் தகர்ந்து விட்டது. சோழீசர் ஆலயத்தில் கிணறு ஒன்று இருக்கிறதே உங்களுக்குத் தெரியாதா? கிணற்றுக்குள் இறங்கப் படிக்கட்டுகள் உள்ளன என்பது தெரியுமா? அரசரை அங்கே அழைத்துச் செல்லுங்கள். கோயிற்கதவைத் தாழிடுங்கள். கிணற்றின் வழியே மெல்ல, பார்த்து இறங்கச் செல்லுங்கள். உம்...'' என்றது அரூபமாக இருக்கும் குஞ்சரியின் குரல்.

''அரசே, வாருங்கள், வாருங்கள். பாதுகாப்பான இடம் ஒன்றிருக்கிறது. தப்பித்துச்செல்ல சரியான வழி'' என்றார் வேளக்காரப் படைத்தலைவர்.

''அரசி எங்கே?'' என்று அலறினார் சக்ரவர்த்தி. அப்போது தான் மற்றவர்களுக்கும் கவலை ஏற்பட்டது.

அரசி எங்கே? சோழர் குலமாதேவி எங்கே?

சிலர் கோட்டை வாயிலை நோக்கி ஓடினர். சிலர் அந்தப்புர மாடத்தை நோக்கி ஓடினர்.

மறுபடியும் சிரிப்புச் சப்தம் ''சோழ மாமன்னர் அவர்களே! இன்னும் தாங்கள் இங்கே நிற்கலாமா? ஓடுங்கள். விரைந்தோடுங்கள். இந்த நேரம் அரசியார் சோழீசர் ஆலயத்தில் தங்களுக்காக காத்திருப்பார்கள். தங்களைக் காப்பாற்ற வழிகூறும் நான் தேவிக்கு ஆபத்தான மார்க்கத்தைக் காட்டுவேனா? என்னதான் என்மீது நம்பிக்கை கொள்ளாதவரென்றாலும் அரசியின் உயிரைக் காப்பது என் கடமை அல்லவா? உம்... சீக்கிரம் ஓடுங்கள்...!''

இறங்கினால், ஒரு சுரங்கவழி தென்படுமாம். அந்த வழி நம்மை வெளியே கொண்டுசேர்த்துவிடுமாம்....'' என்றார் அரசர்.

''நம்மைக் கிணற்றில் தள்ளிவிடும் யோசனையாகவும் இருக்கலாம்...'' என்றாள் அரசி பயங்கலந்த குரலில்.

''அதனால் அவளுக்கு என்ன லாபம்?'' என்று சற்றுக் கோபத்துடனேயே கேட்டார் அரசர்.

''எனக்கு எப்படித் தெரியும்? அவளுடைய திட்டத்தைக் கண்டு நான் சொல்கிறேன்'' என்றாள் அரசி.

''நாம் அழிவதில் குஞ்சரிக்கு ஏதாவது பலனிருக்கும் என்றால், வடக்குக்கோட்டைவாசல் வழியே நம்மைச் செல்லுமாறு சொல்லியிருக்கமாட்டாளா? அவள் எச்சரித்தாள். தடுத்தாள்!'' என்று அழுத்தமாகப் பேசிய அரசர் குரலுக்கு மறுமொழி கூறவில்லை அரசி.

கிணற்றுப் படிக்கட்டுகளில் அமர்ந்து கொண்டாள் அரசி.

''தங்களுடைய அடுத்த திட்டம் என்ன? அனைவரையும் நம்பியே நீங்கள் மோசம் போய்விட்டீர்கள். கோட்டையைப் பாண்டியர்கள் கைப்பற்றுவதைத் தடுக்க முடியாத நமது வீரர்களைக் கோழைகளாக வளர்த்து விட்டோமே என்ற கவலை எனக்கு'' என்று பேசிக் கொண்டே போவதைத் தடுத்த அரசர், ''தேவி! நமது வீரர்களின் புஜபலத்துக்கு எந்தவிதக் குறைவுமில்லை. சந்தர்ப்பச் சூழ்நிலை அவர்களைப் புறமுதுகிட்டோடுமாறு செய்துவிட்டது. நான் குந்தளநாடு செல்கிறேன். சாளுக்கியனிடம் உதவி கேட்கப் போகிறேன், நீ அதுவரையில் காட்டில் மறைந்திரு'' என்றார்.

அரசி திடுக்கிட்டாள். ''காட்டில் மறைந்திருப்பதா? ஹூம். ஒருக்காலுமில்லை. தங்களை விட்டு நான் மறைந்து வாழ்வதா? நானும் தங்களுடன் வருகிறேன்'' என்றாள்.

''நான் ஓடுவேன், நடப்பேன். இன்னும் ஒரு பக்ஷத்திற்குள் படைகளுடன் திரும்பி வரவேண்டும். அதற்குள் கோட்டையைப் பிடித்திருப்பான் மதுரைப் பாண்டியன். அவனை முறியடித்து ஓட்டிவிட்டு, கோட்டையைக் கைப்பற்ற வேண்டும். என்னுடனேயே நீயும் வருவது சரியன்று. முறையுமன்று. காட்டில் உன்னை வசதியான இடத்தில் இருத்திவிட்டுச் செல்கிறேன்'' என்று சமாதானம் கூறினார் அரசர்.

கலங்கியறியா புவனமாதேவி, கவலையறியா புவனமாதேவி, 'இந்த உலகமே தன் தாலடியின் கீழ்,' என்று செருக்குடன் வாழ்ந்த தேவி நடுநடுங்கினாள். மன்னரின் கரத்தை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டு புயலும் வேதனையும் நெஞ்சை அடைக்க, ''சுவாமி, என்னைவிட்டுச் சென்றுவிடாதீர்கள். நான் தனியே இருக்க மாட்டேன். இராமனைப் பின்தொடர்ந்த சீதாதேவியைப் போன்று தங்களைப் பின்தொடர்கிறேன்'' என்றாள்.

''தேவி, நான் மறைந்து மறைந்து நடப்பேன். விரைந்து ஓடுவேன். காட்டிலும் மேட்டிலும் செல்வேன். கிடைத்ததை உண்பேன். சத்திரத்தில் படுப்பேன். பஞ்சணை இராது. மண் தரையில் படுப்பேன். கையே தலையணை. இந்த ஆடம்பர ஆடைகளைக் களைந்து நாலு முழம் துண்டுடன் செல்வேன். உன்னால் முடியுமா தேவி? காட்டில் மிகவும் பத்திரமான இடத்தில் இருக்கும் போது உனக்கு என்னைப் பிரிந்திருக்கும் ஒரே துன்பம் தான். என்னுடன் வந்தாலோ பல துன்பங்கள். அதை நீ தாங்க மாட்டாய். நமக்கு இப்போது போதாத காலம். நளன் பட்ட கஷ்டத்தை நான் பட வேண்டும் என்று விதித்திருக்கிறது. நான் மனத்தாலும் ஒருவருக்கும் தீங்கு செய்யவில்லை. முற்பிறவியில் செய்த வினை இப்போது என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் தாக்குகிறது போலும். நான் சொல்வதைக் கேள் தேவி'' என்று மெல்லிய குரலில், அரசியை அணைத்தவாறு கூறினார்.

பெரிய கிணற்றின் ஓர் ஓரமாக அவர்கள் தங்கியிருந்த இடம் இருள் சூழ்ந்திருந்தது. அங்கு ஒரு சுரங்கப்பாதை இருக்கிறது என்று அவர் கேள்விப்பட்டிருக்கிறார். அதைப் பற்றிப் பிறகு மறந்தே விட்டார். மக்கள் நடமாட்டமில்லாமலும் இருள் சூழ்ந்தும் ஈரக்கசிவு மிகுந்தும் இருந்த அந்த இடத்தில் வௌவால்கள் தலைகீழாய்த் தவஞ்செய்து கொண்டிருந்தன. அவற்றின் நடமாட்டம் அளித்த ஒருவித நாற்றத்தை அரசியால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

''குடை நிழலிலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்' என்று நான் படித்த பழம் பாடல் நினைவுக்கு வருகிறது சுவாமி'' என்று கூறும்போது தேவி விம்மி விம்மி அழுது விட்டாள்.

இராஜராஜசோழர் அவள் கண்ணீரை மெல்லத் துடைத்து, சற்று இறுக்கமாகவே அணைத்துக் கொண்டு, ''சோழநாட்டரசி கண்ணீர் விடலாமா? இந்தப் போதில்தான் நாம் தைரியத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஊரிலே மக்கள் எதிரிப்படைகளிடம் என்ன பாடுபடப் போகிறார்களோ? நம்மால் அன்றோ மக்களுக்குத் துன்பமும் தொல்லையும். அதை நினைத்துக்கொள்வோம்... நான் சொல்வதைக் கேள். சுரங்கப்பாதையின் வழியே வெளியே போய் விடுவோம். உன்னை சர்வ ஜாக்கிரதையான இடத்தில் இருக்கச் செய்துவிட்டு செல்கிறேன். கவலையை விடு. கண்ணீரைத் துடைத்துக்கொள்'' என்று கூறி அவள் பயத்தைப் போக்க முயன்றார்.

அரசி சம்மதிக்கவில்லை. ''முடியாது, முடியாது! தங்களைப் பிரிந்திருக்க முடியாது. தங்களைப் பிரிந்திருக்கும் பயங்கரத் துன்பத்தைத் தாங்குவதைவிடத் தங்களுடன் வந்து அடையும் துன்பத்தை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டாள்.

இராஜராஜசோழருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. விவாதித்துக்கொண்டே தாமதப்படுத்திவிட்டால் எதிரிகள் கோயிலுக்குள்ளும் நுழைந்துவிடலாம்... ஆனது ஆகட்டும் என்று அரசியை அழைத்துக்கொண்டு சுரங்கப்பாதையில் நுழைந்தார்.

அதே குரல்; ''அரசே! எங்கே செல்கிறீர்கள்?'' உருவமற்று மோகினியாகத் திகழும் குஞ்சரியின் குரல்.

இராஜராஜரின் உடல் சிலிர்த்தது. ''எங்கே செல்கிறோம் என்று உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.

''உங்கள் மனத்தில் இருப்பதைப் புகுந்து பார்க்கும் சக்தி எனக்கில்லை... நீங்கள் என்ன முடிவுசெய்திருந்தாலும் இந்த இடத்தை விட்டு நகர வேண்டாம்!'' என்றாள் குஞ்சரி.

## 32

''இங்கே இருப்பதா? பாண்டியர்களிடம் அகப்பட்டுக் கொள்ளச் சொல்கிறாயா?'' இராஜராஜன் சற்றுக் கோபமாகவே கேட்டார்.

குஞ்சரி இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்றுதான் மெல்ல நகைத்தாள்.

''தங்களை சுந்தர பாண்டியனிடம் சிக்க வைக்கும் ஆசை எனக்கு இருந்திருந்தால் அதை நான் எப்போதோ செய்திருக்கலாம்! சக்ரவர்த்திக்கே தெரியும். இப்படி நான் அலைந்திருக்க வேண்டாம். பாண்டியர்களிடம் சென்றிருந்தால், உம். தங்களுக்கு இன்னும் என் மீது முழுநம்பிக்கையும் ஏற்படவில்லை.'' - குஞ்சரி கூறுவது நியாயமாகத்தான் தோன்றியது.

''இங்கேயே இருக்குமாறு சொல்கிறாயே. கோயிலைப் பாண்டியர்கள் சூழ்ந்துகொள்ளமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?'' - இராஜராஜன் கேட்டார்.

உலகமாதேவி திடுக்கிட்டாள். இவர் யாருடன் பேசுகிறார்? இங்கேயே இருக்குமாறு யார் சொல்கிறார்கள்?

''சுவாமி, யாரோடு பேசுகிறீர்கள்?'' என்று மன்னரின் தோள்களைத் தொட்டவாறு கேட்டாள்.

''குஞ்சரி யோசனையொன்று சொல்கிறாள். எனக்கு அதில் நம்பிக்கையில்லை'' என்றார்.

''குஞ்சரி சொல்வது சரியென்று எனக்குக்கூடத் தோன்றுகிறது'' என்றாள் அரசி.

''முன்பெல்லாம் அவளை வெறுத்தாயே?'' சற்று எரிச்சலுடன் இராஜராஜன் தேவியின் பக்கம் திரும்பிப் பேசினார்.

''குஞ்சரி ஆவி வடிவில் வந்து நமக்குத் தீங்கிழைப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றாள் அரசி.

''நாம் விவாதிக்க நேரமில்லை. வா, என்னுடன் சுரங்கப் பாதையில் பயப்படாமல் வா'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிய இராஜராஜன் சுரங்கப்பாதை வழியே நடக்கலானார்.

குஞ்சரியின் குரல் தொடர்ந்தது. அவள் இப்போது அரசி புவனமுழுதுடையாளிடம் பேசினாள்.

''தேவி, நீங்களாவது அரசரைத் தடுத்துநிறுத்தக்கூடாதா?'' என்று குஞ்சரி கேட்டாள்.

புவனமுழுதுடையாள் குஞ்சரியின் குரல் கேட்டுத் திடுக் கிட்டாள். அந்தக் குரல் உருவமற்ற குஞ்சரி பேசுவது போல் தோன்ற வில்லை. குஞ்சரி மிக அருகே நெருங்கி வந்து அறிவுரை கூறுவது போலவே தோன்றியது.

புவனமுழுதுடையாள் அரசரைப் பின்தொடராது நின்று விட்டாள்.

"ஏன் நின்று விட்டாய் தேவி? களைப்பாயிருக்கிறதா?" என்று இராஜராஜன் கேட்டார்.

"கவலையாயிருக்கிறது."

"கவலைதான் நம்மைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறதே! புதிய கவலை என்ன?"

"குஞ்சரி என்னை எச்சரிக்கிறாள்."

"என்னை விட்டு உன்னிடம் வந்து விட்டாளா?"

"சுரங்கப்பாதையை விட்டு வெளியே வந்தால் ஆபத்தாம்."

"இங்கிருந்தால் ஆபத்து கிடையாதா? தேவி, அவள் சொல்வதைக் கேட்டுகொண்டிருந்தால்தான் ஆபத்து. வா! விரைவாகப் போகலாம். வெளியே சென்ற பிறகு குறுக்குப்பாதை வழியாக நாம் காஞ்சியை அடைந்து விடுவோம். அங்கே சோழ நாட்டிற்கு வேண்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். அங்கே நீ பயமின்றி, கவலையின்றித் தங்கலாம். நான் குந்தளநாட்டை நோக்கிச் செல்லப் போகிறேன். அவர்கள் நமக்கு உதவுவார்கள். பெரும் படையை அனுப்புவார்கள். இந்தத் திட்டத்தைத் நான் மனத்தில் கொண்டிருக்கும் போது 'இங்கேயே தங்கி விடு' என்று குஞ்சரி கூறினால் நான் அவளுக்குச் சமாதானம் எப்படிக் கூறுவது? இனியும் நாம் பேசி, விவாதித்து, தர்க்கம் செய்து நேரத்தைக் கழிக்கக் கூடாது" என்று கூறிய இராஜராஜன், புவனமுழுதுடையாள் கரத்தை அழுத்தமாகப்பற்றிக் கொண்டு விரையலானார்.

இயற்கையாகக் காற்றுவருவதற்கு சுரங்கப்பாதையில் வழி செய்து வைத்திருந்த திறமையை மெச்சியவாறு இராஜராஜன், தேவியின் கரத்தைப் பிடித்து அழைத்துக்கொண்டு விரைந்தார். இருளும் ஒருவித நாற்றமும் அரசியைத் தடுமாறச் செய்தன.

அடர்ந்த காட்டின் பாழடைந்த மண்டபமொன்றில் சுரங்கப் பாதை வந்து முடிந்தது. வெளியுலகக் காற்றைச் சுவாசித்த பிறகுதான் புவனமுழுதுடையாள் சுயநினைவை அடைந்தாள்.

மாளிகையில் சுவையான உணவை உண்டு, பணிப்பெண்கள் பாதங்களைப் பிடிக்க, சிறு துயில் கொள்ளும் புவனமுழுடையாள்

மண்டபத்தூணில் சாய்ந்து கொண்டாள். வியர்வையால் பட்டாடை முழுவதும் மழையால் நனைந்தது போலாகிவிட்டது.

சோழர்குல விளக்காகத் திகழ்ந்த இராஜராஜசோழதேவரின் பெயரரையுடைய இராசகேசரி மூன்றாம் இராஜராஜசோழதேவர் தலைநகரை விட்டு, அரசி புவனமுழுதுடையாளுடன் நடுக்காட்டுப் பாழ் மண்டபமொன்றில் பசியும் தாகமும் சேரச் சோர்ந்து அமர்ந்திருப்பது விதியின் கொடுமையல்லாது வேறு என்னவென்பது?

''அருகே ஏதாவது கனிகள் கிடைக்குமா என்று பார்த்து வரட்டுமா, தேவி?'' என்று மன்னர் கேட்டார்.

தேவி பரபரப்புடன் அவர் கரங்களைப் பிடித்துக்கொண்டு, ''ஹூ ஹூம்! போகாதீர்கள்... போகாதீர்கள். என் மார்பு படபட வென்கிறது. புரிய முடியா வேதனை அடிவயிற்றைப் பிசைகிறது. பசியால் நான் மாண்டாலும் மாள்வேன். ஆனால் தங்களைப் பிரியவே மாட்டேன். இப்போதே சொல்லிவிட்டேன். காஞ்சி மாநகரத்திலும் நான் தனியே இருக்கமாட்டேன். குந்தள நாட்டிற்குத் தங்களுடன் வரவே செய்வேன்'' என்றாள்.

சோழ அரசருக்குத் துக்கப்படுவதா, வேதனைப்படுவதா, கோபப்படுவதா என்று புரியவில்லை.

காற்று சுகமாக வீசியது. மரங்கள் அசைந்தன. அதே குரல்.

''மன்னரவர்களே!'' என்று மெல்லிய - ஆனால் அழுத்தமான குரல். குஞ்சரியினுடையது.

இராஜராஜன் பரபரப்புடன் சுற்றும்முற்றும் பார்த்தார்.

''நான்தான்... இங்கு தானிருக்கிறேன்...'' என்றது குரல். இராஜராஜன் பட்டத்தரசியை நெருங்கி, ''தேவி, குஞ்சரி இங்கும் நம்மைத் தொடர்ந்து வருகிறாள். எனக்கு என்னவோ இப்போது பயமாயிருக்கிறது'' என்றார்.

போர்க்களத்திலே ஆயிரம் பதினாயிரம் போர் வீரர்களையும் கரி பரிகளையும் வேலாயுத சூலாயுதங்களையும் வியூகப் போர் முறைகளையும் கண்டு அஞ்சாத பொன்னிக் காவலர் மோகினியின் குரலுக்கு நடுங்குகிறார். ஏன்?

தேவி அவரது கரத்தை இப்போது பிடித்துக்கொண்டாள்.

"ஏன் சுவாமி நீங்கள் பயப்பட வேண்டும்? நம் குஞ்சரிதானே பேசுகிறாள்? நமக்குத் துணையாக வந்துகொண்டிருக்கிறாள் என்பதால் மேலும் தைரியமாகக் கவலை கொள்ளாமல் இருக்க வேண்டாமா?"

குஞ்சரி குரல் கொடுத்தாள் : "மன்னர்பிரான் அவர்களே, பசியால் களைத்திருக்கிறீர்கள். இந்த மண்டபத்தருகே ஒரு குளம் இருக்கிறது. பாசி படிந்ததாகத் தோன்றலாம். ஆனால் தூய நீர். அருகேயே மாமரம் ஒன்றிருக்கிறது. பறிப்பாரில்லாமல் பழங்கள் கீழே வீழ்ந்து மட்கிப் போகின்றன. பறித்து உண்டு பசியாறுங்கள்."

சக்ரவர்த்தி "குஞ்சரி, குஞ்சரி...!" என்று குரல் கொடுத்தார். யாரையும் காணவில்லை.

**ம**றுநாள் பொழுது புலருமுன்பு - மன்னரும் அரசியும் காஞ்சி நோக்கிப் புறப்பட்டனர்.

அதே குரல்: "மன்னர்பிரானே! கருணை கூர்ந்து காஞ்சி செல்லாதீர்கள். இங்கேயே தங்கியிருங்கள்!"

இராஜராஜர் குஞ்சரி கூறுவதைக் கேட்டதாகவே தெரிய வில்லை. மௌனமாக அரசரும் அரசியும் நடந்தனர். நடந்து கொண்டேயிருந்தனர். அணிந்திருந்த ஆபரணங்களை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டாள் அரசி. உடலில் அணிந்திருக்கும் போது ஆபரணங்களில் பளு தெரியவில்லை. மன்னர் ராஜ உடையைக் களைந்து மேல் ஆடையொன்றால் போர்த்திக் கொண்டு, தலையில் உழவர் போல் தலைப்பாகை கட்டிக் கொண்டார்.

மீண்டும் இரண்டு முறை குஞ்சரி அரூபமாக வந்து அரசரிடம் பேசினாள் :

"மன்னர் அவர்களே! ஆபத்து ஒன்று தங்களை நெருங்குகிறது. கங்கைகொண்டசோழபுரத்திற்குள் பாண்டியர் படைகள் நுழைந்து, நகரத்தைத் தம் வயப்படுத்திக் கொண்டு விட்டன. தங்களை உயிருடன் பிடிக்க நகரத்தின் சந்து பொந்தெல்லாம் தேடுகிறார்கள். அழகியமணவாளன் முக்கியமான இடமெங்கும் தேடுகிறான். தப்பி ஓடியிருக்கலாம் என்ற சந்தேகம் அவனுக்கு உதித்துவிட்டது.

அதனால் தனது படை வீரர்களுள் தேர்ந்தெடுத்த சிலரை நாலா' திக்கும் அனுப்பியுள்ளான். இந்தச் சமயத்தில் தாங்கள் மறைந் திருப்பது மிகவும் நல்லது..." என்றாள்.

இராஜராஜன், மோகினியின் எச்சரிக்கையை அலட்சியப் படுத்தினார். தேவியும் அரசரும் நடந்துகொண்டே இருந்தனர். ஒரு பகல், ஒரு இரவு என்று கழிந்து கொண்டேயிருந்தது. கிராமங்களில் கிடைத்த உணவை உண்டனர். கோயிலில் உச்சிவேளையில் கொடுக்கப்பட்ட பிரசாதம் பசியை அடக்கியது. சோழமன்னர்கள் ஆங்காங்கே கட்டிய கோயில்கள், சோழமன்னரின் பசியைத் தீர்க்க உதவின.

ஏழாம் நாள் காலையில் தெள்ளாறு எனும் ஊரை அடைந்து, ஒரு மண்டபத்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கும் போது, கோப்பெருஞ்சிங்கனின் வீரர்கள், இராஜராஜனையும் அவரது பட்டத்து அரசியையும் அடையாளம் கண்டுகொண்டனர். மண்டபத்தைச் சூழ்ந்துகொண்டு சிறைப்பிடித்தனர். நிராயுத பாணியாக இருந்த இராஜராஜனால் ஏதும் செய்ய முடியவில்லை.

சேந்தமங்கலம் சிறைச்சாலைக்குச் சோழநாட்டுச் சக்கர வர்த்தியும் அவரது பட்டத்து அரசியும் கொண்டு செல்லப்பட்டனர்.

கடல் கடந்த நாடுகளிலெல்லாம் புலிக்கொடியை நாட்டிய சோழ மாமன்னர், சோழநாட்டுக் குறுநில மன்னரான கோப்பெருஞ் சிங்கனிடம் சிறைப்படுத்தப்பட்டார்.

ஈழ நாட்டையும், பாண்டிய நாட்டையும் வென்ற பராந்தக சோழரது பரம்பரையில் வந்த இராஜராஜன் ஒரு சிற்றரசனிடம் தலைகுனிந்து தனிச்சிறைக்குள் புக நேர்ந்தது.

கங்கையும், கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழனது பரம்பரையில் வந்த சோழ மன்னர் கங்காபுரியை இழந்து நிற்கிறார்.

ஜெயங்கொண்டாரால் பரணி பாடப்பெற்ற குலோத்துங்கனது பெயரன், சோழ வம்சத்திற்கே அவப்பெயர் ஏற்படுமாறு சிறையில் அடைபட்டிருக்கிறார்.

"குஞ்சரி; அப்போதே எச்சரித்தாள்! கேட்கவில்லை. அவளை அலட்சியப்படுத்தினோமே!" என்று வேதனைப்பட்டுக் கண்ணீர் விட்டார் இராஜராஜன்.

''குஞ்சரி, நீ இப்போது எங்கே? எனக்கு ஒரு வழிகாட்டக் கூடாதா? போசள மன்னர் வீர நரசிம்மனிடம் உதவிக்குப் போக வேண்டாம் என்று வீம்பு பிடித்திருந்தேன். குஞ்சரி, எனக்காக உன் தாயை அவனிடம் தூது அனுப்பினாய். பலனில்லை. இப்போது நீயாவது போய் என் அவல நிலையைக் கூறக்கூடாதா?'' என்று இராஜராஜன் வாய்விட்டுப் புலம்பினார்.

''மோகினி, எங்களுக்கு உதவம்மா!'' என்று புவனமுழுதுடையாள் கையெடுத்துக் கூப்பினாள்.

குஞ்சரியைக் காணவில்லை. அருபமாக வந்து உதவும் குஞ்சரி வரவேயில்லை.

அழகிய மணவாளன், சிறைச்சாலையில் இராஜராஜரை வந்து பார்த்து மரியாதைக் குறைவாகப் பேசினான். கங்கை கொண்ட சோழபுரத்தில் மற்ற அமைச்சர்களையும் சிறைப்படுத்தி விட்ட செய்தியைக் கூறினான். ''அந்தப்புரத்தில் பெண்டிர்களையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் பிடித்து வந்து விட்டோம். அவர்களும் உங்கள் சிறைக்கூடத்துக்கு அருகில் இருக்கிறார்கள். சோழ வம்சம் இனித் தலை எழ முடியாது'' என்று குத்திக் காட்டினான். இன்னும் ஓரிரு நாட்களில் சுந்தர பாண்டியனிடம் ஒப்படைக்கப் போவதாகப் பயமுறுத்தினான். சோழநாட்டை நான்கு பிரிவுகளாகப் பிரிக்க சுந்தர பாண்டியன் ஒப்புக்கொண்டு விட்டதாகவும், கங்கை கொண்ட சோழபுரம் உள்பட ஒரு பகுதியைத் தனக்குத் தருவதாக சுந்தர பாண்டியன் வாக்களித்திருப்பதாகவும், இப்போது உயிருடன் சோழ அரசரையும், அரசியையும் ஒப்படைப்பதால் ஒரு பங்கு அதிகமாகவே கிடைக்கும் என்றும் எக்காளமிட்டுப் பேசினான்.

இராஜராஜன் மௌனக் கண்ணீர் விட்டுத் தலை குனிந்து நின்றார். அப்போதும் குஞ்சரியின் நினைவு அரசருக்கு. 'குஞ்சரி குஞ்சரி' என்று மனத்துக்குள் உரத்த குரலில் கூவினார்.

ஏழு நாட்கள் ஓடி மறைந்தன. அரசியார் மெலிந்து விட்டார். இராஜராஜன் அவமானத்தால் குன்றி விட்டார். அந்தப்புரப் பெண்டு பிள்ளைகள் கதி என்னவென்று தெரியவில்லை. இவ்வளவு நாட்கள் அருபமாக வந்து யோசனைகள் கூறிய குஞ்சரி எங்கே? இராஜராஜன் வாய் விட்டுப் புலம்பினார். புலம்பவும் அவருக்குச் சக்தியில்லை.

எட்டாவது நாள் காலை பொழுது புலரும்போது சிறைக் கதவு திறக்கும் ஓசை கேட்டது ரிஷபக் கொடி தாங்கிய காடவர்க்கோன் வீரர்கள் வந்தனர். இராஜராஜன் வணங்கி நின்றனர்.

இராஜராஜன் பார்வை மங்கியிருந்தது. ''யார், யார்?'' என்று மெல்லிய குரலில் கேட்டார்.

''சோழ குல பூபதி வாழ்க! சக்கரவர்த்தி அவர்களே! மங்கள ஸ்நானம் செய்ய எங்களுடன் வாருங்கள் பிறகு பட்டாடை, முத்தாபரணங்கள் அணிந்து தேர் ஏறி உடனே கங்கை கொண்ட சோழபுரம் செல்ல வேண்டும்!'' என்று பணிவுடன் கூறினார்கள்.

இராஜராஜன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார். கனவு காண்கிறாயா? அல்லது ஏதாவது அசரீரியா என்று சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

''சக்கரவர்த்தி அவர்களே! கருணை கூர்ந்து உடனே எழுந்திருங்கள். தாங்கள் தாமதப்படும் ஒவ்வொரு நொடியும் எங்கள் நாட்டு மக்கள் துன்புறுத்தப்படுவர். ஊர்களைக் கொளுத்துகிறார்கள்'' என்று காடவர்க்கோன் வீரர்கள் அஞ்சி நடுங்கிப் பயத்துடன் பேசினார்கள்.

இராஜராஜன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். தான் கேட்டது கனவிலன்று; உண்மை தான் என்பதைப் புரிந்து கொண்டார்.

பல்லவ குலத்தின் வழித்தோன்றலான காடவர்க்கோன் கோப்பெருஞ்சிங்கன் என்று புகழப்படும் அழகிய மணவாளனின் வீரர்கள் தாம் பேசுகிறார்கள்.

ஊர்களை யார் கொளுத்துகிறார்கள் என்ற சந்தேகம் அரசருக்கு. ஒருவேளை எங்கோ அஞ்சி ஒளிந்திருந்த இளவரசன் இராஜேந்திரன் படைகளுடன் வந்து ஊர்களை அழிக்கிறானா? ஊர்களை ஏன் அழிக்கிறான்? பைத்தியக்காரன்! ஊர்கள் வேற்று நாட்டைச் சேர்ந்தவையா? இல்லையே - அவையும் சோழ நாட்டு ஊர்கள் தாமே!

''யாரப்பா ஊர்களைக் கொளுத்துகிறார்கள்? ஏன் கொளுத்துக் கிறார்கள்?'' என்று இராஜராஜன் கேட்டார். அருகே உறங்கிக் கொண்டிருந்த அரசி புவன முழுதுடையாள் மெல்ல எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

காடவ வீரர்கள் கை கட்டி, மிகவும் நடுங்கிய குரலில், ''சோழ சக்கரவர்த்திகளே! உங்களுக்கு எங்கள் ராஜா செய்த அபசாரத்திற்குத்

தண்டனையை அனுபவிக்கிறார். பரம்பரையாக கோப்பெருஞ்சிங்கன் உங்கள் உப்பைத் தின்று வாழ்ந்து வருபவர். சோழநாட்டின் சிற்றரசர். அவர் உங்களுக்குத் துரோகம் செய்தார். பாண்டிய அரசருடன் சேர்ந்து கொண்டார். தனது மாளிகையின் இரகசிய வழியை அவருக்குத் தெரிவித்தார். கங்கை கொண்ட சோழபுரத்தில், சுந்தர பாண்டியனைச் சிங்காதனத்தில் அமர வைத்து மகுடஞ் சூட்டினார். எல்லாம் பேராசை தான்; தான் சுதந்திர அரசராக ஆகவேண்டும் என்ற பேராசையால் தான்...'' என்று மூச்சுத் திணறப் பேசி நிறுத்திய வீரர்களை நோக்கி இராஜராஜன், ''எல்லாம் நடந்து போன சம்பவங்கள். இப்போது என்னை விடுதலை செய்யுமாறு உங்கள் அரசருக்குக் கட்டாயம் ஏற்பட்டதேன்?'' என்று கேட்டார்.

''துவார சமுத்திரத்திலிருந்து போசள ராஜா வீரநரசிம்மன் திருவரங்கத்திற்கு வந்து சேர்ந்து விட்டார். கொள்ளிட வடகரையிலே தண்டு இறங்கியுள்ள அவர் தனது படைத் தலைவர்களுக்கு இட்ட உத்தரவு நாட்டையே கதிகலங்க அடிக்கிறது'' என்று கூறி வந்த வீரர்களின் சொற்களினால் பரபரப்படைந்த இராஜராஜன்,

''என்ன! துவார சமுத்திரத்திலிருந்து வீர நரசிம்மன் கொள்ளிட வடகரைக்கு வந்துவிட்டாரா? அவருக்கு எப்படிச் செய்தி கிடைத்தது?'' என்று வியப்புடன் கேட்டார்.

''வீர நரசிம்மன் தனது படைத் தலைவர்களுள் மிகச் சிறந்த அப்பண்ண தண்டநாயகன், சமுத்திர கொப்பைய தண்டநாயகன் ஆகிய இருவருக்கும் உத்தரவிட்டு விட்டார். தங்களைக் கோப்பெருஞ்சிங்கன் சிறைப் பிடித்து, சேந்தமங்கலத்தில் அடைத்து வைத்திருக்கும் செய்தி கேட்டு மிகவும் சீற்றமடைந்தாராம். உடனே எங்கள் நாட்டை அழித்துச் சூறையாட உத்தரவிட்டு விட்டார். அதன் விளைவு தான் கிராமங்களும், ஊர்களும் தீக்கிரையாக்கப் படுகின்றன....''

''அடடா, ஒன்றுமறியாத பொதுமக்களை ஏன் கொடுமைப்படுத்த வேண்டும்? கோப்பெருஞ்சிங்கனின் தவறான போக்கு, எளிய மக்கள் தலையில் இடிபோல் இறங்க வேண்டுமா? உம்; பிறகு உங்கள் அழகிய மணவாளர் என்ன செய்தார்?''

''என்ன செய்வது! வீரநரசிம்மன் காலில் போய் விழுந்தார்.''

''ஏன், சுந்தரபாண்டியன் உதவியுடன் வீரநரசிம்மனை ஒட்டியிருக்கக் கூடாதா?''

''சுந்தர பாண்டியனே, கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டு ஒரே ஓட்டம் பிடித்து விட்டார். போசள படையினர் பலம் என்ன? அப்பப்பா! சோழ நாட்டிற்கு எதிரிகளாக மாறிய மகத நாட்டு வாணர் குலத்தவரையும் சிறைப்பிடித்து விட்டனர். வீரகங்க நாடாழ்வான், சீனத்தரையன், ஈழத்துப் பராக்கிரமபாகு இவர்களைக் கொன்று விட்டார் வீரநரசிம்மர்?''

''ஆ! அப்படியா? சுந்தர பாண்டியனின் குதிரைப்படைகள் கடல் போன்றிருக்குமே?''

''கொள்ளிச் சோழ கோன் தலைமையில் இயங்கிய குதிரைகளை எல்லாம் வளைத்துப் பிடித்து விட்டார். எள்ளோரி, கல்லியூர் மூலை, தொழுதகையூர்* எல்லாம் தவிடுபொடி!''

''ஆகா! வீர நரசிம்மனுக்குச் சோழ நாட்டின் மீது எவ்வளவு அன்பு! அவர் மகளை மணக்குமாறு முன்பே தூது அனுப்பினார். மகள் வயிற்றுப் பெயர்த்தியை இராஜேந்திரனுக்கு மணம் முடிக்கக் கேட்டார். நான் மறுத்து விட்டேன். அதை மனத்தில் கொள்ளாமல் உதவி செய்திருக்கிறார். சோழநாட்டிற்கு ஆபத்து என்ற செய்தி அவருக்கு எப்படி எட்டியது என்று தெரியவில்லை'' - இராஜராஜன் கவலைப்படுவது போல் பேசினாலும், அவர் குரலில் களிப்பு கலந்திருந்தது.

''சக்கரவர்த்தி அவர்களே! நாம் இனியும் பேசிக் கொண்டு தாமதப்படுத்தினால் சேந்தமங்கலத்துக்கே ஆபத்து வரலாம். அழகிய மணவாளன் உயிருக்கும் ஆபீத்து ஏற்படலாம் அதனால்...'' என்று வீரர்கள் பரபரப்புடனும், பயத்துடனும் வேண்டினர்.

''அது சரி; நிரபராதியான மக்களுக்கு எந்தவிதத் துன்பமும் நேரக்கூடாது தான். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று சோழ சக்கரவர்த்தி வினவினார்.

---

*இராஜராஜன் தன் பட்டத்து ஊர் எள்ளோரி. வீர நாராயணன் ஏரி (வீராணம்)யின் கீழ்க்கரையின் தென் கோடியிலுள்ள ஊர் (கல்லியூர் மூலை). இப்போது கலியமலை என்று வழங்கப்படுகிறது. விருத்தாச்சலம் வட்டத்திலுள்ள தொழுஊர் என இன்று வழங்கப்படுகிறது. (தொழுதகையூர்)

''மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து வாத்ய கோஷங்களுடன் தங்களைக் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு எழுந்தருள்விக்கச் செய்ய வேண்டும் என்பது வீரநரசிம்மன் உத்தரவு. கங்கை கொண்ட சோழபுர வாயிலில் காடவர்கோன் கோப்பெருஞ் சிங்கன் அழகிய மணவாளன் அடிபணிந்து வரவேற்க வேண்டும். சம்புவரையரும், வாணகோவரையரும் கை கட்டி நிற்க வேண்டும். இப்பொழுது நீங்கள் புறப்பட்டால் தான் இன்னும் இரண்டு நாட்களிலாவது கங்கை கொண்ட சோழபுரம் போய்ச் சேரலாம். தாங்கள் புறப்பட்டு விட்டீர்கள் என்பது தெரிந்தால், உடனே இந்த நாட்டில் போசள வீரர்கள் கொள்ளை அடிப்பதை, தீக்கிரையாக் குவதை நிறுத்துவார்கள். கருணை புரியுங்கள் சக்கரவர்த்தி!'' என்று பணிவுடன் வேண்டினர், ரிஷபக் கொடி பிடித்த வீரர்கள்.

''புலிக்கொடி நாட்டில், சிற்றரசர்கள் த்த்தம் கொடிகளைப் பயன்படுத்தலாம் என்று எனது மூதாதையர்கள் அளித்த உத்தரவு எவ்வளவு பாதகத்தை அளித்து விட்டது, பார்த்தீர்களா?'' என்று இராஜராஜன் வீரர்களிடம் சுட்டிக் காட்டினார்.

கங்கை கொண்ட சோழபுரத்துக் கோட்டை வாயிலில், சோழநாட்டுக் குறுநில மன்னர்கள் காத்திருந்தனர். மேளவாத்தியம் முழங்க, மலர் தூவிப் பெண்கள் வரவேற்க, ஆரம் சுற்றி வாழ்த்துக் கூற இராஜராஜ சோழதேவரும் பட்டத்து அரசி புவனமுழுதுடை யாளும் இரதத்திலிருந்து கம்பீரமாக இறங்கினர்.

போசள மன்னர் வீர நரசிம்மர் புன்முறுவலோடு சபை மண்டபத்தில் அவர்களை வரவேற்றார். நல்லவேளையாகப் பார்த்துத் தன் கரத்தால், மணி மகுடத்தை இராஜராஜன் முடியில் சூட்டினார்.

தனது நன்றியைப் போசள மன்னரிடம் தனியே தெரிவித்த இராஜராஜன், ''கங்கை கொண்ட சோழபுரத்திற்கு ஆபத்து என்று எப்படி அறிந்தீர்கள்?'' என்று கேட்டார்.

வீர நரசிம்மர் விவரித்த செய்தி, இராஜராஜன் மேனியில் ரோமாஞ்சலியை ஏற்படுத்தியது.

''இரவு நான் உறங்கிக் கொண்டிருந்தேன். ஓர் அழகிய பெண் என்னைத் தட்டி எழுப்பினாள். கங்கை கொண்ட சோழபுரத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றி விவரித்தாள். அன்று நான் சற்று அலட்சியமாக இருந்து விட்டேன். ஒற்றர்களை அனுப்பிச் சேதி

சேகரிக்கச் செய்தேன். பிறகு இரண்டு நாட்கள் கழித்து கோட்டை முற்றுகையைப் பற்றி விவரித்தாள். ஒற்றர்களின் அறிக்கையும் கிடைத்தது. படைகளைத் திரட்டலானேன். மீண்டும் அவள் வந்தாள். நல்ல பகல் நேரம். அவள் உருவம் என் கண்களுக்குப் புலப்பட வில்லை. ஆனால் பேசுங்குரல் கேட்டது. தாங்கள் சுரங்க வழியே தப்பிச் செல்வதையும், கோப்பெருஞ்சிங்கன் தங்களைச் சிறைப் படுத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்வதையும் தெரிவித்தாள். நான் படைகளுடன் புறப்பட்டு விட்டேன். கொள்ளிட வடகரையில் தண்டு இறங்கிய போது சுந்தரபாண்டியன் கங்காபுரிக் கோட்டையை வசப்படுத்திக் கொண்டு விட்ட சேதி அறிந்தேன். முழு மூச்சுடன் கோட்டையைத் தாக்க ஏற்பாடு செய்தேன். மீண்டும் அருபமாக அந்த இளம் பெண் வந்தாள். சேந்தமங்கலம் சிறையில் தங்களையும், பட்டத்தரசியையும் அடைத்திருப்பதை எடுத்துக் கூறினாள். அவள் குரலில் சோகம் நிறைந்திருந்தது. எனது சேனைத் தலைவர்களுக்குக் கடுமையான உத்தரவிட்டேன். கோப்பெருஞ் சிங்கன் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தான். இதோ நீங்கள் மீண்டும் அரியணை ஏறிவிட்டீர்கள். அந்த தேவ மங்கைக்கு நன்றி சொல்ல வேண்டும். யார் அந்தப் பெண்?'' என்று வீரநரசிம்மன் கேட்டார்.

இராஜராஜன் குஞ்சரியின் வரலாற்றை விவரித்து, அவளுடைய தியாகத்தை எடுத்துக் கூறினார்.

அந்தப்புரத்து நிலா முற்றத்தில் தேவி புவனமுழுதுடை யாளுடன் அமர்ந்திருந்த இராஜராஜன் குஞ்சரியின் தியாகத்தை மிகவும் புகழ்ந்து, குஞ்சரிக்கு ஓர் அடையாளச் சின்னம் நிறுவி, கோயில் கட்டிப் பூசைகள் நடைபெறச் செய்ய வேண்டும் என்ற தன் கருத்தைத் தெரிவித்தார். அரசி புவனமுழுதுடையாள் அதை மனப்பூர்வமாக ஆமோதித்தாள்.

தெற்குக் கோட்டை வாசலில் மோகினியாகத் திகழும் குஞ்சரிக்கு ஒரு பள்ளிப் படைக் கோயிலை அமைக்க, அப்போதே திருமந்திர ஓலைநாயகத்திடம் தெரிவித்தார்.

''சுவாமி, எனக்கு ஒரு சந்தேகம். குஞ்சரி ஏன் வருவதில்லை? அன்று நடுக்காட்டில் பாழ் மண்டபத்தில் சந்தித்த பிறகு அவள் வரவில்லையே'' என்று அரசி தன் கவலையைத் தெரிவித்தாள்.

''ஆமாம்; சிறையில் அவளை வேண்டி அழைத்தேன். அவள் வரவில்லை... ஏன் என்று தெரியவில்லை'' என்று சக்கரவர்த்தியும் கவலையுடன் கூறினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கே மல்லிகையின் மணம். சந்தனக் குழம்பைப் பூசினாற் போன்ற குளுமை. தென்றல் வீசியது. இராஜராஜன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அதே குரல் : ''சோழர் குலச்சக்கரவர்த்தி அவர்களே! தங்களிடம் விடை பெறவே வந்தேன். ஆவி வடிவில் நான் நடமாடி வந்த காலம் முடிவடைந்து விட்டது. எடுத்த காரியம் நிறைவேறி விட்டது. சோழநாட்டிலிருந்து அந்நியரை ஓட்டவேண்டும் என்று சபதம் பூண்டேன். அது நிறைவேறி விட்டது. இடையில் தாங்கள் என் பேச்சைக் கேட்டு கங்காபுரியிலேயே இருந்திருந்தால் தாங்கள் சில நாட்கள் சிறையில் வாட நேர்ந்திருக்காது. நடந்ததை மறந்து விடுங்கள். சோழநாட்டின் பெருமை உலகெங்கும் பரவுமாறு ஆட்சி புரியுங்கள். அரசிக்கு எனது வணக்கங்கள். தீர்க்க சுமங்கலியாக வாழ நான் வாழ்த்துகிறேன். வாழ்த்த எனக்கு உரிமை உண்டு. நான் விடை பெற்றுக் கொள்கிறேன். என்னை மறந்து விடாதீர்கள்!''

''குஞ்சரி, குஞ்சரி'' என்று இராஜராஜன் கூவினார். அந்த இருளில் எங்கோ நிழல் அசைந்தது. வானவெளியில் அந்த உருவம் செல்வது போல் தோன்றியது. நீலவானப்பரப்பில் மேலே மேலே எங்கோ சென்று எல்லையற்ற விண்ணில் கலந்து விட்டது.

இராஜராஜன் வானத்தையே பார்த்துக் கொண்டு நின்றார்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் தெற்குக் கோட்டை வாயில் அருகே குஞ்சரிக்குச் சிலையொன்று அமைக்கப்பட்டது.

பல ஆண்டுகள் வரை 'தெற்கு வாசல் மோகினி' என்றே அந்த வடிவத்தை மக்கள் பயபக்தியுடன் அழைத்து வந்தனர்.

முற்றும்



காலஞ்சென்ற 'கல்கி'யின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பலர் சரித்திரக் கதைகளை எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். சிலர் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். வெற்றி கண்ட சிலருள் விக்கிரமனும் ஒருவர்.

சரித்திரக் கதைகளைச் சிறந்த நாவல்களாக எழுத வேண்டிய காலம் இது. சரித்திரத்தை தமிழ் மக்களுக்கு எழுதுகிறோம் என்ற பொறுப்புடன் எழுத வேண்டிய காலம் இது. இந்தக் காலத்தில் ஒருவர் சரித்திரக் கதை எழுதிப் பெயர் பெற்றிருக்கிறார் என்றால் அதை நாம் பாராட்ட வேண்டியதுதானே! ஆகவே, நண்பர்கள் சார்பில் ஆசிரியர் விக்கிரமனைப் பாராட்டுகிறேன்.

பிரபல நாவலாசிரியர் அமரர் சாண்டில்யன்